# பண்பாடு

# PANPADU

மலர்: 23 இதழ்: 2, 3 புரட்டாதி 2013


- அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளும் புராதன இந்து அரசியல் மூலங்களில் அவற்றின் பயில் நிலையும் — ஒரு நோக்கு
- ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர். பொன். இராமநாதன்
- சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் சமய சமூகப் பணிகள்
- ஈழத்தில் கிராமிய வழிபாடு
- இலங்கையில் வேதாகமங்களும் ஆலய வழிபாடுகளும்
- தூமரத நாடகம்
- இலக்கிய இனவரையியல்
- நவீன இலக்கியங்களில் பௌத்தம்
- தெய்வீக உரிமைக் கொள்கையின் விரிவாக்கமே தென்கிழக்காசிய தேவராஜ வழிபாடு


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை ஆசிரியர்களின் விபரம்

### திரு. ச. முகுந்தன்

இவர் கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். இளம் ஆய்வாளர்களில் ஒருவரான இவர் பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து அறிஞர்களின் பாராட்டினைப் பெற்றவராவார்.

### பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் சிரேக்ஷ்ட விரிவுரையாளர் ஆவார். சைவசித்தாந்தம் தொடர்பாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றையும் ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துள்ளார்.

### திருமதி விக்னேஸ்வரி பவநேசன்

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். இவர் பல ஆய்வரங்குகளில் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

### திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆவார். இந்துசமயம், இந்துக் கலைகள் தொடர்பான ஆழ்ந்த புலமைமிக்கவர். இவை தொடர்பாக பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

### பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகதகைசார் பேராசிரியர் ஆவார். இந்துநாகரிகம், தத்துவம், கலைகள், சமஸ்கிருதம் போன்ற துறைகளில் ஆழ்ந்தபுலமைமிக்கவர். பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

### கலாநிதி றமீஸ் அப்துல்லா

தென் கிழக்குப் பல்கலைக்கழகமொழித்துறைத் தலைவர். நாட்டாரியல், ஊடகவியல், துறைகளில் சிறப்பு ஈடுபாடு கொண்ட ஆய்வாளர்.

### பேராசிரியர் ஞா. ஸ்டீபன்

இவர் தமிழ்நாடு மனோண்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகத்தில் தமிழியற் துறையில் பேராசிரியராக பணிபுரிபவர். நாட்டாரியல், மானிடவியல் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்.

### பேராசிரியர் செ. யோகராஜா

இவர் கிழக்குப்பல்கலைக்கழகவரலாற்றுத் துறையில் தலைவராகப் பணிபுரிகின்றார். தமிழ், ஊடகவியல் தொடர்பானவற்றில் ஆழ்ந்தபுலமைமிக்க இவர் பல ஆய்வுக் கட்டுகைளை எழுதி சமர்ப்பித்துள்ளார்.

### செல்வி. பிரவீனா

இவர்கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைபட்டதாரியும், உதவிவிரிவுரையாளரும் ஆவார். இளம் ஆய்வாளர்களுள் ஒருவர்.

பண்பாடு பருவ இதழில் பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் அக்கட்டுரைகளை எழுதியவர்களின் சொந்த கருத்துக்களாகும். இவை இவ்விதழை வெளியிடும் திணைக்களத்தின் கருத்துக்களைப் பிரதிபலிப்பனவாகா.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு

## சமூக விஞ்ஞான ஆய்வுச் சஞ்சிகை

*Refereed Journal of Social Sciences*

மலர்: 23 | இதழ் : 2,3 | புரட்டாதி 2013



**ஆசிரியர் குழு**

திரு. க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

திரு. ம. சண்முகநாதன்

திருமதி தேவகுமாரி ஹரன்

கலாநிதி நந்தினி சண்முகலிங்கம்

**நிர்வாக ஆசிரியர்**

திருமதி சாந்தி நாவுக்கரசன்

**பரிசீலனைக் குழு**

பேராசிரியர் சி. பத்மநாதன்

பேராசிரியர் எஸ்.சுசீந்திரராசா

பேராசிரியர் வி. சிவசாமி

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்

பேராசிரியர் என். ஞானகுமாரன்

கலாநிதி மீரா வில்லவராயர்



**வெளியீடு**

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**இல.248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04.**

**பதிப்பு : புரட்டாதி 2013**

**விலை :** ரூபா 50/=

ISSN: 2235-9621




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- **அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளும் புராதன இந்து அரசியல் மூலங்களில் அவற்றின் பயில் நிலையும் – ஒரு நோக்கு**
  திரு. எஸ். முகுந்தன். **03**

- **ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர். பொன். இராமநாதன் (1951 – 1930)**
  பேராசிரியர். திருமதி. கலைவாணி இராமநாதன் MA. Ph.d **18**

- **சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் சமய சமூகப் பணிகள்**
  திருமதி. விக்னேஸ்வரி பவநேசன் **38**

- **ஈழத்தில் கிராமிய வழிபாடு**
  திருமதி. சுகந்தினி சிறிமுரளிதரன். M. Phl **50**

- **இலங்கையில் வேதாகமங்களும் ஆலய வழிபாடுகளும்**
  பேராசிரியர் இலக்கிய கலாநிதி. ப. கோபாலகிருஷ்ண ஐயர் **62**

- **தூமரத நாடகம் – வடக்கில் புகையிரதத்தை எதிர்கொண்டவகை**
  கலாநிதி. ரமீஸ் அப்துல்லா. **71**

- **இலக்கிய இனவரையியல்**
  பேராசிரியர். ஞா. ஸ்டீபன் **80**

- **நவீன இலக்கியங்களில் பௌத்தம்**
  பேராசிரியர். செ. யோகராசா **100**

- **தெய்வீக உரிமைக் கொள்கையின் விரிவாக்கமே தென்கிழக்காசிய தேவராஜ வழிபாடு**
  செ. பிரவீணா **115**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளும் புராதன இந்து அரசியல் மூலங்களில் அவற்றின் பயில் நிலையும் – ஒரு நோக்கு

ச. முகுந்தன்

## அறிமுகம்

க.பொத.உயர்தரத்துக்கான இந்துநாகரிகப் பாடவிதானத்தில் "இந்துக்களின் அரசியல் சிந்தனைகள்"என்ற பாடஅலகு இடம் பெற்றுள்ளது. சமயப்பனுவல்களாக ஒற்றைப் பரிமாணத்துடன் சமூகத்தால் அறியப்பட்டிருந்த இந்து நாகரிக மூலங்கள் பலவற்றில் இழையோடியுள்ள அரசியல் தொடர்பான எண்ணக்கருக்களை மாணவர்களுக்கு உணர்த்தும் வகையில் இது அமைக்கப் பட்டுள்ளது.

அதுபோன்று பல்கலைக்கழக மட்டத்திலும் இந்துநாகரிகக் கற்கைகளில் "புராதன இந்து அரசியற் கோட்பாடுகளும் இந்துச் சட்டமும்" என்ற கற்கைப்புலம் உள்ளது. இந்துக்களின் அரசியல், நீதிநிர்வாக முறைமைகள் சட்டம், படைத்துறைப் புலமை, என்பவை பற்றி விரிவான ஆய்வுகளுக்காக மாணவர்களை ஆயத்தம் செய்வதே இக்கற்கைகளின் பிரதான நோக்கமாகும்.

பொதுவாக வரலாற்றியல் அணுகுமுறை, மற்றும் ஒப்பாய்வு முறைகளுடன் கற்பிக்கப் படுகின்ற இப்பாடப்பரப்பினை தூய அரசறிவியல் மற்றும் சட்டவியல் சார்ந்த எண்ணக் கருக்களையும் உள்வாங்கக்கூடியவகையில் விரிவுபடுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதற்கான ஒரு சிறுபிரயத் தனமாகவே இக்கட்டுரை முயற்சி அமைகிறது.

அரசு என்பதற்கு பல்வேறு வரையறைகள் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டு வந்துள்ளன. அரிஸ்ரோட்டில் தொடங்கி, கோல், சிசிரோ, கரோல் லஸ்கி, வூட்ரோ வில்சன், பிலன்ஸ்லி, ஸ்மித், கார்னர் எனப் பல புகழ் பெற்ற அரசியல் அறிஞர்களின் வரைவிலக்கணங்கள் இவ் வகையில் குறிப்பிடத்தக்கன. நவீன அரசறிவியலில் கார்னர், கரோல் லஸ்கி ஆகியவர்களின் அரசு பற்றிய வரை விலக்கணங்கள் அதிகம் விதந்துரைக்கப் படுகின்றன.

"அரசு என்பது வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பிற்குள் புறச் சக்திகளின் ஆதிக்கம் இன்றி (அல்லது மிக மிக குறைந்தளவுடைய) வாழுகின்ற குறித்த மக்கள் குழுமத்தினால் சமூக ஒழுங்கைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட பெரிய நிறுவன அமைப்பாகும்."(The State as a community of persons ,more or less numerious, permanently occupying a definite portion of territory,independent or nearly so,of external control,and possessing an organized government to which the great body of inhabitants render habitual obedience)[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குறித்த வரையறைக்குள்ளான பௌதீக நிலப்பரப்பினுள் வாழுகின்ற குழுமத்தினரால் அந்த ஆள்புலத்தினுள் உள்ள எல்லா சமூக நிறுவனங்களை விடவும் மேலாதிக்கம் உடைய நிறுவனமாக அரசு திகழ்வதாக" கரோல்லஸ்கி குறிப்பிடுவார்(The State as a territorial society divided into government and subjects claiming within its allotted physical area,a superemacy over all other institutions.)[2]

அந்தவகையில் பொதுவாக அனைத்து அரசியல் அறிஞர்களும் இறைமையிருப்பதாக அங்கிகரிக்கப்பட்டு வலிமையால் ஆதரிக்கப்பட்ட சட்டத்தினால் குறித்த நிலப்பரப்பின் எல்லைக்குள் ஆதிக்கம் செலுத்தி சமூக ஒழுங்கைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவன அமைப்பாக அரசைக் கருதுகிறோம்.

"அரசின் தோற்றம்" தொடர்பாக அரசறிவியலில் சில கோட்பாடுகள் முன்மொழியப் பட்டுள்ளன. அவற்றுள் தெய்வீக வழியுரிமைக் கோட்பாடு(DivineTheory), வலிமைக் கோட்பாடு(Power Theory), சமூக ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory) ஆகியன முக்கியமானவை. இவை பற்றிய சிந்தனைப் புலப்பாடுகளை இந்துநாகரிக மூலங்களில் தேடவிழைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தெய்வ வழியுரிமைக் கோட்பாடு (The Theory of Divine origin)

அரசின் தோற்றம் பற்றி எழுச்சி பெற்ற கோட்பாடுகளில் மிகப் புராதனமானது தெய்வ வழியுரிமைக் கோட்பாடாகும்.

- அரசு இறைவனின் சிருஷ்டி
- அரசன் இறைவனின் பிரதி நிதி என்பதே இதனடிப்படையாகும்.

இறைவன் தன்னால் தீர்மானிக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு அரச அதிகாரத்தினை வழங்குகிறார். அந்த மனிதன் (அதாவது அரசன்) தெய்வத்தின் பிரதிநிதியாக இருப்பதனால் அவனைக் கேள்விக்குள்ளாக்கும் அதிகாரம் மண்ணுலகில் எவருக்கும் இல்லை. அவன் தன்னை அரசனாகத் தேர்ந்தெடுத்த தெய்வத்திற்கு மட்டுமே பொறுப்புக்கூற வேண்டியவனாவான். இக்கோட்பாடு தனது செயற்பாட்டுநிலையில் அரசு பற்றிய பரம்பரை யுரிமையினையும் நியாயப்படுத்த முனைந்துள்ளது.

A.C. Kapur அவர்கள் தனது Principles of Political Science என்ற நூலில் இக் கொள்கை பற்றி பின்வருமாறு கருத்துரைத்துள்ளார்.

"The state, its advocates maintain, was created by God and governed by his deputy of vice regent.The ruler was a divinely appointed agent and he was responsible for his actions to God alone.[3]

இக்கோட்பாட்டு புராதன கிரேக்க, ரோம, இந்து சாம்ராஜ்ஜியங்களில் ஆராதிக்கப்பட்டு வந்த ஒன்றாக விளங்கியது. மத்தியகால ஐரோப்பாவிலும் இக்கருத்தியலை முதலாம் ஜேம்ஸ், பிரான்சின் 14ஆம் லூயி போன்ற மன்னர்கள் ஆதரித்தனர்.

சேர் றொபட் பில்மர், ப்பூஸ்செற் (Bousset) போன்ற மத்தியகால அரசியல் அறிஞர்களும் இக்கோட்பாட்டை ஆதர்சமாக்கி தமது சமகால அரசியல் செல்நெறிகளுக்கு நியாயம் கற்பிக்க முனைந்தனர்.

ஐரோப்பாவில் புகழ்பெற்ற மதச்சீர்த்திருத் தங்களைக் கொண்டுவந்து சமூக மேம்பாட்டை ஏற்படுத்த முனைந்த மார்ட்டின் லூதர், கெல்வின் போன்றவர்களும் தெய்வீக வழியுரிமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாட்டை நிராகரிக்கவில்லை. எனினும் காலப்போக்கில் இக்கொள்கை சமூக அரங்கில் தனது முக்கியத்துவத்தை இழந்தது.

எவ்வாறாயினும் இக்கோட்பாட்டின் உருவாக்கத்தில் சில அடிப்படையான நோக்கங்கள் சமூகப் பயன்பாடு கொண்டவையாகும். சிதறிக் கிடக்கின்ற மக்கள் கூட்டத்தினைப் பொது இலட்சியத்துக்காகத் தெய்வத்தின் ஆணையால் ஒன்று திரட்டவும் அரசர்கள் தெய்வ நீதிக்கு அஞ்சிக் கொடுங்கோன்மையற்ற நல்லாட்சியை வழங்கவும் இக்கோட்பாடு வழியமைத்துக் கொடுக்கிறது. இறை சித்தம் என்கிற அரூபமான பேராற்றலினைச் சாட்சிப்படுத்திச் சமூக ஒழுங்கையும் நியதி களையும் பேணிக் கொள்வதற்கு முயன்ற இக்கோட்பாடு தனது செயற்பாட்டு நிலையில் சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தாம லில்லை. தெய்வ நீதிக்கு அஞ்சாத சில கொடுங்கோலர்கள் தமது முறையற்ற ஆட்சியை சமூகம் கேள்விக் குள்ளாக்க முற்படாமலிருக்கத் தம்மைத் தெய்வத்தின் பூவுலகப் பிரதிநிதிகளாக உரத்துக் கூறிக்கொண்டனர். சர்வாதிகாரத்துக்கு சாமிப்பூச்சுப் பூசும் இம்முறைகேடுகளுக்கு "கோட்பாடு" என்ன செய்யும்? பாவம்!.

இந்து நாகரிக மூலங்களிலும் அரசின் தோற்றம் பற்றிய விவரணங்களில் கோட்பாட்டின் சாயலை அனேக இடங்களில் அவதானிக்க முடிகிறது. வைதீக இலக்கியங்கள் பலசந்தரப் பங்களில் அரசனையும் அவனது இறைமையையும் தெய்வத்துடன் தொடர்புபடுத்திப் பேசுகின்றன.

சதபதப் பிராமணம் அரசன் பிரஜாபதியின் வடிவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[4] சதபதப் பிராமணத்தில் எழுச்சிபெற்ற பிந்தய வேதகாலத்தில் முதன்மைத் தெய்வமாகப் பிரஜாபதியே விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அதர்வ வேதத்தில் புகழ்பெற்ற அரசனாக விவரிக்கப் படுகின்ற பரீஷித் மனிதரில் தெய்வ வடிவத்தையுடைவன் என விவரிக்கப் படுகின்றான்.

தைத்திரீய உபநிடத்தில் குறிப்பிடப்படுகின்ற கதை ஒன்றில் தேவ அசுர யுத்தம் விவரிக்கப் படுகின்றது. யுத்தத்தில் தோல்வியுற்ற தேவர்கள் தமது தலைமைத் தெய்வமாகிய பிரஜாபதியைக் குறித்து யாகம் செய்தனர். யாகத்தினால் மகிழ்ந்த பிரஜாபதி தனது மகனாகிய இந்திரனைத் தேவர்களின் அரசனாக அனுப்பிவைத்தான். இதன் பின்னர் தேவர்கள் பலம் பெருகியது அசுரர்கள் தோற்றோடினர்.[5] இந்த விவரணக் கதை மூலம் ஒரு சமூகத்தின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான தலைமைத் துவம் கடவுளின் ஆசீர்வாதத்தின் குறியீடாக வெளிப்படுத்தப்படுவது கவனிக்கத்தக்கது. வேதகால சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்கிய வைதீக இலக்கியங்களில் தேவர்கள் என்ற உருவகிப்பு அக்கால மக்களின் சுய விம்பங்கள் என்பதினை மறுப்பதற்கில்லை. இவ்வகையில் நோக்கும் போது வேதகால சமூகத்தின் பழைமையான தலைமைத்துவத்தின் வெளிப் பாடாகிய "இந்திரன்" அக்கால மக்களின் தலைமைத்தெய்வமாகிய பிரஜாபதியின் "மகனாக" உரிமை கோரப்படுவது அவதானிக்கத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக வேதகால அரசர்கள் யாவரும் யாகங்களை இயற்றுகின்ற பொழுது இந்திரனாகவும், பிரஜாபதியாகவும் கருதப்பட்டுப் பிற்காலப் பிராமண இலக்கியங்களில் விவரிக்கப் படுவதும் நோக்கற்பாலது. யசுர் வேதத்தில் இடம்பெறுகின்ற "இரத்தின விஹம்சி" விழா (பட்டாபிஷேகம்) அரசனைத் தெய்வமாக மக்கள்முன் அங்கீகாரம் பெற்றுத்தரும் சடங்காகவே விவரிக்கப்பட்டுள்ளது.[6] இதில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரோகிதர் மூலம் மேற்கொள்ளப்படும் "ஐந்திர அபிஷேகம்" ஒவ்வொரு அரசனையும் இந்திர நிலைக்கு உயர்த்துவதாகக் கருதப்படுகிறது.

தர்மசாஸ்திரங்களில் முதன்மையான மனுஸ்மிருதியிலும் தெய்வீக வழியுரிமைக் கொள்கை பேசப்பட்டுள்ளது. மனுஸ்மிருதியின் ஏழாம் அத்தியாயம் இராசநீதி பற்றிக் குறிப்பிடும்போது அநேக இடங்களில் அரசின் தெய்வீக வழியுரிமை தொடர்பாகக் கருத்துரைத் துள்ளதை அவதானிக்க பாலது.

*"காவலன் இல்லையேல்*
*எளியோர் வலியோரை*
*அஞ்சி அமிழ்ந்து போவர். ஆதலால் உலகம்*
*அழியாதிருக்கும் பொருட்டே இறைவன்*
*மன்னனைப் படைத்தான்"*[7]

"இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், அளகேசன் ஆகிய திசைக் காவலர்கள் அனைவரின் தன்மைகளும் ஒருமித்து தோன்றியவனே அரசன்."[8]

"தனது மகிமையால் அவ்வப்போது (அரசன்) தீயாகவும், காற்றாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், யமனாகவும், குபேரனாகவும், வருணனாகவும், இந்திரானாகவும் இருப்பான்."[9]

*"தெய்வாம்சமுடைய திக்குபாலகர்களின்*
*அம்சம் விளங்குபவனாதலால்*

*அரசன் வயதிற் சிறியவனே*
*இருப்பினும் மனிதன் என்றே முறையில்*
*அவனை அவமதித்தலாகாது."*[10]

*"தத்தமது தர்மத்தை வழுவாது ஆற்றுகின்ற*
*நான்கு வர்ணத்தாரையும்*
*காப்பாற்று வதற்கென*
*அரசன் பிரம்மாவால் சிருட்டிக்கப்பட்டான.;;"*[11]

கௌடில்யர் அரசு நிறுவனம் பற்றிய யதார்த்தத்தை நன்கு உணர்ந்திருந்த போதும் தனது அர்த்தசாஸ்திரத்தில் தெய்வீக வழியுரிமைக் கோட்பாட்டினை நிராகரிக்கவில்லை. அரசின் ஸ்திரத் தன்மைக்கும் அரசனுக்கு அவசியமான கவர்ச்சியான தலைமைத்துவ ஆளுமைக்கும் (Khrizamatic personality) தெய்வீக வழியுரிமைக் கோட்பாட்டின் பயில் நிலை இன்றியமையாதது என்பதனை அறிந்து அதனையும் தனது நூலில் கௌடில்யர் எடுத்தாண்டுள்ளார்.

*"இந்திரனுடைய கடைமைகளும்*
*யமனுடைய கடமைகளும்*
*அரசனிடத்தில் ஒன்று சேர்ந்துள்ளன..*
*அவன் ரட்சிப்பதிலும், சிட்சிப்பதிலும்*
*முறையே இந்திரன் இயமன்*

ஆகிய இரு தேவர்களின் பிரத்தியட்சப் பிரதிநிதியாக உள்ளான்.[12]

மேலும் அர்த்தசாஸ்திரம் அரசனை அவமதிப்போர் இவ்வுலகியல் சட்டத்தால் மட்டுமன்றி இறந்தபிறகு தேவலோகத்துச் சட்டத்தாலும் தண்டிக்கப்படுவார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

மௌரியர் சாசனங்களும் அரசனைத் தெய்வாம்சப்படுத்தி விவரித்துள்ளன. குறிப்பாக அசோகரது சாசனங்களில் அவரைச் சுட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள "தேவனாம்பிய" "தேவப்பிரசாத" "தேவான்வய" முதலிய விருதுப் பெயர்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களிலும், தொல் காப்பியத்திலும் தெய்வீக வழியுரிமை பற்றிய கருத்தியல்கள் ஆங்காங்கே இழை யோடியுள்ளன. தொல்காப்பியத்தின் பொருளதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்தில் இடம்பெறும் "பூவை நிலை" இதற்குத் தகுந்த சான்றாகும்.

*"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்*
*தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"*[13]

என்ற செய்யுள் மன்னர்களைத் திருமாலாகப் போற்றுகிறது. மேலும் ஆற்றுப்படை இலக்கியங் களிலும் புறநானூற்றிலும் அரசன் தெய்வாம்ச முடையவனாக சிவன், பலராமன், திருமால், முருகன் ஆகிய கடவுளருடன் தொடர்பு படுத்தப்பட்டு போற்றப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

திருமாவளவன் எனப்பட்ட கரிகால சோழன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பாண்டியன் பெருவழுதி ஆகிய இரண்டு மன்னர்கள் இவ்வகையில் சங்க இலக்கியங்களில் அதிகம் தெய்வீக வழியுரிமையுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளனர்.

*"பால்நிற உருவின் பனைக்கொடியோனும்*
*நீர்நிற உருவின் நேமியோனும் என்று*
*இருபெருந் தெய்வமும் உடன் நின்றாங்கு"*[14]

குறித்த ஆள்புலத்தில் இயற்கை நிகழ்ச்சிகளின் ஒழுங்குமுறையும் கட்டமைவும் ஆள்பவனின் தெய்வாம்சத்தினால் சாத்தியபட்டன என்ற பொருள்தரும் வகையில் அமைந்த

" ஓங்கு திரைவியன் பரப்பின் ஒலிமுந்நீர் வரம்பாக "[15]

எனத்தொடங்கும் அகநானூற்றுப் பாடலும் இதற்குப் பிறிதொரு சான்றாகக் காட்டப்படத்தக்கது. மேலும் "இறை" என்ற பதம் அக்காலத்தில் அரசனுக்கும் கடவுளுக்கும் பொதுப்பெயராக வழங்கியது. இதனைப் பிற்காலத்தில் திருவள்ளுவரும் தனது பனுவலில் பயன் படுத்தியுள்ளார். அரசியலைப் பாடவந்த பொருட் பாலின் முதலாவது அதிகாரம் "இறைமாட்சி" என்ற தலைப்பில் அமைந்துள்ளமை கவனிக்கற் பாலது.[16] அந்த அதிகாரத்தின் எட்டாவது குறளில் அரசனை "இறை" ஸ்தானத்தில் ஏற்றிக் காட்டுகின்ற திருவள்ளுவரும் தெய்வீக உரிமைக் கோட்பாட்டினை முற்றிலுமாகப் புறந்தள்ள வில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. [17]

வைணவ பக்தி நெறியாளராகிய நம்மாழ்வார்

"திருவுடை மன்னரைக் காணில் திருமலைக் கண்டேன்."[18]

என்று தொல்காப்பியத்தின் பூவை நிலையின் தொடர்ச்சியை நினைவுபடுத்தினார். சோழர் களின் சாசனங்களும் அரசனை "தேவர்" என்றே சுட்டின.

இவ்வகையில் அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் ஆதிக்கொள்கையாகிய தெய்வ வழியுரிமைக் கோட்பாட்டின் பதிவுகளை இந்து நாகரிக வரலாற்று மூலங்களினூடாக அவதானிக்க முடிகிறது.

### வலிமைக் கொள்கை (The Theory of Force)

அரசின் தோற்றமும் வளர்ச்சியும் வலிமையினால் பலவந்தத்தினால் சாத்தியப் படுத்தப்பட்ட நிகழ்சிகளாக விவரிப்பதே வலிமைக் கொள்கையாகும். இங்கே வலிமை என்பது குறித்த ஜனக்குழுவின் அல்லது குறித்த ஜனக்குழுவில் உறுப்பினனாக உள்ள ஒரு தனியனின் பௌதீக, வலிமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் இணைந்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பினும் ஒவ்வொரு தனியனிடத்திலும் அந்தரங்கமாக உள்ள அதிகாரம் செய்யும் / அடக்கியாளும் ஆசை அவனை ஆளுமையுடையவனாக்குகிறது. இதுவே பலவீனர்களினைத் தோற்கடித்தவனைத் தலைவனாக ஆக்குகிறது. இதுவே ஜனக்குழுத் தலைவர்களை உருவாக்கி அவர்களிடையே பலப்பரீட்சை செய்யத் தூண்டிவிடுகிறது. ஜனக்குழுக்கள் பலவற்றை வென்ற குறித்த ஜனக்குழுத் தலைவன் சிற்றரசனாகவும் பின் பேரரசனாகவும் சாம்ராஜ்ய அதிபதியாகவும் பரிணாமம் பெறுகிறான்.

"Hisotorically it means that government is the outcome of human aggression, that the beginning of the state are to be sought in the capture and enslavement of man by man in the conquest and subjugation of feebler tribes, and generally speaking in the self-seeking domination acquired by superior physical force. The progressive growth from tribe to kingdom, and from kingdom to empire is but a continuation of the same process"[19]

அந்த வகையில் ஒவ்வொருவனும் தனது அதிகாரத்துவத்தை சமூகத்தில் அங்கீகாரப் படுத்திக்கொள்வதற்கான சாதனமாகவும் தளமாகவும் "போர்" விளங்கியது. "போரே மன்னனை உருவாக்கும்," "பலமே மிக உயர்ந்த உரிமை, வீரத்தில் இருந்தே குலம் பிறக்கும் என்பது போன்ற மரபுவழக்குகள் இவ் வடிப்படையில் எழுச்சிபெற்றவையேயாகும்.

மேலைத்தேய மரபில் ஜெங்ஸ் (Jkenks), பொலிபியஸ், வொன் பெர்பார்டி (Vonberphardi), ஹியூம் போன்ற பிற்கால அறிஞர்கள் வலிமை கொள்கை தொடர்பான கருத்துக்களை முன் வைத்துள்ளனர். குறிப்பாக 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசியல் தத்துவஞானி ஹியூம் (Hume) "குலமரபுக் குழுத்தலைவன் தொடர்ச்சியான யுத்தத்தின் மூலம் தனது செல்வாக்கினைத் தேடிப்பெற்று ஆளுபவனாக வேடமிட்டான்" எனக் குறிப்பிடுவார்.[20]

இந்துநாகரிக மூலங்களில் "வலிமைக் கொள்கை" தொடர்பான சில விடயங்களை அடையாளங்கான முடிகிறது. வேத இலக்கியங்களில் பழைமையானதான ரிக்வேதத்தின் ஏழாம் மண்டலத்தில் இடம் பெற்றுள்ள "தசராஜ்ஞ" போர் இதற்குத் தக்க சான்றாகும்.[21] பரதஜனக் குழுவின் தலைவனாகிய "சுதாஸ்" என்ற மன்னன் விஸ்வா மித்திரரின் கட்டளைப்படி பத்து ஜனங்களுடன் நடாத்திய போரே "தசராஜ்ஞ" போராகும். இதில் பூரு, யது, அனு துருஹ்ய முதலிய புகழ்பெற்ற பத்து ஜனக்குழுத்தலைவர்கள் சுதாஸை எதிர்த்துப் போரிட்ட போதிலும் அவனை வெற்றிகொள்ள இயலாது போயிற்று. போர் முடிவில் இந்த ஜனக்குழுக்கள் பரத ஜனக்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டன.

ஜனக்குழுக்கள் தம்மிடையே போரிட்டதன் விளைவாகப் பலம் வாய்ந்ததொரு அரசு உதயமாகியது. இந்த வகையில் அரசின் உருவாக்கத்திற்கு ஜனக்குழுக்களுக்கிடையில் நிகழ்ந்த பலப்பரீட்சையே காரணமாக அமைந்தது.

ஐதரேய பிராமணம் தேவ - அசுர யுத்தத்தில் தேவர்கள் முதலில் தோல்வியுற்றமைக்கு வலிமைவாய்ந்ததொரு தலைமைத்துவம் இல்லாமையினைக் காரணமாகக் காட்டுகின்றது.[22]

பிற்கால வைதீக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள "சாம்ராட்" விஸ்வஸ்ய புவனஸ்யராஜா, முதலிய பெயர்கள் ஜனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களிடையே நிகழ்ந்த ஆதிக்கப போட்டியினையும் பலத்தினால் சாதிக்கப்பட்ட பேரரசுக்கொள்கையினையும் அடையாளங் காட்டுவனவாய் உள்ளதில் வியப்பில்லை.

வலிமைக்கொள்கையினை "தண்டம்" (தண்டநீதி) என்ற கருத்தியலில் வைத்து மனுஸ்மிருதி விளக்கியுள்ளது. "செங்கோல்" "படை" "சட்டம்" முதலிய விரிந்த பொருளமைதி களை "தண்டம்" என்ற பதம் குறித்து நின்றாலும் இவையாவும் வலிமையினால் ஆதரிக்கப்பட வேண்டியவையாகும்.

தனது வலிமையை நிலைநாட்டுவதற்காக ஓயாது போர் செய்யவேண்டியிருப்பது அரசிற்கு இன்றியமையாதது என்பதனையும் மனுஸ்மிருதி குறிப்பிட்டுள்ளது.

"பழிப்பற்றதும் அநாதியானதுமான தர்மம் இதுவரை கூறப்பட்டது. இவ்விதம் பகைவெல்லும் அரசர்க்குப் பாவம் நேரிடுவதில்லை"[23]

தண்டத்தை செவ்வனே பயன்படுத்தப் தவறும் அரசை மலடான மனைவிக்கும், பால் சுரக்காத பசுவிற்கும், சுமை தூக்காத எருதுக்கும் மகாபாரத சாந்திபர்வம் உவமித்துள்ளது.[24]

"தண்டத்தினால் அரசனது மேன்மை நிலைபெறுவதால் தண்டமே அரசனாகவும், ஆண்மையுடையதாகவும், அரணாகவும் உள்ளது."[25]

"தான் அடைய வேண்டியவற்றை வலிமையால் வென்று அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியமானது"[26]

இவ்வாறாக அரசை ஸ்தாபிப்பதில் வலிமையால் விளையும் போரை அறமாக விவரிக்கும் மனுஸ்மிருதி அரசு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அதனை முறைப்படி பரிபாலிப்பதிலும் "வலிமையின்" இன்றியமையாமையினை வலியுறுத்தத் தவறவில்லை.

"களையெடுத்துப் பயிரைக்காத்தல் போன்று அரசு தன் நாட்டில் தீயோரை விரட்டி நல்லோரைக் காக்கவேண்டும்."[27]

இக்கருத்து அர்த்தசாத்திரத்திலும் பின்னர் திருக்குறளிலும் எடுத்தாளப்பட்டுள்ளமை அவதானிக்கற்பாலது.[28]

அரசினைத்தக்கபடி பரிபாலிப்பதில் வலிமையால் விளைந்த தண்டநீதி பெறுகின்ற முக்கியத்துவத்தை அர்த்தசாஸ்திரம் குறிப்பிடும் போது,

*"அந்வீஷகீ த்ரயீ வார்த்தாநாம்*
*யோகக்ஷேம ஸாதநோ தண்ட.*
*தஸ்யநீதிர் தண்ட நீதி.*[29]

தத்துவஞானம், வேதங்கள், விவசாயம், வர்த்தகம் முதலான பொருளாதாரங்களின் மேம்பாட்டுக்கு "தண்டம்" சிறந்த சாதனமாகும் எனக்குறிப்பிடுவதுடன் தண்டநீதி சரிவரக் கைக்கொள்ளப்படவில்லையெனில் சமூகத்தில் மச்சநியாயம் தலைதூக்கும் என்கிறது.

மேலும் அரசன் தனது இராச்சியத்தைத் ஸ்தாபிப்பதற்கும் விஸ்தரிப்பதற்குமாகப் போர் தொடுக்கத் தயங்கக்கூடாது என்பதனை வலியுறுத்துகின்ற அர்த்தசாஸ்திரம் ஒவ்வொரு அரசனும் நன்கு அறிந்துணரவேண்டிய வலிமை பற்றிய கணக்கீடு ஒன்றைப் பிரேரித்துள்ளது.

"விஜிகீஷீ : ஷக்த்யபேஷ:
ஷாட்குண்ய முபயுஞ்ஜீந



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமஜ்யாயோப்யாம்
ஸம்தீயேத ீநேந விக்ருஷ்ணீயாத்"[30]

என்று தொடரும் நீண்ட சுலோகத்தில் இதனை விரிவாகக் கௌடில்யர் விளக்கியுள்ளார். தன்னைக்காட்டிலும் அதிகபலமான எதிரியிடத்திலும் தனக்கு முற்றிலும் சமமான எதிரியிடத்திலும் வலிமைக்கொள்கையினை ஒரு அரசன் பின்பற்றக்கூடாது என்பதே இச் சுலோகத்தின் சுருக்கமான கருத்தாகும்.

வலிமைக் கொள்கையினை ராஜ்ய உருவாக்கத்தின் மையச்சூத்திரமாக்கிய அர்த்த சாஸ்திரம் மண்டலக்கொள்கை, மச்ச நியாயம் சுந்தோபசுந்த நியாயம், போன்ற இந்து அரசறிவியற் கருத்தாக்கங்களின் செயற் பாட்டையும் வலிமைக் கொள்கையைத் தளமாகவைத்தே விளக்கியுள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் "அரசு" தொடர்பான கருத்துக்களில் வலிமைக் கொள்கையின் பயில்நிலையினை அடையாளங் காண முடிகிறது.

"ஒருவனை ஒருவர்
அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத்து இயற்கை"[31]

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகளில் ஒரு அரசின் தோற்றம், நிலைபேறு, விஸ்தரிப்பு ஆகிய செயன்முறைகளுக்கு வலிமையை நிலை நாட்டுவதன் வழிமுறையான போர் அத்தியா வசியமானது என்ற செய்தி பிரேரிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளும்
"வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார் மேல் பகை"[32]

என்ற குறளில் வலிமைக்கொள்கையை முன்மொழிந்துள்ளது ஒரு அரசின் நிலை பேற்றுக்கும் விஸ்தரிப்பிற்கும் இன்றியமையாத ஒன்றாகப் போர் - வலிமை கருதப்பட்டது. தன்னைக் காட்டிலும் பலம் வாய்ந்த அரசின் மீது போர் தொடுக்காமலும் தன்னிலும் வலிமை குறைந்த அரசினைப் போரின் மூலம் தம்வசப் படுத்துவதும் ஒவ்வோர் அரசனுக்கும் அவசியமானதாக இந்து அரசியல் சாஸ்திரங்கள் வலியுறுத்தின. இதே கருத்தையே மேற்குறிப்பிட்ட குறளின் மூலமாகத் திருவள்ளுவரும் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் நாட்டினைப் பொறுத்தவரையில் வலிமைக்கொள்கையின் உண்மையான பயில்நிலையைச் சோழப்பேரரசர் காலத்தில் தெளிவாக அடையாளங்காண முடிந்தது.

கம்பராமாயணத்தின் கடவுள் வாழ்த்தாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பனால் முன்வைக்கப்பட்ட

"உலகம் யாவையும் தாம் உள தாக்கலும்"[33]

என்று தொடங்கும் பாடலினை இதற்குத் தக்க சான்றாகக் குறிப்பிட முடியும். இப்பாடல் மெய்ஞ்ஞானப் பொருளமைதியினை உணர்த்தி நின்றாலும் அதன் பொருட் புலப்பாட்டு நுட்பத்தில் வலிமைக் கொள்கையின் செயற்படு நிலை யினை உள்ளார்த்தமாக இனங்கண்டு கொள்ள முடிகிறது.

**சமூக உடன்படிக்கை கொள்கை** (The Theory of Social contract)

ஆதிகாலத்தில் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர்கள் தமது சமூக வாழ்க்கையின் இன்றியமையாத சில தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சில சவால்களை வெற்றிகொள் வதற்குமாக ஒரு உடன்பாட்டினை ஏற்படுத்தியதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவே "அரசு" என்ற நிறுவனத்தின் தோற்றத்திற்கு ஏதுவாகியது. இக்கருத்தை விளக்குவதே சமூக உடன்படிக்கை கொள்கையின் அடிப்படை நோக்கமாகும்.

குறிப்பாக சமூக வாழ்விலே ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஏற்படும் இருத்தலுக்கான பிரயத்தனம், போட்டிகள், வாய்ப்புக்கள், பாதுகாப்புத் தேவைகள், வளப்பங்கீடு போன்ற விடயங்கள் இவ்வாறானதொரு சமூக உடன் படிக்கைக்கான அவசியத்தை மனிதர் களிடையே ஏற்படுத்தியிருக்கலாம். கூட்டு வாழ்க்கையினை ஆற்றுப்படுத்துவதற்கான செவ்விதானதொரு தலைமைத்துவத்தின் தேவை உணரப்பட்டதன் விளைவாகவே இத்தகையதொரு சமூக உடன்படிக்கையை மனிதர்கள் தம்மிடையே ஏற்படுத்தினர். அந்த வகையில் "அரசு" இயற்கையாகவே இறைவனால் உருவாக்கப் பட்டது என்கிற கருத்தை நிராகரிக்கும் இக்கொள்கையானது. அரசு மனிதர்களால் வேண்டுமென்றே தமது நலன்களை முன்னெடுக்கும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்கிற சிந்தனையை முன்னெடுத்துள்ளது.

"அரசின்" தோற்றம் பற்றி எழுச்சி பெற்ற கோட்பாடுகளில் முக்கியமானதும் வரலாற்றுப் பழமைவாய்ந்ததுமான ஒரு கோட்பாடாகத் திகழும் இது தன்னை முன்மொழிந்த அறிஞர்களின் காலதேசப் பின்புலங்களுக்கு ஏற்பச் சில கருத்தியல் முரண்பாடுகளையும் கொண்டுள்ளது.

கிரேக்க ஸோபிஸ்டுகள், பிளேற்றோ, அரிஸ்ரோற்றல் முதற்கொண்டு மத்தியகால அல்தூசியஸ், ஷக்கர், கியுகோகுறேசஸ் போன்ற மேலைத்தேய அறிஞர்களால் இக்கோட்பாடு முன்மொழியப்பட்டாலும் தோமஸ்ஹொப்ஸ், ஜோன்லொக், ரூசோ ஆகிய மூன்று அறிஞர்களின் கருத்துக்களே இக்கோட்பாடு தொடர்பில் அதிகம் முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

**தோமஸ்ஹோப்ஸ்:- (கி.பி. 1588 – 1679)**

பதினேழாம் நூற்றாண்டில் இவரால் வெளியிடப்பட்ட Leviathan என்ற நூலில் சமூக உடன்படிக்கைக் கோட்பாட்டு இவர் விபரிக்கப்பட்டுள்ளது. ஆதிகாலத்தில் இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர்கள் காட்டு மிராண்டிகளாக, சுயநலம் மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர். ஒவ்வொரு மனிதனும் பசியுடன் திரிகின்ற ஓநாயாகப் பிற மனிதர்களின் இருப்பைச் சீர்குலைக்க முயல்பவனாக அலைந்தான் என வர்ணிக்கும் ஷொப்ஸ் இத்தகைய அராஜக இயல்புகொண்ட ஆதிச் சமூகத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் உருவாக்கும் முயற்சியின் விளைவே அரசின் தோற்றம் என்கிறார்.

"The state of nature was, thus a condition of perpetual war "Where every man is enemy to every man" and where the rule of life was only that to be every man's that he can get, and for so long as he can keep it" When men in the state of nature were like hungry wolves, each ready to devour the other"[34]

இயற்கை நிலையில் மனிதர்கள் இவ்வாறு வாழ்ந்திருப்பார்கள் என ஷொப்ஸ் ஊகித்து விவரித்தமைக்கு அவர் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்தில் நிலவிய குழப்பகரமான அரசியற் சூழலே காரணமாக அமைந்தது எனக் கூறுவாருளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கும் அனைவரின் பாது காப்பையும் உறுதிப்படுத்துவதற்குமான உபாயமாக ஒரு புடை அதிகாரக் குவிப்புக் குள்ளாக்கப்பட்ட ஒரு தலைமைத்துவத்தை ஹொப்ஸ் பரிந்துரைத்துள்ளமை கவனிக்கற்பாலது.

### ஜோன்லொக் (கி.பி. 1632 – 1704)

ஆதி இயற்கை நிலையில் வாழ்ந்த மக்கள் ஹொப்ஸ் விவரித்தமையைப் போல ஆபத்தானவர்களாக - பசியுடன் அலைகின்ற ஓநாய்களைப் போல வாழவில்லை. மாறாக அமைதியும் நல்லொழுக்கமும் அங்கு நிலவியது. மக்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்தனர். இயற்கை ஒழுங்கை மதித்து நடந்தனர் என்பதே ஜோன் லொக்கின் கருத்தாய் இருந்தது.

"Loke's man in the state of nature was neither selfish, nor self – seeking nor aggressive. He was social and sympathetic towards others, because the law of nature, which was the law of reason, directed him to be so."[35]

இத்தகையதோர் அமைதியான ஆதிச் சமூக வாழ்க்கை வளப்பங்கீடுகளில் உருவான போட்டிமனோபாவம், ஒழுக்கமீறல்கள், போன்ற வற்றால் பாதிப்புக்குள்ளாகியது. இத்தகைய தோர் நெருக்கடியின் காரணமாக மக்கள் அரசுடன் அல்லது சிவில் சமுதாயத்துடன் ஒப்பந்தம் செய்கின்றனர்

இவ்வகையில் சிவில் அரசாங்கத்தின் இரண்டு உடன்படிக்கைகள் தொடர்பாக ஜோன் லொக் விவரித்துள்ளார்.

1. மக்கள் தமக்குள் செய்து கொண்ட உடன்படிக்கை (சமூக ஒப்பந்தம்)
2. தலைமைத்துவத்தை தெரிவு செய்வதற்கான உடன்படிக்கை (அரசாங்க ஒப்பந்தம்)

இவைமூலம் உருவாக்கப்பட்ட கூட்டுப் புரிந்துணர்வு நிலையானது அரசை உருவாக்கு கின்றது. சமுதாய உறுப்பினர்களின் (இணக்கம் - இசைவு) மகாசம்மதத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு "அதிகாரம்" கிடைக்கிறது.

எவ்வாறாயினும் ஜோன்லொக் குறிப்பிடும் அரசு வரையறுக்கப்பட்ட மக்களாட்சியை பிரதிபலிப்பதாகும். சொத்துடமை, மத்தியதர வர்க்கம் ஆகியவற்றை கருத்திற்கொண்ட குழு ஆட்சி முறையாகவே இது அரசியல் ஞானிகளால் விமர்சிக்கப்படுகிறது.

### ரூசோ (கி.பி. 1712 – 1778)

புகழ்பெற்ற சிந்தனையாளரான இவர் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தார். சமூக ஒப்பந்தம் என்ற பெயரில் இவரால் எழுதப்பட்ட நூல் அதிகப் பிரசித்திவாய்ந்தது. இவர் அரசின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும்போது ஆதி இயற்கை நிலை மனிதர்கள் சுதந்திரமாகவும் தன்னிறைவாகவும் வாழ்ந்தனர் எனக் கருதுகிறார். காலப்போக்கில் நிகழ்ந்த சனத்தொகைப் பெருக்கமும் அதனால் வந்த வளப்பங்கீட்டு நெருக்கடியும் மக்களை நேர்மையற்றவர்களாக உருமாற்றின என நம்புகிறார்.

இதற்கான தீர்வாக சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் முழுமையான "பொது விருப்பின்" உருவாக்கத்திற்காக தனக்கேயான சில விட்டுக்கொடுப்புக்களை செய்து கொள்கின்றான். இது ஜோன்லொக்கினால் கூறப்பட்ட சமூகஒப்பந்தக்கொள்கையில் சித்திரிக்கப்பட்ட அரசைக் காட்டிலும் சற்று அகலித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒன்றாக அமைந்தது. ஜோன்லொக் மக்களின் இறைமையை குறுகிய வாக்காளர் தொகுதியிடம் கையளித்தார். ஆனால் ரூஸோவோ அதனை பொது விருப்பு என்ற வகையில் பொது மக்கள் அனைவரிடமும் கையளித்தார்.[36]

புராதன இந்து அரசியல் மூலங்களிலும் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் அனேக பரிமாணங்களை இனங்காண முடிகிறது. எவ்வாறாயினும் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐரோப்பாவில் அதிகம் பிரபல்யம் பெற்ற சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் அத்தனை பரிமாணங்களையும் புராதன இந்து அரசியல் மூலங்களில் தேடவிழைவது யதார்த்த விரோதமானதாகும். இந்து அரசியல் மூலங்களான வேத இலக்கியங்கள், மனுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம் போன்றவை கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்டவையாகும். ஆனால் அவற்றில் இழையோடியுள்ள சமூக ஒப்பந்தக் கோட்பாடு தொடர்பான சிந்தனைகள் வியக்கத்தக்க வகையில் உள்ளன.

உலகில் ஆதி இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ரிக்வேதத்தில் இதனைத் தெளிவாக அடையாளங்காண முடிகிறது.

> "மக்களால் விரும்பப்படும் ஒருவன்
> அரசனாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றான்.
> மக்களின் விருப்பு அவனிடம்
> ஒப்படைக்கப்படுகிறது.
> அவன் மக்களின் நலன்காப்போனாக
> திகழ்கிறான்"

ஐதரேய பிராமணத்தில் அரசனுக்கு முடிசூட்டப்படுகின்ற விழா பற்றிய விவரணப் பகுதியொன்றில் சமூக ஒப்பந்தக்கொள்கையின் சாயலைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது. இவ்விழாவில் இடையீட்டாளனாகப் புரோகிதன் இருந்துகொண்டு அரசனுக்கோர் சத்தியப் பிரமாணம் செய்விக்கின்றான்.

> "மன்னராக நீர் இன்று தொடக்கம்
> வலியோரையும் மெலியோரையும்
> பாரபட்சமின்றி நடத்துவீராக
> மக்களுக்கு நன்மை புரிவதிலே
> பெரிதும் முயற்சிப்பீராக."[38]

அவ்வாறு அந்த உறுதிமொழி தொடர்கிறது இதன்பின்னர் மக்களை விழித்து மன்னன் ஓர் சபதமிடுகின்றான். மக்களுக்குரிய பாதுகாப்பைத் தக்கபடி வழங்காது போனால் தனக்குச் சந்ததி அற்றுப் போகட்டும் என மன்னன் கூறுவதாக அந்தச் சபதம் அமைகிறது.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட மேற்சுட்டிய வேத இலக்கிய பகுதிகளில் இருந்து அரசின் ஸ்தாபிதத்தில் மக்கள் விருப்பு, மக்களைப்பற்றிய பொறுப்புணர்வு தொடர்பான கரிசனையைத் தெளிவாக அவதானிக்க முடிகிறது.

இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதத்தின் "சாந்திபர்வம்" சமூக ஒப்பந்தம் பற்றிய தெளிவான விவரணக்கதையொன்றைக் கொண்டுள்ளது.

அம்புப்படுக்கையின் மேல் உள்ள பீஷ்மரை யுதிட்டிரன் சென்று நமஸ்கரித்து வினாவுகின்ற பகுதியாக இது அமைகிறது.[39]

தம்மைக்காட்டிலும் பல வழிகளில் ஆளுமையும் அனுபவமும் உடைய பலரையும் ஆளுகின்ற வாய்ப்பும் தகுதியும் ஒவ்வொரு அரசனுக்கும் எவ்விதம் கிட்டுகிறது என யுதிட்டிரன் வினாவுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பீஷ்மரின் பதில் மேல்வருமாறு அமைகிறது. "தொடக்கத்தில் இறைமையும் இல்லை அரசனும் இல்லை. ஆள்பவரோ ஆளப்படுபவரோ இல்லை. மக்கள் தர்மத்தின் வழியிலே தம்மைத்தாமே ஆட்சி புரிந்தனர். காலப்போக்கில் அராஜகம் தலைதூக்கியது. வேதமும் நீதியும் மறைந்தன. பூவுலகில் நிகழும் அனர்த்தங்களைக் கண்டு செய்வதறியாது தேவர்கள் பிரம்மனிடம் சென்று முறையிட்டனர். அவர் ஆயிரம் அத்தியாயங்களை உடைய "தண்டநீதியை" உருவாக்கினார். பின்னர் தேவர்களை உடனழைத்துக்கொண்டு விஷ்ணுவிடம் சென்றார்.

விஷ்ணு தனது அம்சமாக ஒருவனை உருவாக்கி அவனைப் பூவுலகைப் பரிபாலிக்கும்படி சொன்னார். ஆனால் அவனோ அரசனாகத் தன்னைக் கருதாமல் இறைவனால் தனக்கு அளிக்கப்பட்ட நம்பிக்கைச் சொத்தாகவே (நியாயசமாக) அரசாட்சியைக் கருதினான். பூமியில் மீண்டும் அமைதி ஏற்பட்டது. ஆனால் இவனின் நான்காவது தலைமுறை வாரிசாகிய "வேண" என்பவன் முடிசூடிக்கொண்ட போது மீண்டும் பெருங்குழப்பம் நேர்ந்தது.

தெய்வாம்சத்தின் தலைமுறையினன் என்ற அகந்தையின் காரணமாக குடிமக்கள் நலன்கருதாது கொடுங்கோலாட்சி செய்த "வேண" ரிஷிகளின் தலைமையில் நடைபெற்ற கலகத்தினால் கொல்லப்பட்டான். அவனுடைய வலது புயத்தின் எலும்பிலிருந்து பிருது என்பவன் தோன்றினான். அவன் சிறந்த போர்வீரனாயும் சாஸ்திர விற்பன்னனாகவும் திகழ்ந்தான் மிகச் சிறந்த ஒழுக்க சீலனாயும் புலனடக்கம் உள்ளவனாகவும் விளங்கிய அவன் தேவர்களினதும், முனிவர்களினதும் ஆணைப்படி தர்மத்தை நிலைநாட்டினான். அவனை அரசனாக்கிய ரிஷிகள் அவனிடத்தில் ஒரு சத்தியப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

"அரசனாகிய நான் வாக்கிலும் செயலிலும் பிரம்மாவைப்போல் பூமியைப் பேணிப் பாதுகாப்பேன். ஏற்கனவே நிலைபெற்றுள்ள தண்டநீதியின்படி நிலவும் சட்டங்களைப் பின்பற்றுவேன் உலகத்தினுடைய நன்மையையும், ஒழுங்கையும் எப்போதும் கருத்திற் கொண்டு வர்ணக்கலப்புக்களால் விளையும் குழப்பங்களை தடுப்பேன்."[40]

என்றவாறு அந்தச் சத்தியப்பிரமாணம் அமைகிறது. இத்தகைய விவரணக்கதைளுக்குப் பின்னால் ஊடுபாவாக மறைந்துள்ள செய்தியாதெனில் "அரசன்" பற்றிய சமூக எதிர்பார்ப்பின் பரிணாம வளர்ச்சியாகும். தெய்வீக வழியுரிமைச் சித்தாந்தமும் வலிமைக் கொள்கையும் இவ்விடத்தில் சமூகத்தினால் கேள்விக்குள்ளாக்கப்படுகின்ற போக்கின் குறியீடாகவே இதனை நோக்குதல் வேண்டும். பிராமணமேலாண்மை துலக்கமாகத் தெரிந்தாலும் அரசனுக்கான சமூகக்கட்டுப்பாட்டை இடித்துரைக்கின்ற இக்கதையோட்டத்தில் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் சில மேலோட்டமான அம்சங்களை அடையாளம் காண முடிகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே மக்களைப் பாதுகாக்கத் தவறும் பட்சத்தில் அவன் மக்களிடமிருந்து வரிபெறுவதற்கு அருகதையற்ற வனாகிறான் என்றும் அவ்வாறு செய்ய முற்படும் கொடுங்கோல் அரசனை மக்களெல்லாம் ஒன்றுகூடி ஒரு விசர்நாயை அடித்துக்கொல்வது போலக் கொலை செய்ய வேண்டும் என்று மகாபாரத அநுசாசனப் பர்வத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.[41]

மேலும் தெய்வீக வழியுரிமையும் பீஷ்மரால் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. அந்த வகையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலைமுறை உரிமையின்றி ஒருவன் இராச்சியத்தின் தலைமைத்துவத்தைப் பெற்றாலும் அவன் மக்களினை செம்மையாகப் பாதுகாப்பவனாக விளங்கினால் அவனை இந்திரன்போலக் கருதி வணங்கலாம்" என சாந்திபர்வம் குறிப்பிடுகிறது. [42]

எனவே அரசனாவதன் நோக்கம் மக்களைப் பாதுகாப்பதே. அதனைப் பூர்த்திசெய்யத் தவறியவன் தெய்வீக வழியுரிமையைக் காட்டி சமூகத்தை அச்சுறுத்திவிட முடியாது என்கிற ஒரு நிலைப்பாட்டினை மகாபாரதத்தின் சாந்திபர்வம் நன்கு தெளிவுபடுத்தியுள்ளது.

புராணங்களிலும் இதேவிதமான செல்நெறிகளை அடையாளங்காண முடிகிறது. அக்கினி புராணத்தில் அரசன் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு உவமிக்கப்படுகிறான். தான் சுமக்கின்ற கருவின் நலன்கருதி தனது அத்தனை கருமங்களையும் இயற்றுகின்ற அப்பெண்ணைப்போலவே குடிகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே அரசு என்பதையே இக் "கர்ப்பிணி" குறியீட்டின் மூலமாக அக்கினி புராணம் காட்சிப்படுத்த முனைகிறது. [43]

இதனையே "இளவரசன் தனது பட்டாபிஷேகத்தின் போது ஊற்றப்படுகின்ற புனித நீர்த்தாரை தலையில் வீழும்வரையில் சுதந்திரமாக போகங்களை அனுபவிக்க உரித்துடையவன். ஆனால் அவன் அரசனான பின்னர் அவனது உடல் போகங்களை அனுபவிப்பதற்காக அன்றிப் பூவுலகில் வாழுகின்ற மக்களைப் பாதுகாப்பதற்காகவே" என்று மார்க்கண்டேய புராணமும் குறிப்பிடுகிறது. [44]

சமூக ஒப்பந்தக் கோட்பாட்டைப் பற்றி எதுவும் குறிப்பிடாத மனுஸ்மிருதி கூட மக்களின் பாதுகாப்பே அரசனுக்கான பிரதான கடமை என்பதனை வலியுறுத்தத் தவறவில்லை.

"எல்லா அறங்களையும் விட மக்களை
நன்கு பாதுகாப்பதே மன்னனின்
மேலான அறமாகும் அதற்காகவே அவன்
நியமிக்கப்பட்டிருக்கிறான்."[45]

அர்த்தசாஸ்திரமும் இதே நிலைப்பாட்டை எடுத்துரைத்துள்ளது.

"மக்கள் சுகத்திலேயே மன்னனின் நலம் தங்கியுள்ளது. மன்னன் தனக்கு விருப்பமானதைப் பற்றி எண்ணாமல் மக்களுக்கு விருப்பமானதையே கொள்ள வேண்டும்."[46]

மனுதர்மசாஸ்திரத்திற்குப் பிற்காலத்தில் உரைசெய்தவர்களில் "மேதாதி" என்பவர் முக்கியமானவர். இவர் "அரசு" பற்றிய எண்ணக்கருவில் மக்களின் எதிர்பார்ப்பு தொடர்பாக அதிக அழுத்தம் கொடுத்துள்ளார். குடிமக்களின் வருமானத்திலிருந்து வழங்கப்படுகின்ற 1/6 பங்காகிய அரசிறையினைப் பெற்று அவர்களின் பாதுகாப்பையும் நலவாழ்வையும் உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவனே அரசன் என்கிற கருத்தை மேதாதி தனது உரையில் பதிவு செய்துள்ளார். [47]

இதனை சுக்கிநீதி சாரம் எனப்படுகின்ற பிறிதொரு அரசியற்பனுவலும் குறிப்பிட்டுள்ளது.

"அரசன் குடிகளிடம் அரசிறையாகிய வேதனம் பெறுவதனால் அவன் குடிகளின் ஏவலாளன்"[48]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர்களின் திரிபிடகத்தில் முதற் பிரிவாகிய சுத்தபிடகத்தில் அகன்னவ சுத்தாந்த என்ற விவரணப் பகுதியொன்றுள்ளது.

"ஆரம்பத்தில் அரசு என்ற ஒன்றும் நிலை பெற்றிருக்கவில்லை. இதனால் கடுமையான அராஜக நிலை இருந்தது. மக்களெல்லாம் ஒன்றுகூடித் தம்முள் திறமையும், ஆளுமையும் அழகும் உள்ள ஒருவனைத் தேர்ந்தெடுத்தனர்.

அவனிடத்தில் தங்களுக்கான பாதுகாப்பை ஒப்படைத்தனர். அதற்கான பிரதியுபகாரமாக தம்முடைய தானியத்தில் ஒரு பகுதியினை அவனுக்கு வழங்க முடிவெடுத்தனர். தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்து நாடுகடத்தப்பட வேண்டியவர்களை நாடுகடத்துமாறும் அவ் வரசன் கேட்கப்பட்டான். அராஜகம் ஒழிந்து மக்கள் பாதுகாப்பும் சுபீட்சவாழ்வும் உறுதி செய்யப் பட்டது"[49]

இவ்வாறு அமையும் அவ்விவரணப் பகுதியில் பிற்காலத்தில் தோமஸ்ஹொப்ஸ் குறிப்பிட்ட சமூக ஒப்பந்தக் கருத்தியலை இனங்காண முடிகிறது. எவ்வாறாயினும் குறித்த விவரணப் பகுதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மன்னன் "மகா சம்மதன்" எனச் சுட்டியழைக்கப்பட்டான். இது சற்று ஆழ்ந்து நோக்கப்படவேண்டிய பெயரீடாகும்.

மகா - பெரிய, முழுமையான, பெரும் பான்மையான சம்மத - உடன்பாடு, முடிவு, இணக்கம், அந்த வகையில் பெரும்பான்மையா னோரின் இணக்கத்துடன் தெரிவு செய்யப்படுகின்ற ஒருவன் என்கிற தொனிப் பொருளில் இது வழங்கியதாக இருக்கலாம். இவ்வகையில் ரூசோவின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் முன்னிறுத்தப்படுகின்ற பொதுவிருப்பு (General will) என்ற எண்ணக் கருவின் சாயலை இப்பெயரீடு மனதிற்கொண்டு வருகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. Garner, J.W., 1994, **Political Science and Government**, P.52
2. Laski, Harold,2003, **The Theory and Practice of Modern Government**, P.10
3. Kapur, 2002, **Principles of Political Science**, P.105
4. சதபதப்பிரமணம் V.4.11.11
5. பசாம், A .L., **வியத்தகு இந்தியா**, ப.110
6. யசுர்வேதம் 3.1
7. மனுஸ்மிருதி, 7.3
8. மேலது 7.4
9. மேலது 7.5
10. மேலது 7.8
11. மேலது ஏ.7.35
12. அர்த்தசாஸ்திரம் 4.2.3
13. தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்.இயல் -5
14. புறநானூறு 58.13-16
15. அகநானூறு 93.
16. திருக்குறள், பொருட்பால் அதிகாரம் 39
17. மேலது. குறள் 388



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. திருவாய்மொழி. 34.8
19. Leacock, E., **Elements of Political Science,** P.32
20. கிருஸ்ணமோகன். த.. 2009. **அரசியல் விஞ்ஞானம்.** ப.122
21. சிவசாமி.வி.. **ஆரியர் ஆதிவரலாறும்** பண்பாடும் இ ப.07.
22. ஐதரேயபிரமணம் VIII.24
23. மனுஸ்மிருதி 7.98
24. மகாபாரதம் XII.67.18
25. மனுஸ்மிருதி 7.17
26. மேலது 7.101
27. மேலது 7.110
28. திருக்குறள். குறள் 550
29. அர்த்தசாஸ்திரம். 4.2.1
30. அர்த்தசாஸ்திரம். 3.1
31. புறநானூறு. 76.1.2
32. திருக்குறள். குறள் 861
33. கம்பராமாயணம் பாயிரச்செய்யுள்
34. Kapur, A.C., op.cit, 2012, P.114.
35. Kapur, A.C.,2012, Ibid, P.118.
36. Kapur, A.C.,2012, Ibid, P.121
37. ரிக்வேதம் 10.24
38. ஐதரேயபிரமணம் VIII.4
39. மகாபாரதம் XII.67.17-26
40. மேலது
41. மகாபாரதம். XII.61-33
42. மகாபாரதம். XII.59.14-15
43. அக்கினிபுராணம் 222.8
44. மார்க்கண்டேய புராணம் 130.27
45. மனுஸ்மிருதி 7.144
46. அர்த்தசாஸ்திரம்
47. மனுஸ்மிருதி மேதாதி உரை(மொழிபெயர்ப்பு). ப.27
48. சுக்கிரநீதிசாரம் 4.2
49. D.R.Bhandarkar's Carmichael Lecture,1918, P.121
(The Buddhististic Digha Nikaya also says that mankind was righteous at the beginning, and that when sinfulness gradually crept into human society, men selected one who was the most handsome, gracious, and Powerful amng then and made him king. He was called mahasammata, because he was selected by the great.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர். பொன். இராமநாதன் (1915 - 1930)

பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

உலகத்தில் உயர்ந்த பிறவி எடுத்த மக்கள் அனைவரதும் விருப்பம் நீடித்த துன்பியல் கலப்பற்ற ஆனந்தம் தரும். ஒழுக்க வாழ்வியலை நாடுவதாகும். உலகில் எல்லா சமயங்களும் நல்லொழுக்கத்தை அடிநிலையாகக் கொண்டே அமைந்துள்ளன. அன்றியும் உலகின் முதற்பொருளாக என்றும் உள்ள பொருள் இறைவனே எனக் கொள்ளும் சமய நெறிகளுள் சைவசித்தாந்தம் முதன்மையானது. உலகம், உயிர், இறை என்னும் முப்பொருள் உண்மையினை அறிவினடிப்படையில் கூடிய ஒழுக்க நெறியுடன் ஏற்றுக்கொண்டது சைவசித்தாந்தமாகும். சைவம் - சித்தாந்தம் என்னும் சொற்றொடர்களில் "சித்தாந்தம்" என்பது சமகால அறிவுநிலைக்குரிய விமர்சனரீதியான அணுகுமுறையிலே அறிவாராய்ச்சியியலை அத்திவாரமாகக் கொண்டு மனித நம்பிக்கையினை நெறிப்படுத்தி நிற்கும் மெய்யியல் எனலாம்.

சமயமெய்யியல் ஆய்வுகளில் அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயத்திலே ஐதீகநிலையிலே காணப்பட்ட மரபுச்செய்திகளை அறிவுசார் நிலைக்கு எடுத்துச் செல்லுதலை உட்பொருளாக கொண்டது சைவசித்தாந்தம். "சைவம்" என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் "சித்தாந்தம்" அந்த நம்பிகையுணர்வினை அறிவு நிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற்றிட்டமாகும். எனவே சைவசித்தாந்த மெய்யியலானது சமயவாழ்வையும் தத்துவ நெறியினையும் ஒன்றிணைக்கும் மெய்யியற் சிந்தனையானது சமயமும் தத்துவமும் ஒன்றினை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இணைந்து செல்லும் சிறப்பு இந்திய மெய்யியலிற்கே குறிப்பாக சைவசித்தாந்த தத்துவத்திற்கே உரியதாகும். இம்மரபு சமய நிலையிலும், தத்துவநிலையிலும், அறிவியல் நிலையிலும், அமைகின்றது. உலக கலாசார பண்பாட்டு வளர்ச்சியில் எழுபது கோடி மக்களின் வாழ்ந்த - வாழ்கின்ற - ஆன்மீக வாழ்வின் வடிவமே இந்து சமயதத்துவ மரபாகும் என்பது கீழைத்தேய ஞானியரைப் பற்றி நூல்கள் எழுதி நோபல் பரிசு பெற்றவரும் பிரெஞ்சு நாட்டவருமான றோமெயின் ரோலான்ட் என்பாரின் கருத்தாகும்.[1]

## சேர். பொன். இராமநாதன் அவர்கள்

கீழைத்தேய ஆன்மீக சிந்தனையாளர் வரிசையில் சிறப்பிடம் பெற்று விளங்குபவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்.பொன் இராமநாதனும் ஒருவராவர். ஈழத்து சைவ மெய்யியற் சிந்தனை வளர்ச்சியில் சேர். பொன் இராமநாதன் அவர்கள் தமக்கென ஒரு தனியான முத்திரை பதித்தவர். சைவமெய்யியல் வளர்ச்சியில் மட்டுமன்றி அரசியல், விடுதலை, ஒருமைப்பாடு, கல்விவளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, கலைபண்பாட்டு வளர்ச்சி, சமுதாய சீரமைப்பு என பல்துறைகளிலும் ஆளுமையுள்ள ஒரு சித்தாந்த சிந்தனையின் சீரியவடிவமான ஒரு கர்ம யோகியாக விளங்கினார். 19ம் நூற்றாண்டிலே தமது உயர்ந்த கொள்கைகள், பணிகள், மனிதநேயம் என்னும் உதாரண குணங்களால் தமிழ்மக்கட்கு மட்டுமன்றி சகல இனத்தவர்கட்கும் உதவும் கரங்களாக பணி செய்தார்.

1850 முதல் 1900வரையுள்ள 50 ஆண்டு காலப்பகுதி ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ் சுதேசிகள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர். 1851ல் ஈழத்தமிழ் மக்கள் வாழ்வில் விடிவெள்ளி போலத் தோன்றிய சேர். பொன். இராமநாதன் அவர்களின் வளர்ச்சியானது அவரை தமிழ் மக்களின் தலைவனாக ஏழைகளின் நண்பனாக இனமதவேறுபாடு கடந்த ஆற்றல் மிக்க அரசியல்வாதியாக சைவசமயப் பிரசாரகராக சித்தாந்த கோட்பாடுகட்கு இலக்கணமானராக சர்வதேசத்தில் பெரும் புகழ் ஈட்டிக் கொடுத்தது. அவரது சைவசித்தாந்தம் தழுவிய வாழ்க்கைச் சிந்தனைகள் சமய கலாசாரப் பண்பு விருத்தி அனைத்தின் பதிவுகட்கும் அவர் வளர்க்கப்பட்ட குடும்பச் சூழலும் பிரதான காரணமாக அமைந்தது. தமது உலகியல் வாழ்வின் பிற்பகுதியில் ஒரு இல்லற ஞானியாகவே திகழ்ந்தார். யாக்ஞவல்லியர், ஜனகர் போன்ற உபநிடத ரிஷிகளின் வாழ்வு போலவும் தமது வாழ்வினை அமைத்துக் கொண்டவர். பிற்காலம் அவரிடம் ஏற்பட்ட சமயசித்தாந்த மனவெழுச்சியானது அவரது தந்தையாரிடமிருந்தும் குடும்ப முன்னோர் களிடமிருந்தம் சுவீகரித்துக் கொள்ளப்பட்டதாகவே காணப்படுகின்றது. அவரது தந்தையார் பொன்னம்பல முதலியார் தமது குழந்தைகட்டு இலகுவில் பதியக்கூடியவாறு சிறந்த சமயக்கல்வி, சமய வாழ்வு என்பவற்றின் பயிற்சியையும் அளித்ததுடன் அவற்றுக்குக் உதாரணமான சமய வாழ்வும் வாழ்ந்து காட்டினார்.

எம். வைத்திலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட "சேர். பொன் இராமநாதன் அவர்களது வாழ்க்கை வரலாறு" பற்றிய ஆங்கில நூலில் அன்னாரது வாழ்வியல் சுவடுகள், பதிவுகள் அனைத்தும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.[2] இள வயதிலே சேர். பொன் அவர்களிடமிருந்த சமய சித்தாந்த வேட்கையானது நாற்பது வயதெல்லை தாண்டியதும் ஆன்மீக தாகமாக மாறி அலையலையாக அவற்றுள் அன்னாரை அள்ளிச் சென்றது. வேதநூல்கள், சைவாகமங்கள், முதலிய வடமொழி இலக்கியங்களையும் கீழ்நாட்டு மேல்நாட்டுப் புனிதத்திருநூல்கள் பலவற்றையும் கற்று ஆழமான அனுபவரீதியான ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இந்து மெய்யியலின் சகல பரப்பளவையும் நுட்பமாகப் பரிசோதித்து அவற்றின் ஆழத்தை கண்டறியவும் முயற்சி செய்தார். இக்கால கட்டத்திலேதான் அவரது வாழ்வையே மாற்றியமைக்கும் திறனுடைய - ஆத்மீக நியமத்தை ஒழுங்குபடுத்தி வளர்த் தெடுக்கும் ஞானியர் ஒருவரை அடைந்தார். அதன் பயனாக சேர். பொன். இராமநாதன் அவர்களது அஞ்ஞான விவேகத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை ஊட்டும் சற்குருவான குருநாதர் ஒருவர் வந்தடைந்தார். "தேடச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்னும் தாயுமானவர் வாக்கிற்கேற்பவும் "தெளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவின் திருமேனி காண்டல்.. திருவார்த்தை கேட்டல்... குருவுரு சிந்தித்தல் தானே" என்னும் திருமூலர் கூற்றிற் கேற்பவும் சேர். பொன். அவர்கட்கும் அஞ்ஞான விவேகத்தை அகற்றி மெய்ஞ்ஞானத்தை வளர்க்கும் சற்குரு வாய்க்கப் பெற்றார். அப்பெரியவர், ஞானவான் என்பவர் சேர். பொன் இராமநாதனின் மருகராக அமைந்த திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் பேரனான தஞ்சாவூரைச் சேர்ந்த அருட்பரானந்த சுவாமிகளாவர்.

"அந்தஸ்தும் செல்வவளமும் உள்ள ஒருவரிடத்தில் வழமையாகக் காணப்படும் ஆடம்பரம், பகட்டுக்கும் மேற்கத்தைய உலகளாவிய வாழ்க்கை முறையில் தோய்ந்து போய் இராஜபோக வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த விலைமதிப்புள்ள இராமநாதனுடைய நில விரிப்புக்களைக் கொண்ட அரண்களைப் போன்ற அவரது சுகஸ்தான் இல்லத்தில் தமது காலணிகளற்ற பாதங்களைப் பதித்து மிடுக்கான பார்வையுடன் இராமநாதன் முன் தோன்றினார்"[3] என்னும் இந்துசாதனப் பத்திரிகையின் குறிப்புரை அருட்பரானந்த சுவாமிகளின் ஞான வருகை யினை தெளிவாக அறிவித்திருக்கின்றது. சுவாமிகளின் வருகையானது அவரது வாழ்விலே ஞானப்பரவெளி என்னும் பாதையாகிய புதிய பாதை ஒன்றினைத் திறந்து விட்டது. புலன் அனுபவத்திற்குரிய உலகாயத வாழ்வில் இருந்து அவரை வெளியே இழுத்து ஆன்மஞானக்கரை சேர்க்கும் முயற்சியிலும் அதனை உறுதியுடன் நிலைப்படுத்தும் நோக்குடனேயே சுவாமிகளின் இந்த வருகையானது இறைவனின் வழிகாட்டல் போலவே அமைந்தது.

அருட்பரானந்த சுவாமிகளின் சீடரான சேர். பொன் அவர்கள் தமது சகோதரர் அருணாசலம் அவர்களுடன் இணைந்து சைவசமயம், சித்தாந்த மெய்யியல் ஆகியவற்றைக் கற்றதுடன் யோகப்பயிற்சி, தியானம் என்பவற்றிலும் தமது குருவினது வழிகாட்டலின் கீழ் நன்கு பயிற்சி பெறுவதில் தீவிரமாக ஈடுபட்டார். வேதசிவா கமங்களிற் காணப்பட்ட சமய மெய்யியற் பொக்கிசங்கள் யாவும் குருவானவரின் அருட்பார்வையினால் விரிந்து சைவசித்தாந்த மெய்யியலைக் கற்குமளவிற்கு இவரது வாழ்விலே பெரும் திருப்புமுனையானது. உலகளாவிய தோற்றப்பாடுகளின் உண்மை நிலைபற்றிய நம்பிக்கையின்மை, ஆன்மீகத்தின் பெறுமதிகளில் தீவிரமான தேடலின் ஆர்வம், இவற்றால் புலன்நுகர்வு விடயங்களிலிருந்து மனமானது படிப்படியாக விலகிச் செல்ல ஆன்மீகத் தேடலில் அதிகளவு நாட்டம் உண்டானது. சமயசித்தாந்தம் பிரதான இடத்தை எடுத்துக் கொண்டது. சமயநூல்களைக் கற்பதில் ஆர்வமதிகமானது, தியான, யோகப்பயிற்சிகளில் பலமணி நேரம் செலவிட்டார்.

சேர். பொன். இராமநாதன் தமது சைவப் பணி, சமுதாயப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சித்தபுருசர்களது நல்லாசிகளும் கிடைத்தன. யோகர்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் என்போரும் ஆசிர்வதித்து சென்றனர். எனவே அவரது அரசியற்பணி, சட்டம், தேசீயம், சமூகம் முதலிய துறைகளிலும் மன ஒருமைப்பாட்டுடன் நன்கு கவனம் செலுத்தவும் முடிந்தது. அவரது அறிவுசார் புலமையானது கல்வி, சமயம், சித்தாந்தம், பொருளியல், கலை, கலாசாரம் ஆகிய சகல துறைகளையும் தழுவி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சைவசித்தாந்தம்" ஒரு சுருக்க விளக்கம்

சைவசித்தாந்தம் தற்காலத்திலே தத்துவமாக ஏட்டளவில் மட்டுமன்றி மக்களது சமய வாழ்வியலாகவும் பரிணமித்து வரும் காலமாகும் ஈழமாகிய சிவபூமியில் சித்தாந்தம் ஒரு வாழ்வியல் சிந்தனை என்பதனை பண்டிதமணி அவர்கள் "கந்தபுராணம் சைவசித்தாந்த முப்பொருள் தத்துவத்தின் விளக்கமாகவும் - பதி - கந்தன் - பசு: மக்கள் (ஆன்மாக்கள்) பாசமாகிய மும்மலங்கள் சூரன், சிங்கன், தாரகன் எனவும் தெளிவாக அங்கு விளக்கப்பட்டிருக்கின்றது. உலகினைப்படைத்து நடத்தும் முதல்வன் ஒருவன் உளன். அவனது அருட்குணங்கள் பல்வேறு பெயர்களாலும் குறிப்பிடத்தக்கன அப்படியாயினும் அவனை "சிவன்" என குறித்தல் இந்நெறியின் முதன்மைக் கொள்கையாகும். அதனால் அது "சைவம்" எனவும், சைவநெறியின் அறிவியல் அடிப்படை (The Rational of the Religion) "சித்தாந்தம்" எனவும் ஆனது.[4]

சைவசித்தாந்தம் உண்மைப்பொருளை அடித்தளமாக வைத்து ஒழுக்க நெறியினை உணர்த்துவதாகும். "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்பது இக்கொள்கையின் முதல் சிறப்பு விதியாகும் இதனை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர் - அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்" என்றார் திருமூலர். "தன்மை யுணர்ந்து தமையுடையதனை உணர்வார் எம்மையுடைமை எமை இகழார் - தன்மை உணரார் உணராரே" என்பது சிவஞானபோத நூற்பாயிரத்தின் அவையடக்கமாகும் சைவசித்தாந்த நெறியிலே கூறப்படும் ஒழுக்க மெய்யியல் இருவகைப்படும். ஒன்று பொது ஒழுக்கம் - அவையாவன சிவஞான சித்தியாரின் வாக்குப்படி "ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம் வழக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, - அழுக்கிலாத்துறவு அறிவொடு அர்ச்சித்தல் ஆதி - இழுக்கிலா அறங்கள்[5] எனப்பட்டன. இவை "இறைவன் கட்டளைக்கக் கீழ்ப்படிந்து ஒழுகுதல் எனக் குறிக்கும். (Obedience to God).

ஏனையது சிறப்பொழுக்கம், இறைவனது அருளாற்றலில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு மனதை ஒருமுகப்படுத்தி திறனுணர்ந்து மனம் பற்றி மெய்யுணர்வுதலைப்பட்டு அவன் அருட் குணங்களில் தோய்ந்து - முடிவில் சிவனுடன் ஒன்றிக் கலந்து அவன் வண்ணமாய் சிவமயமாய் ஒன்றுதற்கு சாதனை செய்து கொண்டே இருப்பது இதனை "அவனே தானேயாகிய அந்நெறி"[6] என சிவஞான போதம் சுட்டும். சிவஞானபோதம் சித்தாந்தத்தின் அதிகாரப்பிரமாண சாத்திரங்களில் முதன்மையானது. இந்நூலில் நான்கு இயல்கள் காணப்படுகின்றன. அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதனை இயல், பயன் இயல் என்பன பிரமாணங்கள் இலக்கணங்கள் என்னும் முதலிரு இயலும் அறிவாராய்ச்சி அடிப்படையில் - அளவைகள், தர்க்கவாதங்கள் மூலம் உள்பொருளை நிறுவும் முயற்சியாக உள்ளன. அடுத்துள்ள இரண்டு இயல்களும் மேற்குறித்த இறைவனது - உயிர்களது - உலகினது - உண்மையியல்பை உணர்ந்து அறிவினால் தெளிந்து கொண்டால் அவற்றுள் சிக்குண்டு உலையாது அவற்றின் பிடியிலிருந்து தன்னை விடுவிக்கும், மார்க்கங்களில் ஈடுபடுத்தலைச் சாதனையாகவும் - அச்சாதனையின் பயன் "வீடுபேறு" அல்லது "மோட்சநிலை" அடைதல் எனவும் நிறுவியுள்ளது. இச்சாதனை இயலே சைவசித்தாந்தம் கூறும் சிறப்பொழுக்கமாகும்.

அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காக உணர்த்தப்படும் இந்த நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும் மனிதனானவன் ஆற்றும் சாதனைகளே அவனைச் "சாதனையாளன்" என உலகம் போற்ற வைக்கின்றது. சைவசித்தாந்தம் கூறும் இந்த நால்வகை சாதனை மார்க்கங் களையும் வாழ்விலே கடைப்பிடித்து ஈழத்து சைவசித்தாந்த அபிவிருத்தி பணிகளில் பெரும் சாதனைப்படைத்தவருள் சேர். பொன். இராமநாதன் அவர்கள் தன்னிகரற்ற சித்தாந்த சாதனையாளராக விளங்கினார். அன்னார் ஈழத்தமிழ் சமூகத்தினருக்கும் உலகிற்கும் ஆற்றிய சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு நோக்கலாம்.

**சைவசித்தாந்த அபிவிருத்தி பணியில்**

அருட்பரானந்த சுவாமிகளால் ஆட் கொள்ளப்பட்டு இல்லறஞானிகளாக வாழ்ந்த இருவரில் ஒருவர் சேர். பொன். இராமநாதன், அடுத்தவர் சேர். பொன். அருணாசலம் ஆவார். இருவரும் சுவாமிவிவேகானந்தர், சுவாமி அரவிந்தர் என்பார் போன்று மேலைநாடுகளில் வேதாந்த விளக்கம் செய்தமை போன்று ஆங்கிலமொழி மூலம் சைவசித்தாந்த மெய்யியலை உலகறியச் செய்தவர்கள் தாயுமானார் பாடல், திருமுருகாற்றுப்படை போன்ற சைவமெய்யியல் பொதிந்த இலக்கிய ஆக்கங்களை சேர். பொன். அருணாசலம் இதமான ஆங்கில நடையில் மொழி பெயர்த்தார்.[7] பல்துறை விற்பன்னரும் விவேகஞானியுமான சேர். பொன். இராமநாதன் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சமய மெய்யியற் சொற்பொழிவுகள் ஆற்றினார். 1905ம், 1906ம் ஆண்டுகளில் சைவசித்தாந்தம் என்று சொல்லாமலேயே விவிலிய நூற்கருத்துக்கட்கு விளக்கமளிக்கும் வகையில் வாழ்வியல் இலட்சியத்தை விளக்கமாக உரைக்கும் வகையாலும் சைவசித்தாந்தப் புதைபொருள் முழுவதையும் மேலைத்தேச மக்கள் நன்கு புரிந்து கொள்ளுமாறு விளங்க வைத்தார்.[8]

சைவசித்தாந்த அபிவிருத்தி பணிகள் என்னும் இப்பகுதியில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்த மெய்யியலை ஐயம் திரிபறக் கற்றுணர்ந்து, அதனை தமது வாழ்நாளில் கடைப்பிடித்து சாதனை யாக்கிமையுமே அன்னாரது முக்கியமான சித்தாந்த விருத்திக்குரிய பணியாகும். சைவசித்தாந்த மெய்யியல் காட்டும் வாழ்வியலில் எவ்வாறு அபிவிருத்தி பெறவேண்டும் என்ற வேணவாவினால் அவர் என்னென்ன பணிகள், சேவைகள், தொண்டுகள் ஆற்ற வேண்டும் என்பதும், அதற்கான அடித்தளம் எப்படி அமையவேண்டும் என்பதனையும் சேர். பொன். அவர்கள் எவ்வாறு சாதித்தார் என்பதுவே இப்பகுதியில் கூறப்படும் விடயமாகும். அந்த வகையில் சைவசித்தாந்தத்தின் முதல் நூலான சிவஞானபோத வழிகாட்டலின் வழி நின்று அது கூறும் சாதனை இயலுக்கு வடிவமும் வாழும் பண்பும் கொடுத்தமையே அவரது உன்னதமான ஆளுமையாகும். சைவசித்தாந்த மெய்யியல் பற்றி பேசும் போது பலரும் பிரமாணவியலும் இலக்கணவியலும் தான் சைவசித்தாந்தம் என விளங்கிக் கொண்டு பேசுவதே இயல்பாக உள்ளது. அதனால் அவை வெறும் சாத்திர ஞானமாகவே நின்று விடுகின்றன.

சேர். பொன் இராமநாதன் அவர்கள் அவற்றையும் கடந்து சித்தாந்த சாத்திர ஞானத்தின் இலட்சியமாகிய சாதனை - பயன் இயலின வழிநின்று சித்தாந்த ஞான சாதனைகட்கு அபிவிருத்தி வடிவம் கொடுத்து இயக்க ஆற்றலை வழங்கியமை மிகப்பெரும் சாதனையாகும். ஞானம் என்பது வெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டுக்கல்வி அல்ல வாழ்வியற் கல்வி என்பதனை தமது ஒவ்வோர் பணிகளிலும், சேவைகளில் நிலைபெறச் செய்தார். அத்தகைய அவரது சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளை பின்வருமாறு அடையாளம் காட்டலாம்.

1. சரியைநெறியில் அவரது பணிகள்
2. கிரியை நெறியில் அவரது பணிகள்
3. யோக நெறியில் அவரது பணிகள்
4. ஞான நெறியில் அவரது பணிகள்

எனப்பகுத்து நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

"சங்கரனை அடையும் நன்மார்க்கம் நான்கு
-அவை சரியை, கிரியை, யோகம், ஞானம்
என நவிற்றுவதும் செய்வர்"
(சித்தியார், சாதனை இயல்)

சித்தாந்தம் கூறும் சாதனமார்க்கங்களில் மேற்குறிப்பிட்ட நான்கு நெறிகளும் தேவாரகால நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய சாதனைகளாகும். அந்தமார்க்கத்தில் சரியை எனில் உழவாரப் பணிமட்டுமே எனவும் கிரியை எனில் ஆலயப் பூசைக்கிரியைகள் எனவும் யோகம் எனில் மூக்கைப்பிடித்து காற்றை நிறுத்திப் மூச்சுப் பயிற்சி செய்தல் எனவும் ஞானம் என்பது சித்தாந்த சாத்திரப் பயிற்சி பெறுதல் மாத்திரம் என்பதாகவுமே நம்மில் பலரும் விளக்கம் கண்டுள்ளனர்.

நான்கு வகையான சாதனமார்க்கங்கள் அவை மட்டுமல்ல அவற்றிற்கு மேலும் உள்ளன என்பதனை நாயன்மார்களே செயல்படுத்திக் காட்டினர். நாட்டிலே பஞ்சம் வந்தால் இறைவனிடம் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்ப்பதும், நோய்வாய்ப்பட்டால் நோயைத் தீர்த்து அடியவர்களை ஆதரிப்பதும், இறந்தாரைத் துயிலெழுப்பி மக்கள் தம் துயர்துடைப்பதும் மிகப்பெரிய சமூகசேவையென சம்பந்தர் அறிவுறுத்தினார். கிரியை என்பது திருக்கோயில் பூசை கிரியைகள் மட்டுமல்ல - சமுதாயத்திற்கும் மக்கட்கும் ஆற்றும் துயர்துடைப்புப் பணிகளும் கிரியை என்னும் செயல்வழி அறச்செயல் என்பதனைச் சம்பந்தர் வாழ்வியல் விளக்கியது. அப்பர் சுவாமிகள் சமணரின் கொடுமைகளை எல்லாம் இறையருளால் தாங்குவதானது உலகிலே முதன்முதல் அகிம்சைக் கோட்பாட்டின் வழி மறத்தை வென்ற நிலையையும், அப்பரின் சித்தாந்த வாழ்வியல் உணர்த்தியது. அப்பர் சுவாமிகள் மேற்கொண்ட ஆரா அன்பினால் அப்பர் ஆற்றிய ஆலயத்திருத்தொண்டினை சமுதாய அறப்பணியாக்கியவர் அப்பூதியடிகள், திருநாவுக் கரசர் தண்ணீர்ப்பந்தல், திருநாவுக் கரசர் அன்ன தானமடம், என அனைத்து அறப்பணியையும் அப்பர் சுவாமிகட்கு அர்ப்பணமாக்கிய அப்பூதியடிகள் வாயிலாக சரியைப் பணிகள் யாவை என்பது விளக்கமுறும்.

யோகவாழ்வு என்பது கணவன் மனைவி இருவரும் அன்பினால் இணைந்த வாழ்வெனவும், குடும்ப வாழ்வானது தாம்பத்ய யோகம் எனவும் சுந்தரரின் தோழமை நெறி புலப் படுத்தியது. யோகம் எனில் இறை அன்பினில் இணைதல் - பாசங்களை விட்டுப் பிரிதல் எனவும் யோக சூத்திரம் கூறும். அன்பால் இணையும் கணவன் மனைவியர் வாழ்வு தியாகமாகவும் தாம்பத்ய யோகமாகவும் அமைவதே சிறப்பு என்பதனை சைவசித்தாந்தம் இவ்வாறு எடுத்துக் காட்டியது. ஞானமார்க்கம் அன்பு நெறியில் அறிவும் உணர்வும் சமப்படும். மனச் சமநிலையினைக் குறிக்கும் என்பது பகவத் கீதை தரும் விளக்கமாகும்.[9] சைவ சித்தாந்தத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினையொப்பு - மலபரிபாகம் என்றும் ஞானவிருத்தி நிலையில் ஒருவருக்கு விருப்பு வெறுப்புக்கள், இன்ப துன்பங்களை சமமாக நோக்கும் பாவனையில் பக்குவம் ஏற்பட்டால் மனச் சமநிலை சித்தியாகும் என சித்தாந்த சாத்திரங்களும் கூறியுள்ளன.[10]

இத்தகையதொரு சாதனைப் பணிகளின் அபிவிருத்தியை மிகவும் நுட்பமாக தமது ஞானக் கண்ணாகிய அறிவுக் கண்ணால் விளங்கிக் கொண்டு தான் வாழ்ந்த சமூகத்திற்கும் தனது நாட்டுக்கும் சேர். பொன் இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்த ஞானவிருத்தியின் அடிப்படை களிலிருந்து பெரும் பணியாற்றி சாதனை படைத்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் மிகவும் நேசிக்கப்பட்ட நம்பிக்கை நட்சத்திரமாக சேர். பொன் அவர்கள் விளங்கினார். நாவலர் தாம் ஆற்றிய சைவ, சித்தாந்த பணிகளையும், அரசியல் நெறிகளையும் சேர். பொன். இராமநாதன் மூலமே காரியப்படுத்த நினைத்து வரைச் சட்டசபைக்கும் அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றவர். நாவலர் பெருமானின் சைவ மறுமலர்ச்சி இயக்கத்திலும், சித்தாந்த பணிவிருத்தியிலும் அன்னாரின் வாரிசாகவே இராமநாதன் அவர்கள் விளங்கினார்கள்.[11] நாவலர் மறைந்த பின்னரும் அவரது சமய தத்துவ கலாசாரப் பணிகளை அவரைப் போலவே தனிமனிதனாக நின்று எந்தவித அறை கூவலையும், சவால்களையும் எதிர் கொண்டு வெற்றியுடன் செயற்பட்டவர் இராமநாதன் அவர்கள், நாவலர் ஆரம்பித்து வைத்த சைவ மெய்யியல், கலாசார மறுமலர்ச்சியை சமுதாயத்தில் வேரூன்றச் செய்வதற்கு இராமநாதன் அவர்களிடமிருந்த பொருள் வளமும், மேலைநாட்டு பிரயாணத் தொடர்புகளும் நல்லதொரு வாய்ப்பாக அமைந்தன. அதிலும் இராமநாதன் அவர்களும் நாவலரைப் போன்று கிறிஸ்தவ மிஷனரி மாருடைய யுக்தியைப் பயன்படுத்தி சைவ சித்தாந்த விருத்தியினை சமுதாயத்தில் வேரூன்றச் செய்வதில் வெற்றி பெற்றார்.

### சைவசித்தாந்த சாதனைகளில் சரியைத் தொண்டு

சைவசித்தாந்தம் அறிவாராய்ச்சி இயலில் இலக்கண இயல், பிரமாண இயல் போன்ற அளவைப் பிரமாணங்களின் நுட்பங்களை விளக்கியுள்ளமையினை சிவஞானசித்தியார், சங்கற்பநிராகரணம், பரமோட்சநிராசகாரிகை போன்ற சாத்திர நூல்களால் அறியமுடியும். அவ்வாறே சிவஞானபோதம் கூறும் சாதனை இயல் என்பதில் கூறப்படும் நான்கு மார்க்கங்களில் திருக்கோயில் அமைத்தலும், திருக்கோயில் வழிபாடுமே கிரியா நெறியாகும் என்னும் நிலைப்பாட்டினின்றும் மேலும் ஒருபடி உயர்ந்தது. சேர். பொன் அவர்கள் அத்தொண்டு நெறியானது சமுதாய சேவையாகவும் பரிணமிக்க வேண்டும் என்னும் மார்க்கத்தினையும் செயலாற்றுவதன் மூலம் நிறுவினர். சைவசித்தாந்தத்தில் ஆன்மீக விடுதலைக்குரிய சாதனமாகவும் கலைகளின் உறைவிடமாகவும், சைவநெறியின் நிறுவன மயபபடுத்தப்பட்ட நிலையமாகவும் திருக் கோயில்கள் செயற்பட்டு வருகின்றன. அறிவியல் உண்மைகளைப் பரிசோதிப்பதற்கும் தீர்மானிப்பதற்கும் பரிசோதனைக் கூடங்கள் (Laborataries) இருப்பது போல தனிமனிதனது நடத்தைக் கோலங்கள் பண்பாட்டு விழுமியங்கள், அறநெறிகள், சேவைகள், சமூக மேம்பாட்டு ஆன்மவிருத்தி என்பவற்றில் (Training Centres) பயிற்சி அளிக்கும் சுயபரிசோதனைக் கூடங்களாக ஆலயங்கள் விளங்கின. அதுவே திருக்கோயில் வழிபாட்டின் இலட்சியமாகும். சோழர்மன்னர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அமைந்த திருக்கோயிற் பணிகள் இவற்றினை உள்ளடக்கியனவாகவே விரிவாக்கம் பெற்றிருந்தன. காலப்போக்கில் கோயில்கள் தனியார் ஆளுமையில் வளர்ச்சியடையத் தொடங்கியது. அங்கு நித்திய, நைமித்ய பூசைகட்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்படலாயிற்று. அரச ஆதரவும் நிதிவளமும் இருந்தபோது ஆற்றிய சமூகப் பணிகள் பிற்காலம் போதிய நிதி உதவி இன்மையால் மறைந்து அருகிப் போயின.

சேர். பொன் இராமநாதன் அவர்கள் தமது அரசியல் பிரவேசம் ஊடாகவும் நிதிவளம் மிக்க குடும்பத்தில் வந்தவராதலாலும் அவற்றின் வளங்கள் மூலம் சித்தாந்த மார்க்கமான சரியை நெறியினை சமுதாய சேவையாகவே மாற்றிக் கொண்டு திருக்கோயில் பணிக்கும் முக்கியத்துவம் வழங்கினார். இந்துக்கள் வாழ்விலே "இந்து" ஒருவனின் ஆன்மீக இலட்சியத்தை அடையும் வழிகளையும் அனைத்து மக்களின் சமூகப் பண்பாட்டு உருவாக்கத்திலும் திருக்கோயில்களின் பணி உன்னதமானது கோயிலில் அமைந்துள்ள இறைவனும் கொடித்தம்பமும் சித்தாந்தம் கூறும் பதிப்பொருளையும் கொடித்தம்பத்தில் உள்ள சேலை பசுவாகிய ஆன்மாவையும் சேலையில் சுற்றப்பட்ட கயிறு பாசமாகிய மலங்களையும் குறிக்கின்றது. எனவே முப்பொருள் தத்துவத்தின் விளக்கமாகவே திருக்கோயில்கள் அமைந்துள்ளன. இத்தகைய உன்னத நோக்கங் களை நிறைவேற்றும் பொருட்டு கொழும்பு மாநகரில் சேர். பொன். அவர்கள் பொன்னம்பலவாணேஸ்வர் ஆலயத்தை அமைத்தார். இதனை 1856இல் பொன்னம்பல முதலியாரே முதலில் கட்டுவித்தார்.[12] பின்னர் 1907 ஆம் ஆண்டிலே சேர். பொன் அவர்கள் மீண்டும் இக்கோயிலை புனருத்தாரணம் செய்து தனிக்கருங்கல்லால் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோயிலாகக் கட்டுவித்தார். வேதாகம அடிப்படையில் சிற்பசாஸ்திர விதிகட்கமைய இக்கோயில் அமைத்ததுடன் தானே அதன் முகாமையாளராக இருந்து ஆகமமுறைப்படி விழாக்களை ஒழுங்குப்படுத்திப் பரி பாலனத்தையும் செய்து வந்தார்.[13]

சைவப் பெண்களுக்கும், ஆண்களுக்குமாக நிறுவப்பட்ட இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வாரக் கல்லூரிகளிலும் வழிபாட்டிற்கென ஆலயங்களை அமைப்பித்தார். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஒரு நடேசர் கோயிலையும் (பரமேஸ்வராக் கல்லூரியான) யாழ் பல்கலைக் கழகத்தில் பரமேஸ்வரன் கோயிலையும் அமைப்பித்து முழுமுதற் கடவுளான சிவனுக்கு மூன்று ஆலயங்களினைக் கட்டுவித்தார். "இக்கல்வி நிலையங்களில் அறிவுத் திறனுடன் அறநெறிப்பட்ட வாழ்வுடன் கூடிய தமிழ் சைவ மெய்யியல் கல்வியும் சித்தாந்த மரபும் ஒன்றிணைய வேண்டும்"[14] என்னும் சீரிய சிந்தனையின் விளைவாக எழுந்தவையே இத்திருக்கோயில்களாகும். 1917ம் ஆண்டிலே தமிழ்நாட்டிலே சிதம்பரம் போன்ற திருக் கோயில்களின் சுதந்திரமான வழிபாடு, நிதிவளம் என்பவற்றில் பாரிய அச்சுறுத்தல்கள் அக்கால அரசியற் சூழ்நிலை காரணமாக எற்பட்டது. அவற்றின் பிரச்சினைகளை விசாரிக்க ஒரு கொமிசனும் ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சமயத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்களும் அங்கு இருந்தமையால் தமது தீர்க்கமான சட்ட ஆலோசனைகளின் வழி சிதம்பரம் உட்பட்ட பல திருக்கோயில் சிக்கல்களைத் தீர்த்து வைத்தமையினை[15] தமிழ்நாட்டு அறிஞர்குழு வெகுவாகப் பாராட்டி வாழ்த்தியமையும் அன்னாரின் திருக்கோயிற் பணிகட்குச் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாகின்றது. சைவசித்தாந்த முதல் நூலான சிவஞானபோதம்.

**"…..மாலறநேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"**(சூ12)

எனக் குறிப்பிட்டவாறு திருக்கோயிற் பண்பாட்டு விருத்தியில் அதிக கவனம் செலுத்தினார்.

சேர். பொன். அவர்களின் சீரிய ஆத்மஞான சிந்தனையால் இவ் ஆலயங்கள் சைவசித்தாந்த சாதனை வரிசையில் மக்கள் சரியைத் தொண்டில் நின்று ஆன்ம ஈடேற்றம் பெறும் வகையில் இக்கோயில்களில் ஆறுகாலப் பூசை, மூன்று காலம், காலை, மாலை பூசை முறைகளையும் ஏற்படுத்தி சைவமக்கள் அதீத பயன் அடையுமாறு பணியாற்றினார். சைவநாயன்மார்கள் பக்தி மார்க்கம் சிறக்கும் பொருட்டும் அடியார்கள் இவற்றுடன் சைவமக்களின் அறிவுத்திறன், ஆன்மிகக் கல்வியின் மேம்பாடு சிறக்கவேண்டி ஆலயங்களை கல்விச்சாலைகளுடன் இணைத்து வித்தியாலங்கள் என்னும் பெயருக்குப் பொருள் விளங்குமாறு பணிசெய்தார். சேர். பொன். அவர்கள் சிவபூசை, குருபூசை, மகேஸ்வர பூசை என்பன ஆலயங்களில், மடங்களில், சமய நிறுவனங்களில், கல்வி நிலையங்களில் கொண்டாடப்பட்ட வேண்டும் எனவும் விரும்பினார். மக்களது வழிபாட்டு சுதந்திரத்தை மிகவும் வற்புறுத்தினார். 1918ம் ஆண்டு கதிர்காமத்தல யாத்திரை செல்பவர்கள் அப்பகுதி பிரதேச அரச அதிபர் அல்லது உதவி அரசாங்க அதிபரிடமிருந்து உத்தரவு பெற வேண்டும். அதற்காக 1000/= ரூபா செலுத்த வேண்டுமென ஒரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டது.[16] இச்சட்டம் தமிழ் மக்கட்கு மட்டுமே என அறிந்த சேர். பொன். அவர்கள் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு அநாகரிகமாக நடப்பதா? என அவர்களது தவறைச் சுட்டிக் காட்டி வாதாடி அடியவர்கள் யாவரும் சுதந்திரமாக வழிபாடு செய்யவும் யாத்திரை மேற்கொள்ளவும் பேருதவி புரிந்தார். "சைவ பண்புகளைப் பேணிக் காத்த பெருந்தகை" என்று கா. கைலாசநாதக் குருக்களும் அன்னாரது சைவ மெய்யியல் பங்களிப்பினைப் போற்றியுள்ளனர். அவரது தந்தையார் கார்த்திகேயக் குருக்களே சேர். பொன். அவர்களின் குடும்ப சோதிடராக விளங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.[17]

சேர். பொன் அவர்களது திருக்கோயிற் பணிகள் தமிழகத்திலும் விரிவாக்கம் பெற்றன. குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு கோடைக்கானலில் கோயில் அமைத்த பெருமையும் இவருக்குண்டு. அவரது மனைவியான லீலாவதி இராமநாதன் அவரது இக்கருத்தினை நிறைவு செய்யப் பேராதரவாக விளங்கினார். சைவக் கோயில்கள் குறைவாக உள்ள கோடைக்கானலில் தமது சொந்தப் பணத்தில் நிலம் வாங்கி கோயில் அமைத்து "குறிஞ்சியாண்டவன் கோயில்" எனப் பெயரிட்டு குழந்தை வேலாயுதசாமியை அங்கு எழுந்தருளச் செய்தார். இவை பற்றிய விபரத்தை க.ச.குலரத்தினம் எழுதிய "வள்ளல் கௌரவ சேர். பொன். இராமநாதன்" என்னும் கையெழுத்துப் பிரதியாகவுள்ள ஓர் கட்டுரையில் விளக்கமாகக் காணமுடியும்.[18] இவ்வாறாக சைவக்கோயில் வளர்ச்சியினூடாக சைவசித்தாந்தம் கூறும் திருக்கோயில் வழிபாட்டினைத் தமிழகத்திலும் நிலைபெறச் செய்யுமாறு பணியாற்றி பெருமை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவசித்தாந்த நோக்கில் அமைந்த கிரியைத் தொண்டு

சரியை, கிரியை என்னும் சைவ சித்தாந்த மரபிலே திருக்கோயிற் தொண்டு மாத்திரமன்றி மனித சமுதாய முன்னேற்றத்திற்காக ஆற்றும் உயர் ஆத்மிகக் கல்விப் பணியும் - உயர்கிரியா நெறியின் பாற்படும் என்பதனை சேர். பொன். அவர்களது வாழ்வு உணர்த்தி நிற்கின்றது. "சரியை, கிரியை என மருவுமலை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தமென..." என்ற சிவப்பிரகாச நூலின் வாக்கிற்கேற்ப தமது வாழ்வினைச் சித்தாந்த மார்க்கத்தில் வகுத்துக் கொண்டார். தன்னை ஒரு "சைவசித்தாந்த மார்க்க" எனக் கல்வெட்டில் எழுதி வைத்தான் பல்லவ மன்னன் மகேந்திரன். சேர். பொன். அவர்களும் தமது சித்தாந்தமார்க்கத்தை கிரியைநெறி எனும் செயல்வழி ஆக்கமாக தாம் நிறுவிய கல்லூரிகளில் வாயிலாக முன்னெடுத்தார். தமிழகத்திலும் கல்வி பயின்ற தமது இளமைக்காலங்களில் வேதம், ஆகமம், இதிகாசம், புராணங்கள், சைவத்திருமுறைகள், சைவ மெய்யியல் கோட்பாடுகளில் நன்கு கற்றுப் பயற்சி பெற்றதனால் தமது சித்தாந்த மறைஞானக் கல்வியினை தாம் அமைத்த கல்லூரிகள் ஊடாக முன்னெடுக்கும் வகையில் பாட போதனைகளை அமைத்தார்.

ஆறுமுகநாவலரால் அரசியற் பணிகட்கு அறிமுகப்படுத்தப்பட்டது போன்று அவரைப் போலவே சைவம், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பவற்றை நன்கு ஆதரித்து வளர்த்தார். பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய தத்துவங்களிலும் ஆழமான புலமை கொண்டிருந்தார். சமரச சன்மார்க்க நெறியே அவரது இலட்சியமானது. குறிப்பாக சைவசித்தாந்தம், வேதாந்தம் முதலியவற்றிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.[19] இலங்கைக்கு என ஒரு கல்விக் கொள்கையை உருவாக்கியவர் களில் இராமநாதன் அவர்களும் ஒருவராவார். தமது கல்விக் கோட்பாட்டின் அடிப்படையில் இராமநாதன் கல்லூரியின் தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சியினை சமய மெய்யியல் பண்பாட்டுச் சித்தாந்தங்கள் ஊடாக வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்.[20] அவரால் நிறுவப்பட்ட இரு கல்லூரிகளிலும் மேலைநாட்டு, இந்திய, இலங்கை ஆசிரியர்கள் கல்வி புகட்டினர். விஞ்ஞானம் மட்டுமன்றி சமய, கலாசார தத்துவ வித்தைகளும் போதிக்கப்பட்டன. இராமநாதன் கல்லூரியில் சைவசித்தாந்தம் பற்றிய கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டமை[20B] இராமநாதன் அவர்களது சைவசித்தாந்த ஈடுபாட்டினை மேலும் புலப்படுத்துவதாகும். இவரது கல்விப்பணியை மதிப்பிடும் இந்து ஒகன் (Hindu Organ) பத்திரிகையானது எல்லாத்தேச இனத்தவரும் ஒன்றாகக் கற்கக்கூடிய பெரிய கல்லூரியை அமைத்து கீழைநாட்டு, மேலைநாட்டு உன்னதமான சிந்தனைக் செல்வங்களைக் கற்பிப்பதில் பாடுபட்டுள்ளார் எனக் குறிப்பிட்டது. நவீன நிலைக்கு ஏற்ற கல்வியையும் எமது பண்டைய நூல்களில் பொதிந்து கிடக்கும் இலக்கிய தத்துவ அறிவினையும் இணைத்து தகுந்த கல்லூரி ஒன்றினை அமைப்பதே எனது நோக்கம் எனவும் தமது போட்டியில் தெரிவித்தார்.[21] தமது துணைவரின் கல்விச்சிந்தனையையும், கல்விப் பணியையும் கருத்தாகக் கொண்டே லீலாவதி அம்மையார் தொடர்ந்தும் அயராது உழைத்து வந்தார். இவர் தனது துணைவரை ஆத்மீக குருவாகக் கொண்டு 1906ம் ஆண்டு முதல் அவரால் எழுதப்பட்ட "கீழ்நாட்டு மாணவர்கட்கு மேல்நாட்டுக் காட்சிகள்" (The Western Pictures to Eastern Students) என்னும் நூலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் அவர்களின் சொற்பொழிவுகளை அடிப்படையாக வைத்துச் சமயம், சித்தாந்தம், மொழி, கலாசாரம் என்பவற்றை தெளிவுபடுத்தி விளக்க எழுந்த நூலாகும்.

சைவவித்யா விருத்திச்சங்கம் ஸ்தாபித்து சேவையாற்றிய போதும் சரி, சைவசாரியார் பயிற்சிக்காக ஒரு கல்லூரியை நிறுவிய பணியிலும் சரி, கல்வியின் பரந்த நோக்கம் என்பது "சைவசமயப் பண்பாட்டு மரபும் நித்தியமான தத்துவ மரபும் சைவ ஒளியையும், சைவம் புகட்டும் கருணையையும் பரப்புவதாகும்" என்றே விளக்கப்பட்டது.[22] மேலும் கோயில்கட்கு அருகிலே பாடசாலைகள் அமைத்தது மட்டுமன்றி கல்லூரிகளிற்குள்ளேயும் கோயில்கள் அமைத்தமையானது மக்களிடமும் மாணவர்களிடமும் சமய மெய்யியல் உணர்வுடன் கல்வியையும் இணைத்துப் பண்பாட்டு உணர்வுகளைப் பலப்படுத்துவதாகவும் அமைந்தது. இராமநாதன் அவர்களது உறவினரான கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தவர்களில் ஒருவர். அவர் தமது கருத்தில் "மக்கள் விரும்பும் மேல்நாட்டுக் கல்வியைத்தான் இங்கு நடைமுறைப் படுத்தவதாயின் அவ்வாறான பல்கலைக்கழகம் தேவையற்றதாகும். கீழைத் தேய பண்பாடு, தத்துவம், மொழி, இசை, கலை இவற்றைப் பெறக்கூடிய வகையில் பல்கலைக் கழகம் உருவாக வேண்டும். இப்பல் கலைக் கழகத்தில் கீழைத்தேய் மேலைத்தேய பண்பாடுகள் சங்கமிக்க வேண்டும்.[23] என இலங்கை பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களைச் சுட்டிக்காட்டி அவை எப்படி அமைய வேண்டுமென்பதையும் குறிப்பிட்டார். மேலும் "இலங்கை முழுமைக்கும் ஒரே பல்கலைக்கழகம்" என்ற கருத்தையும் இராமநாதன் அவர்கள் ஏற்கவில்லை. அவரது உயர்கல்விக் கனவை நனவாக்கும் வகையில் வட இலங்கையில் யாழ்ப்பாணத்திலே கலாசாரப் பல்கலைக் கழகமொன்று உருவாக்க விழைந்த போதும் 1974ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தான் அது சாத்தியமானது. அவரது பரமேஸ்வராக் கல்லூரியை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி, இந்து நாகரிகம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கட்கு முதன்மை அளிக்கப்பட்டது. முதலில் இப் பல்கலைக்கழகம் மனித பண்பியியல் பீடமாக இந்து நாகரிகம், வரலாறு, தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய துறைகளுடன் தான் ஆரம்பமானது விஞ்ஞானபீடமும் நிறுவப்பட்டது. பின்னர் மனிதப்பண்பியல் பீடம் கலைப்பீடமாக மாறியது. இந்து நாகரிகத்திற்கென தனியான தொரு துறை உலகப் பல்கலைக் கழகங்களில் இல்லாத ஒருதுறை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலேயே தனித்துறையாக ஆரம்பித்தது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் "தமிழ் – இந்து பண்பாட்டுத்துறையாக" முதன்முதல் ஆரம்பித்து பன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனித்துறையாக அமைந்து விளங்குவதற்கு இராமநாதன் அவர்களினது தீர்க்கதரிசனமும் ஊற்றாக அமைந்தது எனில் தவறில்லை.

இவ்வாறாக இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்தத்தை ஒரு கலாசார ஊடகமாவே நிலைபெறச் செய்வதில் தனது கல்லூரிகளையும், திருக்கோயில்களையும்கல்விப்பணிகளையும்சரியை, கிரியை நெறிகளாகவே பாவித்து அதில் வெற்றியும் கண்டார். அதன் பயனாகவே பிற்காலவாழ்வில் யோகசாதனையிலும் ஞானசாதனையிலும் ஈடுபட்டு பெரும்பணியாற்ற முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவசித்தாந்த யோக சாதனையில் ஆற்றிய பணிகள்

சேர். பொன். இராமநாதன் சித்தாந்த அபிவிருத்தி பணியில் அவரது நூலாக்கப் பணிகள் பெறுமதி வாய்ந்தனவாகும். அன்னாரது மனச்சமநிலை பேணும் யோக வாழ்வினை அத்தகைய நூலாக்கங்களில் காணமுடியும். சதாபுறம் நோக்கியே உலக விவகாரங்களில் ஈடுபட்டு சிதறிக்கிடக்கும் ஐம்புலன்களை உள்முகமாகத் திருப்பி ஒருமைப்படுத்தி சிவத்தியானத்தில் ஈடுபடுத்துவதால் யோகநலம் கைகூடும். ஆன்மா ஈடேற்றமும் அடையலாம் என்பது சைவசித்தாந்தம் கூறும் உண்மைகளில் ஒன்றாகும். "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் ஓடும் செம்பொன்னும் ஒக்கநோக்குவர்" என்னும் சேக்கிழார்வாக்கு இவ்வுண்மையை எடுத்துக் காட்டும். இராமநாதன் அவர்களும் தமது சைவ அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட புறச்சரியை என்னும் சமுதாய மேம்பாட்டுக்கான அபிவிருத்திப் பணிகளுடன் நின்றுவிடாது தன்னையும் தனது சமூகமக்களையும் மேன்னிலைப்படுத்தும் சைவசித்தாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் யோகநிலையில் நின்று ஆராய்ந்து விளக்கியுள்ளமைக்கு அவரால் ஆக்கப்பட்ட நூலாக்கங்கள் தக்கசான்றாகும்.

இவரது ஆத்மஞான நூலாக்கங்களில் பகவத்கீதை விருத்தியுரை ஆத்திசூடி, மந்திர விளக்கம், திருக்குறள் பாயிரம், இராமநாதேயம் போன்றவை குறிப்பிடத்தக்கன செந்தமிழ் இலக்கணம் என்ற நூலும், பொன்னம்பலம் இராமநாதனின் தெரிந்தெடுக்க பேச்சுக்கள் என்பவற்றிலிருந்தும் அவரது சைவசித்தாந்த ஞானத்தை உணரலாம்.[24] பகவத்கீதைக்கு அவர் எழுதிய தமிழ்மொழிபெயர்ப்பையும் விருத்தி யுரையும் கற்றுணர்ந்த மு. சர்வேஸ்வரசர்மா என்னும் வடமொழி அறிஞர் சங்கரர், இராமானுஜர் உரைகளால் விளக்க முடியாதவற்றை இந்நூலைக் கற்று இராமநாதனின் ஞானஉபதேசத்தினால் அறிய முடிந்ததெனவும் குறிப்பிட்டார்.[25] அதனால் பகவத் கீதைக்கு சைவசித்தாந்த பரமாக விளக்கவுரை கண்டவர் எனவும் பாராட்டப்பட்டார். தர்மசாஸ்திர நூல்களிலுள்ள விடயங்களைத் தொகுத்து "இராமநாதேயம்" என்ற நூலாக வெளியிட்டார். அவரது ஆத்திசூடி உரை, இலக்கண உரை என்பன அன்னாரின் சித்தாந்த அறிவுநுட்பம், சமயஞானம், அறிவாற்றல் என்பவற்றை நன்கு புலப்படுத்தியுள்ளன.[26] வேதாகமங்களையும் பகவத்கீதையினையும் சைவத் திருமுறை களுடன் வேறுபல நூல்களையும் கற்றுணர்ந்த இராமநாதன் அவர்கள் அவற்றில் கூறப்பட்டபடி சமயானுட்டானங்களையும் கடைப்பிடித்து ஒழுகினார். யோகநெறியில் அவருக்கிருந்த ஈடுபாடு இந்நூல்களைக் கற்றுத்தேர்ந்தனால் ஏற்பட்ட பயிற்சியானது அவரது கம்பீரமான தோற்றத்திற்கும் நீண்ட ஆயுள்காலத்திற்கும் ஒரு காரணம் எனவும் அறிஞர் புகழ்ந்துள்ளனர்.[27] ஆடம்பரச் சூழல், ஆங்கிலக்கல்வி இவற்றின் மத்தியில் பார்வைக்கு கனவானாகவும் மனப்பக்குவத்தில் கர்ம யோகியாக - செயல் வீரராக சைவத்தமிழ் மக்களின் கலை, கலாசார, வடிவத்தின் பிரதிநிதியாகவே வாழ்ந்தார்.

ஆத்திசூடி என்ற நூலிற்கு எழுதிய மந்திர விளக்கத்தால் "எவன் விதிக்கப்பட்ட கருமங்களை அனுசரித்தும் விலக்கப்பட்ட கருமங்களை நிஷேசித்தும் வாழ்வானோ அவனுக்கு சித்த சுத்தி உண்டாகிப் பேரன்பும் பேரறிவும் தலைப்படும்" என்ற விளக்கமானது அன்னாரின் மனப் பக்குவத்தையும் யோகவாழ்வின் விழுமியங் களையும் நன்கு வெளிப் படுத்தியுள்ளது.[28]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கள் அனைவரும் தனது தினசரி வாழ்விலே ஆன்மவித்தையில் அபி விருத்தியடைய வேண்டுமெனில் இரவில் பெரும் பகுதியை ஞான நூல்களை வாசிப்பதிலும் ஓதி உணர்வதிலும் யோகசாதனைகளில் ஈடுபட்டு இறை வழிப்பாட்டிலே சாதனை செய்பவர்களாக இருக்க வேண்டும் என்னும் அறிவுரையானது அன்னாரின் சைவசித்தாந்த வாழ்வியல் அனுபவவாக்காகும். இதனை "சகமார்க்கம் புலனொடுக்கி தடுத்து வளி - இரண்டும் சலிப்பற்று அகமார்க்கம் அறிந்து அவற்றின் பொருள் உணர்ந்து அங்கணைந்து போய் முழுச்சோதி நினைத்திருத்தல்.[29] யோக மார்க்கமாகும் எனச் சித்தியார் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு யோக சாதனை வழிநின்று சித்தாந்த ஞானமார்க்கம் கைகூடப் பெற்றதுடன் அதனை உணர்ந்தவாறு சாத்திர நூல்கள் வாயிலாகவும் எழுதி வைத்தார்.

### சைவசித்தாந்த ஞானசாதனை அபிவிருத்தி பணிகள்

சேர். பொன் இராமநாதன் அவர்கள் தஞ்சாவூர் அருட்பரானந்த சுவாமிகளுடன் ஏற்பட்ட தொடர்பிலிருந்து அவரிடத்தில் சைவசித்தாந்த ஞானத்திலும் ஒப்புயர்வற்ற ஆளுமைத்திறன் வெளிப்பட்டது. இலங்கை சட்ட நிரூபணசபையில் அவருக்களித்த பிரியாவிடையில் அவரது உயர்ஞான வேட்கை பதிவாகியுள்ளது. அப்போது அவர் ஆற்றிய பதிலுரையில் "இதுவரை நியாயத்துறையிலும் சட்ட நிரூபணசபையிலும் ஆற்றிய பணிகளை விட மேலானபணி ஒன்று இருப்பதாக உணர்கிறேன். அதனை அறிந்து கொண்ட பின் இந்நாள்வரை என் வாழ் நாளெல்லாம் நீதிமன்றத்திலும் அரசியல் அரங்கிலும் வீணாகிவிட்டன என்பதனையும் உணர்ந்தேன்" என்ற கூற்றில்[30] அவரது சைவசித்தாந்தஞானத்தின் மேலுள்ள அதீத ஆர்வமும் பற்று விடுதலை வேட்கையும் வெளிவந்துள்ளது. 1893ம் ஆண்டு இந்து மதம் உலகப்பிரசித்தி பெற்ற காலமாகும். அந்த ஆண்டில்தான் சிக்காக்கோ நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட அகில உலக சமய மகாசபையில் சுவாமி விவேகானந்தர் வேதாந்தம் பற்றிய சொற்பொழிவை ஆற்றி பெரியதோர் விழிப்புணர்வைத் தோற்றுவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரித்தானிய மக்களிடையே ஏற்பட்ட கீழைநாட்டு சைவ மெய்யியல் தொடர்பான ஆர்வமானது சேர். பொன் இராமநாதன் அவர்களால் அம்மக்களிடையே பன்மடங்கு செல்வாக்குப் பெற்றது.

இராமநாதன் அவர்களது சைவசித்தாந்த ஞானத்தின் ஒப்புயர்வற்ற ஆளுமைத் திறம் காரணமாக 1905ல் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் சிதம்பரத்தில் நடத்திய முதலாவது சைவசித்தாந்த மாநாட்டுக்கு அவரைத்தலைமை தாங்க அழைத்தது. இந்நிகழ்வானது அவரின் ஞானவாண்மை விருத்திக்கு ஓர் அத்தாட்சியானதுடன் அக்கால சைவசித்தாந்த மேதைகள் அனைவரையும் திருப்திப்படுத்தும் சைவசித்தாந்த ஞானவானாக அறியப் பட்டிருந்தமையினை அறிவிப்பிதாகவும் உள்ளது.[31] இவற்றிலும் அதிகமாக பன்மடங்கு அன்னாரது சைவசித்தாந்த அறிவியல் மேதைத்தனம் பெருவீச்செடுத்து பெருக் கெடுத்தோடுதற்கு அவரது 1905ம், 1906ம் ஆண்டுகளில் அவர் மேற்கொண்ட அமெரிக்கச் சுற்றுலாப் பேருரைகள் சான்றாக அமைந்தன. சுவாமி விவேகானந்தர் வேதாந்த ஞானத்தை விளக்கியது போன்று இராமநாதன் அவர்கள் தமது சைவசித்தாந்த ஞானத்தை தமது விளக்கவுரைகளில் எடுத்துரைத்தார். பல்துறை விற்பனராகிய இராமநாதன் அவர்கள் அமெரிக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஆற்றிய சமய சித்தாந்தச் சொற்பொழிவுகள் "சைவசித்தாந்தம்" என்று சொல்லாமலே விவிலிய நூல்கருத்துக்கட்கு விளக்கம் கொடுக்கும் வகையில் சித்தாந்த ஞான சிந்தனைகளை விளக்கினார். அத்தகைய விளக்க விருத்தியுரைகளினால் சைவ சித்தாந்தப் பொருள் முழுவதையும் மேலைத் தேசமக்கள் நன்கு மனம் கொள்ளுமாறு பதிய வைத்தார். அவர்களும் "சர்க்கரையில் பொதிந்த மருந்து சர்க்கரை என்றே விழுங்கிப் பயன் பெறுவார் போல சைவசித்தாந்தம் என்றறியாமலே சைவ சித்தாந்த உண்மைகளை தெளிந்தறியும் நிலை உண்டாயிற்று[32] என்று அறிஞர் மு. கந்தையா என்பவரின் பாராட்டுரை இராமநாதன் அவர்களின் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணிகளை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

அன்னார் "பொஸ்ரன்" நகரில் யூதர்கள் மத்தியில் பேசிய "ஜெருச்லேம்" என்ற பேச்சினை நுட்பமாக ஆராய்ந்தால் அதனுள் பொதிந்துள்ள சைவசித்தாந்த கருத்துக்களை விளங்கமுடியும். "ஜெருசலேம்" என்பது மனிதனுக்குள்ளிருக்கும் தெய்வீகசக்தி (The holy Sprit with in) ஜெருசலேம் என்ற பலஸ்தீனமும் அங்கிருக்கும் தெய்வமும் மனிதனுக்கும் அவனுக்குள்ளேயிருக்கும் தெய்வீக சக்தியின் அறிகுறியான புறக்குறியீடு களாகும் என விளக்கியதுடன் வேத வசனத்தை விளக்கும் போது "எருசலேமிக்குத் திரும்புங்கள்" அதுவே உங்கள் லௌகீகக் பெறுபேறுகட்கு உகந்ததாகும் என்று கூறும் போது எமது மனமும் பொறிபுலன்களையும் உள்ளிருக்கும் இறைவனை நோக்கித் திருப்பாமல் லௌகீகப் பேறுகளை நாடிப் போவதால் விளையும் அனர்த்தங்களை சைவசித்தாந்த அணுகு முறையினைக் கையாண்டு விளக்கவிருத்தி செய்தார். இதன் மூலம் தன் தேசத்தையும் தமது ஆத்மஞானப் பண்பாட்டையும் விட்டு விலகுவது ஆத்மார்த்தமான தார்மீகரீதியான (Denationlization) தவறு என்பதையும் நன்கு சுட்டிக்காட்டினார்.[33] இது அவரது சைவசித்தாந்த ஞானவிருத்தியில் அன்னாருக்கு இருந்த புலமைநுட்பத்தைக் அறிவிக்கின்றது.

இராமநாதன் அவர்களின் ஞானவிருத்திப் பாங்கினை அறிந்து கொழும்பு வந்து அன்னாரது ஆத்ம போதனையால் திருப்தியுற்றவர் "மைறன் பெல்ப்" என்னும் (Myron Phelp) அமெரிக்கராவார். அவரது ஏற்பாட்டின் பேரிலேயே இராமநாதன் அவர்களது அமெரிக்கச் சுற்றுலா நிகழ்ச்சிகள் அமைந்தன. அன்னாரது சொற்பொழிவு களால்தான் நவீன செல்நெறியில் சைவ சித்தாந்தம் அங்கெல்லாம் தனது ஆத்மஞானத்தை விதைக்க முடிந்தது. அவர் அளித்த சைவசித்தாந்த ஞானவிளக்கமானது இரு வேறு நூல்களில் தேக்கிவைக்கப்பட்டுள்ளது. ஒன்று R. L. ஹரிசன் என்றும் லீலாவதி அம்மையார் அவர்கள் இராமநாதனது சொற்பொழிவுகளை உடனிருந்து கேட்டு தொகுத்து வைத்த "கீழைநாட்டு மாணவருக்கான மேலைநாட்டுக்காட்சிகள்" என்ற நூல், ஏனையது இராமநாதன் அவர்களது சைவசித்தாந்த புலமைகள் அடங்கிய அவரது பிரசங்கங்களை மட்டும் தனியாக எடுத்து நூலாக மைறன் பெல்ப் என்பார் வெளியிட்ட ஆன்ம கலாச்சாரம் (Soul Culture) என்னும் நூலாகும்.[34] தனது அமெரிக்கப் பிரசங்கத்திலே சைவநெறி பற்றிப் பேசும் போது எமது சமயத்தை "இந்து சமயம்" என அழைப்பதில்லை. நாம் அதனைச் "சைவம்" அல்லது "சைவமார்க்கம்" என அழைப்போம். அகில உலகிற்கும், பொதுவான ஒரே கடவுளை வணங்கும் சமயம் அதுவே சிவம் - ஒரே அமைதியும் ஆற்றலும் வாய்ந்ததென்பது அதன பொருள் என "இந்து" என்றாலும் "சைவம்" என்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் உட்பொருள் ஒன்றே என்பதனையும் துல்லியமாக தெளிவாக்கினார்.[35]

செனற் மத்தேயு, ஜோன் ஆகியோர்களது சுவிஷேசத்தில் எழுதிய நற்செய்திகட்கு இராமநாதன் அவர்கள் அளித்த விளக்கவுரைகள், சைவசித்தாந்த ஞானவிளக்கங்கள், அனைத்தும் சமயங்களின் அடிப்படைத் தத்துவ[36] ஒருமைப் பாட்டை விளக்குவதாகவும் அமைந்தது. இந் நூல்கள் அன்னாரை ஒரு முற்றுமுணர்ந்த தத்துவ ஞானியாகவே காட்டுகின்றன. இராமநாதனது ஏழு பிரசங்கங்களின் விடயங்களின் சாரமானது "ஆன்ம கலாசாரம்" என்ற நூலில் திரட்டப்பட்டுள்ளது (Soul Culture) குறித்த பிரசங்கங்களின் நடுநாயகமாகத் திகழும் "ஞானத்திறவு(கோல்) Key of Knowledge) என்ற பகுதி "எல்லாச் சமயங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாய் அமைந்து சைவசித்தாந்த ஞானத்தின் அகண்ட வியாபகப்பண்புக்கு அத்தாட்சியாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.[37] என மு. ஞானப்பிரகாசம் அவர்களும் தமது கட்டுரையில் கூறியிருப்பது இங்கு மனம் கொள்ளத்தக்கது. ஆன்ம கலாசாரம் என Myron Phelp குறிப்பிட்டிருப்பது "சைவசித்தாந்த கலாசாரம்" என்பது புலனாகும் போது சைவமெய்யியலானது ஒரே காலத்தில் சமய நெறியாகவும் மெய்யியல் கலாசாரமாகவும் தன்னை வெளிப்படுத்தும் வாய்ப்பினையும் சேர். பொன். இராமநாதன் அவர்களே தமது பிரசங்கத்தின் மதிநுட்பத்தால் விருத்தியுறச் செய்தமையும். இங்கு பிரதானமாகச் சுட்டிக்காட்ட வேண்டிய சிறப்பம்சமாகும். இவ்வாறாக இராமநாதன் அவர்களால் மேல்நாடுகளில் சைவசித்தாந்த ஞானமானது நன்கு விருத்தி பெற்றதுடன் உன்னதமான மகிமையும் பெற்றது என்பதனை இதுவரை கூறிய விடயங்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

**முடிவுரை**

வேதாகமங்கள் என்னும் விருட்சத்தில் வேரோடி முளைவிட்டு காலம் தோறும் நிகழ்ந்த சமுதாய வரலாற்றுப் பரிமாணங்களினூடாக வெளிவந்து இன்றைய அணுவாயுத தகவல் தொழில்நுட்ப யுகத்தின் சவால்களையும் எதிர்கொண்டு மனித வாழ்வை நெறிப் படுத்துவதில் சைவசமய நெறிக்கும் முக்கிய பங்குண்டு இந்துசமயம் இன்றும் உலகளாவிய நிலையில் போற்றப்பட்டாலும் அங்கு கூறப்படும். உண்மைகள், மெய்யியற் சிந்தனைகள் என்பவற்றின் ஆழமும் நுட்பமும் அறியாது இந்துக்களே அவைகளிற்கெதிராக சில சீர்கோடுகளை விளைவிக்கின்றனர். அன்பு நெறியே இறை உணர்வு, அன்பு உணர்வே சிவம் - அன்பே வடிவானவன் இறைவன் பக்தியுடன் கூடிய ஒழுக்கசீலமான வழிபாட்டையே இறைவன் விரும்புகிறான். இந்துக்கள், கருணையை உள்ளத்தில் வளர்த்து "அன்பு தான் சிவம்" என்பதனை நடத்தையில் வெளிப்படுத்த வேண்டும். ஆண்டவன் வாழும் கோயில் அடியவர்களது உள்ளக் கமலமாகும். அதனாலே "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்றார் விபுலானந்தர் "பல நூல் படித்து நீ அறியும் கல்வி - பொது நலம் தினைத்து நீ வழங்கும் செல்வம் - பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம் - இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்" என்னும் கவிஞர் ஒருவரின் கூற்றிலே இறைவன் இருப்பிடம் எது என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. சேர். பொன் இராமநாதனது சேவைநல மேம்பாட்டினை இவ்வரிகள் ஆழமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளன. இவை அனைத்தையும் உள்வாங்கியே சைவசித்தாந்த வாழ்வயிலை தமது சொந்த வாழ்விலே கடைப்பிடித்த பிற்கால மனித சமுதாயத்திற்கு ஓர உதாரண புருசராக வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதனது சைவசித்தாந்த பணிகள் ஈழத்து சைவசித்தாந்த வளர்ச்சியில் அழியாத ஓர் முத்திரையைப் பதித்துள்ளன என்பது இக்கட்டுரையால் பெறப்படும் உண்மையாகும்.

இன்றைய வாழ்விலே உலக அமைதி - சமாதானம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எனில் அதற்கு அறிவியலை வளர்த்த மனிதன் ஆன்மவியலை வளர்க்காமல் போனதே காரணமாகும். விஞ்ஞான வசதிகளை தனது வாழ்வுடன் இணைத்த மக்கள் மெஞ்ஞான வாழ்வியலை தம்முடன் இணைக்க மறந்து விட்டனர். அதனால் இளம் தலைமுறையினரிடம் அறிவுத்திறன், உழைப்புதிறன் ஆக்கத்திறன், ஆளுமை, செல்வவளம் அனைத்தும் இருந்தாலும் சாந்தி, சமாதானம், அமைதி என்பன கேள்விக்குறியாயுள்ளது. மதநல்லிணக் கத்திற்கும் சமுதாயப் புரிந்துணர்விற்கும் சைவ சித்தாந்த ஞானமே சிறந்தசாதனம் என்பதனை இராமநாதன் போன்ற பலரும் மேல் நாட்டினருக்கும் உணர்த்திச் சென்றனர். இத்தகைய அறஉணர்வு மேலோங்க வேண்டு மென்றே தன்னலமற்ற சேவை மார்க்கத்தில் நின்று இளம் சந்தியினரை நெறிப்படுத்தும் கல்வி, சமயப்பண்பாட்டுணர்வுடன் கூடிய கல்லூரி களையும், கோயில்களையும் அமைத்துப் பணிசெய்தார். சைவத்தமிழ் பண்பாட்டில் வளரும் மாணவ சமூகம் ஒழுக்க விழுமியமுள்ள நாளைய தலைமுறைகளாக வளரவேண்டும் மென்ற வேணவாவினால் தான் ஔவையார் கூறிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஸ்ரீ இராம நாதேயம் என்னும் தர்மசாத்திர பாடநூல் களையும் தாமே உருவாக்கினார் பகவத் கீதைக்கு சைவசித்தாந்த பரமாக விளக்கவுரை எழுதி எல்லோரும் சுயநலமற்ற கர்மயோகியாகத் தொண்டுப்பணி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

சைவசித்தாந்த ஞானத்தின் ஒழுக்கவியல் பகுதியே சிவஞானபோதம் முதலிய சாஸ்திரங்கள் கூறும் "சாதனை இயல்" என்னும் பகுதியாகும்.[38] அந்நெறியில் நான்கு வகை படிநிலைகளிலும் நின்று சேவையாற்றிய திறமையினை இராமநாதன் அவர்களது வாழ்க்கை மதிப்பீடுகள் உணர்த்தியுள்ளன என்பதும் இக்கட்டுரையாற் பெறப்படும் சரியை என்பது சரியான பாதையை தெரிந்து திருவருட் துணையுடன் கூடிச் செல்லுதல் என பண்டிதர் கந்தையர் அவர்களும் விளக்கியுள்ளார். உண்மைச் சரியை என்பது பற்றற்ற பண்புடன் பணிசெய்தலாகும். இது நிஷ்காமிய கர்மா எனப்படும். இந்நிலையில் பலன் கருதாது பணியாற்றுவதனால் இருவினை ஒப்பும் மலரபரிபாகமும் ஏற்பட்டு சத்தினிபாதம் என்னும் திருவருட்பேறு கைகூடும். சரியை, கிரியை தொண்டினால் பணிவிடை செய்யும் போது மூலமலமாகிய ஆணவம், வலிகுன்றி விடும் ஆணவமலத்தை வலிகெடச் செய்வதே தொண்டு நெறியாகும். பதவி ஆசை கொண்டு சுயநல வெறியுடன் போரிட்டு ஆணவத்தால் அழிந்த பேரரசர்களையும் பேரரசுகளையும் வரலாற்றில் காணமுடியும். பலன் கருதாது பணிவிடைசெய்து மக்கட் சமுதாயத்தை வாழவைத்த பெரும் தகையாளரான நாயன்மார்கள் புத்தபெருமான், யேசுபிரான் நபிகள் நாயகம் போன்ற தெய்வீக புருசர்கள் இன்றும் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்படும் தெய்வங்களாக நிலை பெற்றிருக்கின்றனர். சேர். பொன். இராமநாதன் அவர்களும் இவ்வாறே சரியை, கிரியை எனும் சைவசித்தாந்தம் காட்டிய தொண்டுப் பணியில் தன்னை அர்ப்பணித்து அழியாப் புகழ் பெற்ற தர்மவானாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமம், நியமம் முதலிய ஐந்து படிகளும் யோகத்தில் கிரியை ஆகும். திருக்கோயிற் பணிகள் கிரியையிற் சரியை - இறைவனுக் காற்றும் பூசைக்கருமங்கள் கிரியையில், கிரியை இவற்றினைச் சாதனைக்குக் கொண்டு வந்து கேட்டல், தெளிதல், சிந்தித்தல், நிட்டைகூடல் என்பன ஞானத்தின் பார்ப்பட்ட சரியை ஆகும். இவற்றின் வழிகாட்டலின் படி உயிர்களிடம் அன்புபூணுதல், பிறருக்கு உதவுதல், ஏழைகட்கு உணவு வழங்கல் ஆதரவற்ற சிறுவர்க்கு கைகொடுத்தல், முதியோரைப் பேணுதல் என பலதரப்பட்ட தொண்டுபணிகளாக இராமநாதன் அவர்களது வாழ்க்கையில் அவை வளர்ந்து சென்றன. அன்னாரது கல்விப்பணி திருக்கோயிற் பணிகள், சிறுவர் இல்லப்பணி, சைவவித்தியா விருத்திச் சங்கப்பணி ஆசிரிய பயிற்சி கலாசாலைப் பணிகள் என ஆறுமுகநாவலரது வழியில் அவைகள் விருத்தி அடைந்துள்ளமையினை அவரது வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளில் பேணி வைக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் வழிபாடும், திருக்கோயிற் தொண்டும் மட்டும் தொண்டு நெறி அல்ல - மக்கட் சமுதாயத்திற்குச் சேவை யாற்றுவதும் சரியையின் பாற்பட்டதேயாகும் என வாழ்ந்தவர் இராமநாதன் அவர்கள்.

வாழ்வின் பிற்பகுதியில் யோகத்தையும் யாக வழிபாடுகளையும் தியாகமாக மாற்றி ஆத்ம ஞானத்திற்காக அனைத்தையும் தியாகம் செய்யத் துணிந்தவர். "ஈனமிலா நற்பொருளைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்" என்னும் நான்கும் ஞானத்தில் அடங்கும், என்றது சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த சாத்திரம் "எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே - அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே - மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"[39] என மணிவாசகரும் இறைவனை ஞானக் கொழுந்தாக வணங்கினார். சைவசித்தாந்தத்தில ஞான விருத்தி பெறுவதற்கு நால்வகை சாதனை மார்க்கங்களில் நன்கு பயிற்சி பெற்றிருந்தல் அவசியம். "அரும்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும் - சிறப்புடைப் புராணங்கள் உணர்த்தும் வேதசிரப்பொருளை மிகத் தெளிந்து சென்றார். சைவத் திறத்தடைவர். சரியை, கிரியை, யோகம் செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்[40] என்பது சைவசித்தாந்தம் காட்டும் ஆத்மஞான மார்க்கமாகும்.

சைவசித்தாந்த மெய்யியல் சமரசசன்மார்க்க நெறியை அத்திவாரமாகக் கொண்டது. அது கூறும் நால்வகை முத்திகளில் பரமுத்தியாகிய சிவசாயுச்சிய முத்தி - சன்மார்க்க முத்தி என்றே திருமந்திரமும், சிவஞான சித்தியாரும் குறிப்பிடும். தாயுமானவரும் சித்தர்கள் சிததாந்தம் சைவசித்தாந்தம் என்பதனையும் அது சமரச சன்மார்க்கத்தில் அகில உலகத்தவரையும் அரவணைத்துச் செல்லும் நெறி என்பதனையும் வேதாந்த சித்தாந்த சமரசநிலை கண்ட வித்தகச் சித்தர்கணம் என்றும் சிறப்பித்தார். இத்தகைய சமரசசன்மார்க்க நெறியினை தமது வாழ்விலே கைக்கொண்டு ஒழுகியதனால் தான் சேர். பொன். இராமநாதன் அவர்களும் தமது வாழ்வில் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய சமூகத்தவர் அனைவரையும் அரவணைத்து சர்வமதசமரச நோக்கில் தீர்க்கதரிசனத்துடன் தமது அரசியல், சமய, சமூக, சித்தாந்த பணிகளை முன்னெடுத்துச் சென்று சைவசித்தாந்த வாழ்வியல் சமரச சன்மார்க்க நெறி என்பதனையும் நிறுவினார்.

ஞானமார்க்கம் விடுதலைக்குரிய மார்க்கம் என எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் சித்தாந்தம் அத்தகைய ஞானம் பசுஞானம், பாசஞானம், பதிஞானம் எனப் பகுத்து பதிஞானத்தை அடைவதற்கு தசகாரியம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப்படி நிலைகளை சுட்டியுள்ளது. பாச ஞானத்தினின்று விடுபடுவதற்கு ஒருவரது உள்ளுர்ணவாகிய ஆத்மசிற்சக்தி ஞானம் உதவ வேண்டும். "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை - ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று" என்றது திருமந்திரம்.[41] மேலும் "அஞ்ஞானம் விடப்பந்தமறும் முத்தியாகும். ஈனத்தார் ஞானங் களல்லா ஞானம் - இறைவனடி ஞானமென்பர்"[42] என்பது சித்தாந்த உறுதிப்பாடு ஞானமாகிய பேரறிவு - பேரன்பு நிலையடைதற்கு சுயகட்டுப்பாடு, மனக்கட்டு பாட்டுப் பயிற்சி, தன்னலமற்ற தியாகப் பண்புகள் இன்றியமையாதன. அறிவாளிகளாக இருக்கும் அனைவருக்கும் விடுதலை எளிது எனில் அயோக்கியர்களுக்கும் முத்தி கிடைத்து விடும் என்பதனாற் போலும் ஞானமெனும் பேரன்பில் - பேரறிவில் - பேரறத்தில் நிலை பெற்றவர்க்கே முக்திநெறி சாத்தியமாகும் எனச் சித்தாந்த சாத்திரங்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும். அறிவாளிகளைப் பலரும் வணங்குவதில்லை. ஆனால் ஞானிகளை யாவரும் வணங்கிச் செல்வதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். எனவே தான் "ஆணவத்தோடத்து விதமான படி மெய்ஞ்ஞானத் தாணுவினோ அத்துவிதமாகு நாள் எந்நாளோ" என எந்நாட்கண்ணியில் தாயுமானார் வேண்டுகின்றார்.

ஆகவே இவ்வழியில் நின்று தமது தொண்டுப்பணியில் ஆணவத்தை அகற்றி அஞ்ஞானத்தை ஞானமாகிய பேரன்பினால் அழித்து சைவசித்தாந்த ஞானத்தை நுட்பமாக உணர்ந்து கொண்டு அதுகூறும் நான்கு சாதனைமார்க்கங்களில் வாழ்ந்து காட்டி தன்னலமற்ற சேவைமார்க்கத்திற்கு தன்னை அர்ப்பணித்து சைவசித்தாந்த அபிவிருத்திப்பணிக் கோர்மாற்றுவடிவம் அமைத்துக் கொடுத்தவர் இராமநாதன் அவர்கள் அன்னாரது சேவையினால் மேல்நாடுகளில் சைவசித்தாந்த மகிமையுடன் தமிழர் தம் மகிமையும் நன்மதிப்புற்றது.[43] அவரால் மேல்நாட்டில் விதைக்கப்பட்ட சைவமெய்யியல் விதைகள் முளைத்துப் பயிராகி உலகெங்கும் வளர்ச்சி கண்டு வருவதற்கு இராமநாதனது சைவ சித்தாந்த அபிவிருத்திப் பணிகள் ஆணி வேராய் அமைந்தன. அத்தகைய பெருமானாரின் சைவ சித்தாந்த ஆன்மீக கலாசாரச் சிந்தனைகளிலிருந்தும் சாதனைகளிலிருந்தும் புதியதோர் உலகம் காண ஞான ஒளியினையும் நன் நம்பிக்கையினையும் புத்தூக்கத்தினையும் உண்மை ஞானம் என்பதனையும் ஒவ்வொருவரும் அவசியம் பெறவேண்டும். அதற்கு அன்னாரது ஆன்மீக ஒளிச்சுடர் ஒளிரும் தீபமாக விளங்கி இப்பல்கலைக்கழக நிறுவனமும் துறைசார் புலமைத்துவமும் ஆன்மீக விழுமியங்களும் மேன்மேலும் வளர்ந்து நிலைபெற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் பெறுபேறாக வேண்டும்.

### அடிக்குறிப்புக்கள்


1. சந்திரசேகரம். ப. 1987. **கல்வியற்கோவை.** கல்விக்கழகம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், ப. 21.
2. Vaithilingam V, 1977, The Life of Sir Ponnampalam Ramanathan Vol 1-11, (1910 - 1930) Jaffna.
3. குமாரவடிவேல்.இ. இராமநாதன் ஓர் தர்மயோகி அவர் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனை, **இந்துசாதனம்**, 11.11.2000.
4. வச்சிரவேல் முதலியார் க., 1985, **சைவசித்தாந்தமும் சிவாலயங்களும** சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச்சபை வெளியீடு, ப.2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. திருவிளக்கம்,மு. 1971 சிவஞானசித்தியார் சுபக்கம். (புத்துரை) யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பகம் யாழ்ப்பாணம் சு.2 : 113: ப.193.
6. சிவஞானபோதச் சிற்றுரை, சு.2.
7. கந்தையா பண்டிதர். மு. 1985, **ஈழத்து சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள்** (ஆதிநகர் முதல் அமெரிக்கச்சுவாமிகள் வரை) சிவத்தமிழ் ஆராய்ச்சி கட்டுரைகள், ப.34.
8. மேற்படி. ப.34.
9. சித்பவானந்தர். சுவாமி. 1975. **பகவத்கீதை** (விளக்கவுரை), இராமகிருஷ்ண தபோவனம். திருச்சி, கர்மயோகம். சு.3.19. 25. பக்தியோகம் 12.13. 14. 18. 19.
10. திருவருட்பயன் (8ம் பதிப்பு). சு. சிவாபதசுந்தரனார் உரை. அதி: 2.1: பக். 74-76.
11. வேலுப்பிள்ளை.ஆ. 1988. **அரச சேகரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும்.** சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். ப.1
12. சொக்கலிங்கம்.எஸ். 1976. **சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.** பக். 40-41.
13. a). Vaithilingam M. **Opcit**, Vol. II, P. 335.
    b). Leelawathi Ramanathan, 1907 **Westernpictures For Eastern Students**, London, P. 238.
14. சந்திரசேகரம். ப. 1987. இந்துசமயக் கல்விமறு மலர்ச்சி. சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை. யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம். ப.11.
15. a). Vaithilingam M. **Opcit**, pp. 337-339
    b). சிவசாமி.வி. 2005., **இந்துப் பண்பாடு அன்றும் இன்றும்**. (பதிப்பாசரியர்) ப. கணேசலிங்கம். தமிழ்நாடு. ப.205.
16. மங்கையற்கரசி. திருச்சிற்றம்பலம். 2007. **இலங்கை இந்து மதப்பரப்பில் சேர். பொன். இராமநாதன.** இந்து ஒளி. அகில இலங்கை இந்துமாமன்றம் கொழும்பு, பக். 327-328.
17. மேற்படி, ப. 329.
18. கணேசலிங்கம். ப. 2005, **இந்தியநாட்டுத் தமிழகக் கோடைக்கானலில் சேர். பொன். இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில்.** நல்லைக் குமரன்மலர், சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகரசபை வெளியீடு, ப. 152.
19. சிவசாமி. வி. 2005. **மு. கு. நூ.** பக் 197-198.
20. a). சந்திரசேகரம். ப. சீமாட்டி லீலாவதி நினைவுப்பேருரை ப.10.
    b). சிவசாமி. வி. 2005. **மு. கு. நூ.** பக 197-198.
21. சந்திரசேகரம். ப. சீமாட்டி லீலாவதி **நினைவுப்** பேருரை ப.11.
22. மேற்படி, ப.20.
23. மேற்படி, ப.16.
24. Vaithilingam, M, Opcit, P.144.
25. சிவசாமி. **வி. மு. கு. நூ.** ப.203.
26. Vaithilingam, M, Opcit, P.145.
27. சிவசாமி. **வி. மு. கு. நூ. ப.** 213
28. கலைவாணி இராமநாதன். 2003. சேர். பொன். இராமநாதனது இந்துப்பண்பாட்டுச் சிந்தனைகளும் பணிகளும். 2ம் உலக இந்து மாநாட்டுச் சிறப்பு மலர், கொழும்பு. ப.311.
29. சிவஞான சித்தியார், 8.2.273.
30. கலைவாணி இராமநாதன். **மு. கு. நூ. ப.** 311.
31. கந்தையா. பண்டிதர். மு. 1994. **சைவசித்தாந்த விளக்கவிருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள்**. சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப.25.
32. கந்தையா. பண்டிதர். மு. ஈழத்துச் சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள், **மு. கு. நூ.** ப.34.
33. மேற்படி, ப. 35.
34. கந்தையா. மு. **சைவசித்தாந்த விளக்க விருத்தியில் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள.** மு. கு. நூ. ப.26.
35. **மேற்படி**, ப. 29.
36. a). **மேற்படி**, பக். 31-34.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b). Ampikaipahan S. 1976, **The Contribution of Sir Ponnampalam Ramanathan to the study of comparative Religion,** pp, 12.15.

37. Janaprahasam, M, 1994, **Sankya Thoughts A Shiva view point,** Mahathmaprinting works, Jaffna p.8.
38. **சிவஞானசித்தியார்.** சைவசாதனைகள். ப. 270
39. மணிவாசகர். **திருவாசகம**. சிவபுராணம். வரி:37-38.
40. **சிவஞானசித்தியார்.** ப.எ.263. பக். 461-465.
41. திருமூலர். திருமந்திரம். பா.எ.1467.
42. சிவஞான சித்தியார். பா. எ. 279.
43. கந்தையா. பண்டிதர் **மு. சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள** ப.35.

**உசாத்துணை நூல்கள்**

1. Ramanathan, SIR PON 1926, Report of The Hindu board of Education, 1930, Presidential address, delivered by Sir. P. Ramanathan, 1926.
2. இராமநாதன். சேர். பொன். 1921. **ஆத்திசூடி மந்திர விளக்கம்**. திருமகள் அழுத்தகம். சுன்னாகம்.
3. இராமநாதன். சேர். பொன். 1927 **திருக்குறள்** பாயிர **இராமநாதபாஷ்யம்** யாழ்ப்பாணம்.
4. சுந்தரம்பிள்ளை நடராசா. 1992. சேர். பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப்பணியும். (முதுகலைமாணிப்பட்ட) ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5. சிவசாமி. வி., 1999. சேர். பொன். **இராமநாதனின் சமயப்பணி கல்விசார் பங்களிப்பு - ஓர் வரலாற்று நோக்கு** நினைவுப் பேருரை. இராமநாதன் கல்லூரி சுன்னாகம்.
6. சொக்கலிங்கம். எஸ். 1976 **சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம.** பரமேஸ்வராக்கல்லூரி இயக்குனர் சபை வெளியீடு. யாழ்ப்பாணம்.
7. பொன்னம்பலபிள்ளை. ச. 1931. ச. 1931 **இராமநாதமான்மியம** சுன்னாகம்.
8. இராமநாதன். பொ., 1914 **பகவத்கீதை தமிழ்மொழி** பெயர்ப்பும் **விருத்தியுரையும்**. (பதிப்பு) ஆ. முத்துத்தம்பிள்ளை. நாவலர் அச்சகம் யாழ்ப்பாணம்.
9. Ramanathan, Sir P. 1923 **The aims of Students at Paramesheara College**. Jaffna.
10. பரமேஸ்வரம். **பரமேஸ்வர ஆலய மகாகும்பாபிஷேக** மலா. 1991. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். **திருநெல்வேலி.**
11. **சேர். பொன். இராமநாதன் உருவச் சிலை** திறப்பு விழா சிறப்புமலர். 1994 இராமநாதன் கல்லூரி. சுன்னாகம்.
12. ரோமன்ட் றோலன்ட. விவேகானந்தர். சாகித்ய அக்கடமி. புதுடில்லி. 1963.
13. Rajarathnam, S, 1930, **Hindu Education in Jaffna.**
14. Chandrasegaram, P, 1982, **The Hindu Religion Philosophical Perspective of Ceylon,** University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் சமய சமூகப் பணிகள்

திருமதி. விக்னேஸ்வரி பவநேசன்

உலக வரலாற்றிலே 18ம், 19ம் நூற்றாண்டுகள் சிறப்பிடம் பெற்று விளங்கின. இந் நூற்றாண்டுகளில் பல நிகழ்ச்சிகள் இடம்பெறலாயின. இக்காலப் பகுதியின் ஒவ்வொரு கட்டத்திலும் முற்போக்கு சக்திகளின் இயக்கத்தைக் காண முடிகின்றது. மக்களிடையே புரட்சி நாட்டமும் அதன் பயனாக புணரமைப்பு வேலைகளும் பேரளவுக்கு செல்வாக்குப் பெற்றது. அறிவியலிலும், வாழ்வியலிலும் ஆன்மீக நெறியிலும் குறிப்பிடத்தக்க அளவு மாறுதல்களும் முன்னேற்றங்களும் ஏற்படத் தொடங்கின. இந்நூற்றாண்டிலே தான் கழகங்கள் உருவாகவும் சங்கங்கள் தோன்றவும் சமயங்கள் புத்தூக்கமடையவும் வழிவகுத்தது. இத்தகைய மாற்றங்கள் இந்தியாவையும், இலங்கையையும் சென்றடைந்தமையும் குறிப்பிட்டத்தக்கது. இந்த யுகத் திருப்பத்திற்குக் காரணமாக அன்னியரின் தாக்குதல்களே விளங்கின. குறிப்பாக சமூக ஊடாட்டத்திலும் அவர்களுடைய தாக்குதல்கள் ஒன்றிணைந்தன. பண்பாட்டுத் தாக்குதல், மொழிதாக்குதல், மதத் தாக்குதல் என பல புதுயுகத் திருப்பமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சூழ்நிலையில் காலங்காலமாக இந்து சமயத்திற்கு ஏற்பட்ட அந்நிய எதிர்ப்புக்களின் விளைவாக பல்வேறு அமைப்புக்களைக் கொண்ட சைவசமய வளர்ச்சியினை மேற்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற நிறுவனங்கள் வரிசையில் சைவவித்தியாவிருத்திச் சங்கம் குறிப்பிடத்தக்கது. இராசர் என்னும் கிறிக்கெற்றர், இராசரத்தினம் என்றும் பயில்வான் இராசரத்தினம் என்றும், மனேச்சர் இராசரத்தினம் என்றும் கௌரவ இராசரத்தினம் என்றும் வழங்கிய ஒருவர் 19ம் நூற்றாண்டில் 70 ஆண்டுகளும் வாழ்ந்த மூதறிஞன். அவர் நல்ல மாணக்கராய் கல்கத்தாப் பல்கலைக்கழகத்து இடைநிலைத் தேர்வில் திறமை காட்டியவராய் இலங்கைச் சட்ட சபையில் பிரகாசித்தவராய். சேர். பொன். இராமநாதன் அவர்களின் அன்புக்கு பாத்திரமான வராய் சைவவித்தியாவிருத்திச் சங்கத்து ஆரம்பகாலத்து நிர்வாகிகளுள் ஒருவராய், இலங்கைச்சட்ட சபையில் யாழ்ப்பாணம் மத்திய தொகுதியின் தெரியப் பெற்ற பிரதிநிதியாய், சைவத்தின் பாதுகாவலராய், சைவாசிரியர்களை ஆயிரக்கணக்கில் உருவாக்கியவராய், நூற்றைம்பதுக்கும் அதிகமான சைவப் பாடசாலைகளை நிறுவியவராய், ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்து ஆதரவளித்த காமதேனுவாய், அவர்களால் "அப்பு" என அன்பாக அழைக்கப் பெற்றவராய் பன்நெடுங்காலம் வாழ்ந்த பண்பாளராக விளங்கியவர் இந்து போர்ட் இராசரத்தினம் ஆவார்.[1]

பிற நாட்டவரின் ஊடுருவலால் உருக் குலைந்த சைவசமயத்தைத் தழைத் தோங்கச் செய்வதற்குச் சைவக்கல்விப் பாரம்பரியத்தை மீளவும் நடைமுறைக்குக் கொண்டு வருதல் வேண்டும் என்ற நாவலரின் கனவைச் செயல்முறையில் சாதுரியமாகச் செய்து நிறைவேற்றியவர் இந்து போர்ட் இராசரத்தினம். நாவலர் அவர்கள் பிற்காலத்துச் சைவத்தின் முதற்கண் என்றும் அருணாசலம் அவர்கள் இரண்டாம்கண் என்றும், இராசரத்தினம் அவர்கள் மூன்றாம் கண் என்றும் பண்டிதமணி அவர்கள் கூறியுள்ளமை மிகவும் பொருத்தமான தாகும்.

நாடெங்கும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தல் வேண்டும். ஊரெங்கும் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை மலரச் செய்தல் வேண்டும். தமிழ்ப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்று சைவாசார சீலராய் உருவாக வேண்டுமென சேர். பொன் இராமநாதன் அவர்களிடம் சென்று அவரின் ஆசீர்வாதம் பெற்று மேலும் தாங்கள் செய்ய வேண்டியன பற்றித் தீர்மானிப்பதற்காக ஒரு காரிய நிர்வாக சபையினை தெரிந்தமைத்தனர்.[2] இவ்வாற மைந்த காரிய நிர்வாக சபையினரின் முதற் கூட்டம் 29. 10. 1923ஆம் நாளில் கூடி புறச்சமயத் தாபனத்தாரின் கெடுபிடிகளுக்கு தாக்குபிடித்து பாதுகாப்பு அளிக்க வேண்டிய வழிமுறைகளைக் கையாளுதல் அவசியம் என்றும் ஏற்கனவே நிலவி வந்த சைவப் பாடசாலைகளைப் பலப் படுத்துவதோடு வேறுபல புதிய சைவப்பாடசாலைகளை வேண்டிய இடங்களில் விரைவில் தாபித்தல் வேண்டும் என்றும் ஏகமனதாகத் தீர்மானித்தார். எனவே இத்தகைய செயற்பாடுகளைச் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே சைவப் பெருமன்றங்களை அமைத்தல் வேண்டும். என்றும் தீர்மானித்தனர். இரண்டாவது கூட்டம் 10.11.1923இல் கூடிய போது சைவப்பிள்ளைகளின் கல்விக்கு ஆதாரமாக சைவச் சூழல் அமைதல் அவசியமானது என்றும், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் செய்தல் வேண்டும் என்றும் கருதி அதற்காக சைவவித்தியாவிருத்திச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நாவலர் கூறிய வழியில் சிந்தித்த சேர். இராமநாதன் அவர்கள் சைவத்தமிழ் மக்களின் கல்வி முன்னேற்றம் அடைவதற்கு யாழ்ப்பாணம் முழுவதும் பூரணத்துவம் அடைந்த சைவவித்தியா விருத்திச்சாலைகளை அமைத்தலே சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் பிரதான நோக்கம் என்று கூறினார்.[3] இவ்வகையில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இலங்கை வரலாற்றிலே சைவ சமய வளர்ச்சியில் பெரும் பெயர் பெறுவதாயிற்று.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றம்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் 16ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கையில் ஆட்சி செலுத்தினர். ஏறக்குறைய நானூற்றைம்பது வருடங்கள் அவர்களின் ஆளுகைக்குக் கீழ் இங்குள்ளவர்களின் நிலைமையைப் புரிந்து கொண்டு அரசு செலுத்தினர். முதலில் இங்கு வந்த போர்த்துக்கேயர் சுதேசிகளைத் துன்புறுத்தி தமது மொழி, மதம், கலாசாரம் என்பவற்றைத் திணித்தனர். சைவ பௌத்தக் கோயில்களை இடித்துக் கோட்டை கட்டினர். மக்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவந்தமாக தங்கள் கத்தோலிக்க மதத்தில் சேர்த்தனர். பாடசாலைகளை உருவாக்கி சைவர்களையும் பௌத்தர்களையும் மதம் மாற்றித் தங்கள் பள்ளிகளில் படிக்க வைத்தனர். இவர்களைத் தொடர்ந்து வருகை தந்த ஒல்லாந்தரும் அவ்விதமே நாட்டின் செல்வத்தைச் சூறையாடியும் வாசனைத் திரவியங்கள் போன்றவற்றைத் தமது நாட்டிற்கு எடுத்தும் சென்றனர். ஒல்லாந்தர் தங்கள் புரட்டஸ்தாந்து மதத்தினை இலங்கையில் பரப்பினர். இதற்காக கிராமந்தோறும் பாடசாலைகளை உருவாக்கி சுதேச மாணவர்களை மதம்மாற்றி தங்கள் மொழியைக் கற்கச் செய்தனர். இவ்வாறு கற்றுத் தேர்ந்த சுதேசிகளுக்குப் பட்டம் பதவியோடு அரசாங்கத்தில் உயர்பதவிகளும் வேதனங்களும் வழங்கப்பட்டன. சிலர் மத போதகர்களாகவும் மதிக்கப்பட்டனர். இது கண்டு பிரித்தானியர் 18ம் நூற்றாண்டின் முடிவில் வியாபார நோக்கத்தோடு இலங்கை வந்தனர். இவர்களும் தங்கள் மதம், மொழி என்பவற்றைச் சுதேசிகளிடம் பரப்புவதில் பேரார்வம் உடையவர்களாக இருந்தனர். தங்கள் மதத்தைப் பரப்புவதற்கு மாணவர்களுக்கு இலவசக்கல்வி உணவு, உடை, உறையுள் என்பவற்றை அளித்தனர்.[4] ஆங்கிலம் கற்றுப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு அரச தொழில்களும் வேதனமும் வழங்கப்பட்டன. இதனால் சிலர் குடும்பதோடேயே மதம் மாறினார்.

சிலர் படிப்பதற்குமாத்திரம் மதம் மாறிவிட்டுப் படித்து முடிந்த பின் தங்கள் மதத்திற்கு திருப்பினர். இன்னும் சிலர் படித்து அரச தொழில் பெற்றுக்கொண்ட பின் சுதேசிகள் மதம் மாறாதிருப்பதற்காக தமது சொந்தநிதியில் சொந்தநிலத்தில் பாடசாலைகளை உருவாக்கி அங்கே சுதேசிகள் ஆங்கிலக்கல்வி கற்க உதவினர். அக்காலத்தில் உவெஸ்லியன், அமெரிக்கன் மிஷன், சேர்ச்மிசன் மற்றும் கத்தோலிக்க குருமார் கிராமங்கள் தோறும் பாடசாலைகளை உருவாக்கித் தங்கள் மொழியையும் மதத்தையும் பரப்பினர். இந்தக் காலகட்டத்தில் ஆங்கில அரசு சுதேசிகளும் பாடசாலைகளை நிறுவலாம் என அனுமதி வழங்கியது. இதனை சாதகமாகக் கொண்டு படித்த சுதேசிகளும் சைவ ஆங்கிலப் பாடசாலைகளைத் தங்கள் செலவிலே நிறுவி சைவப்பிள்ளைகள் ஆங்கில மொழியை சைவ ஆங்கிலப் பாடசாலையில் பெறும் வாய்ப்பை உருவாக்கினர். இதனால் மேலும் பல சைவர் கிறிஸ்தவர் களாகாது தடுக்கப்பட்டனர். கிறிஸ்தவ ஆங்கிலப் பாடசாலைகளில் கல்வி கற்ற சைவப் பெரியவர்கள் தமது ஊர்கள் தோறும் நிறுவிய பாடசாலைகள் இன்று மிகப் பிரபல்யம் உடையனவாக விளங்குகின்றன.[5]

அவற்றுள் சில,

- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - தாபகர் நிற்சிங்கம் கனகரத்தினம்.
- யாழ் இந்துக்கல்லூரி - ஸ்தாபகர் - நெவின் செல்லத்துரை.
- கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - ஸ்தாபகர் - கந்தையா உபாத்தியாயர்.
- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி - ஸ்தாபகர் - சேர். பொன். இராமநாதன்
- பரமேஸ்வராக் கல்லூரி - ஸ்தாபகர் - சேர். பொன். இராமநாதன்
- சுதுமலை சின்மயபாரதி - ஸ்தாபகர் - சின்னையா

இவை போன்று மேலும் பல பாடசாலைகள் இலங்கைச் சுதேசிகளினால் நிறுவப்பட்டன. இக்காலத்தில் கிழக்கிலங்கையிலும் யாழ்ப்பாணம் வலிமேற்கைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்டவருமான வைத்திலிங்கம் மார்க்கண்டு முதலியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர்களால் 1910 - 1018 வரை 15 பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இது இவ்வாறிருக்க ஆறுமுகநாவலரது சிந்தனை "சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் தமிழ்மொழியைக் கற்பதே முறையும் தர்மமும்" என ஆங்கில அரசுக்கு எடுத்துரைத்ததுடன் 1848ல் சைவத்தமிழ்பாடசாலையையும் உருவாக்கினார். சுதேசிகள் உணவுக்கும் உடைக்கும் மதம் மாறுவதைத் தடுக்கும் பொருட்டு இலவசக்கல்வி, கஞ்சித் தொட்டி தருமம் முதலியவற்றை மேற்கொண்டார். நூல்களை அச்சுவாகன மேற்றினார். எல்லோரும் சைவசமய அறிவைப் பெறும்பொருட்டு சைவவினாவிடை பெரியபுராண வசனம் ஆகியவற்றை வெளியிட்டார். கிறிஸ்தவர்களுக்கெதிராக கண்டனப் பிரசுரங்கள் வெளியிட்டார். ஊர்கள் தோறும் சைவத்தமிழ்ப்பாடசாலைகளை நிறுவி சுதேசித்தமிழர் கல்வி கற்கச் செய்தார். சுதேசிகள் சலுகைகளுக்கு ஆசைப்பட்டு மதம்மாறி மேலைக்கலாசாரத்தைப் பின்பற்றுவதை எதிர்த்தார்.[6] கண்டனப்பிரசுரங்களை அவ்வப்பொது வெளியிட்டார். நாவலரது மறைவுக்குப் பின் காரைநகர் திரு. அருணாசலம் உபாத்தியாயர் அவர் விட்டுச் சென்ற தொண்டைத் தொடர்ந்தார். அவரும் சுதேசிகளின் மத மாற்றத்தைத் தடுக்க தன்னால் ஆனவரை ஏடுகளில் இருந்த நூல்களை அச்சுவாகன மேற்றினால். நாவலரைப் போல போதிய ஆங்கில அறிவு இன்மையால் தன் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கத்தக்க ஆங்கில அறிவு மிக்க ஒரு சமூகத்தொண்டனைத் தேடினார். அத்தகைய சூழலில் அறிவும் துணிவும் சமூகப்பணி செய்யும் விருப்பும், தமிழும் சைவமும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற துடிப்பும் வாய்ந்த இளைஞன் திரு. சு. இராசரத்தினம் அறிமுகமானார் அதன்பின் இருவரும் சேர்ந்து தங்கள் சேவையை முடித்தனர். இவ்வகையில் அருணாசலம் உபாத்தியாரின் எண்ணங்கள் இராசரத்தினம் அவர்களால் செயல்வடிவம் பெற்றன. இருவரும் சேர்ந்து பிரித்தானிய அரசுக்கு அவ்வப்போது நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தனர்.

1920ஆம் ஆண்டு அருணாசலம் உபாத்தியர் இறைபதம் அடைந்தபின் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேலும் பல சுதேச படித்த பெரியவர்கள் தங்கள் இருப்பை நிலைநாட்ட விரும்பினர். நாவலரைப் பின்பற்றி சேர் பொன் இராமநாதன் போன்றோருடன் சைவத்தமிழ்ப் பாடசாலைகளின் காவலனாகிய இந்துப் போர்ட் இராசரத்தினம் அவர்களும் இணைந்து மேலும் பல சைவத்தமிழ்ப் பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவினார். "தமிழ்க்கல்வியும் சைவநெறியும் வளர்ச்சி யடைவதற்கு முக்கிய தலங்கள் தோறும் சைவத்தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் நிறுவுதல் அவசியம்" எனும் நாவலரின் கூற்றுக்கிணங்க 1848ல் நாவலர் சைவத்தமிழ்ப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கிராமங்கள் தோறும் மிசனரிமரோல் அமைக்கப்பட்ட கிறிஸ்வத ஆங்கிலப் பாடசாலைகள் சுதேசிகளை மதமாற்றம் செய்தமையால் அப்பாடசாலைக்கருகிலேயே சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவிச் சுதேசிகள் மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க அரும்பாடுபட்டனர். தனித்துநின்று இப்பாரிய மதமாற்றத்தினைத்தடுக்க முடியாதெனக்கண்ட இவ்வறிஞர் பெருமக்கள் ஒன்றுகூடி ஒரு சங்கம் அமைத்தனர். அச்சங்கம் சேர். பொன். இராமநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டு 1923ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 9ம் நாள் "சைவவித்யாவிருத்திச்சங்கம்" என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டது.[7] ஆரம்பத்தில் இச் சங்கத்தில் 36 படித்த சைவத்தமிழ்ப் பெரியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம் வகித்தனர். இச்சங்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி இலங்கையில் பிற மாவட்டங்களிலும் மாகாணங்களிலும் ஊர்கள் தோறும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி நிர்வகித்து வந்தது. இலங்கையில் 1928ஆம் ஆண்டு வரை அவரைச் சங்கப்பொது முகாமையாளராக்கியது. அன்று தொடக்கம் அன்னாரின் தொண்டு இறுதி மூச்சுவரை தங்குதடையின்றிப் பிரவாகித்தது. தொடர்ந்து வருடாவருடம் கணந்தோறும் ஆங்கில மிசனிரிகளின் பள்ளி எங்குண்டோ அங்கெல்லாம் 4 கப்பும் கிடுகுக் கூரையுடன் கூடிய ஒரு சைவத்தமிழ்ப்பாடசாலை தலைநிமிர்ந்து நிற்கச் செய்தார்.

இத்தகைய கொட்டிற்பள்ளியில் கல்வி கற்பவர் அச்சூழலில் வாழும் அவ்வூர் சி. பா. த. (S.S.C) வகுப்புச் சித்தியெய்திய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சைவத்தமிழ் மகனாகவோ அன்றி மகளாகவோ இருப்பர். அரசாங்கம் அப்பாடசாலை களைப் பதிவு செய்து உதவி நன்கொடை அளிக்கும்வரை அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தன் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள ஏனைய பாடசாலைகளின் வருமானத்தில் ஒரு பகுதியை வேதனமாக வழங்கினார். இரண்டொரு வருடங்களில் அப்பாடசாலையை உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆக்கிவிடுவார். அவ்வாசிரியர்களும் நிரந்தர ஆசிரிய பதவி பெறுவர். இத்தகைய செயற் பாடுகளினால் அவர் சமூகத்திற்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றியதுடன் ஏழைக் குடும்பங்களைப் பொருளாதார நிலையில் உயர்த்தினார்.

இலங்கையில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் சைவம் வளர்த்த சான்றோர்களில் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடத் தக்கவராவர். இவர் நாவலரதும் அருணாசல உபாத்தியாயரதும் மரபினைப் பின் பற்றி சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியம் தழைத்தோங்க அரும்பணியாற்றியவர். இவர் 1884ஆம் ஆண்டு ஆடிமாதம் 4ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், கல்கத்தா பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் கற்றார். கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார். இவர் குடியியல் சட்டத் துறையில் சிறந்த நீதியரசராக விளங்கியதோடு யாழ் நீதிமன்றத்தில் பதில் நீதியரசராகவும் கடமை புரிந்தார். எனினும் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட இவர் இவற்றை வளர்ப்பதற்காகத் தான் வகித்த உயர்பதவியில் இருந்து விலகினார்.

திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சைவப் பாடசாலைகளையும் தமிழ் ஆங்கிலம் கற்பிக்கும் இருமொழிப்பாடசாலைகளையும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உருவாக்கினார். சைவவித்யாவிருத்திச் சங்கத்தினர் தலைமையில் 187 நன்கொடை பெறும் பாடசாலை களை உருவாக்கினார். சிறந்த சைவாசிரியர் களை நிறைவேற்றுவதற்காக மூலம் நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கலாம் என்ற நோக்கினை உருவாக்குவதற்காக 1928ல் சைவாசிரிய கலாசாலை ஒன்றை திருநெல் வேலியில் நிறுவினார்.[8] பல்வேறு வசதி வாய்ப்புகளைப் பெறும் நோக்கில் சைவ மாணவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் மதமாற்றம் செய்யப்பட்டு கற்பிக்கப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற இவர் வேதனையடைந்து அப்பாடசாலைகளிலும் கற்றாலும் விபூதி தரிக்கலாம் என்ற சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். மேலும் அநாதரவான பிள்ளைகளும் வறுமையினால் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைத் தொடர முடியாத பிள்ளைகளும் தமது கல்வியைச் சிறப்புற மேற்கொள்வதற்காக 1930ஆம் ஆண்டு திருநெல்வேலியில் ஆண், பெண் அநாதை விடுதிகளை உருவாக்கினார். அங்கு மாணவர்களை ஆதரித்துக் கல்வியைப் பயிற்றுவித்தார். பிள்ளைகள் தவறு செய்யும் போது அவர்களைக் கண்டிக்காது அன்பினால் திருத்தினார். பண்டிகைக் காலங்களில் புத்தாடை அணிவித்து ஆலயங்களுக்குக் கூட்டிச் சென்று மகிழ்வுடன் வாழச்செய்தார். நோய் நொடிகள் ஏற்படும்போது தகுந்த முறையில் வைத்தியர்கள் மூலம் சிகிச்சையளித்து உடல் நலத்துடன் வாழவைத்தார். பல்வேறுபட்ட மாணவர்கள் பட்டம் பெற்றர்களாகவும் அரச ஊழியர்களாகவும் வெளியேறினர். ஏனைய மாணவர்கள் பின்தங்கியவர்களாக வாழாது இருப்பதற்காக தொழிற்பயிற்சிகளைப் பயிற்றுவித்து உதவி புரிந்தார். இந்நிலையில் இங்கிருந்து ஒழுக்கமுள்ள சிறந்த மாணவர்களும் பல்வேறு துறைகளில் ஆற்றல் உடையோரும் வெளியேறுவதைக் கண்ணுற்ற மக்கள் வசதி படைத்தவர்களாக இருந்த போதும் தமது பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்கு வதற்கு குறைந்த அளவிலான கட்டணத்தைச் செலுத்தி அங்கு சேர்த்தனர். திரு. இராசரத்தினம் அவர்கள் மக்கள் சைவ நெறிமுறைப்படி வாழ்வதன் மூலம் சைவத்தை நிலைநாட்டலாம் என்பதனை தன்வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டினார். மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் அப்பரது கூற்றிற்கேற்ப வாழ்ந்தார். அவரது அரும் பெரும் பணிகளை "இந்துபோர்ட்" என்ற பெயரே உணர்த்தி நிற்கின்றது.

### சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றம்

இலங்கையில் மிகப்பெரிய இந்துக்கல்வி நிறுவனமாகவும் சைவவித்தியாவிருத்திச் சங்கம் விளங்குகின்றது. இச்சங்கத்தின் வளர்ச்சியும் தோற்றமும் இந்துக்கல்வி இயக்கங்களுக்கு மேலும் புத்துணர்ச்சியை அளித்தன. இந்துக்களின் கல்வியைப் பாதுகாக்கும் நோக்குடன் வளர்க்கும் சிந்தையுடனும் சேர். பொன். இராமநாதன், டபிள்யூ. துரைசாமி, சைவப் பெரியார் எஸ். சிவபாதசுதந்தரம், எஸ். இராசரத்தினம், எம். எஸ். இராசரத்தினம் ஆகியோரின் கூட்டு முயற்சியால் இச்சங்கம் நிறுவப்பட்டது. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தந்தை எனக் கொள்ளப்பட்ட இராமநாதன் ஓர் இனமக்கள் ஒருநாட்டு மக்கள் உயர்ச்சி பெறவேண்டுமாயின் கல்வியின் மூலமே அது செயற்பட முடியும்.[9] ஒரு மனிதனின் ஆளுமையின் நான்கில் மூன்று பங்கு அவனது சமயத்தாலே உருவாக்கப்படுகின்றது என்று கூறினார். ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் கல்வி முதன்மை இடம் பெறுதல் வேண்டும். தமிழர் துவிபாஸா பள்ளிக்கூடங்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் கிராமங்கள் தோறும் அமைக்கப்படல் வேண்டும் எனும் கருத்துக்களை முன் வைத்தனர். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் சமூக மாற்றத்தை கருத்திற் கொண்டும் சமூக ஏற்றத்தாழ்வுகளின் அறை கூவல்களை கல்வி மூலம் அணுகிக் கொண்டும் சென்றமையைக் காணலாம். "யாழ்ப்பாணத்தின் இந்துக் கல்வி இயக்கம் கிறிஸ்தவர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ எதிரான இயக்கமன்று"[10] என்ற கருத்து சைவவித்தியா விருத்திச்சங்க இயக்கங்களின் சமூக உணர்வு கொண்ட விரிந்த தத்துவப்பார்வையை எடுத்துக் காட்டுகின்றது. இச்சங்கக் குழுவினர் நாட்டில் நிலவிய பொதுவான கல்வி அமைப்பின் பின்னணியில் இந்துப் பள்ளிக்கூடங்கள் அனுபவித்த தாக்கங்களைக் கருத்திற் கொண்டு இந்துசமயமும் கல்வியும் ஒன்றிணைந்து வளர வேண்டுமென்ற உணர்வினை வெளிப்படுத்தி அக்காலத்தில் இயங்கி வந்த இந்துப் பள்ளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடங்களை வலிமைப்படுத்தவும் அத்தியா வசியமான இடங்களில் பள்ளிக்கூடங்களைத் திறக்கவும் எண்ணினர். மேலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள நிறுவனங்களை ஒன்று திரட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கம் நிறுவப்படுவதற்கு முன்னர் இந்து இயக்கங்கள் செயற்பட்ட போதிலும் அவை பரந்துபட்ட சமூக நிறுவனங்களாக அமைய வில்லை. இச்சங்கத்தின் ஆரம்பப்பணி கிராமங்களில் உதயமானதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் மக்களின் ஆதரவையும் உதவியையும் பெற்று மாதகல் கிராமத்தில் 1924 மே மாதம் விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற பள்ளிக்கூடம் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இது கிறிஸ்வத சமயக் குழுவினரின் பள்ளிக்கூடத்திற்கு 100 யார் தூரத்தினுள் அமைக்கப்பட்டது. இவ்வாறு அருகில் இப்பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டமையினால் கிறிஸ்தவ பள்ளிக்கூடத்திற்குச் சென்ற சைவப்பிள்ளைகளை ஈர்க்க முடிந்தது. அத்துடன் கோயிலுக்கு அண்மையிலே பள்ளிக்கூடங்கள் அமைந்தமை மக்களிடத்து ஊறியிருந்த சமய உணர்வுடன் கல்வியையும் இணைத்து பண்பாட்டு உணர்வுகளைப் பலப்படுத்தும் பாங்கினையும் கொண்டதாயிற்று.

இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் 2250 பிள்ளைகளைக் கொண்ட 22 பள்ளிக்கூடங்கள் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பணிகள் மக்களைத் தழுவிச்செல்லும் பண்புகளைப் பெற்று இருந்தமையினால் எழுத்தறிவின்மை வேகமாக ஒழிக்கப்படவும், தமிழ்மொழி மூலக்கல்வி கிராமங்களெங்கும் பரவக் கூடிய இயல்புகளைப் பெற்றன. அக்காலத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் நிலவிய சமூக விழுமியங்களுடன் ஒன்றித்துச் செல்லாது உயர் வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற பேதங்களைக் கடந்து யாவருக்கும் கல்வி என்ற கருத்தினை முன்வைத்தமை, செயற்படுத்தியமை இச் சங்கத்தின் சிறப்பம்சமாக விளங்குகின்றது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளையும் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் அளித்தல் வேண்டும் எனும் சமத்துவக் கருத்து இச்சங்கத்தால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகளுக்கு ஆசனம், போசனம் முதலிய எத்துறையிலும் வேறுபாடு காட்டக்கூடாது என்ற தீர்மானத்தைச் செயற் படுத்தியமை அக்காலத்தில் சமூகப் புரட்சியாகும்.[11] இதனால் உயர் சாதியினர் இதனை எதிர்க்க முற்பட்டனர். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஏழு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப் பட்டன. தலைமை ஆசிரியர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. சில கிராமங்களில் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களிலிருந்து உயர் குலத்தவர் தங்களது பிள்ளைகளை விலக்கிக் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் சேர்த்தனர். சமூக மாற்றங்களை உருவாக்க முனைந்த கல்வி நெறியினை ஏற்றுச் செயற்படுத்த முயன்றமை கல்வியிற் சமத்துவம் என்னும் அடிப்படையில் எழுந்தது. இச்சங்கத்துப் பள்ளிக்கூடங்களில் 1927 ஆம் ஆண்டு 4000 பிள்ளைகள் 32 பள்ளிக்கூடங்களில் கற்றார்கள். 1938ல் மாணவர் தொகை 14, 885 ஆகவும் பள்ளிக்கூடங்கள் 99 ஆகவும் உயர்ந்தது. மேலும் 1943இல் பள்ளிக்கூடங்கள் 111 ஆகவும், மாணவர்கள் 18, 000 ஆகவும், ஆசிரியர்கள் 525 ஆகவும் உயர்ந்தனர்.[12]

1958ஆம் ஆண்டு முடிவடையும் போது இச்சபையின் முகாமையின் கீழ் 147 தமிழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடங்களும் 2 அநாதை இல்லங்களும், 7 ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும், 15 நெசவுப் பள்ளிக்கூடங்களும், 16 கூடை இழைக்கும் பள்ளிக்கூடங்களும் இருந்தன. அவற்றுடன் ஓர் ஆசிரியப் பயிற்சிப் கலாசாலையும் இருந்தது. இக்கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் மொத்தமாக 3500 மாணவர்கள் வரையிற் கல்வி கற்றனர். அவர்களது பள்ளிக்கூடங்கள் கட்டணம் அறவிடாத இலவசக் கல்வி நிலையங்களாக விளங்கின. அநாதைப் பிள்ளைகளுக்கு கல்வி பெற வசதி செய்வதோடு அவர்களை ஆசிரியர் களாக்கி அரசாங்க உத்தி யோகத் தர்களாக்கி வருவாய் பெற்று வாழச் செய்வது.[13] திரு. இராசரத்தினம் அவர்களின் பணியாயிற்று எனும் வ. நடராஜனின் கருத்து குறிப்பிடத்தக்கது. கல்வி எல்லொருக்கும் பொதுச் சொத்து என்னும் நெறியினை இச்சங்கம் செயற்படுத்தியது எனலாம். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் கல்வியைப் பல்வேறு முறைகளில் செயற்படுத்திச் சமூகபொருளாதாரத் தேவைகளை கருத்திற் கொண்டு செயற்பட்டனர். கமத்தொழில் கல்வி இவர்களது கல்வித்திட்டத்தில் சிறந்த இடம் பெற்றது. இவ்வகையில் பள்ளிக் கூடத்தையும் சமூகத்தையும் இணைக்கும் தொடர்புகளும் வளர்ச்சி அடைந்தன.

தாய்மொழிக்கல்வியில் இச்சங்கம் ஆழ்ந்த கவனம் செலுத்திய போதும் பிறமொழிகளையும் கற்பித்தது. பலம் வாய்ந்த கல்விநிலையமாக வளர்ந்தோங்கிய இச்சங்கம் சிங்கள மொழியைக் கற்பிக்க நடவடிக்கை மேற்கொண்டமை தேசியக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடாக எழுந்தது. ஆங்கிலப் பள்ளிக் கூடங்கள், இலவச துவிபாஷா பள்ளிக்கூடங்கள் என்பனவற்றின் மூலமாக ஆங்கிலக்கல்வி வளர்ப்பதிலும் கவனம் செலுத்தியது. இவ்வாறு பன்மொழிகளைக் கற்பித்தலை நிறைவு கொண்ட பணியாகவே சபையினர் கருதினர். மேலும் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்பித்தமை[14] எமது நாட்டின் சமூக நிலையை யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொண்டமையைக் காட்டுகின்றது.

சமத்துவமாகச் சகலரையும் மதிக்கும் தீர்மானத்தால் பொதுமக்களது எதிர்ப்புகளுக்கும் முகம்கொடுத்து பாடசாலைகளில் சம ஆசனம் வழங்கியதுடன் விடுதிச் சாலைகளில் சமபந்தி போசனம் பண்ணச்செய்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் பெரியார் இராசரத்தினம் ஆவார். இவரது திட்டங்களை அமுலாக்கிய போது அதிபர், ஆசிரியர் சில வேளைகளில் பாதிக்கப்பட்டனர். அவ்வேளையில் அவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் வேண்டிய உதவிபுரிந்து உற்சாகத்துடன் கடமை புரியத்தூண்டியவர் இவ்வாறு சமத்துவத்திற்காகப் பாடுபட்டு வசதி குறைந்தோரை கல்வியில் உயரச் செய்தவர்.[15] 1958 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலவரத்தினால் பாதிப்படைந்த 600ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பரந்தன், முல்லைத்தீவு வீதியில் குடியேறினர். இவர்களின் பிள்ளைகள் கல்வி கற்க வசதியின்றி இருந்தபோது இராசரத்தினம் அவர்கள் சைவ வித்தியாவிருத்திச்சங்கம் மூலம் ஒரு வான் கொள்வனவு செய்து அண்மையிலுள்ள முரசு மோட்டைப் பாடசாலைக்குத் தினமும் கூட்டிச் சென்று அவர்களைக் கற்க வைத்தார். அதன் பின்னர் தருமபுரத்தில் ஒரு பாடசாலையை நிறுவி அப்பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்டார்.

இத்தருமபுரம் வித்தியாலயம் 1958ஆம் ஆண்டு நவம்பர் 17ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இங்குள்ள மாணவருக்கு உடை முதலியன வழங்கியும் ஆசிரியர்களுக்கு வேதனத்துடன் மதிய வேளை உணவு வழங்கச் செய்தார்.[16] இவ்வாறு ஏழைகளின் வாழ்வில் ஒளியூட்டியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரத்தினம் அவர்கள். தமிழ்ப் பாடசாலைகளையும் தமிழ் ஆங்கிலம் கற்பிக்கும் இரு மொழிப்பாடசாலைகளையும் யாழ்ப்பாணம், தீவகம், வவுனியா, முல்லைத்தீவு, புத்தளம், சிலாபம் முதலிய வட மேற்குப் பிரதேசங்களிலும், பதுளை, நாவலப்பிட்டி போன்ற மலையகப் பிரதேசங்களிலும் சைவப் பாரம்பரியங்களைப் பேணும் வகையில் அமைத்தார். 1958இல் இராசரத்தினம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இச்சங்கம் 187 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கொண்டிருந்தது. இதன் மூலம் மாணவர் கல்வியில் இவருக்கிருந்த அக்கறையையும், பற்றினையும் நாம் அறிய முடிகின்றது.

இராசரத்தினம் அவர்கள் சைவ அநாதை இல்லக் கட்டிடங்களில் ஒன்றில் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தார். ஒரு சில வருடங்களில் மலேசியாவாழ் இலங்கைத் தமிழரின் உதவி மூலம் பாரிய கட்டிடம் நிறுவி அங்கேயே சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையை நடாத்தினார். இங்கு 100 மாணவர் பயிலும் வசதி இருந்தது. இக்கலாசாலை அமைக்கப் பட்டதாலேயே கலாசாலை வீதி என அவ் வீதிக்குப் பெயர் சூட்டப்பட்டது. 15.1. 1963ல் இவ்வாசிரியப் பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டது. எனினும் அவ் வீதி இன்றும் கலாசாலைவீதி என்றே அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சைவக்கல்விப் பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவமக்களின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட இராசரத்தினம் அவர்களும் அநாதரவான பிள்ளைகளும் பின்தங்கிய பிள்ளைகளும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக் களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். திருநெல்வேலியில் அவரால் ஆண், பெண் இருபாலாருக்கும் இரு சைவச்சிறுவர் இல்லங்களை உருவாக்கினார். அவை இன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாவலரைப் போன்று இராசரத்தினம் அவர்களும் சைவத்திருமுறைகள் பேணப்பட வேண்டும் என்பதிலும் அவற்றினைப் பண்ணோடு பாட வேண்டும் என்பதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். மேலும் ஆசிரியர் கலாசாலையில் ஒரு பண்ணிசை யாசிரியரை நியமித்து திருமுறைகள் பண்ணுடன் ஓதப்பயிற்றுவித்தார். இவ்வாறு ஆசிரியர்களுக்கு பழக்குவதனால் ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர் பண்ணுடன் திருமுறைகளை ஓதுவர் என்பதை அறிந்திருந்தார். இதன் மூலம் பாடசாலைகளில் பண்ணுடன் திருமுறைகள் படிக்க வேண்டுமென்ற நாவலரின் கனவை நனவாக்கினார்.

1959 ஆம் ஆண்டில் வெளிவந்த பண்டிதமணி மணிவிழா மலரில் திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கம் எழுதிய கட்டுரையின் முதற்பந்தி பின்வருமாறு:

"பண்டிதமணி அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு மேல் திருநெல்வேலியில் வாழ்ந்ததோடு வாழ்ந்த இடத்தையும் வாழ வைத்தார்கள். சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய பண்டிதமணி ஆசிரிய மாணவர்களுக்கு மட்டுமல்லாது திருநெல்வேலி மக்களுக்கும் பேராசிரியராக இருந்தார். மற்றும் தமிழ் அபிமானிகளுக்கும் பேராசிரியராக வீற்றிருந்தார்கள். இது முற்றிலும் உண்மையாகும்.[17] திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் இலக்கியச் சுவை சொட்டும் வண்ணம் இதிகாசங்களையும் காப்பியங் களையும் பயிற்றுவித்த பண்டிதமணி மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று விளங்கினார். அவர் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சியும் பெற்று தமிழ் பேராசிரியராகவும் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தில் நியமனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று பண்டிதர். சி. கணபதிப்பிள்ளை என விளங்கினார்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் இன்றைய செயற்பாடுகள்

இச்சங்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் ஒழுங்காகவும் கடமை உணர்வுடனும் செயற்பட்டு வருகின்றது. இவ்வகையில் நிர்மாண புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. கல்வியைப் பொறுத்த வரையில் இல்லத்தில் தங்கியுள்ள மாணவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் திருப்திகரமான முறையில் சித்தியடைந்து வருகின்றார்கள். மாணவர் களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடை பெறுகின்றன. கற்றலில் பின்தங்கிய மாணவர் களை இனங்கண்டு அவர்களுக்கான விசேட கல்வி கற்பித்தல் வழங்கப்படுகின்றது. சங்கீதம், நடனம், நாடகம் ஆகியவற்றுக்கான பிரத்தியேக வகுப்புக்களும் கணணி வகுப்புக்களும் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.[18]

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினர் இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை "வரலாறும் காலமும்" என்ற தலைப்பில் 2010ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளனர். மேலும் பல்வேறு ஆய்வாளர்களிடம் இருந்தும் ஆக்கங்களைப் பெற்று சைவ வித்தியா என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டது. இச் சங்கத்தின் தையல் பயிற்சி நிலையத்தினால் சகல பெண் பிள்ளைகளுக்கும் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருவதுடன் பெண் பிள்ளைகளுக்கான ஆடைகளும் தைத்து வழங்கப் படுகின்றன.[19] மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதிலும் இச்சங்கத்தினர் செயற்பட்டு வருகின்றனர். இங்கு ஒவ்வொரு பூரணையிலும் சிறப்புக் கருத தரங்குகள் நடைபெறுகின்றன. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறநெறிப் பாடசாலைப் பிரிவு இச்சங்கத்திற்கு உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. 2004ஆம் ஆண்டு இணுவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கிளை நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக இரண்டு மாடிக் கட்டடம் நிறுவப்பட்டு வருகின்றது. இக்கட்டிடத்தின் கீழ்த்தர வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு திரு. இராசரத்தினம் அவர்களது பிறந்தநாளாகிய கடந்த 04.07.2011ல் "இராசரத்தினம் தொழிற்பயிற்சி மையம்" திறந்து வைக்கப்பட்டது. இங்கு ஒரு தொகுதி மாணவர்கள் வீட்டு மின் இணைப்புப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். கடந்த 13.02.2012இல் சைவவித்தியாவிருத்திச் சங்க இல்லத்திலிருந்து வெளியேறிய மாணவர் களுக்கான ஆறுமாத கால கணினின் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.[20] இவ்வாறாக சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் தமது கடமைகளை நிறைவாக செய்து வருவதன் மூலம் இச்சங்கம் சிறப்பாக இயங்கி வருகின்றது.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் குறிக்கோள் பற்றி பண்டிதமணி அவர்கள் கூறிய கருத்து சிந்தனைக்குரியது" சைவவித்தியா விருத்திச் சங்கம் சைவாசிரிய கலாசாலைமூலம் ஆயிரக்கணக்கில் சைவ ஆசிரியர்களையும் ஆசிரியைகளையும் தோற்றுவித்து 180ற்கும் மேற்பட்ட சைவப்பாடசாலைகளை ஆங்காங்கு தாபித்து எத்தனையோ சைவப்பாடசாலைகள் தோன்றுவதற்கு வழிசெய்தும் உன்னதமான தொரு சைவ அநாதைசாலையைத் தாபித்தும், சைவப்பிள்ளை தன் சொந்த சமயத்தை அறிவதற்கு வழிசெய்திருக்கிறது. அவ்வாறே பௌத்த பிள்ளைகள் புத்தமதத்தைப் பயில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியிருக்க வேண்டுமென்பதே மேற்படி சங்கத்தின் கருத்தாயிருந்தது அன்றி மற்றொரு சமயத்திற்கும் இடையூறு செய்யாது சமயத்தை வளர்த்தலே அதன் குறிக்கோள்.[21]

தேசாதிபதி சேர் விலியம் மனிங் காலத்தில் ஆரம்பிக்கப் பெற்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கம் மூன்றாண்டுகள் கழிந்து சேர் கிளிபோர்ட் அவர்களின் ஆட்சிக்காலத்தில் அவரின் அங்கீகாரம் பெற்று சட்ட சபையினர் பாராட்ட அரசாங்கமறிந்த சைவப் பெருமன்றமாய் 24.01.1927 முதல் எல்லோருமறிய வீறுநடை போட்டது. அரசறிய அதன் நோக்கங்கள் செயற்திட்டங்கள் பரந்தமனப்பான்மையில் பலரின் பெரு நன்மைபயப்பதாய் பிரகடனப்படுத்தப் பெற்றன. அவையாவன.[22]

1. இலங்கையில் எங்கெங்கே தேவையோ அங்கெல்லாம் சைவப் பாடசாலைகளை அமைத்துப் பரிபாலித்தல்.
2. தனியார் ஆரம்பித்து நடத்துவதற்கு வசதி வாய்ப்பு அருகிக் கையளிக்கும் பாடசாலை களை ஏற்று நடத்துதல்.
3. முன்னரே ஆரம்பித்து நடைமுறையில் உள்ள சைவப்பாடசாலைகளுக்கு வேண்டிய எல்லா ஒத்தாசைகளைச் செய்து கொடுத்தல்.
4. சைவப்பிள்ளைகள் சைவச்சூழலில் சைவப் பாடசாலைகளில் படிப்பதற்கு ஆவன யாவற்றையும் செய்து சைவக் கல்வியை முன்னேற்றுதல்.
5. முத்தமிழையும் எல்லா வழிகளாலும் வளர்த்தல் என்பனவாகும்.

## காந்தியடிகள் விடுத்த வேண்டுகோள்

மகாத்மா காந்தியடிகள் 1927 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பல்வேறு பள்ளித் தலங்களையும் பார்வையிட்டுப் பேசி வாழ்த்தி வந்த வழியில் சைவ விருத்தியாவிருத்திச் சங்கத்தாரின் பெரு முயற்சியையும் அறிந்து மனமார வாழ்த்தினார். அப்போது காந்தியடிகள் 29.11.1927 அன்று இந்துக்களுக்கு கூறிய கருத்து இங்கு மனங் கொள்ளத்தக்கது. "இந்துக்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வி எத்தன்மையாகும் என்பதை நீங்களே முடிவு செய்யும் உரிமை உடையவர்களாவீர்கள். அதற்காகச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என ஒரு நிறுவனத்தையும் ஆரம்பித்து நடாத்தி வருகிறீர்கள். இதையிட்டு எனக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாகின்றது. இச்சங்கத்தை நல்ல நோக்கத்தோடு வளர்த்து உறுதியடையச் செய்தல் வேண்டும் என்பது எனது பெருவிருப்பம் அப்படிச் செய்யும் போது கிறிஸ்தவ பாடசாலைகளுடன் முரண்பட்டு மோதிக்கொள்ள வேண்டியதில்லை. உங்கள் பாடசாலைகளில் தக்க தளபாடங்கள் உபகரணங்களை நிறுவி தகுந்த சிறந்த ஆசிரியர்களையும் நியமித்துக் கொண்டால் எவ்வித தடையும் துன்பமுமின்றித் தாமாகவே சைவ மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கு உங்களிடம் முந்தி வருவார்கள்."

காந்தியின் கூற்று இன்று செயல் வடிவம பெற்றுள்ளது. பெரும் செல்வமாகிய கல்வியை காத்தும் வளர்த்தும் எமது சமூக வரலாற்றுடன் சைவவித்தியாவிருத்திச் சங்கம் இரண்டறக் கலந்துள்ளது. "பண்பாட்டின் வழியான கல்வி" "எல்லோருக்கும் கல்வி" என்பன சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் உயரிய இலக்குகளாக நாடெங்கும் கல்விக் கூடங்கள் அமையப் பெற்றன. சங்கத்தின் தெய்வப்பணியாக வறுமையின் குழந்தைகளாய் அமைந்துள்ளது. எனவே பெரியார் இந்துபோர்ட் இராசரத்திரனம் அவர்கள் கட்டிக்காத்த சைவப்பணியை, கல்விப் பணியைத் தொடர்வது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. க. சி. குலரத்தினம். **இந்துபோர்ட் இராசரத்தினம், வரலாறும் காலமும.** சைவவித்தியா விருத்திச் சங்கம். திருநெல்வேலி. 2010. ப 2.
2. **மேலது.** ப.24.
3. **மேலது.** ப.26.
4. **சைவவித்தியா.** சைவவித்தியா விருத்திச் சங்கம். திருநெல்வேலி. 2010. ப.29.
5. **மேலது.** ப.30.
6. **மேலது.** ப.30.
7. **மேலது.** ப.31.
8. **மேலது.** ப.34.
9. பேராசிரியர் ப. சந்திரசேகரம். **லீலாவதி இராமநாதன. நினைவுப் பேருரை.** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 1987. ஆகஸ்ட். 31. ப.17.
10. S. Rajaratnam, Hindu Education in Jaffna, **Report of the Hindu Board Education,** 1930, p.26.
11. பேராசிரியர் ப. சந்திரசேகரம். மு.கு.நூல். ப.19.
12. மேலது. ப.19.
13. வ. நடராஜன். "அநாதைகள் வாழ்கின்றார்கள்". ஈழகேசரி. வெள்ளிவிழா மலர்.சுன்னாகம். 1956.
14. AHBE, 1939, p.19.
15. அ. தற்பரானந்தம். **இந்துபோட் இராசரத்தினமும** கல்விக் கூடங்களும. தலைவர். சைவவித்தியா விருத்திச் சங்கம். 4.7. 2006. ப.04.
16. **மேலது.** ப.05.
17. **பண்டிதமணி நினைவுமலர்.** எஸ். திருச்செல்வம். "பண்டிதமணியும். திருநெல்வேலியும்". பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை. 1989. ப.201.
18. **சைவவித்தியா விருத்திச் சங்கம் செயலாளர் அறிக்கை.** 2009.
19. **சைவவித்தியா விருத்திச் சங்கம் செயலாளர் அறிக்கை.** 2010.
20. **மேலது.** 2011. 2012.
21. **பண்டிதமணி நினைவுமலர்.** "பண்டிதமணி அவர்களின் சிந்தனைகள். பரம ஔஷதங்கள். ப.230.
22. க. சி. குலரத்தினம். **மு..கு. நூல.** ப.56.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் கிராமிய வழிபாடு

திருமதி. சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்

ஈழத்து சைவ மக்களிடத்தில் பண்டைய காலம் தொட்டு இருவகையான வழிபாட்டு மரபுகள் இருந்த வந்தன. ஒன்று ஆகம முறையில் அமைந்த பெருந்தெய்வ வழிபாட்டு முறை, மற்றையது ஆகமமரபுக்கு அப்பாற்பட்ட கிராமிய சிறுதெய்வ வழிபாட்டு முறை மேற்படி வழிபாட்டு மரபுகளில் சிறு தெய்வ அல்லது கிராமிய வழிபாட்டு மரபுகளே தனித்துவம் மிக்க பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகளை கொண்டனவாக காணப்படுகின்றன. கிராமிய வழிபாட்டு மரபுகளும், அவை சார்ந்த நெறிகளும், கிராமம் என்றால் என்ன என்ற சொல்லை தந்தை பெரியார் அவர்கள் பின்வருமாறு வரையறை செய்கிறார். "நகரங்களுக்கு ஆதாரம் கிராமம் ஆகும்"[1]. அங்கு நாகரிகம் இல்லை வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதை விட வாழ்வு ஆசைக்கு பணம் சம்பாதிக்கும் வசதியில்லை, ஓய்வில்லை, புத்தியைச் செலவழித்து முன்னேறக்கூடிய வழியில்லை. கிராமத்தில் நிற்கதியற்ற நிலையில் நிம்மதி தேடும் கிராமிய மனம் தனக்கென நம்பிக்கைக்கும், வாழ்விற்கும், தோட்டத்திற்கும், சமய வழிபாட்டைத் தேடியது. இவ்வாறு கிராமம் சார்ந்த மக்களால் வழிபாடாற்றப்பட்டு வருகின்ற வழிபாடு கிராமிய வழிபாடு எனலாம்.

இவ்வழிபாட்டு முறையானது இயற்கையின் ஒவ்வொரு கூறுகளையும் தெய்வீக நிலைப் படுத்தி மிகவும் எளிமையான முறையில் மேற்கொள்வதாகும். இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்க இயற்கையை வழிபட்டு, விழாக்களை நடாத்த முற்பட்டான். அதனால் இயற்கையை தன்வயப்படுத்தி காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத் தொடங்கினான். ஆதலால் மக்களிடையே உருவ வழிபாடு தோன்றிற்று. பழங்கால மனிதர் இடி, மழை, மின்னல் போன்றவற்றைக் கண்டு அஞ்சினார். துன்பத்திலிருந்து விடுபட மனிதன் இயற்கைப் பொருட்களை வழிபட எண்ணினான். இயற்கையிடமும் மரணத்திற்கு பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே கிராமிய தெய்வ வழிபாட்டுக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

ஈழத்திலும் தொன்மைக்காலம் முதல் இன்று வரை கிராமிய வழிபாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனினும் இத்தகைய தனித்துவமிக்க கிராமிய வழிபாட்டு மரபுகள் காலச்சக்கரத்தின் சுழற்சிக்கேற்ப அவை கைவிடப்பட்டு ஆகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபிற்குள் அடிபணிந்து செல்லவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் ஈழத்தில் இந்துக்களினால் வழிபாடாற்றப்படுகின்ற கிராமிய வழிபாட்டு மரபுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஈழத்தில் கிராமிய வழிபாடு

ஈழத்தமிழ் மக்கள் ஆதிகாலம் தொட்டு இன்றுவரை தங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தத்தம் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வழிபாட்டு முறைகளை ஏற்படுத்திக் கொண்டனர்.[2] இவ்வழிபாட்டு முறைகள் சமூகங்களின் பழக்க வழக்கங்களுடன் ஒன்றுபட்டு மிளிர்ந்ததனை வரலாறுகள், ஐதீகங்கள் மூலம் அறியமுடிகிறது. ஈழத்திலே ஆதிக்குடிகளான இயக்கர்கள், நாகர்கள் வாழ்ந்த காலப் பகுதியிலேயே கிராமிய வழிபாடானது தோற்றம் பெற்றதனை அறியமுடிகிறது. ஆதிக்குடிகள் மலைச்சாரலிலும், மரங்களின் அடியிலும், மரப்பொந்துகளிலும், தெய்வங்களை வழிபட்டனர். அவ்சிறு தெய்வங்களே பின்னர் போர்த்துகேயர், ஒல்லாந்தர் கால ஆட்சிப்பரப்பிலே வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்த அவ்வேளையில் வழிபாடாற்று வதற்கு உரியனவாகின.

கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகள் ஈழத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் பிள்ளையார், பைரவர், ஐயனார், நாகதம்பிரான், முனியாண்டி, நரசிங்கர், பூதவராயர், வீரபத்திரர், முனியப்பன், பெரியதம்பிரான், முனியப்பர், கிங்கிலியர் வழிபாடு போன்ற ஆண் தெய்வங்களும், கண்ணகி, மாரியம்மன், நாச்சிமார், திரௌபதி, காளி, சீதையம்மன், கொத்தியம்மன், பேச்சியம்மன் வழிபாடு போன்ற பெண் தெய்வங்களும் மேலும், அடுப்பு நாச்சியார் வழிபாடு, சமாதித்தெய்வ வழிபாடு, பிதிரர் வழிபாடு, மரணவக்கம் போன்ற பல வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு செய்வினை, சூனியம், நடைபெறும் போது விறுமர், இங்கரர் போன்ற தேவதைகளும் வணங்கப்பட்டனர். காடேறி, கல்லெறிமாடான் என்பவையும் கெடுதலைச் செய்யும் தெய்வங்களாக கூறப்படுகின்றன. காடேறித் தெய்வத்தினை வேட்டைக்கு செல்பவர்கள் வணங்குவது வழக்கம், கல்லெறி மாடான் வீட்டுக்கு கல்லெறிகின்ற தேவதை ஆகும்.

## ஈழத்தில் கிராமிய ஆண் தெய்வ வழிபாடு

### பிள்ளையார் வழிபாடு

பிள்ளையார் ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத இருமரபினரும் வழிபட்டுவரும் பொதுத் தெய்வமாகும். ஈழத்தில் கிராமிய வழிபாட்டோடு பிள்ளையார் வழிபாடும் சங்கமித்துவிட்டது. இன்னலைப்போக்க இவ்வழிபாடு நடைபெறுகின்றது. இதனால்தான் கிராமிய வழிபாட்டில் முக்கிய தெருக்கள், குளக்கரை, ஆற்றங்கரை, மரவடி ஆகியவற்றில் பிள்ளையார் உருவச்சிலை வைத்து வழிபடுவது அன்றிலிருந்து இன்றுவரை வழக்கில் இருக்கிறது. கிராமிய வழிபாட்டின் அடிப்படையில்தான் முறிகண்டி பிள்ளையார் ஆலயம், கைதடி உக்கலை பிள்ளையார் ஆலயம், ஆகியவற்றில் பயணிகள் வழிபடுவது அதிமுக்கிய அம்சமாகும். பருத்தித்துறை தில்லையம்பலப் பிள்ளையார் மாட்டுப்பட்டிகளைப் பாதுகாக்கிறார் என்று நம்பிக்கையில் வணங்கப்படுகிறது. இத்தகைய பிள்ளையார் ஆலயங்கள் பல இன்று குடமுழுக்குப் பெற்றுள்ள ஆலயங்களாக எழுச்சி பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பைரவ வழிபாடு

பைரவரது வழிபாட்டு முறைகள் ஆகமமுறையில் பெருந்தெய்வ வழிபாடாகவும், கிராமிய முறையில் சிறுதெய்வ வழிபாடாகவும் இடம்பெற்று வருகின்றது. கிராமங்களில் அமைந்துள்ள ஏராளமான சிறுசிறு பைரவ ஆலங்களில் மக்கள் தாம் தம் விரும்பியபடியும், அங்குள்ள கிராம வழக்குப்படியும் தமது வசதிக்கு ஏற்பவும் பைரவ வழிபாட்டை ஆற்றி வருகின்றனர். உக்கிர மூர்த்தமாக பைரவர் இருப்பதால் அவர் மாமிச உணவை விரும்பி உண்பவர் எனும் கிராமிய வழக்கின் படியும், பைரவர் ஆலங்களில் நீண்டகாலமாக பலியிடல் இடம்பெற்றுவருகின்றது. பின்னர் அறிவு ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் பலியிடல் கைவிடப்பட்ட போதிலும் இன்றும் கூட சில ஆலயங்களில் பலியிடும் வழக்கம் காணப்படு கின்றது. இதன் தொடர்ச்சியாக பலியிடுவதன் அடையாளமாக, சின்னமாக கிராம சாந்தியின் போது சில ஆலயங்களில் கோழி ஒன்றை கொண்டு வந்து பலியிடும் பாவனை காணப்படு கின்றது. ஏனைய இடங்களில் இதற்குபதிலாக நீர்த்துக்காய் வெட்டி, குங்குமம் பூசுவதைக் காணலாம். கிராமிய வழிபாட்டில் பைரவர் பல அடைமொழிகளைக் கொண்டு விளங்குகின்றார். எடுத்தக்காட்டாக உக்கிர பைரவர், நரசிங்க பைரவர், சுடலை பைரவர், காட்டு பைரவர், பனிக்கர் பைரவர் என்பன குறிப்பிடத்தக்க பெயர்களாகும். வேள்வி நடவாத கோயில்களில் உள்ள பைரவர் ஞான பைரவர் என்ற பெயரை பெற்றுள்ளார்.

பைரவ வழிபாட்டில் பக்தி, பரவசம், ஆவேச ஆட்டங்கள், வாக்குச் சொல்லுதல் என்பனவும் ஆண்டுக்கொருமுறை பொங்கல், மடைபரவுதல் என்பனவும் இடம்பெறுகின்றன. இவ்வழிபாட்டில் கரகம், காவடி, காத்தவராயன் கூத்து என்பனவை முக்கிய கலைநிகழ்வுகளாகும். ஈழத்தில் ஒரு சில ஆலயங்கள் பெரிதாக்கப்பட்டு ஆகமமரபிற்குள் சென்றாலும் ஏனையவை இன்றும் கிராமிய வழிபாட்டு மரபில் பயபக்தியுடன் ஆற்றப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

### ஐயனார் வழிபாடு

ஈழத்தில் ஐயனாரை பல ஊர்களிலும் கிராம தேவதையாகப் போற்றி வழிபட்டு வருகின்றனர். சிவனின் கோயிலை ஊர் நடுவே அமைத்து ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்களாக மாரியம்மன், பிடாரி, ஐயனார், காளி ஆகியோரை வைத்து வழிபட்டு வருகின்றனர். வன்னிப்பிரதேசத்தில் ஐயனார் ஆலயம் இல்லாத இடமே இல்லை எனலாம் வன்னிமக்கள் ஐயனாரின் உறைவிடம் காடுகள் என்று கருதுகின்றனர். காட்டுக்குத் தேன் எடுக்கச் செல்வோரையும், வழிப்போக்கரையும் காப்பாற்றும் தெய்வமாகவும், நீர்ப் பாசனக்குளங்கள் உடையாவண்ணமும், கடும் வரட்சிக்காலத்தில் நோய்கள் பிடிக்காமல் இருப்பதற்கும், வரட்சிக்காலத்தில் மழைவேண்டி அருள்புரிவதற்கும் ஐயனாரை வழிபடுகின்றனர். கனகராயன் குளத்திற்கு அண்மையிலுள்ள ஆதிசடவன் குளம் ஐயனார் கோயில், முள்ளிய வளையிலுள்ள ஆண்டான் குளம் ஆதி ஐயனார் கோயில் போன்றவை முக்கியமானவை. இவை போன்றே ஈழத்தில் ஏனைய ஐயனார் ஆலயங்கள் வரலாற்றுப் பெருமையும், அற்புதமும் நிறைந்தவையாகவும், வருந்தி வணங்குவோருக்கு விரும்பி அருளைப் பொழியும் காவல் தெய்வமாகவும் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தல் தெய்வமாக விளங்கும் ஐயனாரையே கேரளநாட்டில் மலையாளத்தில் ஐயப்பன் வழிபாடாக அங்குள்ளவர்களால் போற்றப்படுகின்றது. இன்று யாழ்ப்பாண மக்களிடையே சிறப்பும் பெருமையும் பெற்று வளர்ந்துவரும் ஆலயமாக கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயம் விளங்குகின்றது. ஐயப்பன் வழிபாடானது கொழும்பிலும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. கொழும்பு அளுத்மாவத்தையில் ஆனந்த ஐயப்பர் தேவஸ்தானம் காணப்படுகின்றது.

### நாகதம்பிரான் வழிபாடு

ஈழத்தின் ஆதிக்குடிகளான நாகர்களினால் ஆற்றப்பட்ட நாகதம்பிரான் வழிபாடு சிறப்பான தொரு சிறுதெய்வ வழிபாடாகும். "பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி. இதனால் நாகத்தை வழிபட்டு பாம்புகளின் சீற்றத்திலிருந்து தப்பிவிடலாம் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். ஈழத்தில் நாகவழிபாட்டுக்கென அமைந்துள்ள வழிபாட்டு இடங்களாக புதூர், புளியம் பொக்கனை, கற்சிலைமடு போன்ற இடங்களிலும் நாகர் கோயில், நயினை நாகபூசனியம்மன் கோயில், சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி ஆலயம் போன்ற ஆலயங்களிலும் நாகதம்பிரான் வழிபாடு இடம்பெறுகிறது. இவ்வாலயங்களில் நாகம் இருக்குமிடத்தைச் சுற்றி வெள்ளைகட்டப்பட்டு அங்கு பயபக்தியுடன் பால், பழம் நாகத்திற்கு வைக்கப்படும். அங்குள்ள பாம்புகள் அப் பால், பழத்தை அருந்திச் செல்வதாக நம்பப்படுகிறது. வன்னிப்பிரதேசத்தில் புதூர், புளியம் பொக்கனை ஆகிய இடங்களில் வைகாசி மாதத்தில் பொங்கல் வழிபாடு நடைபெறுகின்றது. பொங்கலை பிராமணர் அல்லாத வேறு சாதிப்பூசாரியே நடாத்துகின்றார். பொங்கலின் போது பலியிடுவதும் முக்கியமானதொரு அம்சமாகும். பொங்கலின் போது வழங்கப்படும் மருந்து விஷக்கடியினால் ஏற்படும் ஆபத்தை போக்கக்கூடியது என்று நம்பப்படுகின்றது.

### அண்ணமார் வழிபாடு

அண்ணமார் பொல்லுக்கிழவன், சிவ குடும்பன் போன்ற பெயர்களில் அண்ணமார் வழிபாடு இடம்பெறுகிறது. ஒரு கல் அல்லது பொல்லு அண்ணமாரின் குறியீடாக விளங்குகின்றது. கோப்பாய் இலகடி அண்ணமார், வடமராச்சி கிருச்சியால் அண்ணமார், இணுவில் இளந்தாரி அண்ணமார் போன்ற ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவை. "ஐம்பதுகளைத் தொடர்ந்து மிகச்சிறிய அளவில் சமஸ்கிருத மயமாக்க முயற்சிகள் நிகழ்ந்த போதிலும் ஏனைய நாட்டார் வழிபாடுகளைப் போல அதிகம் மாற்றம் காணாதது அண்ணமார் வழிபாடு"[13] எனும் கருத்தானது இன்று அண்ணமாரை சமஸ்கிருத மயமாக்கும் ஆவல் அதிகரித்துள்ள போதும் அண்ணமாரின் அசைவு இலகுவாய் நிகழ முடியாததொன்றாய் அமைந்துள்ளதைக் காட்டுகின்றது. ஐயனார் கோயில்களில் சிலவற்றில் அண்ணமார் தெய்வமும் காணப்படும்.

### ஏனைய கிராமிய ஆண் தெய்வ வழிபாடு

கிங்கிலியர் என்னும் தெய்வத்திற்கும் வழிபாடு நடைபெறுவதுண்டு. இத்தெய்வம் மனிதரை இடரின்று காக்கும் என்று மக்கள் நம்புவர். இருபாலையைச் சார்ந்த முனி வாய்க்கால் எனும் இடத்தில் கிங்கிலிய சுவாமி கோயில் ஒன்றுள்ளது. கிராமத்தின் காவல் தெய்வமான முனி அல்லது முனியப்பருக்கும் வழிபாடு இடத்திற்கிடம் காணப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாண கோட்டை முனியப்பர் ஆலயம் குறிப்பிடத்தக்கது. இவ்வணக்கத்தில் சூலம் வைத்து வணங்கப்படும். சலவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளிகளின் குலதெய்வமாக பெரிய தம்பிரான் வழிபாடு இடம்பெறுகிறது. நரசிங்க வழிபாடானது வன்னியில் சிறப்பாக இடம் பெறுகிறது. நரசிங்க வழிபாடானது வன்னியில் சிறப்பாக இடம்பெறுகிறது. இங்கு திருமாலை பெருந்தெய்வ வழிபாட்டு மரபில் அல்லாது சிறுதெய்வ வழிபாட்டு மரபிலேயே அதுவும் நரசிங்க அவதாரத்திற்கே அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வழிபடப்படுவதை அவதானிக்க முடிகிறது. திருமாலின் நரசிங்க அவதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபடுவது ஈழத்தின் எந்த மண்ணுக்கும் இல்லாத தனிச்சிறப்பு வன்னி மண்ணுக்குண்டு. அந்த வகையில் வன்னியில் உள்ள நரசிங்க ஆலயங்களாக நொச்சிமோட்டை நரசிங்கர் கோயில், பம்பைமடு நரசிங்கர் கோயில், பூந்தோட்டம் நரசிங்க கோயில் ஆகிய கோயில்களை கூறலாம்.

## ஈழத்தில் கிராமிய பெண் தெய்வ வழிபாடு

ஈழத்து கிராமிய வழிபாடுகளில் தாய்த்தெய்வங்களின் செல்வாக்கு அதிகமானது. மக்கள் வாழ்வின் உயிர்ப்பு மையங்களாக இத்தாய் தெய்வங்களின் ஆலயங்கள் அமைவன, தோற்றமாகவும், அமைவிடமாகவும் விளங்கும் தாய்த்தெய்வங்களே அவர்களின் காவற் தெய்வமாக விளங்குகின்றன. கிராமப்புறங்களின் எல்லைப்புறங்களில் விளங்கும் தாய்த்தெய்வ ஆலயங்கள் இதனை வெளிப்படுத்துகின்றன. தீய ஆவிகளோ பிறதுன்பங்களோ கிராமத்தை அண்டாமல் இந்த எல்லைப்புற அம்மன்கள் காக்கின்றன. விவசாய உற்பத்தி வழி சமூகத்தில் அவர்கள் பயிர்களைக் காப்பதும், விளைச்சளைப் பெருக்குவதும், விளைசலுக்கான மழையினைத் தருவன என அனைத்துத் தேவைகளிலும் தெய்வங்களின் துணையும், காவலும் அவசியமானது, உயிர்களை, விளைச்சளை அதிகரிக்கும் ஆற்றல்களைக் கொண்ட பெண்தெய்வங்களே கிராமப்புறங்களில் முதன்மைக்குரிய இடத்தினைப் பெறுதல் இயல்பானது.

### கண்ணகி வழிபாடு

ஈழத்தில் கிராமிய வழிபாட்டில் பிரபல்யமாக விளங்குவது கண்ணகி வழிபாடு ஆகும். சிறப்பாக கிழக்கிலங்கை மக்களிடையேயும், வன்னிப் பிரதேச மக்களிடையேயும் பிரசித்தி பெற்ற தெய்வமாக விளங்குவது கண்ணகி அம்மன், கண்ணகியின் சீற்றத்தால் அம்மை, கொப்புளிப்பான், கண்நோய் முதலிய வெப்பு நோய்கள் உண்டாகின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வன்னிப்பிரதேச கண்ணகிம்மனுக்கு பல வழிபாட்டு இடங்கள் உள்ளன. வற்றாப்பளை, முள்ளியவளை, சிலாவத்தை, கற்கிடங்கு, பளையாண்டான், அரியாமடு, கொக்கிளாய், குமிழமுனை முதலிய வன்னிக்கிராமங்கள் பலவற்றிலும் கண்ணகியம்மனுக்குரிய வழிபாட்டிடங்கள் அமைந்திருப்பதை காணலாம். இங்கெல்லாம் ஆண்டுதோறும் வைசகா சித்திங்களில் கண்ணகியம்மனுக்கு சிறப்பான பொங்கல வழிபாடுகள் நடைபெறுகின்றன. மேலும், மட்டக்களப்பில் கோயில் கொண்டிருக்கும் கண்ணகியை அத்தேசத்தில் எழுந்த ஊர்சுற்று காவியத்தில் தரிசிக்க முடிகின்றது.[4] வன்னி, யாழ்ப்பாணம், திருகோணமலை மட்டக்களப்பு போன்ற பிரதேச வேறுபாடுகளுக்கு ஏற்ப சடங்கு முறைகளும் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### மாரியம்மன் வழிபாடு

கிராமிய மரபில் மாரியம்மன் பெரிதும் முத்துமாரி என்றே அழைக்கப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட மாரியாயி, மகமாயி, மாரியாத்தா முதலிய பெயர்களாலும் பக்தியோடு கூறப்படுகிறாள். மாரி என்ற பெயருக்கேற்ப மழையோடும் இவள் தொடர்புபடுகிறாள். வெப்பு நோய்களை தீயவர்களுக்கு வழங்கி, அவர்களைத் தண்டித்துத் திருத்திப் பின் மழையாகப் பொழிந்து, குளிர்வித்து, அரவணைத்து, அருள்செய்யும் தாயாக இவளை மக்கள் கருதுகின்றனர்.

பண்டைத் தமிழரிடையே மழைவளம் குறைந்த பிரதேச மக்கள் மழை வேண்டி மாரியை வழிபட்டனர். வரண்ட பிரதேசமாதலால் நீண்டதூரம் சென்று நீர் எடுத்து வந்ததன் சின்னமாகவே கரகம் எடுத்தல் என்ற வழிபாட்டு முறை மாரியம்மனுடன் தொடர்புபடுகின்றது.[5] தாம் முன்பு செய்த பாவங்களால் மழையின்மையும், வறுமையும் வருகின்றன என எண்ணிய மக்கள் தம்மை வருத்திப் பிராயச்சித்தம் செய்து வழிபட்டனர். அதனால்த்தான் கரகம், காவடி, அலகு குற்றல், தீமித்தல் போன்றன வழிபாட்டு முறையில் இடம்பெற்றன. உடல் முழுவதும் கொப்புளங்கள் போட்டிருக்கும் அம்மன் நோய் எனப்படும் வெப்பு நோய்களுக்கு இன்று வரை வேறு மருந்துகளின்றி மாரியம்மனை வழிபட்டு மாற்றுவது வழக்கமாகவுள்ளது.

மாரியம்மனுக்கு நேர்த்தி வைத்து நோய் தீர்ந்ததும் நேர்த்திக்கடன் தீர்த்தல் மிகப்பரலவாக கிராமிய மக்களிடையே காணப்படுவதாகும். பொங்கல் பொங்கி மடைபரவுதல், நீர்மோர், நீர்ச்சாதம் என்பன தயாரித்தலும், படைத்தலும் பொதுவாக கிராமிய மக்களிடையே வழங்கும் மரபாகும். இலங்கையில் மலையகப்பகுதியில் மாரியம்மன் வழிபாடு மிகப்பரலாகவுண்டு. மட்டக்களப்பு பகுதியில் பெரும்பாலும் வீரசைவ மரபினர் பூசை செய்வர். இங்கு உடுக்கு அடித்து மாரியம்மன் காவியம், மாரியம்மன் தாலாட்டு போன்ற பாடல்களை பாடி உருவாடுதல் உண்டு. இவ்வகையில் மாரியம்மன் வழிபாடு ஈழத்தில் இடம்பெறுகிறது.

ஆரம்பத்தில் கிராமிய வழிபாட்டு கோலங்களுடன் இருந்த தாய்த்தெய்வ வழிபாடு பிற்காலத்தில் ஆகமமுறை ஒழுங்குகள் பேணப்பட்ட வழிபாடாக வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் பெரும்பாலும் மாரியம்மன் வழிபாடு தன் நாட்டாரியல் பண்பியலை தற்பொழுதும் பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இன்று சிவாகம முறைப்படி ஆலயம் அமைத்து பிரதிஷ்டை நடத்தப்பட்ட மாரியம்மன் கோயில்களில் கூட மகோற்சவம் ஒரு புறம் நிகழும் அதே வேளை நீர்க்கஞ்சியும், பொங்கலும் குளிர்த்தியும் நடைபெறுவதைக் காணலாம்.

### ஏனைய கிராமிய பெண்தெய்வ வழிபாடு

திரௌபதி அம்மன் வணக்கம் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உண்டு. அங்கு விழாக்கடைசி நாளான்று பஞ்சபாண்டவர் வேடமிட்ட ஐவர் திரௌபதி வேடமிட்டவருடன் கோயில் முன்றில் உள்ள தீப்பள்ளத்தில் நடந்து செல்வர். தீமிதி முடித்த பின்னர் கடலில் சென்று முழ்கிக் கோயில் வந்து சேர்வார். மட்டக்களப்பு பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில் தீப்பள்ளைய சடங்கு காலம் முழுவதும் பாண்டவர் வனவாசம் போன பாரதக்கதை படிக்கப்படும். சடங்கின் இறுதி நாளான்று நடைபெறுவதான தீ பாயும் நிகழ்ச்சியே இவ்விழாவில் மிக முக்கியமானது. கிராமிய மக்கள் காளியை சிறப்பாக வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவினுள் ஒரு மரத்தின் கீழ் வைத்து வழிபடுவர். வீட்டில் நடக்கும் எந்த நல்ல காரியங்களையும் காளியை வழிபட்டே தொடங்குவர். இத்தெய்வம் குடும்பத்தினரை எல்லா இடங்களினின்றும் காக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகின்றது. கொத்தியம்மன் வழிபாடு பிள்ளைபெறுவுக்கு காவலாகவுள்ள தெய்வம் என கருதுவார். எனினும் வன்னி மண்ணில் கொத்தித்தெய்வம் மருத்துவிச்சியின் தொழில்சார் தெய்வமாக போற்றப்படாது பேய் என்ற நிலையில் வழிபடப்பட்டதை அறியமுடிகின்றது.

## அடுப்பு நாச்சி வழிபாடு

கோயில் கட்டி வழிபடும் தெய்வங்களை விட வீடுகளில் வைத்து வழிபடும் தெய்வங்களும் பலவுள்ளன. இவ்வகையில் ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பு நாச்சி எனும் தெய்வத்தை வணங்குவர். இவ்வழிபாடு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் தொடங்கியது. வீட்டில் தயாரிக்கப்படும் பலகாரத்தில் முதல் பலகாரம் ஒவ்வொன்றையும் அடுப்பு நாச்சிக்கென நேர்ந்து அடுப்பில் வைப்பர். அதன் பின்னரே ஏனைய பலகாரங்களைத் தமது தேவைக்குப் பயன்படுத்துவர். இத்தகைய வழக்கமானது இன்றும் கூட எமது சமுதாய மக்களிடையே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமாதி வழிபாடு

சமாதி வழிபாடானது சமூக, சமய முக்கியத்துவம் பெற்றவை. ஈழத்துக் கிராமிய வழிபாட்டு மரபிலே சமாதிகளும் வணக்கத்திற் குரியனவாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இறந்தவரை அடக்கம் செய்த இடத்தில் சமாதி கட்டும் வழக்கம் காணப்படுகின்றது. ஈழத்தைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களில் பல சமாதிகள் இருக்கின்றன. இங்கு குருபூசைகள் நடப்பது வழக்கமாகும். இதற்கு சிறந்த உதாரணங்களாக கீரிமலையிலுள்ள சடையம்மா சமாதிக்கோயில், மருதனாமடம் சேர் பொன் இராமநாதன் சமாதி ஆலயம், கடையிற்சாமியார் சமாதி, கொழும்புத்துறை யோகர் சமாதி என சமாதிகள் அடியவர்களின் பெயரால் அமைக்கப் படுகின்றன. ஈழத்தில் வாழ்ந்து சமாதியான பக்தர்கள் சித்தர்களுக்கு சமாதிகட்டி வணங்கும் வழக்கம் ஓரளவு செல்வாக்கு பெற்றுள்ளது.

## மர வணக்கம்

மர வழிபாட்டின் அம்சமாக வேம்பு, அரசு, நாவல், புளி, மருது போன்ற மரங்கள் இடம்பெறுகின்றது. வேம்பும் அரசும் சேர்ந்து பின்னி வளர்ந்தால் அவை அம்மனையும், சிவனையும் குறிக்கும் என நம்பினர். இத்தகைய கிராமிய நம்பிக்கையில் அமைந்த வழிபாட்டின் வளர்ச்சி நிலையினை இன்றும் அவதானிக்க முடிகிறது. இவ்வகையிலேதான் வேப்ப மரத்திற்கும், ஆல மரத்திற்கும், திருமணம் செய்து வைக்கும் பாரம்பரிய நிகழ்ச்சி இந்தியாவில் கேரள மாநிலத்தில் தலைநகர் கொச்சினில் இடம்பெற்றுள்ளது. இன்றும் இக் கோயில்களின் பெயர்கள் பண்டைய மர வழிபாட்டோடும் பின்னர் வளர்ச்சி பெற்ற உருவ வழிபாட்டோடும் பின்னிப்பிணைந்ததை எடுத்துகாட்டுவதாக அமைகிறது. உதாரணமாக ஆலமரத்தடி முனியப்பர், அரசடி அம்மன், புளியடி பைரவர் போன்ற பெயர்களை குறிப்பிடலாம்.

## கோயில் அமைப்பு

கிராமிய தெய்வங்களுக்கான கோயில்கள் மிகவும் எளிமையாகவே காணப்படுதல் வழக்கமாகும். ஊரின் மத்தியில் எல்லையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்குப்புறங்களில் வயற்காடுகளில் நெடுஞ் சாலை ஓரங்களில் இந்த ஆலயங்கள் அமைந்திருத்தல் பெரும்பான்மை வழக்காக உள்ளது. நன்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் குகைகளிலும், மரத்தின் உடைய அடிப்பகுதியிலும், மரப்பொந்துகளிலும், ஆற்றங்கரைகளிலும், மலையடிவாரத்திலும், என்று தத்தம் வசதிக்கேற்பவும் எல்லோரும் கூடி வழிபாடாற்றக்கூடிய பொது இடங்களிலும் உரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. கிராமிய தெய்வக்கோயில்களின் எளிமைத்தன்மையினை மாற்றுவதனை அடியவர்கள் பெரிதும் விரும்பாத நிலையிலும் ஒரு சில ஆலயங்கள் பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப மாறிவிடுவதும் கண்கூடு. ஆகம முறையில் அமையாத கிராமிய ஆலயங்களில் சாதாரண மக்களின் வழியில் வந்த பூசாரியாரே சமய நிகழ்வுகளை முன்னின்று நடாத்துவார்.

### கிராமிய தெய்வ வழிபாட்டு மரபுகள்

சிறுதெய்வங்கள் இடத்துக்கிடம் மாறுபடுவது போன்று சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளும் இனம், சாதி மக்களது பழக்க வழக்கங்கள் போன்றவற்றுக்கு ஏற்ப மாறுபடுகின்றது. ஒரே பெயருடைய தெய்வத்திற்கு கூட அவை அமைந்திருக்கும் இடத்திற்கு ஏற்ப வழிபாட்டு முறைகள் மாறுபடுகின்றன. இவற்றிற்கு காரணம் அவரவர் கடைப்பிடித்து வருகின்ற மரபேயாகும். எனினும் கிராமிய தெய்வ வழிபாட்டு முறையில் பொதுப்பண்புகள் காணப்படுகின்றன. அந்த வகையில், ஆண்டுப் பொங்கலுக்கு வேண்டிய பல்வேறு வகையான பூசைப் பொருட்களை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் நடைமுறையான "மடைபண்டம் எடுத்தல்" பொங்கலுக்குரிய பொருட்களை முறைப்படுத்தி பரவும் நடைமுறையான "மடைபரவுதல்" பறை ஒலிக்கேற்ப கோயில் பூசாரியார் பானையை எறிந்து ஏந்தும் நிகழ்வான "தூளி பிடித்தல்" ஏனைய சிறு தெய்வங்கள் இடையூறு செய்யாவண்ணம் மேற்கொள்ளும் "பரிகலம் அழைத்தல்" பொங்கல் நிறைவடைந்த பின்பு பொங்கலுடன் ஏனைய மடைப்பொருட்களான இளநீர், நீர்த்துப் பூசனிக்காய், தேசிக்காய் என்பவற்றை பூசாரியாரும், உறவினரும் தீவட்டியுடன் சில தூரம் சென்று அவற்றைப் படைத்துவிட்டு கோயிலுக்கு திரும்பும் நடைமுறையான "வழிவிடுதல்" என்பன கிராமிய தெய்வ வழிபாட்டின் பொதுப்பண்புகளாக உள்ளன.

இப்பொதுப் பண்புகள் இன்றும் பேணப்பட்டு வருகின்றமை சிறப்பான அம்சமாகும். குறிப்பாக சித்திரை, வைகாசி மாதங்களில் மடை போடுதல் நடைபெறும். காய் மடை, பூ மடை, உணவு மடை என்ற மூன்று வழிபாட்டு நடைமுறைகளும் சிறப்பாக பேணப்படுகின்றன. இவ்வழிபாட்டு நடைமுறைகள் பருவகாலங்களை ஒட்டியே அமைந்திருந்தன. சித்திரை, வைகாசி மாதங்கள் மா, பலா, வாழை என்ற முக்கனிகளும் நிறைவாக கிடைக்கின்ற பருவங்கள். சிறு தெய்வங்களுக்குரிய படையலில் முக் கனிகளையும், பரவிப் பொங்கலும் ஏனைய பலகாரங்களும் வைக்கப்படும். பைரவருக்கு வடை மாலை சாத்தப்படும். பல்வேறு வகையான மலர்களும் நறுமணப்புகையும், வெற்றிலை, பாக்கும் படையலில் இடம்பெறும். சிறுதெய்வ உணவு மடையில் பொங்கலும், வேள்வியில் பலியிடப்பட்ட உணவுகளும் பரவி வைக்கப்படும்.

கழுவேறி, காத்தவராயர் ஆகிய தெய்வங்களுக்கு போடும் மடையில் கள், சாராயம், இறைச்சி, முட்டை, மீன் ஆகியவற்றுடன் குரக்கன் பிட்டு, ஒடியல் பிட்டு, திணைப்பிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரவள்ளிப்பிட்டு, அரிசிப்பிட்டு, சாமிப்பிட்டு, தவிட்டுப்பிட்டு போன்ற பிட்டுவகைகளையும் சேர்த்து வைப்பார்கள்.

சிறுதெய்வ வழிபாட்டு முறையில் முக்கிய அம்சமாக மிருகபலியிடல் காணப்பட்டு வருகின்றது. அந்தவகையில் வேள்வி நடைபெறும் ஆலயங்களில் வேள்விப்பூசை விடியற்காலையில் தொடங்கி, கோயில் சந்நிதிக்கு நேரே வெளிப்புறத்தே பறைமேளம் அடிக்கப்படும். அப்பறையின் ஓசை அங்கு நிற்கும் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஊடுருவி நின்று ஒலிக்கும். இவ்வொலியின் மத்தியில் தெய்வமேறினான் உருவாட ஆடு, கோழிகளை வெட்டி பலியிடுவான். மனிதருடைய உளவியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக தெய்வத்தோடு நேரடியாக பேசித் தம்முடைய மன உணர்வு களை பகிர்ந்துகொள்ளும் பொருட்டு மனித உடலில் தெய்வத்தை இறக்குகின்ற உத்திமுறை கிராமிய வழிபாட்டு மரபில் சிறப்பாகக் காணப்படுகின்றது. தீய சக்தி களிடமிருந்து அடியவரை காத்துக்கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படும் சடங்கு நடைமுறையான நூல் கட்டுதல், தாயத்துக் கட்டுதல், பேய்க்குப் பார்த்தல் அல்லது ஆவியோட்டுதல், தண்ணீரில் மந்திரித்துக் கொடுத்தல், சங்கு புதைத்தல், தீ மிதித்தல் முதலான சடங்கு நடைமுறைகள் கிராமிய வழிபாட்டில் சிறப்பாக இடம் பெறுகின்றன.[6]

பலியிடுதல் தற்பொழுது அருகிவரும் வழிபாட்டுமுறையாகும். இப்பொழுது மிருகங்களை பலியிடுதலின் போது நேர்த்திக்காக ஆலயங்களில் கொண்டு வந்து விடுகின்றனர். அவற்றை விற்றுப்பெற்ற பணத்தை ஆலயத்திற்கு செலுத்துகின்றனர். எனினும் ஈழத்தில் கவுணாவத்தை வைரவர் ஆலயம், நீர்வேலி மாலை பைரவர் ஆலயம், புத்தளம் காளி கோயில் போன்ற சில கிராமிய ஆலயங்களில் பலியிடுதல் இடம்பெற்று வருவதை இன்றும் காண முடிகின்றது. கருணை, பரிவு, இரக்கம், அருள், அன்பு, அமைதி, சமூக ஒருமைப்பாடு உயிர்களில் நேயம் போன்ற உன்னதமான பண்புகளை உருவாக்கும் சக்தியும், தெய்வீக பொழிவும் வாய்ந்த ஆலயங்களில் உயிர்ப்பலி - வேள்விகள் நடைபெறுவது எந்நிலையிலும் பொருத்தமற்றது. அந்நிலை மாற்றமடைகின்ற சந்தர்ப்பத்தில் சமய வாழ்வு சிறக்கும் என்பது நம்பிக்கையாகும். எனினும் கிராமிய வழிபாட்டின் ஏனைய வழிபாட்டு முறைகள் இன்றும் பலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைவு பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### கிராமிய வழிபாட்டில் கலைகள்

இயற்கை எழில் வளங்களுடன் பின்னிப்பிணைந்த தன்மையுடையனவாக வாழ்வு எனும் உயிரூட்டுடன் கிராமங்களில் வாழும் மக்கள் வளர்த்த அழகுக்கலைகளே கிராமியக் கலைகளாக மிளிர்கின்றன. இவை அம்மக்களின் உணர்ச்சிகளையும், செயல் களையும் வெளியிடும் சாதனமாகவும் இக்கலைகள் விளங்குகின்றன. கோயில் சார்ந்த கலைகளாக கூத்து, நாடகம், காவடி, கரகம், கும்மி, வசந்தன், பொய்க்கால் குதிரையாட்டம் என்பனவும் உடுக்கு, சங்கு, சேமக்கலம் போன்ற கருவிகளும் விளங்குகின்றன. உதாரணமாக முருகக் கடவுளை வழிபடும் நிகழ்சியாக ஈழநாட்டில் காவடி ஆட்டம் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. எனினும் கந்தன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவன் கோயில்கள், சக்தி ஆலயங்கள், பிள்ளையார் கோயில்கள், ஐயனார் கோயில்கள் என்பனவற்றில் காவடி ஆட்டம் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவது குறிப்பிடற்பாலதாகும்.[7] அன்னதானக்கந்தன் என்று அன்புடன் அழைக்கப்படும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் நிகழும் திருவிழா நாட்களில் தூக்குக் காவடி, துலாக்காவடி, முள்ளுமதி தடிக்காவடி, பறவைக்காவடி, வேற்காவடி, செடிற்காவடி, பிள்ளைக்காவடி, அன்னக்காவடி என பல வகையான காவடிகளை எடுத்து கந்தனுக்கு காணிக்கை செலுத்துவது பார்ப்பவரை பரவசமூட்டுவதாக இருக்கும். இவ்வகையில் சந்நிதிக்கந்தன் காவடிக்கந்தனாகவும் விளங்கு மாட்சி குறிப்பிடற்பாலதாகும். இதேபோன்று கதிர்காமம் கந்தன் ஆலயம், நல்லூர்கந்தன் ஆலயம் என்பவற்றில் காவடிகளை எடுத்து கந்தனை வந்தனை செய்வதைக் காண முடிகிறது.

மட்டக்களப்பிலே வணக்கத்திலுள்ள பெண் தெய்வங்களுள் திரௌபதி அம்மனும் ஒன்றாகும். மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள பட்டிருப்பு, பளுகாமம், கல்லடி ஆகிய இடங்களிலே அமைந்திருக்கும் திரௌபதி அம்மன் ஆலயங்களில் மக்கள் தம்மை திரௌபதி என்றும் பஞ்சபாண்டவர்களாகவும் பாவித்து தெய்வீக நிலையில் கதையின் சில பகுதிகளை கோயிற்சடங்கின் போது நிகழ்த்துவர். பஞ்சபாண்டவர் வனவாசம் செல்லுதல், அர்ச்சுனன் தவம் செய்தல் இவர்கள் நிகழ்த்தும் நாடக அம்சம் நிரம்பிய சடங்குகள் ஆகும்.

மலைநாட்டு தமிழர் மத்தியில் சமயச் சடங்கு சார்ந்த காமன் கூத்து இடம்பெறுகின்றது. காமன் கூத்தில் மன்மதனை சிவபெருமான் நெற்றிக் கண்ணால் சுட்டெரிப்பதையும், ரதி சிவனிடம் வரம் வேண்டுவதையும் உள்ளடக்கமாகக் கொண்டது. காமனுக்கும், ரதிக்கு இருவர் வேடமிட்டு அவர்களும் திருமணம் செய்வது முதல் சிவன் மீது இக்காமன் அம்பெய்து சிவன் அவனை எரிப்பது, பின்னர் காமனின் அஸ்தியை கரைப்பதன் ஊடாக மறுநாள் ரதி சிவனைத் துதித்து வரம் வேண்டும் வரை கூத்தாக இடம்பெறுகின்றது.

### கிராமிய வழிபாடும் சமூகமும்

குறித்த ஓர் இடத்தில் குறித்த ஒரு மொழி பேசுகின்ற மக்கள் கூட்டம் சமூகம் எனப்படும். இவ்வாறான சமூகங்கள் பல வகைப்படும். இவை தொழில் ரீதியாகவும், பிரிக்கப்பட்டிருப்பதை காணக்ககூடிதாகவுள்ளது. உதாரணமாக விவசாயிகள், வாணிபர்கள், இரும்பு வேலை செய்வோர், பறையடிப்போர்கள், சிற்ப வேலை செய்பவர்கள், எண்ணெய் ஊற்றுவோர் போன்ற சமூகக்குழுக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான சமூகக்குழுக்களுடையே கிராமிய வழிபாடு எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நோக்குவோம்.

இயற்கை நிகழ்வுகளினால் ஏற்படுகின்ற அச்சங்களை நீக்கவும், தம் தேவைகளை நிறைவேற்றவும் கிராமிய தெய்வ வழிபாடு நம்பிக்கை அடிப்படையிலே சமூகத்திலே இன்றியமையாத இடத்தை பெற்று வருகின்றது. உதாரணமாக மாரியம்மனின் சீற்றத்தினால் அம்மை, கொப்பளிப்பான் போன்ற நோய்கள் ஏற்படுவதாகப் பயந்து அம்மனை குளிர்மைப் படுத்துவதன் மூலம் தமக்கு ஏற்படும் இந் நோய்களை தடுக்கலாம் என்ற நம்பிக்கையில் பால், தயிர், நெய், இளநீர் போன்ற அபிஷேகப்பொருட்கள் மூலம் அம்மனை குளிர்மைப்படுத்தி வழிபாட்டினை மேற் கொள்வதனை அறியமுடிகிறது. மழை பொழியவும், வளம் பெருகவும், நோய் நொடிகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கவும் கிராமத்து மக்கள் அனைவரும் ஒன்றித்து மேற்கொள்ளும் வழிபாடாக இது அமைகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர் ஆட்சிகாலத்திலே சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டும், ஒழுக்கான ஆகம வழிபாடு மறுக்கப்பட்டும் இருந்தது. இவ்வேளையில் மக்கள் மறைவிடங்களான மரத்தடி, மரப்பொந்து, கிணற்றடி போன்ற இடங்களில் கிராமியத் தெய்வங்களை வைத்து வழிபட்டனர். இவ் வழிபாடே இன்றுவரை எம் சமூகத்தவரிடத்தே இந்து சமயம் நின்று நிலைபெற வழி வகுத்தமையை அறியமுடிகிறது.

கிராமிய வழிபாடானது சமூகத்தவரிடத்தே முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு காரணம் எளிமையான வழிபாடாகும். அதாவது சாஸ்திரிய வழிபாட்டில் அங்கு பணிபுரிகின்ற அந்தணர் களைப் போல கட்டுப்பாடுகளும், விதிகளும் இங்கு அழுத்தமாகக் கடைப் பிடிப்பதில்லை. இதனால் கடவுளுடன் பொதுமக்கள் நேரடியாக அன்பு பிணைப்பை உண்டாக்கின்றனர். இவ்வழிபாடு யாராலும் எவ்வேளையிலும் சென்று வழிபடலாம். எப்படியும் வழிபடலாம். என்ன பொருட்களை கொண்டு சென்றும் வழிப்பாட்டினை நிகழ்த்தலாம். என்ற வகையில் சமூகத்தவரிடம் நம்பிக்கையுடைய வழிபாடாக காணப்படுகின்றது. அந்தவகையில் சிறுதெய்வழிபாட்டின் மூலம் குலதெய்வம் என்ற எண்ணங்களும் மேன்மைப் படுத்தப்பட்டு இன்றுவரை அனைத்து மனங் களிலும் குலதெய்வம் குடி கொண்டிருப்பதைக் காணலாம். கிராமியக் கோயில்கள் எந்த நேரத்திலும் திறந்தபடியே இருக்கும். அதனால் கிராமவாசி ஒருவன் தன் குறையைச் சொல்லி முட்டுத்தீர அழுகின்றான். கடவுளிடம் பாரங்கள் எல்லாவற்றையும் ஒப்படைத்த உணர்வுடன் வீடு திருப்புகின்றான்.

கிராமிய கோயில்கள் சமூகத்தவரிடையே எழுகின்ற பலவிதமான பிணக்குகளை தீர்த்து வைக்கும் ஒரு சமூக நிறுவனமாக விளங்கு கின்றது. ஊரிலுள்ள கிராமிய ஆலயத்தின் சந்நிதியில் கற்பூரத்தின் மேலே கையை வைத்து சத்தியம் செய்தல், பூ கட்டி பார்த்தல் போன்ற வற்றைச் செய்வதன் மூலம் பல பிணக்குகள் தீர்த்துவைக்கப்பட்டன. இதனாலேயே கிராமப்புறத்தெய்வ சந்நிதிகள் மகிமை பெற்றன.

சமூகத்தவரிடத்தே கிராமிய வழிபாடானது நல்லொழுக்கத்தை வளர்க்கும் மையங்களாக விளங்கின. உதாரணமாக இழைகட்டுதல், செய்வினை முதலிய நிகழ்வுகளுக்கு பயந்து தீய செயல்களுக்கு ஈடுபடாமல் தடுக்கின்றனர்.

கிராமிய வழிபாடு சமூகத்தவரிடத்தே கூட்டு வாழ்க்கையினை ஏற்படுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. மக்கள் விழாவின் போது மடை போடுதல், பொங்கல் குளிர்த்தி, அன்னதானம், கஞ்சி தண்ணீர் வார்த்தல் போன்ற நிகழ்வுகளில் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் சமூககூட்டு வாழ்க்கையின் ஊடாக சமூகப்பணியை நிறைவு செய்வதனைக் காணமுடிகின்றது.

கிராமிய கோயில்கள் சமூகத்தவரிடத்தில் நோய்களை தீர்க்கும் இடமாக திகழ்கின்றது. மக்களிடையே ஏற்படுகின்ற நோய்களைப் நீக்க கிராமிய கோயில்களிலே பூசை புரிகின்ற பூசாரிமார்கள் பெரும் துணைபுரிகின்றனர். நோயுற்றவர்களுக்கு தண்ணீர் ஓதிக்கொடுத்தல், நூல் கட்டுதல், கழிப்பு கழித்தல், தேசிக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுதல், திருநீறு போடுதல், நிர்த்துக்காய் வெட்டுதல் போன்றவற்றின் வாயிலாக அவர்களின் உளவியல் நோய் நீக்கப்படும் என்ற நம்பிக்கை கிராமிய வழிபாட்டில் காணப்படுகிறது.

கிராமிய வழிபாட்டின் மூலம் கிராமிய கலைகளான வசந்தன் கூத்து, கோலாட்டம், காத்தவராயன், கும்மி, கரகம், காவடி போன்ற கலைகளும், பறை, உடுக்கு, சேமக்கலம் போன்ற வாத்தியக்கருவிகளின் செல்வாக்கும் மேன்மை பெற்று விளங்கியதோடு, மக்களின் தேவைகளும் நிறைவேற்றப்பட்டது.

## நிறைவுரை

ஈழம் வாழ் மக்கள் தமது வாழ்வோடு இணைந்தும், உணர்வுக்கு எட்டிய வகையிலும் கிராமிய வழிபாட்டினை மேற்கொண்டு வந்துள்ளனர். இத்தகைய தனித்துவம் மிக்க கிராமிய வழிபாட்டு மரபுகள் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களை உள்வாங்கிய போதிலும் கூட இன்றுவரை சிறுதெய்வங்களே மக்களது மனங்களில் நின்று நிலைத்திருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு ஈழத்தில் கிராமிய தெய்வ வாழிபாட்டின் நிலைத்தலுக்கான காரணங்களாக, மனதில் அச்ச உணர்வு, ஒளிமயமான வாழ்வை ஏற்படுத்தல், இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்தல், இயற்கை வசதிகளை பெருக்கிக்கொடுத்தல், அம்மை நோய், கண் நோய் மற்றும் மாறாத நோய் நொடிகளிலிருந்து விடுபடுதல், சமூகமாற்ற விளைவு, குலமரபு பேணப்படுதல், நம்பிக்கை, சமரசப்பாங்கு மற்றும் ஒன்று கூடுதல் போன்றன அமைகின்றன.

"எந்தவொரு ஈழம் வாழ் சைவ சமயியும் ஆகமவாழிபாட்டிற்குள் நுழைந்தாலும், தவிர்க்கமுடியாதபடி கிராமிய வழிபாட்டிற்குள்ளும் நுழைய வேண்டியவன் ஆகின்றான்." இவ்வுண்மையை நேரடியாக கண்டுகொள்ள முடிகிறது. சிறுதெய்வ கோயில்கள் பலவற்றில் பெருந்தெய்வ மரபுகள் கலகக்ப்பட்டு இன்று அவை இடைப்பட்டதெய்வங்களாக ஆகியுள்ளது. தற்கால சமுதாயத்தில் கிராமப்புறங்களில் பெருந்தெய்வ வழிபாடு இருப்பினும் சிறுதெய்வங்களே மக்களது வாழ்விலும், மூச்சிலும் கலந்துள்ளன எனின் மிகையில்லை.

### அடிக்குறிப்புக்கள்

1. நந்தை பெரியார், பகுத்தறிவு பகலவன், சென்னை. 1979, ப.06
2. கணபதிப்பிள்ளை. க, ஈழத்து வாழ்வும் வளமும், குமரன் புத்தக வெளியீடு - 1, 1962, ப.25
3. சண்முகலிங்கன். என். யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு, பண்பாடு மலர் 3, இதழ் 02, 1993 புரட்டாதி. ப.01
4. ஊர்சுற்று காவியம், பாடல் 71.
5. சிவானந்த சர்மா. ப, அருள் வழங்கும் மாரியம்மன், சர்வானற்த பீடம், 2004, ப.60.
6. விசாகரூபன். கி. நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம், 2004. ப.90.
7. வேதநாதன். மா. கந்தன் வழிபாட்டில் காவடி ஆட்டம், நல்லைகுமரன் மலர், 1995. ப. 137.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேதாகமங்களும் ஆலய வழிபாடுகளும்

பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்

**தொ**ன்மைமிகு இந்துப்பண்பாட்டு மரபில் சமய இலக்கியங்கள் ஈடிணையற்றவையாகத் திகழ்கின்றன. அவ்விலக்கிய வரிசையில் சிறந்தவையாகப் போற்றப்படும் ஆகமங்கள் திருக்கோயில் வழிபாட்டு முறைகளுக்கும் கிரியைகளுக்கும் பிரமாண நூல்களாக விளங்கி வருகின்றன. பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தமது சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூலில் ஆகமங்களின் சிறப்புப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

தென்னாட்டிலும் இலங்கையிலும் அமைந்து விளங்கு திருக்கோவில்களிற் பெரும் பாலானவற்றில் நிகழுங் கிரியை களெல்லாம். ஆகமங் கூறும் முறையினுக் கமைய நிகழ்த்தப்படுவன. இவை மக்களின் தேவையை ஒட்டியோ மக்களுக்கு விளக்கம் ஏற்படுவதை மட்டுங் குறிக்கோளாகக் கொண்டோ காலத்துக்குக் காலம் சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடுத்தி அமைக்கப் படுவனவல்ல. எனவே ஆகமங்கூறும் முறைப்படி கிரியைகளை அவதானித்து அவற்றை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டுவதேயன்றிக் காலப் போக்கினை ஒட்டி மக்கள் விளங்கும் வகையில் அவற்றை மாற்றியமைக்க இந்தியப் பண்பாடு இடந்தராது. இவ்வாறிருப்பதால் வழி படுவர்கள் தமக்கு விளங்காத மரபினை விளங்கிக் கொள்ள வேண்டிய நிலையைத் தாமே தோற்றுவித்துக் கொள்ள வேண்டும் என நிர்ப்பந்தம் உடையவர்களாக ஆகின்றனர்.

இக்கூற்று ஆலயக்கிரியைகள் ஆகம மரபு சார்ந்தவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. சமயப்பற்றுடனும் பக்தியுடனும் மக்கள் ஆலயவழிபாட்டில் ஈடுபட கிரியைகள் வழிவகுக்கின்றன. கிரியைகளின் இயல்பு பக்தி நெறிப்பட்டு வழிபாட்டு நெறியில் ஈடுபடச் செய்வதனால் அவை பற்றிய ஆற்றலை வளர்க்கவில்லை. எனினும் எதனையும் அறிவுபூர்வமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற தேவை இக்காலத்தில் எழுந்துள்ளமை குறிப்பிடப்படுவது. இவற்றைச் சூழ்நிலையில் மக்கள் தமது ஆத்மீக அறிவின் மேம்பாட்டிற்குக் கிரியைகள் தொடர்பான விளக்கங்கள் துணை புரிகின்றன என்பதை உணரத் தலைப் பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எப்பொருள் எத்தன்மைத்தாயினும்*
*அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு*

என்ற வள்ளுவனது வாக்கிற்கமைவாகக் கிரியைகள் தொடர்பான மெய் பொருளை அறிய விழைவதும் மக்களது பண்பாட்டு வளர்ச்சியில் இன்றியமையாதாக உள்ளமை குறிப்பிடற்பாலது. கிரியைகளுக்கு விளக்கங்கூறும் முறை வைதீக காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. வேதங்கள் கூறும் கிரியைகள் பற்றிய விளக்க நூல்களாகப் பிராமணங்கள் விளங்குவதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இம்மரபு தொடர்ந்தும் பிற்காலக் கிரியை நூல்களிற் காணப்படுகின்றது.

திருக்கோயில் வழிபாட்டு மரபிற்கு மூலமாக விளங்கும் ஆகமங்கள் இலக்கிய ஆய்வுத் துறையில் தாம் பெற்றிருக்க வேண்டிய வரவேற்பைப் பெறாததையிட்டு இந்திய சமயங்கள் பற்றியும் சமஸ்கிருத இலக்கியங்கள் பற்றியும் ஆய்வு செய்யும் அறிஞர்கள் தமது வியப்பைத் தெரிவிக்கின்றனர். இன்றையக் காலம் வரை வேதங்களும் உபநிடதங்களும் இந்தியாவிலும் மேலை நாடுகளிலும் அறிமுகமாகியிருக்கும் அளவிற்கு ஆகமங்கள் பற்றிய ஆய்வு அறிமுகமாக வில்லை என்ற கருத்து ஓரளவு ஏற்புடைத்தாகும். ஆகம ஆராய்ச்சியாளர்களில் ஒருவராகிய திரு. கோண்டா ஆகமங்கள் தொடர்பாக இந்நிலை குறித்துக்கூறும் கருத்து கவனித்தற்குரியது.

இவற்றில் (ஆகமங்களில்) பெரும் பான்மையான பகுதிகள் தாம் பெற வேண்டிய கவனத்தைப் பெறவில்லை. இந்தியச் சமயங்களின் மூல ஆதாரங்களாகத் திகழும் இவை பற்றி ஆராய்ச்சியாளர்களும் மிகுந்த ஆர்வம் காட்டவில்லை. பெரும் பாலானவற்றிற்குத் தொகுப்பாசிரியர்களே தெரியவில்லை. மேலும் இந்நூல்களுக்கு மிகக் குறைந்த அளவிலெயே மொழி பெயர்ப்புகள் உள்ளன. உண்மையில் இந்நூல்களிலேயே இந்து சமயத்தின் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த ஆதாரங்கள் கிடைக்கின்றன.

ஆகமங்கள் மிகுதியாக அறிமுகமாகாமல் இருப்பதற்குச் சரியான பதிப்புக்களோ முறையான மொழி பெயர்ப்புக்களோ இல்லாமல் இருப்பதே இத்தகைய கூடற்றுக்குரிய காரணமாக அமையலாம். எவ்வாறாயினும் அண்மைக் காலங்களில் ஆகமந்தொடர்பாகப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஆய்வுகளும் பல்வேறு நிலை சார்ந்த கிரியைகள் பற்றிய பதிப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடற்பாலது. ஆகமங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளோ கோட்பாடுகளோ நடைமுறைச் செயற்பாட்டுக் குறிப்புக்களோ மக்களாலும் சிவாச்சாரியர்களினாலும் சமய அறிஞர் களினாலும் நன்கு வரவேற்கப்படுகின்றன. இந்துப் பண்பாட்டில் இந்நூல்கள் தரும் கருத்துக்களும் சிந்தனைகளும் மக்களால் விரும்பப் படாதவைகளாகவோ ஒதுக்கப்படக் கூடியன வாகவோ இருப்பது இல்லை. தொன்மைக்காலம் முதல் இற்றையக் காலம் வரை ஆகமங்கள் இந்துப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகிய சமய வாழ்வின் மூலாதாரமாக விளங்கும் திருக் கோயில் வழிபாட்டு மரபில் ஆல்போல் செழித்து அறுகுபோல் வேரோடி உய்வளித்துக் கொண்டிருக்கின்றன. சைவ வைணவ சாக்த மற்றும் சமயநெறிகளை ஒழுங்குபடுத்தி வழிப்படுத்தும் செல்வாக்குடன் திகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம இலக்கிய வரிசையில் சைவ சமயத்திற்குரிய சிவாகமங்களும் வைணவ சமயஞ்சார்ந்த பாஞ்சராத்திர வைகானஸ ஆகமங்களும் சாக்த நெறிக்குரிய சாக் தந்திரங்களும் கௌமார நெறிக்குரிய குமார தந்திரமும் குறிப்பிடற்பாலன. ஆகம இலக்கியப் பரப்பில் இத்தகைய ஆகமங்கள் பற்றித் தனித்தனியாகவும் விரிவாகவும் ஆராய இடமுண்டு. இக்கட்டுரையில் சிவாகமங்கள் கூறும் கிரியை பற்றிய விடயங்களே வேதங்கூறும் சமய மரபோடு தொடர்புபடுத்தி ஆய்வுக்குட் படுத்தப்படுகின்றன.

இந்துப் பண்பாட்டில் காலந்தோறும் பல்வேறு நிலைகளில் சைவசமயம் வளம்பெறுவதற்கு சிவாகமங்கள் பெரிதும் உதவி வந்துள்ளன. ஆகமங்கள் இறைவன் நூல் என்ற நிலையில் சைவத்தின் முதல் நூல்களென போற்றப் படுகின்றன. இந்துப்பண்பாட்டில் முக்கியத்துவம் பெறும் இயற்கையினூடே இறைமையைக் காணும் நெறியில் வேதங்களும் ஆகமங்களும் தம்முள் ஒற்றுமையுறுகின்றன. மண்ணகத்தும் விண்ணகத்தும் அனைத்தையும் பிரபஞ்சத்தையும் இயக்குகின்ற இறைமை கொண்டிருந்தனர். இயற்கையெழில் இரகசியத்தை உணர்ந்து வியந்த பாரதியாரின் அனுபவ வார்த்தைகள் இங்கு சிந்தனைக் குரியன.

*எத்தனை கோடி இன்பம் வைத்தாய்*
*எங்கள் இறைவா இறைவா இறைவா*
*சித்தினை அசித்துடன் இணைத்தாய் – அங்குச*
*சேரும் ஐம்பூதத்து வியனுல கமைத்தாய்*

என இயற்கையெழில் கூறுகளினூடே வியத்தகு தெய்வ நலச்சக்தியை உணர்ந்து நயந்து வியந்து கொண்டது போன்று வேதரிஷிகளும் ஆகம ஞானிகளும் இத்தகைய இயற்கையினூடே இறைமையைக் கண்டுணர்ந்துள்ளனர்.

இறைமையை உணரக்கூடிய வகையில் கிரியைகள் உள்ளிட்ட பல்வேறு நல்ல கருத்துக்களை வேதங்களும் ஆகமங்களும் கொண்டு விளங்கும் சிறப்பை சிவஞானசித்தியார் நன்கு விளக்குகின்றது.

*ஓது சமயங்கள் பொருளுணரும் நூல்கள்*
*ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்*
*யாதுசமயம் பொருள் நூல்யாது இங்கு என்னில்*
*இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்க நன்றி*
*நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே*
*காண நின்றதியா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்*
*ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே*
*அடங்கிவிடும் அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்*

என விதந்து போற்றுவது பயன்தரவல்ல நிலைத்த பேருண்மைகளை யுணர்த்தும் மேலான சமய நூல்களாக வேதங்களும் ஆகமங்களும் மிளிர்கின்றன. திருக்கோயில் வழிபாட்டின் அம்சங்களாகிய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை சிறப்புற்று மக்களது ஆன்மீக வாழ்வைச் செம்மையுறச் செய்வதில் சிவாகமங்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்டு கோயில்கள் பல ஒரு பிரதேசத்தில் பரந்து காணப்படினும் அக்கோயில்களின் கட்டட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு, வழிபடுவதற்கான இறைவனது திருவுருவ அமைப்பு மற்றும் அங்கு நிகழும் நித்திய நைமித்தியக் கிரியைகள் ஆகிய விடயங்களிற் காணப்படும் சீர்மை, ஒழுங்கு ஆகியவற்றுக்கு ஆகமங்களே அடிப்படை எனில் மிகையில்லை.

சிவாகமங்கள் நான்கு பாதங்களைக் கொண்டுள்ளன. அவை முறையே சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் என்பனவாகச் சிறப்புப் பெறுகின்றன. இருபத்தெட்டு ஆகம வரிசையில் காரணாகமம், காமிகாகமம் ஆகிய இரண்டிலும் கிரியாபாதம் சிறப்புப் பெறுகின்றது. சரியாபாதம் சமயா சாரங்களைக் கூறும். கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம், சந்தியா விதானம், பூஜை, ஜபம், ஓமம் என்பவற்றை உபதேசிக்கும் யோகபாதம் பிராணாயாயம் முதலிய அம்சங்களோடு கூடிய சிவயோகத்தையும் ஞானபாதம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் பற்றியும் உபதேசிக்கும்.

சைவத்தில் சிறப்பாக இறைவன் சாந்நித்தியம் பெற்று ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள்பாலிக்கும் இடமாகிய ஆலயம், ஆலயவழிபாடு, கிரியை நடைமுறை ஆகியவை பற்றி விரிவாக அறிவதற்கும் செயற்படுவதற்கும் வழிகாட்டுபவை சிவாகமங்கள் இதுபற்றிக் கூறும் கிரியாபாதம் கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம் என நான்கு பிரிவுகளில் விளக்குகின்றது. கர்ஷணம் என்றால் உழுதல் சமப்படுத்தி அளந்து சதுரமாக்கி திருக்கோயில் அமைத்து அலகு நிறுவப்படும் திருவுருவத்திற்கு நிகழும் பிரதிஷ்டை வரையுள்ள விடயங்கள் அடங்கும். பிரதிஷ்டை என்பது தாபித்தல் அல்லது நிலைநிறுத்துதல் எனப்பொருள்படும். இது இறைவனது திருவுருவத்தை உரியவாறு ஆலயத்தில் சாந்நித்தியம் பெறச் செய்வதற்கு வேண்டிய கிரியைகள் பற்றிக் கூறும். உற்சவம் என்பது திருக்கோயில்களில் வருடந்தோறும் இடம்பெறும் மகோற்சவம் தொடர்பான கிரியை சார்ந்த விதிமுறைகளைக் கூறும். பிராயச்சித்தம் என்றால் எதிர்பாராத வகையில் ஏற்படும் தவறுகளால் வரக்கூடிய கெடுதிகளை விலக்கி மீண்டும் தெய்வீகமடையச் செய்வதற்குரிய வழிமுறைகளைக் கூறும். இந்நான்கு அம்சங்களும் ஆகமஞ்சார் வழிபாட்டு முறை களைக் கூறுவன. ஆகமங்கள் இவ்வாறு விதித்துக் கூறும் விதிகளனைத்தையும் பிரமாணமாகக் கொண்டு கிரியைகள் செய்யும் முறையினை ஒழுங்குபடுத்தி முறையாகக் கூறும் நூல்கள் பல இவ்வாகமங்களை அடுத்துத் தோன்றி தனி நூல்களாகச் சிறப்புப் பெறுகின்றன. இவை பத்ததிகள் என்னும் பெயர் கொண்டு விளங்குவன. பதினெண் பத்ததி சிவாச் சாரியர்களது பெயர் கொண்டு அத்தகையோரால் வகுக்கப்பட்ட தனி நூல்கள் இவை.

வேத ஆகம மரபு சார்ந்த வழிபாட்டு முறைகள் தென்னாட்டிற்கே சிறப்பாக உரியனவாயினும் தென்னாட்டிற்கு அருகில் உள்ள இலங்கையில் உள்ள ஆலயங்களில் நிகழும் கிரியைகளும் வேதாகம மரபு சார்ந்தவையாகும். இங்கு எழுந்துள்ள பெரும்பாலான திருக்கோயில்கள் ஆகம விதிகளுக்கமைவாகவும் அங்கு நிகழும் கிரியைகளும் வேதாகம மரபுடன் தொடர்பு கொண்டவையாகவும் உள்ளன. இலங்கையில் புதிய ஆலயங்களை நிர்மாணிக்கும் முயற்சிகள் சிலதேயாயினும் முன்னோர்களால் தாபிக்கப்பட்ட ஆலயங்களைக் காலந்தோறும் திருப்பணிகள் மூலம் புனருத்தாரணஞ் செய்து கும்பாபி ஷேகங்கள் நிகழ்த்தப்படுவது சிறப்பம்சமான ஆலய வழிபாடாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் ஆகம மரபின்படி நிர்மாணிக்கப்பட்டு அங்கு வழிபாட்டிற்கென இறைவனது திருவுருவத்தை சாந்நித்தியம் கொள்ளச் செய்யும் பிரதிஷ்டைக்கு முன்னோடி அமையும் வழிபாட்டு முறை வேத மரபு சார்ந்தது. யாகசாலை, யாக குண்டம், யாகவேதிகை, அக்கினி வழிபாட்டுடன் கூடிய ஹோமம், அவிர் வழங்குதல், மந்திர உச்சாடனம் வேத பாராயணம் முதலியவை குறிப்பிடற்பாலன. கும்பாபிஷேகத்திற்குரிய ஐந்து குண்டங்கள் (பஞ்ச குண்டம்), ஒன்பது குண்டங்கள் (நவ குண்டம்), பதினேழு குண்டம் (சப்ததச குண்டம்), இருபத்தைந்து குண்டங்கள் (பஞ்சவிம்சகுண்டம்), முப்பத்து மூன்று குண்டங்கள் (திரயஸ்திரிம்ச குண்டம்) என்ற எண்ணிக்கையில் வசதிக்கேற்ப குண்டங்களை யாகசாலையில் அமைத்து கும்பாபிஷேகக் கிரியை இலங்கையில் உள்ள ஆலயங்களில் நம்பிக்கையுடனும் பக்தி பூர்வமாகவும் நடந்தேறி வருவது சிறப்பம்சமாகும். குண்டங்களில் அக்கியைப் பல்வேறு நிலைகளிற் பூசித்து அந்தந்த குண்டங்களுக்குரிய சமித்து வகைகள் விசேட திரவியங்கள் ஆகியவற்றை சுதேசிகளாக வழங்கி நிறைவாக பூர்ணாகுதி வழங்கும் வழிபாட்டு மரபு வைதிக மரபொடு தொடர்புபட்டு அவை ஆகம மரபில் சங்கமமாகி யுள்ளது எமக்குக் காட்டி நிற்கின்றன. இவ்வாறு யாகசாலையிலும் ஆலயத்திலும் நிகழும் பல்வேறு கிரியைகள் வைதிக சமயமரபினதும் ஆகமமரபினதும் இணைப்பை உணர்த்தி நிற்கின்றன.

ஆலய வழிபாட்டில் அடியவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் சிறந்த வழிபாடு பூசையாகும். யாகம் முதலிய வழிபடும் முறைகளிற் சிறந்த அம்சங்களை உறுப்புக்களாகக் கொண்டு பூசை என்ற ஆலய வழிபாட்டு முறை வளர்ச்சி பெறலாயிற்று. திருவுருவ வழிபாட்டில் இவ்வழிபாட்டுமுறை உன்னத இடத்தைப் பெறலாயிற்று. பூசைக்கு நடுநாயகமாக விளங்குவது ஆகம மரபு சார்ந்த திருவுருவ மாகும். பூசைக்கு பூ, சந்தனம், தூபம், தீபம் முதலியனவும் கண்ணாடி, குடை, விசிறி கொடி சாமரை முதலிய உபசாரப் பொருட்களும் இன்றியமையாதவை. பூசை முறையில் வேள்வியிற் போன்று கிரியைகள் விரிவு பெறுகின்றன. வைதிக மந்திரங்கள் தீபாராதனை பிரயோகம் பெறுவன. அபிஷேகம் நிகழும் போதும் தீபாராதனை நிகழும் வேளையும் உபசாரங்கள் கொடுக்கப்படும் சமயத்திலும் வேதமந்திரங்கள் உரியவாறு ஓதப்படுகின்றன. இது பூசையிலும் வைதிக அடிப்படை சார்ந்த அம்சங்கள் இடம் பெறுவனத உணர்த்துகின்றது. இதே மரபில் ஆகமங்களும் கிரியை முறைகளை விரிவாக விளக்கியுள்ளன.

சிவாகமம் வகுத்துக் கூறும் வழிபாட்டு மரபில் ஆத்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை ஆகிய இரண்டும் சிறப்பிக்கப்படுகின்றன. ஆலயத்தில் வழிபடும் அடியவர்களை இறைவழிபாட்டில் ஆற்றுப்படுத்தும் சிவாச்சாரியரால் நிகழ்த்தப் படுவதே பரார்த்த பூஜையாகும். அடியவர்கள் ஆலயத்தில் இறைவழிபாட்டில் தம்மை உளமார பக்தியுடன் இணைத்து கொள்வதற்கு இப்பூஜை உதவுகின்றது. பூஜை ஒவ்வொரு நாளும் நித்திய கிரியைகள் என்ற நிலையில் அக் கோயில் களுக்கமைந்த வசதிகளுக்கும் மரபுகளுக்கும் ஏற்ப இடம் பெறும். ஆறுகால பூசைகள் ஆலயத்தில் நிகழ்வது பற்றிச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. உச்சிக்காலப் பூசை அதிவிடியற் காலையில் நிகழும். காலைசந்தி சூரியோதயத்தின் பின் நிகழும் பூசையாகும். நடுப்பகலில் இடம்பெறுவது மூன்றாவதாகிய உச்சிக்காலப் பூசையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயரட்சைப் பூசை என்பது மாலைவேளையில் நிகழும். இருள்படர்ந்து இரவாகிய வேளை இடம் பெறுவது இரண்டாங்காலப் பூசையாகும். தினந்தோறும் இறுதியில் நிகழும் ஆறாவது பூசை அர்த்தயாமப் பூசையாகும். இவ்வாறு ஆறுகாலங்கள் பூசை நிகழ்த்தும் வசதி குறைந்த ஆலயங்களில் காலை, உச்சி, மாலை ஆகிய மூன்று நேரப் பூசைகள் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் இடம் பெறுகின்றன. காலையிலும் மாலையிலும் ஆக இருநேரப் பூசைகள் நிகழும் கோயில்களும் உள்ளன.

ஆலய வழிபாட்டிற்கென நிகழும் கிரியைகள் எவ்வகையாயினும் சிலபொது அம்சங்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன. இவை பொதுவாக ஒன்பதாகும். இவை பூதசுத்தி, அந்தர்யஜனம், ஆவராணந்தமான பூஜை அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை தோத்திரபாராயணம், கீத வாத்தியத்துடன் நிகழும் நிருத்தியம் என்பனவாகும்.

ஆகமம் கூறிநிற்கும் வழிபாட்டு மரபிற்கு யசுர்வேதமும் ஒருவகையில் துணைபுரிகின்றது. இவ்வேதத்தில் குறிப்பிடத்தக்க. இம்மரபு ஆலய வழிபாட்டில் உயர் தனியிடத்தைப் பெறுவதோடு தென்னாட்டிலும் இலங்கையிலும் திருக்கோயில் வழிபாட்டில் பெரிதும் கையாளப்படுகின்றது. இவ்வழிபாடு வழிபடுவரின் உள்ளத்தில் இறைபக்தியை ஏற்படுத்தவல்லது. வழி பாட்டிற்குரிய தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களை உச்சரித்து வழிபடும் இம்முறைக்கு யசுர்வேதமே வழியமைத்தது. சதருத்திரியத்தில் உருத்திரன் என்ற தெய்வத்திற்குரிய நூறு பெயர்களைத் தொகுத்துக் கூறும் மரபினை அடியொற்றி அவ்வவ் தெய்வங்களுக்குரிய நாமங்கள் ஆயிரமாகவும் புராணங்களில் விரிவாயின. இம்மரபு ஆலயவழிபாட்டில் அர்ச்சனை எனச் சிறப்படைந்தது. அஷ்டோத்திரம், சஹஸ்ரநாமம், லட்சார்ச்சனை, கோடியர்ச்சனை என இவை விரிவு பெற்றன. இம்மரபிலும் வேதங்கூறும் கிரியை மரபும் ஆகமக் கிரியை மரபும் சங்கமமானதைக் காண்கின்றோம். இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் வருடந்தோறும் இலட்சார்ச்சனை ஹோமங்களுடன் கூடிய நைமித்திய வழிபாடாக இடம் பெறுவது குறிப்பிடற்பலாது. யசுர் வேதத்தில் இருப்பது போன்று வணக்கத்தைக் குறிக்கும் நம: என்பதை இறுதியாகக் கொண்டு சிவாய நம: என்பது போன்று இறைவன் நாமங்கள் அனைத்தும் அர்ச்சிக்கும் வேளை கூறப்படுவன. ஆதிசங்கரர் சிவானந்தலகரியில் அர்ச்சனையின் சிறப்பினைக் கூறியுள்ளார். அருச்சனை வழிபாட்டில் ஈடுபடுபவனது மனம் இறைவனது திருவடியாகிய பாதத்தாமரையில் படிகின்றது. வாய் அவன் புகழ் பாடுவதில் ஈடுபடுகின்றது. கரங்கள் இரண்டும் இறைவனைத் தொழுவதிலும் அர்ச்சித்தலிலும் ஈடுபடுகின்றன. இறைவன் நாமத்தைக் கேட்கும் காதுகள் பெரும் பயனடைகின்றன. அவனைத் தியானிப்பதில் புத்தி செல்கின்றது. இருகண்களும் இறைவன் திருக்கோலத்தில் லயிப்பன. இத்தகை அனுபவத்தையே அப்பர் சுவாமிகள் தமது திருவரங்கமாலையில் தலையே நீ வணங்காய், வாயே வாழ்த்துக் கண்டாய்: செவிகள் காண்மின்களோ, கண்கள் காண்மின்களோ: நெஞ்சே நீ நினையாய்! எனப் பாடிப்பரவியுள்ளார்.

இறைவழிபாட்டில் தோத்திரங்களும் சிறப்புப் பெறுகின்றன. இறைவனைப் பாடிப்பரவி வழிபடும் தோத்திரமரபுக்கு வேதங்களே வழி வகுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவழிபாட்டில் நான்கு வேதங்கள், வேதாங்கங்கள், புராண இதிகாசங்கள் ஆகியவற்றின் சிலவற்றை ஓதியபின் நாயன்மார் முதலியோர் இறைவன் திருவருள் பெற்றுப் பாடிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் ஆகியவற்றைக் கொண்ட பஞ்சபுராணம் ஓதும் மரபும் குறிப்பிடற்பாலது.

வருடந்தோறும் இலங்கையில் உள்ள ஆலயங்களில் நிகழும் மகோற்சவங்களும் குறிப்பிடற்பாலது. யாழ்ப்பாணத்தில் அச்சு வேலியைச் சேர்ந்த சிவாகமஞானபாநு சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய மகோற்சவ விளக்கம் என்ற நூல் மிகவிரிவான ஆகமம் சார் விடயங்களைத் தொகுத்துத் தருகின்றது. உற்சவங்களில் யாழ்ப்பாணத்தில் கொடியேற்றம், இரதோற்சவம், தீர்த்தோற்சவம் விமர்சையாக இடம் பெறுவன. யாழ்ப்பாணத்தில் பத்து நாட்கள், இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் நிகழும் முறை நடைமுறையிலுள்ளது. இந்நைமித்திய வழிபாட்டின் போது மக்கள் பெரும் எண்ணிகையில் விரதமனுட்டித்து பக்திபூர்வமாக வழிபடும் வாய்ப்பினைப் பெறுவர். இதனால் உற்சவங்களைப் பற்றி மக்கள் நன்கு அறியும் வாய்ப்பு உள்ளது. உற்சவ காலங்களில் இறைவனை பிம்பத்திலும் தம்பத்திலும் யாகசாலையிலும் கும்பத்திலும் வழிபடும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கின்றது. யாழ்ப்பாணத்தில் உற்சவத்தில் மக்கள் காட்டும் பக்திபூர்வமான வழிபாட்டு மரபுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமைவது நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் வருடாந்த மகோற்சவமாகும். இதுபோன்று செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில், மாவை கந்தசுவாமி கோயில், நயினை நாகபூஷணியம்மன் கோவில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், முன்னேசுவரம் முன்னைநாத சுவாமி ஆலயம், வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில், வல்லிபுரம் ஆழ்வார் கோயில் கிழககு மாகாணத்தில் உள்ள பல வரலாற்றுப் புகழ் மிக்க ஆலயங்கள் ஆகியவற்றில் நிகழும் மகோற்சவங்களும் குறிப்பிடற்பலன.

வாரந்தோறும் நடைபெறும் நைமித்தியக் கிரியைகளில் குறிப்பாக சுக்கிரவாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை தோறும் பூசை நிகழும் வேளை சுவாமி தரிசனம் செய்ய அடியவர்கள் பெருமளவில் கூட்டமாகக் கோவிலுக்குச் செல்லும் வழக்கம் இலங்கையில் உள்ள ஆலயங்களில் காணப்படுகின்றது மற்றும் வியாழக்கிழமைகளில் குருமூர்த்தியுமாகிய தக்ஷிணா மூர்த்தியை வழிபட மக்கள் சிவாலயங்களுக்குப் பெருமளவில் செல்வதுண்டு. இருவாரங்களுக்கொரு முறை வரும் பிரதோஷ காலத்தில் விரத மனுஷ்டித்து சுவாமி தரிசனத்திற்காக ஆலயங்களுக்குச் செல்வர். மற்றும் கார்த்திகை, சதுர்த்தி, சஷ்டி, மாதப்பிறப்பு நாட்களிலும் மக்கள் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவர். ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை நிகழும் நடேசாரபிஷேகங்கள், ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, ஆவணி மூலம், நவராத்திரி, விஜயதசமி, கந்த ஷஷ்டி, திருக் கார்த்திகை, கார்த்திகை தீபம், கார்த்திகை சோமவாரம், மார்க்கழித் திருவாதிரை, தை சங்கிராந்தி, மாசிமாதத்தில் வரும் மகம், மகா சிவராத்திரி முதலிய நைமித்திய கிரியைகளின் போது ஆலய வழிபாட்டில் மக்கள் பெரிதும் ஈடுபடும் வழக்கம் இலங்கையில் உள்ளது. பிள்ளையார் கதை, கௌரி நோன்பு ஆகிய நைமித்தியங் களிலும் மக்கள் பக்திபூர்வமாக ஈடுபடுவர். சிவராத்திரி வழிபாட்டின் சிறப்பினை ஆகமாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு வற்புறுத்துகின்றன. அபிஷேகங்கள், பல்வேறு மலர் கொண்டு நிகழ்த்தப்படும் அர்ச்சனை மற்றும் நைவேத்தியம் போன்ற வழிபாட்டு அம்சங்கள் சிறப்புப் பெறுவன. பரிவார தெய்வ வழிபாட்டில், அம்பிகை, விநாயகர், சண்டேசுவரர், சுப்பிரமணியம், சிவனடியார்கள், சூரிய சந்திரர், பைரவர், நவக்கிரகங்கள் ஆலய வழிபாடுகளும் சிறப்புப் பெறுவன.

இவ்வாறு ஆலயங்கள் ஊர்தோறும் எமது நாட்டில் எமது முன்னோர்களால் அமைக்கப் பட்டதன் நோக்கம் மக்களின் இறைவழிபாடு, சமய சாதனை ஆகியவை வளம் பெற வேண்டும் என்பதோடு ஆன்மாக்கள் மலநீக்கம் பெற்று இறையருள் பெற வேண்டும் என்பதுமாகும். திருக்கோயில் வழிபாட்டு மரபில் வேதங்களும் ஆகமங்களும் கூறும் வழிபாட்டு மரபுகள் சங்கமமாவதை இலங்கையில் உள்ள ஆலயங்களில் நாம் நன்கு காணலாம். பிரதிஷ்டை, உற்சவம், லட்சார்ச்சனை, மற்றும் ஏனைய நைமித்தியக்கிரியைகளில், மந்திர உச்சாடனம், வேதபாராயணம், தோத்திர பாராயணம், ஹோமம், அக்கினி வழிபாடு, அர்ச்சனை, அபிஷேகம் போன்ற அம்சங்களில் மக்கள் பெருமளவில் கூடி இறையருளைப் பெற்றுப் பயனடையும் வாயப்பினைப் பெறுகின்றனர். ஆலயத்திருப்பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி சிவப்பேற்றுக்குத் தம்மைத் தகுதியாக்கும் வாய்ப்பும் இலங்கையில் உள்ள ஆலயங்களில் நிகழும் திருப்பணிக்காக உதவுகின்றது. இத்தகைய வழிபாட்டு மரபைத் தவறின்றி நிறைவாகவும் பக்திபூர்வமாகவும் நடாத்த சிவாச்சாரியர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை இலங்கையில் உள்ள குருகுலங்கள் வழங்கிவிடுகின்றன. ஆகமம் விதித்துக் கூறும் தீட்சைகள் பெற்று சிவாச்சாரிய குருத்துவ அபிஷேகம் பெற்றவர்கள் எமது நாட்டில் சிவாலய வழிபாட்டில் பரார்த்த கிரியைகளை மேற்கொண்டு வரும் மரபு இருந்து வருகின்றது. திருக்கோயில் வழிபாட்டினை நெறிப்படுத்த வல்ல சிவாச்சாரிய பாரம்பரியம் இலங்கையில் உருவாகவும் வழியேற்பட்டது. சிவாச்சாரியர்களுக்கு வேண்டிய பண்புகள், ஒழுக்க நியமங்கள், தகைமைகள் பற்றிச் சிவாகமங்கள் சிவாச்சாரிய லட்சனை விதிப்படலத்தில் எடுத்தியம்புகின்றன. ஆலயக் கிரியைகளை ஒழுங்குடன் செய்வதற்கு சிவாச்சாரியார், அறங்காவலர், வழிபடுவோர் ஆகியோரிடையே ஒற்றுமையும், நல்லிணக் கங்களும் பெரிதும் வேண்டற்பாலது. இவற்றின் வழி ஆலயவழிபாடு மேன்மையடையக் கூடிய வாய்ப்பு உள்ளது என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். ஒருவர் ஆலயத்தில் வழிபாட்டிற் கென செய்யும் கிரியை மூலம் பக்தி நெறி வளம்பெற்றதோடு முழு உலகமும் மக்களும் பயனடைகின்றமை குறிப்பிடற்பாலது.

*ஸர்வே ஜனா : ஸுகினோ பவந்து!*
*சமஸ்த லோகா : ஸுகினோ பவந்து!*

என்ற வாழ்த்துக்கள் முழு உலகமும் நலமடைவதற்கு! அனைத்துமக்களும் நலமுடன் வாழ்வார்களாக! என்ற வாழ்த்துக்களே வேத ஆகமங்கள் வகுத்துக் கூறும் வழிபாட்டு மரபின் உயர்ந்த பேறுகளாகும்.

*"கிரியையென மருவுமவை யாவும் ஞானம்*
*கிடைத்தற்கு நிமித்தம்" - சிவப்பிரகாசம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. குமாரசுவாமிக் குருக்கள், ச. **வேதாகம நிரூபணம்**. கரணவாய் சைவ ஆராய்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம், 1950 : 1951.
2. குமாரசுவாமிக் குருக்கள், ச. மகோற்சவ விளக்கம்.
3. கைலாசநாதக் குருக்கள், கா. **சைவத் திருக்கோவிற்கிரியை நெறி**. இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு, 1963.
4. கோபாலகிருஷ்ண ஐயர், ப. **இந்துப் பண்பாட்டு மரபுகள்**, வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம், 1992.
5. கோபாலகிருஷ்ண ஐயர், ப. சைவசமய மரபில் ஆகமங்கள், பண்டிதமணி நினைவுப் பேருரை, பண்டிதமணி சி. கணபதிப்பிளை நினைவு காப்பு நிதியம், யாழ்ப்பாணம் 1995.
6. பத்மநாபன், ச. **சிவாகமங்கள் கூறும் சிவாலய தரிசனமும்** சிவவிரதங்களும், ஹரிகணன் பிரின்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
7. Siva Temple & Temple Rituals, Ed, S. S. Janaki, The Kuppuswami Research Institute, Madras. 1988




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூமரத நாடகம்
# வடக்கில் புகையிரதத்தை எதிர்கொண்ட வகை

கலாநிதி றமீஸ் அப்துல்லா

ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையை ஆங்கிலேயர் 1796இல் வெற்றி கொண்டனர். 1815இல் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியதோடு முழு இலங்கையும் ஆங்கிலேயர் வசமானது. அவர்களது ஆட்சி 1947 வரை நிலைபெற்றது. இலங்கை முழுவதும் பிரித்தானியரின் குடியேற்ற நாடாக ஆனதிலிருந்து உள்ளூர் ஆட்சியில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. முதன்முதலாக 1831 இல் அரசியல் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதிலிருந்து இலங்கையில் சுதேசி களுக்கான ஆங்கிலக் கல்வி, பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, தபால், தந்தி, போக்குவரத்து முதலான வசதிகள் ஏற்பட்டதோடு இலங்கையின் சமூகப் பொருளாதார அம்சங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கால கட்டத்தில் இங்கிலாந்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

> "…. இங்கிலாந்து இக்கால கட்டத்தின் கல்வியிலும் பொருள் வளர்ச்சியிலும் செல்வாக்கிலும் உன்னத நிலையை அடைந்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்க ஐரோப்பிய வரலாற்றிலே மாபெரும் நூற்றாண்டு எனக் கணிக்கப்படுகிறது. விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றத்தினால் தொழில் வளம் பெருகியது. புதிய பண்டங்களை விற்பனை செய்வதற்காகப் புதிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும் அவற்றினை அடிமைப்படுத்தவும் அவசியம் ஏற்பட்டது. புதிய அரசியல், பொருளியற் சூழ்நிலைகள் புதிய தத்துவங்கள் பொருளியற் கோட்பாடுகளையும் தோற்றுவித்தன. ஐரோப்பிய அரசுகள் மத்தியில் சுயநம்பிக்கையும் சாதனை வேட்கையும் மிகுந்து காணப்பட்டன. எனவே, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உயிர்த்துடிப்பும் செயல் ஊக்கமும் நிறைந்த ஆங்கில அரசும் மரபு தழுவிய யாழ்ப்பாணச் சமூகமும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன". (ஜெபநேசன், எஸ்., 1992:57)

இந்த மாற்றம் இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார அம்சங்களிலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. இலங்கைச் சுதேசிகள் ஆங்கிலத்தைக் கற்பதற்கும் அதனூடாக அரச தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்குமான வழிவகைகளை ஏற்படுத்தியது. அதேநேரம் இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தினர் ஒரு சமூகமாகத் தொழிற்படவும் பிரித்தானிய ஆட்சி முறைமை வழிவகுத்தது. இந்நிலை மாற்றம் பற்றி கைலாசபதி, (1986:14) பின்வருமாறு குறிப்பிடுவார்:

> "தமிழகத்திலும் பார்க்க இலங்கையிலே, அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே 19ஆம் நூற்றாண்டு பல மாற்றங்களைக் கண்டதோடு பின்னர் வந்த மாற்றங்கள் பலவற்றுக்கு அத்திவாரம் இடப்பட்ட காலப்பகுதியாயும் அமைகிறது."

இலங்கைச் சுதேசிகளின் சமூக மாற்றத்தில் கிறிஸ்தவ மிஷனரிகள் அதிக செல்வாக்குச் செலுத்தின. பிரதானமாக அவற்றினூடாகவே யாழ்ப்பாணச் சமூகம் விழிப்புப் பெறத் தொடங்கியது. இதிலிருந்து பத்திரிகை வரவு பற்றியும் போக்குவரத்து அம்சங்கள் தொடர்பாகவும் இக்கட்டுரை விவரிப்பதோடு பிரதானமாக அக்காலப் பத்திரிகையிலிருந்து வெளியான தூமரதம் நாடகம் பற்றியும் விரிவாக விவரிக்கிறது.

## இலங்கையில் புகையிரதம்

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1864ஆம் ஆண்டு இலங்கையில் புகையிரதப் போக்கு வரத்து அறிமுகப்படுத்தப்பட்டது. பிரதானமாக, மலைநாட்டில் விளைந்த கோப்பி, தேயிலை முதலானவற்றைக் கொழும்புக்குக் கொண்டு வருவதற்காகப் புகையிரதப் போக்குவரத்து பயன்பட்டது. முதலாவது பிரதான புகையிரத இணைப்பு கொழும்புக்கும் அம்பேபுஸ்ஸயிற்கும் இடையிலான 54கி.மீற்றருக்குள்ளே ஆரம்பமானது. பின்னர் கண்டி, நாவலப்பிட்டி, நானுஓயா, பண்டாரவளை, பதுளை முதலான பிரதேசங்களுக்கும் புகையிரதப் போக்குவரத்து ஆரம்பமானது. மேலும், மாத்தளை (1880), கரையோரப் பகுதி (1895) முதலான பிரதேசங்களுக்கும் விரிவு பெற்றது.

வடக்கு நோக்கிய புகையிரதம் 1905ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதேநேரம் மன்னார் தொடர்பு 1914ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் வடக்கு நோக்கிய புகையிரதப் பயணத்தை ஆரம்பிப்பதற்கான வேலைகள் 1885 அளவுகளிலே தொடங்கப் பட்டிருக்கிறது என அறிய முடிகிறது. 'சன்மார்க்க போதினி'யில் வெளிவந்த 'தூமரத நாடகம்' பிரசுரிக்கப்பட்ட காலத்தைக் கொண்டு இதனை விளங்க முடியும்.

## பத்திரிகை வளர்ச்சி

19ஆம் நூற்றாண்டு, ஈழத்தில் புதிய மத்திய தர வர்க்கமொன்று உருவாகத் தொடங்கிய கால கட்டமாகும். சுதேச மக்கள் பெருமளவில் கல்வி கற்கவும் அதன் மூலம் சிந்திக்கத் தொடங்கிய காலகட்டமாகும்.

இந்த மாற்றத்தின் பின்னணியிற் செயற்பட்ட ஆங்கிலேயர் தாங்கள் பின்பற்றிய சமயத்தையும் ஈழத்துச் சமூகங்களிடையே பரப்ப முனைந்தனர். அவ்வாறான, சமயப் பரம்பலுக்கு உதவிய ஈழத்தின் ஆரம்பகாலத் தமிழ்ப் பத்திரிகைகள் அதனிலிருந்து மாறுபட்டு சுதேச சமூக, சமய விழிப்புணர்வுக்கும் உதவிய அதேவேளை அக்காலகட்ட நிகழ்ச்சிகளை, சம்பவங்களைப் பிரதிபலிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் உதவிற்று.

இவ்வகையில், கிறிஸ்தவ சமயத்தை அடியொட்டி, உதயதாரகை, இலங்காபிமானி, சன்மார்க்க போதினி முதலான பத்திரிகைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமயத்தை அடியொட்டி இலங்கை நேசன் (THE LANKA SNAHAN) சைவ உதய பானு, இந்து சாதனம் முதலானவையும் முஸ்லிம் சமூகத்திலிருந்து புதினாலங்காரி, முஸ்லிம் நேசன் முதலான பத்திரிகைகளும் வெளிவந்தன.

இவ்வாறு கிறிஸ்தவ சமயம் சார்பான பத்திரிகை எழுச்சியோடு சைவ மதம் சார்பான பத்திரிகைகளும் வெளிவந்தன. இந்தப் போட்டிக்கு மத்தியில், அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளை என்பவரால் 'சாது சங்கம் சன்மார்க்க சாதனம்' எனும் சுலோகத்துடன் 1885இல் சன்மார்க்க போதினி எனும் பத்திரிகை வெளிவந்தது. கிறிஸ்தவ சமயப் பத்திரிகையான இது பெருமளவில் சன்மார்க்க விசயங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப் பத்திரிகையின் பிரதி ஒன்றிலேதான் (புரட்டாதி 1890) தூமரத நாடகம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது பள்ளு, குறவஞ்சி போன்ற பொதுமக்கள் சார்பான இலக்கியங்களின் அமைப்பில் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்தின் அமைப்பு கிழவர் ஒருவர் சிறுவனுக்கும் நொண்டிக்கும் அறிவுரை கூறும் பாங்கில், பா வடிவில் அமைந்த உரையாடலாகவும் அமைந்துள்ளது.

### தூமரத நாடகம் அறிமுகம்

தூமம் என்பது புகை ரதம் என்பது வண்டியைக் குறிக்கும். தூமரதம் என்பது புகையிரதத்தைக் குறிக்கும். இப்பிரதி மாட்டு வண்டி புழக்கத்தில் இருந்த சமூகத்தில் புகையிரதத்தின் வருகையைக் குறிப்பதாகும். ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் வடமாகாணம் நோக்கிப் புகையிரதம் வருவதையும் அதனால் அப்பிரதேசம் பொருளாதார ரீதியாகச் செழிப்படை வதையும் எதிர்வு கூறுவதாகவும் இவற்றுக்குக் காரணமான ஆங்கில அரசை வாழ்த்துவதாகவும் இந்நாடகம் அமைந்துள்ளது.

காப்புச் செய்யுளுடன் ஆரம்பித்து கிழவர் ஒருவர் சிறுவனுக்கும் நொண்டிக்கும் வடக்குப் பிரதேசத்துக்கு வருகை தந்திருக்கிற பணியாளர் களின் நோக்கத்தினையும் புகையிரத அமைப்புத் திட்டத்தினையும் விளக்குவதோடு அதில் பங்குபற்றுவோரை வாழ்த்தி அதனை வரவேற்பதுடன் இந்நாடகம் நிறைவுபெறுகிறது. சாதாரண மக்களும் படித்து பொருள் உணரும்படியாக இலகுவான நடையில் அமைந்துள்ள இந்நாடகம் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குச் சொற்களையும் அதிகமாகக் கொண்டுள்ளது. கொமிஷனர், கவர்ணர், றிப்போட் முதலிய ஆங்கிலச் சொற்களோடு ஸலாம், ரயில் போன்ற பிறமொழிச் சொற்களும் கையாளப் பட்டுள்ளன. அதிகமாகப் பயன்பாட்டில் இல்லாத தனித் தமிழ்ச் சொற்களும் இந்நாடகத்தில் பயன்பட்டுள்ளன. மேலும், எதுகை, மோனைகள் உள்ளதாக இந்நாடகத்தின் அடிகள் அமைந்து ஓசை நயம் மிக்கதாக அமைந்துள்ளது. மேலும், தந்தையெனவே வரும் சுந்தர கவர்ணர், சினத்தாற் போலறுத்திட்ட மூக்கு – பின்னர் சிரித்தாற்போலொட்டுமோ முதலான மக்களைச் சிந்திக்க வைப்பதற்கேற்ப கேள்வி வடிவிலான வசனங்களாக அமைந்த உவமைகளும் கையாளப்பட்டுள்ளன. இன்னும், முதுமொழிகள் அல்லது பழமொழிகள் போன்ற சொற்றொடர்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

மேலும், 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே மக்களின் தேவையையும் பிரச்சினையும் மட்டிட்டுப் பேசுகின்ற முக்கியமான ஓர் இலக்கியமாக அமைந்துள்ள இந்நாடகம் இருபதாம் நூற்றாண்டின் இலக்கியப் பண்பைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந் நாடகத்தைப் பிரசுரித்ததன் மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபுக்கும் சன்மார்க்க போதினி முக்கிய பங்காற்றியுள்ளதெனலாம். இவ்வளவு காலமும் தமிழ் இலக்கிய உலகில் கண்டு கொள்ளப்படாத இந்நாடகத்தின் மூலம் புதிய செய்திகளை அறியக் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

### தூமரத நாடகம் – சுருக்கம்

இந்நாடகத்தில் சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் நவீனத்துவத்தை ஆதரிக்கின்ற ஒரு கிழவன் சித்திரிக்கப் படுகின்றான். அவர் அக்கருத்துநிலைக்கு எதிரான ஒரு சிறுவனுக்குப் புத்தி புகட்டுகின்றதாகவும் நொண்டி ஒருவருக்கு விளக்கமளிப்பதாகவும் கிழவரின் பாத்திரம் இயங்குகிறது. காப்புச் செய்யுளுக்குப் பின் வடக்குக்குப் புதிதாக வந்திருக்கின்ற பணியாளர்களின் வரவு பற்றி சிறுவன் முதியவரிடம் வினவுவதாக அந்நாடகம் தொடங்குகிறது. நமது பிரதேசத்திற்குப் புகையிரதப் பாதையினை ஏற்படுத்த வந்தவர்கள் அதற்கான திட்ட வரைவுகளைச் செய்ய வந்தவர்கள் என அதற்கு முதியவர் பதிலளிக்கிறார். இந்த புகையிரதத்தில் பனங்காயைத்தான் ஏற்றுவார்கள் எனவும் இது விழல் காரியம் எனவும் இங்கு அவ்வளவுக்குப் பொருள் உண்டோ எனவும் இதற்கு எவ்வளவு உத்தியோகத்தர்கள் தேவை எனவும் சிறுவன் மேலும் வினவுகிறான். கப்பலில் பொருளும் சனமும் போவதுபோல் புகையிரதத்திலும் போவர். மேற்கில் புகையிரத சேவையால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. போக்குவரத்துக்காக நம்மவர் கஸ்டப்படுவதை முதியவர் விளக்கி புத்திக் குறைவினால் நீ இப்படிப் பேசுவதாக சிறுவனைக் கண்டிக்கிறார்.

ஈற்றில் புகையிரதப் போக்குவரத்தின் நன்மைகளை உணர்ந்த சிறுவன் பெண்களும் துணிவுடன் பயணம் செய்ய முடியும் எனக் கூறி தன் ஒப்புதலைத் தெரிவிக்கின்றான். பெரியவர்கள், பணக்காரர்கள் புரிகின்ற வர்த்தகத்தை சிறுவர்களும் புரிய முடியும். தேசம் செழித்து பணநலம் வருமென முதியவர் எடுத்துரைக்கிறார். புகையிரதப் போக்குவரத்து உருவாவதனால் ஏற்படுகின்ற நன்மைகளைப் புரிந்து கொண்ட சிறுவன் இது தொடர்பாக இனி விவாதிக்க மாட்டேன் எனக் கூறி ஒப்புக் கொள்வதோடு இருவரும் உடன்பாட்டுக்கு வருகின்றனர். புகையிரதப் போக்குவரத்தினல் ஏற்றுமதி உருவாவதோடு பனை, தென்னை உணவுகளில் தினமும் பண்டமாற்று பண்ணலாம் எனவும் சிறுவன் குறிப்பிடுகின்றான். முதியவரோ மீன், கருவாடு, ஆடு, மாடுகள், மரங்கள் அத்தனையையும் அனுப்பி வளம் பெறலாம் என விவரிக்கின்றார்.

அடுத்த பகுதியில் சங்கராபரண இராகத்தில் அமைந்த வண்டிக்கார நொண்டி விருத்தம், வண்டிக்கார நொண்டி ஒருவனும் கிழவனால் புத்தி புகட்டப்படுவதை எடுத்துக் கூறுகின்றது. தினமும் வண்டி ஓட்டி உழைக்கும் நொண்டி ஒருவன் புகையிரத வண்டி வருவதனால் தன் உழைப்புக்கு ஏற்படும் துன்பத்தினையும் இந்நாடகத்தில் வெளிப்படுத்துகிறான். பிரஜைகளின் வாழ்வில் ஏற்படும் நன்மையைக் கண்டு எரிச்சல்படுவதாக முதியவர் அதைச் சுட்டிக் காட்டுகிறார். வண்டிக்குரிய உன் உழைப்பு இதனால் பாழ்படப் போவதில்லை என்றும் அதிக பொருள் சுற்று ஏற்படுவதால் உன் உழைப்பு பன்மடங்காகும் என்றும் கிழவன் நொண்டிக்குக் கூறுகின்றார். அதனை ஏற்று நொண்டியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வண்டி ஓட்டி) புகையிரத வரவை அவசியமானதாக எடுத்துரைக்கிறான்.

கல்யாணி இராகத்தில் அமைந்த மற்றப் பகுதி கிழவன் புகையிரத வருகையினால் ஏற்படப் போகும் நன்மையைத் தனியே உரைப்பதாக அமைந்துள்ளது. ஹெலொக் என்பவரினால் அனுப்பப்பட்ட கொமிஷனர் மூலம் அறிமுகப்படுத்தும் இத்திட்டம் கொழும்போடு வடக்கையும் இணைப்பது குறித்து கிழவர் பெருமைப்படுவதாக எடுத்துக் கூறுகிறது. தந்தை போன்று தம் மக்களின் துன்பம் கண்டு அதனைத் தீர்க்க வந்தவர் எனவும் தமது மக்களதும் நிலத்தினதும் வளத்துக்காகப் புகையிரத சேவையை ஆரம்பிப்பதனையும் இதனால் வடமாகாண அரசிறை அதிகரிப்பதையும் மக்கள் குறை தீர்த்து வன்னியில் சனங்களைக் குடியேற்றி விளை நிலங்களை உருவாக்கி கொழும்போடும் இந்தியாவோடும் எம்மை இணைக்க இந்தப் புகையிரத சேவை உதவும் எனவும் எமது பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் இது ஒரு உபாயம் எனவும் இனியும் உணவு உற்பத்திக்காக இந்தியாவை அண்டாது நமது வன்னிதனில் அதனைக் காண்போம் எனவும் இதன் மூலம் கொழும்போடு இணைந்து வாழவும் பிற நாட்டில் தங்கியிராது நம் நாட்டு உற்பத்தியில் உழைத்து உண்டு வாழ்வதையும் இத்தூமரத நாடகம் வெளிப்படுத்துகின்றது.

இறுதிப் பகுதி சுத்த சாவேரி இராகத்தில் அமைந்தது. இப்பகுதி இப்பணியை ஆற்றும் கொமிஷனர், இராணி, தேசாதிபதி, ஏசண்டுமார், சமய குரவர்களை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. இப்பகுதியில் தம் மக்களைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை முன்கொண்டு நடத்துவதையும் தேசம் செழிக்கும் புகையிரத வரவுபோல் இந்நகரம் ஒளிரும் எனவும் மன்னவருக்கு நெருக்கமாக இருந்து இத்திட்டத்தின் கணக்கு வரவிலே கருமமே கண்ணாயிருந்து இத்திட்டத்தை அறிக்கை இடுமாறும் கொமிஷனரை வேண்டுகிறது இந்நாடகம். இந்த புகையிரத சேவை வரவினால் பஞ்சம், பசி போய் வியாபாரமும் பயிர்ச்செய்கையும் சிறக்க வழி பிறக்கும். மக்கள் வன்னி வரை சென்று குடியேறி நோய் தீர்த்து மக்கள் மனம் நிறைந்து கொள்ளை நோய்கள் அழிந்து ஆடு, மாடுகள், ஆஸ்திகள் எல்லாம் பெருத்து அனைவரும் தினமும் கொழும்பு சென்று வருவர். இந்த நன்மைகளை எல்லாம் அறிந்து நல்லதொரு அறிக்கையினை இடுமாறு கொமிஷனரை வேண்டுகிறார் முதியவர்.

மக்களை இரக்கத்துடன் காக்கும் இராணி, மக்களை விருப்போடு ஆளும் தேசாதிபதி, ஏஜன்ட், கொமிஷனர், மதகுருமார் அனைவரையும் வாழ்த்துவதாக இத்தூமரதம் நாடகம் அமைந்துள்ளது. மொத்தத்தில் சமூகத்தில் புதிய திட்டங்கள் அறிமுகமாவதோடு எதிர்வினைகளும் உருவாவதுண்டு. அதனைக் கருத்தில் கொண்டு இளையோர் பரம்பரைக்கு இத்திட்டத்தினைப் பற்றி அறிமுகப்படுத்து வதாகவும் இது தொடர்பான தொழில்களில் (ஏற்றி இறக்கும்) ஈடுபடுவோருக்கு இதன் நன்மைகளைப் புலப்படுத்துவதாகவும் அவர்களின் தொழிலைப் பாதிக்காது நன்மையையே தரும் என்பதை விளக்குவதாகவும் இத்திட்டத்தில் ஈடுபடும் அதிகாரிகளை உற்சாகப்படுத்துவதாகவும் இவ்ஆக்கம் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

இத்தகு வழிகளிலும் இலக்கியம் பயன்பாடுடையதாக இருப்பது மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகின்றது. மேலும், வடபுலத்து மக்களின் கொழும்போடு இணைந்து வாழும் எண்ணமும் இந்தியாவை எதற்கும் நம்பியிராது தமது சொந்த உற்பத்தி, தமது வாழ்வு, தமது நாடு, தமது நிலம் என்ற அகன்ற தேசிய எண்ணமும் இங்குவெளிப்படுவது கவனத்திற்குரியது.

**பின்னிணைப்பு:**

**தூமரத நாடகம்**

**காப்பு**

வெண்பா

சீராருலகனைத்துஞ் சிஷ்டித்துத்தற்காக்
நேரார்பரப் பொருளாம் நித்தியனே — பார்மீதில்
தூமரதநாடகத்தைச் சொல்லவேநின்ன
ருளாற் — சாமி நீ செய்வாய்தயை.

**ஓர்கிழவனுக்கும் பேரனுக்கும் நடந்த சம்பாஷணை.**

**விருத்தம்**

சிறுவன் —அப்பாநான் சொல்லக்கேளாய்
அரசர்போலிங்கிருப்போர்
எப்பணிவிடையாய்வந்தா
ரிவரிங்கேயிருப்பதென்ன?

கிழவன் —தப்பிதமிலாதபேரா
தகுகொமிஷனர்களாக
செப்பமாயிவர்கடம்மைத்
தேசாதிபதிவிடுத்தார.

**தரு.**

**இராகம் ஆனந்தபைரவி. ஆதி தாளம்**

சிறுவன் — கொம்மிஷனர்களாகக்
கூடிவந்திட்டதேது பாட்டா இந்தக்
கூட்டமும் நாட்டமும்நாங்
கேட்டது மில்லையேயென் பாட்டா

கிழவன் — எம்முடையூர் செழிக்க
றெயிற்பாதைதிறந்திடப் பேரா இவர்
ஏற்றகணக்கெடுக்கத்
தேற்றமுடனேவந்தார் பேரா

சிறு — கணக்குக்கிங்கேபனாங்
காயோவேற்றிடுவார்கள் பாட்டாஇது
காரியம்விழல்விழல்
வாரும்நாஞ்செல்லுவோம் பாட்டா

கிழ — குணக்கேடாகியவார்த்தை
கூறிடலாகாதே பேரா அங்கே
கோடிக்கணக்காய் வண்டில்
நாடுவதறியாயோ பேரா

சிறு — வண்டியிலேற்றிச்செல்
கின்றபொருள்காணுமோபாட்டாஒரு
மாதத்திற்குக்காணாதே
ஆரப்பொறுப்பெடுப்பார் பாட்டா

கிழ — கண்டிடுவாய்கப்பலிற்
சென்றிடும்பலபொருள் பேரா அன்றிக்
கவ்வையுடனேசெல்வோர்
எவ்வளவுசனங்கள் பேரா

சிறு — இப்படிப்பார்த்தாலு
மின்னும்போதாயென் பாட்டாபணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோசெல்லுஞ்
செவ்வையாயுணர்ந்திடும் பாட்டா

கிழ — ஒவ்வோர்நாளிலும்மேற்கோச்
சோடித்திரிகிறதே. பேரா அதற்
குற்றநயங்களெல்லாம்
மற்றெங்கேபோகுமோ பேரா

சிறு — எத்தனையுத்தியோகர்
எத்தனைவேலைக்காரர்பாட்டாவேண்டும
எல்லோர்க்கும்வரும்படி யிவ்விடத்திவ்
வருமோ பாட்டா

கிழ — புத்தியீனத்தினாலே
கத்திடுகின்றாயே பேரா பலர்
போகவசதியீன
மாகவிருக்கின்றாரே பேரா

சிறு — ஆமதுமெய்ம்மைதான்
அரிய றெயில்வந்தாற் பாட்டா பல
அரிவையருந்துணிந்து
அனுதினஞ்செல்வார்கள் பாட்டா

கிழ — சீமான்கள் செய்வணிகஞ்
சிறுவருஞ் செய்வாரே பேரா அத்தாற்
றேசஞ்செழித்துப்பண
மோசம்வராயென் பேரா

சிறு — இன்னுமதிகமாக
ஏற்றுமதிவருமோ பாட்டா அதை
ஏதென்று கூறிடும்
வாதஞ்செய்யேனினிப்பாட்டா

கிழ — தின்னுமீன்கருவாடு
தேடியனுப்புவாரே பேராஇன்னும்
சேர்த்துமாடாடுகள்
ஏற்றியனுப்புவாரே பேரா

சிறு — பனைதென்னைப்பதார்த்தங்கள்
தினமுமனுப்பலாமே பாட்டாநல்ல
பண்டமாற்றுக்கள்பல
வுண்டாகுமல்லவோ பாட்டா

கிழ — வனமுற்றிடுமரங்கள்
வாகாயனுப்பலாமே பேரா அந்த
வன்னியிற் பொருளெல்லாம்
பின்மின்றிவருமே பேரா

**வண்டிக்கார நொண்டி விருத்தம்**

வண்டியோட்டி வயிறுவளர்த்திடும்
நொண்டிநானிதோ நோக்கமாயுங்களை
அண்டிவந்தே னதிலிருப்போர்களார்
விண்டிடீர்களிவ் வேளைவிளங்கவே.

**கிழவன் விருத்தம்**

இமைவிழிய தனைக்காத்த லென்ன வேகாவல் செய்து
எமையரசாளுமன்னன் யாழ்ப்பாண றெயிலைப் பற்றி
அமைவுறுங் கணக்கெடுக்க அன்பதாயனுப்பி வைத்த
கொமிஷனரிவரேயாகுங் கூர்மையாயறிகுவீரே.
நொண்டியுங் கிழவனுந்தரு.

**இராகம், சங்கராபரணம், அடதாளம்,**

நொ. நியாயம்நீதியிலையோ — மிகு — நீச
வறிஞராய்நிற்கு
மெங்கள். வாயிலேமண்போட —றெயில் —
வைப்பதுஎப்படிச்செப்புமப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழ. பிரசைகள் வாழ்வினிலே — நீ
பெருமெரிச்சலல்லோ கொள்ளுகிறாய்
தெரியாமற் செப்பாதே — இது
தீதுரையே மிகுவா துரையே.

நொ. நொண்டி நொண்டித்திரிந்தே — நானும்
வண்டியை யோட்டியே வாழ்ந்திருந்தேன்
கண்டே யிவர்கள் தம்மைமா
கலக்கமதாகி மலக்கமுற்றேன்.

கிழ. வண்டிக்கு மோசமென்ன — நீயும்
வைத்துப்பிழைத்திடு பத்திரமாய்
எண்டிக்குமுள்ள பொருளெல்லாம்
இங்கெவருமதை ஏற்றிடுவாய்

நொ. ஆமோ அது நலந்தா — னெம்
மரும்பொருளெல்லாம் றெயில்வாரிப்
போமே நாமிங்கிதற்குஎன்ன
புத்திசெய்வோமெம துத்தமரே.

கிழ. நம்மூராற் செல்வதிலும் — பொருள்
நான்மடங்காக வருந்திடனே
எம்மூரிலேழைகளுக்கு
மிசைந்த பிழைப்புமிருக்குமடா.

நொ. அப்படியாயின் றெயிலு
மவசிய மிங்கேவரவேண்டும்
தப்பிதமாய் நினைத்தேனையா
சாமி சலாம் நீர்போய்வாரும்.

**கிழவன்**
**கலித்துறை**

அந்தமுலவு செராதர் ஹெலொக் கெனு
மண்ணலினால்
வந்தகொமிஷனரான புகழ் செறிமன்னவரே
எந்தப்படியுங் கொழும்புடனெம்மை
யிணைத்திடுவீர்
இரந்தத் தருண மிழக்கில்வராது இதுநிசமே

தரு.

இராகம் — கலியாணி தாளம் — காப்பு

**பல்லவி**

இந்தத்தருணம்போனா லெந்தத்தருணமெமக்
கினிமேற் கிடைத்திடுமோ.

**அனுபல்லவி**

தந்தையெனவே வருஞ்சுந்தரக்கவர்ணரின்
சிந்தையுவந்தனுப்ப வந்ததுரைமக்களே
(இந்த)

சரணங்கள்

வந்தவழியதின் வருத்தங்களெல்லாம்நீர்
சிந்தைகளிலுணர்ந்து கொண்டீரே
இந்தநகரதின்நிற் பந்த மானவைகள்
யாவும்நீரிவ்வேளை கண்டீரே.
முந்தவெமதுபூமிஎந்தளவென்றோரும்
மோதுஞ்சனத்தொகைதப் பாதுபரித்துப்பாரும்
பந்தமார்கடல்திடர் பார்நிலங்களைநீரும்
பார்த்துறெயிலுண்டாகிப் பரித்தெங்குறையைத்தீரும
(இந்த)

அரியவடமாகாண அரசிறைவரும்படி
பெரிதெனவுங்கட்குத் தெரியுமே
உரியநரரு மவ் ருறைவிடங்களுங்கண்டா
லுங்கள்மனமுமிகப் பரியுமே
பரிவாம் றெயிலாலெங்கள்
பங்கத்தைமாற்றுவீர்
படர்ந்தவன்னியிற்குடி பதிகளையேற்றுவீர்
பெரியவிளைநிலங்கள்
பிறப்பித்துத்தேற்றுவீர்
பேராங்கொழும்போடெம்மைப்
பிணைத்துள்மாற்றுவீர் (இந்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுடன்நாங்களி ணைக்கப்படுவதற்கு
இந்தறெயில்மிகு வுபாயம்
எந்தப்பொருளும்நாம் நினைந்தவுடனேவிற்க
ஏற்கவிதுவெகு சகாயம்
சந்தேகமேன்நெல்லுக் கிந்தியாவை
யண்டோம்
தக்கநிலம் வன்னிதன்னிலே நாங்கண்டோம்
அந்த விடங்கள்கண் டானந்தமே
கொண்டோம்
அகத்தியம்றெயில் வேண்டும்
ஆனதெல்லாம்விண்டோம்
(இந்த)

தரு.

இராகம் – சுத்தசாவேரி அடதாளம்

கூடிக்கொண்டாடவந்தோமே – எங்கள்
கொம்மிஷனர்க்குச் சலாமுந்தந்தோமே
தேடிடக்காலமிராது – விட்டுச்
சென்றாற்கணக்குத் திரும்பவராது
சினத்தாற்போலறுத்திட்டமூக்குப் – பின்னர்
சிரித்தாற்போலொட்டுமோ சீராகநோக்கும்
கனத்தாற்கதித்தவர் நீரே – நற்
கருத்து வைத்தேயிக் கணக்கெடுப்பீரே
தேசம்மிகவுஞ்செழிக்கும் – றெயிற்
றீவிரம்போலத் தினம்பரிமளிக்கும்
மாசங்கை யுளநகரீது – இதை
மன்னவர்க்குந்தூர மாக்கலாகாது
ஒருதரம் பார்த்தகணக்குப் – பின்
னுறுத்தியேபார்க்கிலுறுமேபிணக்கு
கருமமே கண்ணா யிருந்து – றீப்போட்
கருதியே செய்யுங் கருமந்திருந்தும்.

**விருத்தம்**

பஞ்சமும் பதியுமஞ்சியேபறக்கும்
படர்வியாபாரமுஞ்சிறக்கும்
பலர்கமஞ்செய்யப் பாதையைத் திறக்கும்
பற்பலநன்மைகள் பிறக்கும்

கொஞ்சநாட்களுக்குட் குடிவன்னிக்கேறுங்
குறைந்திடுங் கொடும்பிணிவீறும்
குடிசனர் தங்களுடை மனந்தேறும்
கொள்ளை நோய்களுமடிபாறும்

அங்கிடா வன்னிக்க னேகர்போயிருப்பார்
அவனியில னைவர்க்கும் விருப்பார்
ஆடுமாடெருமை யனேகம் வைத்திருப்பார்
ஆஸ்திகளால் மிகப்பெருப்பார்

நெஞ்சமாய் ராசதானிக்குநேரே
நித்தமும் பலர்செல்லுவாரே
நிறையறி வுடையகொமிஷனர்மாரே
நினைந்து றீப்போட்செய்குவீரே
வாழி

இரக்கமாயெமைப்புரக்கும் இராணிநாயகியும்
வாழி
சிரத்தையோடிலங்கையாளுந் தேசா திபதியும்
வாழி
உரத்த எசன்றரோடே யுறுங் கொமிஷனரும்
வாழி
குருத்துவ லிற்றனாதி கூட்டமும்வாழிதானே.

- சன்மார்க்க போதினி, புரட்டாதி 1890

**பயன்பட்டவை:**


1. கைலாசபதி, க., ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை, 1986:14.
2. ஜெபநேசன், எஸ்., இலங்கையிலே தமிழர் சிந்தனை வளர்ச்சி, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, 1992:57. www:wikipedea




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இனவரைவியல்

பேராசிரியர். ஞா. ஸ்டீபன்

இலக்கியப் பனுவல்களைப் புரிந்துகொள்ள பல்வகையான கருவிகளும் பல்துறைசார் அறிவும் தற்காலச் சூழலில் தவிர்க்க இயலாதவை. இலக்கியத்தின் பாடுபொருள் வரையறைக்குட் பட்டதன்று என்பதால் அதனைப் புரிந்து கொள்ளப் பயன்படுத்தும் கருவிகளையும் வரையறுக்க இயலாது. இலக்கியத்திற்குக் கலைத் தன்மை என்ற பண்பு இருப்பதால் சமூக அறிவியல் புலங்கள் அதனை நேரடியாகப் பயன் படுத்துவதில்லை. அதன் நம்பகத் தன்மை எப்போதும் கேள்விக்குள்ளாக்கப்படும். கலைத் தன்மைக்குப் புனைவு அடிப்படையானது. இலக்கியப் பனுவல்கள் புனைவுகளால் கட்டப்பெற்றவை என்ற கருத்து சமூக அறிவியல் புலங்களில் செல்வாக்கு செலுத்துவதால் அவை இலக்கியத்தைத் தம் படிப்பு எல்லைகளுடன் சேர்ப்பதில்லை. இலக்கியம் மனிதனையும் மனிதச் சமூகத்தையும் பற்றிப் பேசினாலும் அதன் புனைவுப் பண்பு சமூக அறிவியல் புலங்களின் எல்லைக்குள் நுழையவிடாமல் தடுத்து விடுகின்றது. இருப்பினும் சமூக அறிவியல் புலங்கள் இலக்கியத்தைப் பயன்படுத்துவதும் இலக்கியத் திறனாய்வாளர்கள் சமூக அறிவியல் புலங்களைப் பயன்படுத்துவதும் புல எல்லைகளைக் கடந்த வழக்கமாக உள்ளது.

தற்காலத்தில் இலக்கியப் பனுவல்களைத் திறனாய்வு செய்ய மானிடவியல் புலம் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. மானிடவியல் மனிதனைப் பண்பாட்டு நிலையிலும் உயிரியல் நிலையிலும் படிக்கும் புலம் ஆகும். பண்பாட்டு நிலையில் மனிதனை அறிவது என்பது இலக்கியத்தோடு தொடர்புப் படுத்தும் வாய்ப்புகளைப்பெற்ற பார்வையாகும். இனவரைவியல் (Ethnography) என்பது மானிடவியலின் குறிப்பாகப் பண்பாட்டு மானிடவியலின் இன்றியமையாத பிரிவு ஆகும். எப்படி நாட்டார்வழக்காற்றியல் ஆய்வுகள் களஆய்வை நம்பியிருக்கின்றனவோ அதனைப்போன்று மானிடவியல் ஆய்வுகளும் இனவரைவியலை நம்பியிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை அல்லது இனக்குழுவை ஆய்வுக்குட்படுத்த வேண்டுமானால் அப்பண்பாட்டின் அல்லது இனக்குழுவின் இனவரைவியல் முதன்முதலில் தொகுக்கப்பட வேண்டும் என்பதே மானிடவியலின் முறையியல் ஆகும். இனவரைவியல் இரண்டு வகையான பரிமாணங்களைக் கொண்டது. ஒருபக்கத்தில் அது ஒரு முறையியலாகவும் மறுபக்கத்தில் வரிவடிவ மாக்கப்பட்ட பண்பாடாகவும் அமைகின்றது. யாரைப் பற்றி எழுதுகின்றோமோ அந்த மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறைகளைப்பற்றிய விளக்கவுரை களையும் வரைவு அறிக்கைகளையும் உருவாக்கக்கூடிய அலசல் முறையும் அதன் வெளிப்பாடாகிய எழுத்து வடிவமுமே இனவரைவியல் (Denzin 1977:xi) என அதன் பரிமாணங்கள் விளக்கப்படுகின்றன.

ஒரு பண்பாடு வரிவடிவத்தில் விளக்கப் படுவதே இனவரைவியல் என்று அழைக்கப் படுகின்றது. இது பண்பாட்டை எழுதுதல் (Writing culture) என்றும் குறிக்கப்படுகின்றது. அது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்கள் குழுவின் பண்பாட்டை முழுமையாக எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகின்றது. ஒரு குறிப்பிட்ட இனக்குழு அல்லது பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியலாகும் (Fetterman1989:11). பண்பாட்டை எழுத்து வடிவில் தொகுத்து அளிப்பதே இனவரைவியலின் நோக்கமாகும். இதனால் ஏதேனும் ஒரு பண்பாட்டைப் பற்றி எழுதப்பெற்ற வரைவு அல்லது வருணனையை இனவரைவியல் என்று அழைப்பர் (Herskovits1974:8). உள்ளதை உள்ளபடியே ஒழுங்குபடுத்தித் தருவது என்பதே அதன் கொள்கையாகும். இதற்குக் கற்பனையற்ற, சார்பற்ற வருணனை அடிப்படையானதாகும். பண்பாட்டை அதன் முழுப் பரிமாணத்தில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்குவது எளிதானதன்று. எனவே, இனவரை வியலாளர்கள் கள ஆய்விற்கு முதன்மை இடம் தருவர். பண்பாட்டை நேரில் கண்டு உணர்ந்து அவ்வாறே வெளிப்படுத்த வேண்டும். இது வருணனையின் மூலமே சாத்தியமானதாகும். ஆனால், இங்கு வருணனை என்பது நிழற்படம் போன்று பிரதிபலித்தலாகும். களஆய்வின் வழி குறிப்பிட்ட குழுவினரை நேரடியாகச் சந்தித்து அவர்களோடு பழகி, வாழ்ந்து அவர்களது அன்றாட வாழ்வியலைக் கண்டு, உணர்ந்து, உற்றுநோக்கி எழுத வேண்டும். "இனவரை வியலில் பங்கேற்று உற்றுநோக்குதல் அடிப்படையாகும். மக்களிடம் சென்று அவர்களுடன் நெருக்கமாக் கலந்து பழகி, நீண்டகாலம் வாழ்ந்து, பங்கேற்று உற்று நோக்குவதன் மூலம் எழுதப்படுவதே இனவரை வியல்" (ஜான் மோனகன்,2005:27). இதன் காரணமாக இது பங்குபெறும் உற்றுநோக்கல் என்று அழைக்கப்படுவதும் உண்டு.

பண்பாட்டை எவ்வாறு எழுதுவது? இது சாத்தியமானதா? என்பன போன்ற கேள்விகளை மனத்தில் கொண்டு மானிடவியல் இனவரை வியலை எழுதுவதற்கான முறையியலை முன்வைத்துள்ளது. பண் பாட்டைச் சரியாகப் புரிந்து கொண்டு அதனை எழுத வேண்டுமானால் அப்பண்பாட்டில் வாழ வேண்டும் என்று மானிடவியலார் நம்பினர். ஏனெனில் பண்பாட்டைப் பார்ப்பதால் மட்டும் அறிய இயலாது. அதில் உணர்வதற்கும் அறிவதற்கும் அனுபவிப்பதற்கும் ஏராளமான கூறுகள் உள்ளன. எனவே பண்பாட்டில் வாழ்வதால் மட்டுமே பண்பாட்டை எழுத இயலும் என ஒரு பிரிவினர் கருதினர். அவ்வாறாயின் பண்பாட்டை உள்ளிலிருந்து நோக்குதல் (Insider) வெளியி லிருந்து நோக்குதல் (Outsider) என இரு வாய்ப்புகள் உள்ளன. ஒருவர் தன் சொந்தப் பண்பாட்டை விளக்குவது கடினம். "அகத்தார் தன் சொந்தப் பண்பாட்டை ஆராயும் போது வட்டார அளவில் காணப்படும் சில வேறுபாடுகளின் நுட்பமான மாற்றங்களை இனங்காண முடியும். அதே வேளையில் புறத்தார் ஆராயும் போது மக்களின் பொதுப்புத்தி சார்ந்த அல்லது இயற்கையானது என்று உணர்வனவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பமாக அறிவர். இந்நிலையில் இன வரைவியலர் புறத்தாராக இருப்பது ஒருவகையில் பலம் என்றாலும் இன்னொரு வகையில் பலவீனம் என்றும் கூறலாம்" (ஜான் மோனகன்,2005:51-52). அவருக்குத் தாம் ஒழுகும் பெரும்பான்மையான கூறுகள் இயல்பானதாக அமைவதால் அவற்றை இன்றியமை யாதவையாகக் கருதமாட்டார். தனது பண்பாட்டை மற்றவர்கள் குறைவானதாகக் கருதக் கூடாது என்பதற்காக சிலவற்றை ஓர்மையுடன் பேசாது விட்டுவிடும் வாய்ப்புகள் உண்டு. அல்லது தனது பண்பாட்டைச் சிறப்பித்துப் பேச முற்படலாம். இப்போக்கு இன உயர்வுவாதம் (Ethnocentricm) என அடையாளப் படுத்தப் படுகின்றது. வெளியிலிருந்து நோக்குதல் அல்லது புற நோக்கிலும் இத்தகைய வாய்ப்புண்டு. ஒரு பண்பாட்டில் அதற்கு அயலாக இருக்கும் ஒருவர் வரும் போது அப்பண்பாட்டைத் தான் சார்ந்துள்ள பண்பாட்டைக் கொண்டு மதிப்பீடு செய்வது இயல்பானது. இதனைப் பண்பாட்டுச் சார்புடைமை (Cultural Relativism) என்பர். இவ்விரு போக்குகளும் இனவரைவியலில் ஏற்கப்படுவதில்லை. ஆயின் இனவரைவியல் என்பது சார்புத் தன்மையின்றி எழுதப்பட வேண்டும். சார்பற்ற நடுநிலைத் தன்மை என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட ஒன்று என்பதை இங்கு நாம் மனம் கொள்ள வேண்டும்.

மானிடவியல் தொடக்க நிலையில் இனவரைவியலைக் களஆய்வுக்குச் சமமான ஒன்றாகவே கருதியது. மானிடவியல் ஆய்வுகளுக் காகக் களஆய்வின் மூலம் சேகரிக்கும் தகவல்களின் தொகுப்பே இனவரைவியல் என்ற கருத்து இருந்தது. தாம் விரும்பிய ஆய்வு நிறைவுற்ற பின்னர் சேகரித்த தகவல்கள் தேவையற்றவையாகக் கருதப் பெற்றன. சேகரிக்கும் எல்லாத் தகவல்களும் ஆய்வுக்குப் பயன்படுவதில்லை. பயன்படுத்தும் தகவல்களைக் கொண்டு பொதுமைப்படுத்துதல், விதிகளை உருவாக்குதல், கோட்பாடுகளையும் கருத்தாக்கங்களையும் கட்டுதல் என்பன போன்ற அறிவு சார்ந்த செயல்முறைகளே முதன்மை யானவையாகக் கருதப்பெற்றன. மானிடவியலின் மையச் செயல்பாடகவும் இவை அமைந்தன. எனவே பண்பாட்டை எழுதுதல் என்பது மானிடவியலில் முக்கியத்துவம் பெறவில்லை. மாலினோவ்ஸ்கி, பிரான்ஸ் போவாஸ் போன்ற புகழ் பெற்ற மானிடவியலாளர்கள் ஆய்வுக்குட் படுத்திய பழங்குடி மக்களிடம் சேகரித்த தரவுகளையும் அனுபவங்களையும் அவர்கள் நாட்குறிப்புகளில் எழுதி வைத்திருந்தனர். அவை பின்னர் வெளியிடப்பட்டன. இவை வெளிவந்த பின்னர் அவர்கள் முன்வைத்த கருத் தாக்கங்களும் கோட்பாடுகளும் விமர்சிக்கப் பெற்றன. இனவரைவியல் கோட்பாடுகளை உருவாக்கமட்டுமல்லாது மறுபரிசீலனை செய்யவும் பயன்படும் என்ற கருத்து வலுப் பெற்றறது (மார்ட்டின் ஷேமர்சிலி:1991:24). எந்தத் தரவுகளிலிருந்து கோட்பாடுகளும் விதிகளும் உருவாக்கப்பட்டனவோ அந்தத் தரவுகளும் சமவளவில் இன்றியமையாதவை. எனவே இனவரைவியலாளர்கள் விதிகளை மட்டுமல்ல இனவரைவியலையும் ஒழுங்குப் படுத்தித் தருவது ஆய்வொழுக்கமாகக் கருதப்படுகின்றது. ஒரு பண்பாட்டில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை அறியவும் அவை தேவை எனக் கருதப்பட்டது. எனவே பண்பாட்டை எழுதுதல் என்பதும் மானிடவியலின் மையச் செயல்பாடுகளுள் ஒன்றாக இணைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கக் காலக் கிரேக்கத் தத்துவ அறிஞர்களே முதன் முதலில் இனவரைவியலைத் தொடங்கி வைத்தனர். செனோபேன்ஸ் (கிமு.570-475) ஹெரோடாட்டஸ் (கிமு.485-425), டமோகிரிட்டஸ் (கிமு.460-370), சாக்கிரட்டீஸ் (கிமு. 470-399), அரிஸ்டாட்டில் (கிமு. 384-322), எப்பிக்கூரஸ் (கிமு.341-270) ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் உலகின் பல பகுதிகளுக்குப் பயணம் செய்து வெவ் வேறு இனக்குழுக்களின் பழக்க வழக்கங் களையும் சமுதாய அமைப்பையும் குறித்து எழுதினர். இப்பயணங்கள் அவர்களுக்கு மக்கள் அனைவரும் உலகின் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரியான உடல் தோற்ற அமைப்புடனும் பண் பாட்டுடனும் இல்லை என்ற உண்மையை உணரச் செய்தது. ஹெரோடாட்டஸ் 50க்கும் மேற்பட்ட இனக்குழுக்களின் வாழ்க்கை முறைகளை விரிவாக எழுதினார். தான் சென்று பார்த்த இடங்கள் பற்றியும் அவற்றின் புவியியல், இயற்கைக் கூறுகள் பற்றியும் எழுதினார். எனவே இவரை வரலாற்றியலின் தந்தை என்று அழைப்பர். ஒரு பண்பாட்டைச் சேர்ந்த எந்த ஒரு பழக்கவழக்கமும் பொருளற்ற தன்மையில் அவர்களின் பண்பாட்டில் இடம் பெறவில்லை என்பதை உணர்த்தினார். இக்கருத்தே இன்றைய மானிடவியலின் மையக்கருத்தாக உள்ளது. எனவே இவரைக் கிரேக்க இனவியலின் தந்தை என்றும் அழைப்பர் (பக்தவத்சல பாரதி 1990 : 6-7). ஹெரோடாட்டஸின் எழுத்துக்கள் வரலாறாகவும் இனவரை வியலாகவும் கருதப்பட்டன என்பது கவனத்திற் குரியது. அக்காலத்தில் வரலாறும் இன வரைவியலும் வேறுபடுத்தி அறியப்பட வில்லை என்பதே உண்மை.

புத்தாய்வுக் காலத்திலும் (கிபி.12-கிபி.16) அறிவொளிக் காலத்திலும் (கிபி.17—கிபி.18) பயணங்களின் எல்லைகள் விரிவடைந்தன. குறிப்பாக உலகின் அனைத்து நிலப் பரப்புக்களும் மனித அறிவுக்கு எட்டியது. உலகம் உருண்டை யானது என்ற கருத்தும் நிலைப்பெற்றது. எனவே இக்காலங்களில் பயணிகள் பல மனிதக் குழுக்கள் பற்றி விரிவாக எழுதினர். வேற்றுப் பண்பாட்டு மரபுகள் அவர்களுக்கு வியப்பாகவும் விந்தையாகவும் காணப்பட்டதால் அவற்றை விரிவாக எழுதத் தலைப்பட்டனர். கி.பி.18-19ம் நூற்றாண்டுகளில் கிறித்தவச் சமயபரப்புனர்கள் மூன்றாம் உலகநாடுகளிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் சென்றபோது அவர்கள் சந்தித்த மக்கள் இனத்தவர்கள் குறித்து விரிவாக எழுதினர். அவர்களைத் தொடர்ந்து காலனியம் என்னும் புதிய ஆட்சிமுறையோடு தனது அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொண்ட பிரிட்டன், ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளைச் சார்ந்த அதிகாரிகள் காலனியப்படுத்திய நாடுகளில் வாழ்ந்த மக்களைக் குறித்து எழுதினர்.

இவ்வாறு இனவரைவியல் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு நோக்கங்களுக்காக எழுதப்பெற்றன. மானிடவியல் அறிவியல்புலமாக வளர்ச்சி பெறத் தொடங்கிய 18ஆம் நூற்றாண்டி லிருந்து இனவரைவியலின் போக்கு மாறத் தொடங்கியது. இனவரைவியலை ஒரு பனுவலாகக் கருதாத மானிடவியல் இப்போது இனவரைவியலையும் ஆய்வையும் தனித் தனியே பிரித்துக் காணத் தலைப்பட்டது. மானிடவியல் ஆய்வுகளுக்கு இனவரைவியல் அடிப்படையானது என்பதை மானிடவியலாளர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். இனவரைவியலை எழுதுதல் என்னும் கருத்தியல் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையியலாக மானிடவியலில் இக் காலத்திலிருந்து பரிணமிக்கத் தொடங்கியது. ஏனையச் சமூக அறிவியல் புலங்களில் செய்யப்படும் களஆய்வுகளிலிருந்து இனவரைவியல் வெறுபடுத்திக்காட்டப்பட்டது. "வெறும் மதிப்பாய்வு செய்தல், புள்ளிவிவர அடிப்படையில் ஆய்வு செய்தல் போன்ற பிற சமூக அறிவியல்களின் விதி தருமுறையிலிருந்து உய்த்துணர்தல் முறையைக் காட்டிலும், இனவரைவியலின் கண்டுபிடிப்புகள் ஆக்கத் தன்மை வாய்ந்தனவாகவும் அதன் வலிமைக்கும் நெகிழ்வுக்கும் காரணமாகவும் உள்ளன. இத்தன்மை மற்ற சமூக அறிவியல்களில் இல்லை" (ஜான் மோனகன், 2005:35-36). ஒரு குழுவின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அப்பண்பாட்டில் இயங்கும் விதிகளைக் கண்டுபிடித்து அவற்றை எழுத்து வடிவில் வெளிப்படுத்துவதே இனவரைவியல் என அர்த்தப்படுத்தப்பெற்றது. பண்பாட்டை எழுதுவது என்பதே இதன் உள்ளீடு ஆகும். பண்பாட்டை எவ்வாறு எழுதுவது? அந்தப் பண்பாட்டோடு வாழ்ந்து, உணர்ந்து, அனுபவித்தே எழுத இயலும் எனத் தொடக்கக்கால மானிடவியலார் நம்பினர். இது பங்கேற்பு உற்றுநோக்கல் மூலமே சாத்தியமானது என மாலினோவ்ஸ்கி வலியுறுத்தினார். இவர் செயற்பாடு (Function), சூழல் (Context) ஆகிய இரு கருத்தாக்கங்களையும் முதன்மைப்படுத்தினார். பண்பாட்டுக்கூறுகள் எவ்வாறு செயல்படுகின்றன? அவை ஒன்றோடு ஒன்று எவ்வாறு தொடர்பு கொள்கின்றன? இந்த உறவு எவ்வாறு ஓர் ஒருங்கிணைந்த முழுமையாகச் செயலாற்று கின்றது? ஒவ்வொரு கூறும் அது செயற் படும் சூழலில் எவ்வாறு அர்த்தம் பெறுகின்றது? என்பன போன்ற அணுகுமுறை இனவரைவியலுக்குத் தேவை என்பதை மாலினோவ்ஸ்கி உணர்த்தினார். அமெரிக்க மானிடவியலின் தந்தை எனப் போற்றப்படும் பிரான்ஸ் போவாஸ் என்பவர் இனவரைவியலுக்கு வரலாற்றியல் பார்வை இன்றியமையாதது எனக் குறிப்பிட்டார். நிகழ்காலப் பண்பாட்டுக் கூறுகளின் இயக்கத்தில் வரலாற்றுக் கால நிகழ்ச்சிகள் பெரும்பங்கு பெற்றுள்ளன என்பதால் ஒரு பண்பாட்டுக் கூறின் தன்மையை விளக்க முற்படும் போது அதன் முந்தைய வரலாற்றுப் பின்னணியை முழுவதுமாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது என போவாஸ் நம்பினார் (பக்தவத்சல பாரதி 1990 :114 -115).

இனவரைவியலை எவ்வாறு சேகரிக்க வேண்டும் என்பதில் மானிடவியலாரிடம் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. மானிடவியலின் பல்வேறு கோட்பாடுகள் உருப்பெற்ற பின்னர் அக்கோட்பாடுகளின் தேவைகளுக் கெல்லாம் இனவரைவியல் இடம் தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பே இனவரைவியலின் பரிணாமத்தையும் போக்கையும் விரிவுபடுத்தியது எனலாம். இனவரைவியலைச் சேகரிப் பவனுக்கும் அவன் பணி செய்யும் பண்பாட்டுக்கும் இடையிலான தொடர்பும் இனவரைவியலை எழுதுவதில் சில சிக்கல்களைத் தோற்றுவிப்பதை மானிட வியலாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். அகவய (Etic), புறவய (Emic) பார்வைகள், பண்பாட்டுச் சார்புடைமை (cultural relativism), இனஉயர்வுவாதம் (Ethnocentrism) போன்ற கருத்தாக்கங்கள் இனவரைவியல்களில் செல்வாக்கு செலுத்தும் வாய்ப்புக்கள் உண்டு என்றும் இவை இனவரைவியல்களின் மதிப்பைக் குறைத்து விடும் என்றும் அஞ்சினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பண்பாட்டை முழுமையாக எழுத இயலுமா? என்பது சவாலான ஒன்றுதான். "ஒரு சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி உண்மையிலேயே முழுமையான விவரிப்பை எழுதுவது என்பது ஒரு நூறு ஆய்வாளர்களின் திறனுக்கும் அப்பாற்பட்டதாகும். களத்திற்குச் செல்லும் ஆய்வாளர் அச்சமூகத்தின் சமூக வாழ்வின் குறிப்பிட்ட சில அம்சங்களைப் படித்து எழுதும் எண்ணத்துடன் செல்கிறார். இவர் எழுதக்கூடிய இந்த விவரிப்பானது. மக்களின் சூழலியல் தகவமைப்பு முதல் அவர்களின் இறையியல் வரையிலும், பாலினங்களுக்கிடையியேயான உறவு நிலைகள், அரசியல் முறைகளின் அசைவியக்கம் உள்ளிட்ட இன்னும் பிற வகைகளை அறிவது வரையிலும் இதிலடங்கும்" (ஜான் மோனகன்,2005:38). பண்பாட்டை முழுமையாக எழுத்து வடிவில் தருவது எளிதான செயல் அன்று. எனவே இயன்றவரை முழுமையாகத் தர மானிடவியலாளர் பல வகையினங்களை வரையறை செய்தனர். அவை : "புவிச்சூழலியல்(topography), சுற்றுச்சூழல் (environment), காலநிலை (climate), குடியிருப்பு முறை (settlement pattern), பொருள்சார் பண்பாடு (material culture), குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை (residence pattern), வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டுவயமாக்க முறை (enculturation), மக்களின் உளவியல் பாங்குகள், மணக் கொடை(வரதட்சணை), மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence economy), தொழிற் பகுப்பு முறை (division of labour), உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறைகள், அதிகார வரவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள்(customary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறை, மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், நாட்டார் வழக்காறுகள்" ஆகிய கூறுகளை இனவரைவியலாளன் செய்திகள் திரட்டுவதற்காக முதன்மைப் படுத்துகிறான் (பக்தவத்சல பாரதி, 1999:118,119).

இவற்றைச் சேகரித்து ஒழுங்குப்படுத்தித் தந்தால் ஒரளவிற்கு முழுமையான பண்பாட்டை வெளிப்படுத்தலாம். மேற்குறித்த கூறுகள் ஒரு பண்பாட்டை முழுமையாக விளக்குவதற்கு முழுமையானது என்று கூறி விட முடியாது. இவற்றிற்கு மேலும் பல நுட்பமான செய்திகள் தேவைப்படலாம். அதனை அப்பண்பாட்டுக்குள் பணியாற்றும்போது அல்லது அப்பண்பாட்டோடு நெருக்கமான உறவு கொள்ளும்போது உணரலாம். எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை எழுத்து வடிவாக அல்லது பிரதிபலிக்க குறிப்பிட்ட முறையியல் தவிர்க்க முடியாதது. ஒரு பண்பாட்டின் இன்றியமையாத கூறுகள் எவை?. அப்பண்பாடு எவ்வாறு அடையாளப்படுத்தப்படுகிறது? எவ்வாறு இயங்குகிறது? எவ்வாறு தொடர்பு கொள்கிறது? என்பன போன்றவற்றை விளக்க அல்லது புரிந்துகொள்ள வரையறுக்கப்பெற்ற சில கருத்தாக்கங்கள் தேவை. இனவரைவியலை ஓர் ஒழுங்கமைப்பாக எழுத அல்லது பனுவலாக்கம் செய்ய சில கருத்தாக்கங்கள் தவிர்க்க முடியாதவை. இக்கருத்தாக்கங்கள் அரூபமாக்கப் பட்டவையாக இருப்பினும் எதார்த்தமான பண்பாட்டை அவை பிரதிநிதித்துவம் செய்கின்றன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையிலேயே மேற்குறித்த பட்டியல் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவரைவியல் எழுதப்படும் முறைகளின் அடிப்படையில் பல வகைகளாக அடையாளப் படுத்தப்படுகின்றன. அவை:

1. வருணனை இனவரைவியல் (Thick descriptive ethnography)
2. விமர்சன இனவரைவியல் (Interpretive ethnography)
3. விளக்க இனவரைவியல் (Descriptive ethnography)
4. வரலாற்று இனவரைவியல் (Historical ethnography)
5. தன்வரலாற்று இனவரைவியல் (Autobiographycial ethnography)
6. இனவரைவு இலக்கியங்கள் (Ethnographic literature)

வருணனை இனவரைவியல் என்பது ஒரு பண்பாட்டை உற்றுநோக்கி அனுபவித்து அறிந்து தான் அந்தப் பண்பாட்டோடு உறவு கொண்டதன் மூலம் பெற்ற அனுபவங்களையும் இணைத்து ஒரு புதினத்தைப் படைப்பது போன்று வருணித்து எழுதுவதாகும். "இதில் தரவுகளைச் சேகரிக்கும் முறையைப் பற்றிக் கூறும் போது இனவரை வியலர்களின் களப்பணி அனுபவங் களையும் சேர்த்து எழுதும் போக்குக் காணப்படுகின்றது" (ஜான் மோனகன்,2005:45-46). இது படிப்பவர்களின் மனக்கண்களின் முன் அப்பண்பாட்டைக் கொண்டுவந்து நிறுத்தும் முயற்சியாகும். பண்பாட்டை எழுத வருணணை முறையியலே சிறந்தது என்பது இதன் அடிப்படைக் கருத்தாகும். விமர்சன இனவரை வியல் என்பது இனவரைவி யலாளனின் சொந்த கருத்துக்கள், பிரதிபலிப்புகள், விமர்சனங்கள் ஆகியவற்றோடு தரவுகளைப் பொதுமைப்படுத்தி எழுதப்படுவதாகும். இது ஆய்வுரையின் பண்புகளைப்பெற்றது எனலாம். விளக்க இனவரைவியல் என்பது மிக நுட்பமாக எழுதப்படுவதாகும். நீண்டகாலமாக மானிடவி யலார் இனவரைவியல் எழுதுவதற்குப் பின்பற்றி வரும் முறை இதுவாகும். விமர்சனமற்ற, சார்பற்ற வருணனை முறையில் இது அமைய வேண்டும் என்பர். மூன்றாவது நபரின் குரலாக எழுதப்படும் இனவரைவியல் என்றும் இதனைக் குறிப்பிடுவர். ஒரு சிறிய தகவலைக் கூட விட்டுவிடாமல் தேவைக்கு அதிகமாகவே விளக்கி எழுதுதல் என்பது இம் முறையில் பெரிதும் விரும்பப்படும். நன்னூலார் குறிப்பிடும் மிகைப்படக் கூறல் என்பது இதற்குப்பொருந்தும். மிகைப்பட எழுதுவதே விளக்க இனவரைவியலின் அடிப்படைப் பண்பாகும். மானிடவியலாளர் இனவரைவியல் என்பதைச் சமகாலத் தளத்திற்குரியதாக மட்டுமே கருதுவர். அதாவது அது நிகழ் காலத்தோடு தொடர்புடையது. ஆய்வு நிகழ்த்தப்படும் காலத்தில் இனவரைவியலைச் சேகரிக்க வேண்டும். இனவரைவியல் மாற்றத்திற்கு உள்ளாகக் கூடியது. எனவே அதன் காலத் தளம் நிகழ் காலம் மட்டுமே என நம்பினர். பல்வேறு கால அடுக்குகளில் இனவரைவியலில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை ஆய்வுக்குட்படுத்த நிகழ்காலத் தளம் மட்டும் போதாது என்ற எண்ணம் தோன்றிய போது பல்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்ட இனவரைவியல்கள் ஆய்வுக்குரிய தரவாகலாம் என்பது ஒத்துக் கொள்ளப்பட்டது. எனவே வெவ்வேறு கால கட்டங்களில் எழுதப்பட்ட இனவரைவியல்கள் வரலாற்று இனவரைவியல் என அடையாளப் படுத்தப்பட்டது. பயணிகள், சமயத்தொண்டர்கள், அரசு அதிகாரிகள் எழுதிய பயணக்குறிப்புகள், கையேடுகள், மேனுவல்ஸ் போன்றவை இவ்வகையில் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி மரபைச் சார்ந்து எழுதப்படும் வாழ்க்கைக் கதைகள், அனுபவங்கள், சமூக வாழ்க்கை மீதான விமர்சனங்கள் ஆகியவையே தன்வரலாற்று இனவரைவுகள் என அழைக்கப் படுகின்றன (Roseanne L.Hoefel 2003:24-25). அழகியநாயகியின் கவலை, பாமாவின் கருக்கு, ராஜ்கௌதமனின் சிலுவைராசனின் கதை, போன்றவை இவ்வகை இனவரைவியலுக்குத் தக்கச் சான்றுகளாகும். தன்வரலாறுகளையும் ஒரு வகையான இனவரைவியலாகக் கருதலாம் என்ற கருத்து உள்ளது. இக்கருத்திற்கு வலுசேர்க்கும் வகையில் சவரிராயப் பிள்ளையின் நாட்குறிப்புகள், உ.வே.சா.வின் என்சரித்திரம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கவை. ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு பண்பாட்டில் வாழ்ந்து பெற்ற அனுபவங்களின் தொகுப்பாகத் தன்வரலாறு அமைகின்றது. இது ஒரு தகவலாளி தான் வாழும் பண்பாட்டில் பெற்ற அனுபவங்களை விளக்குவதற்குச் சமமானதாகும் என்று சொல்லப்படுகின்றது. தன்வரலாறு கூறும் பாணியில் இனவரைவு எழுதுவது தற்காலத்தில் புது முறையியலாக வளர்ந்து வருகின்றது. "பழைய இனவரைவியலில் ஏகபோக உரிமையுடன் கூடிய ஆசிரியரின் எழுத்து முறைக்கு மாறாக இப்போதைய இனவரைவி யலர்கள் தன்வரலாறு கூறும் பாணியிலான எடுத்துரைக்கும் முறையைக் கையாளுகின்றனர். இதில் இனவரைவியலரின் பின்புலமும் அவர் மக்களுடன் கொண்டுள்ள உறவுநிலைகளும் இனவரைவியலின் மையப் பொருளாகின்றன" (ஜான் மோனகன்,2005:50).

இனவரைவு இலக்கியம் என்பது இலக்கியத்தின் வழியாக ஒரு குறிப்பிட்டப் பண்பாட்டை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விளக்குவது ஆகும். குறிப்பிட்டப் பண்பாட்டைச் சார்ந்த படைப்பாளி தனது பண்பாட்டின் வாழ்வியலை அல்லது மரபுகளை இலக்கியமாக வடித்துத் தருவதே இனவரைவு இலக்கியமாகும். பண்பாட்டிற்கு வெளியில் உள்ள ஒருவராலும் இதனைச் செய்ய இயலும். அவ்வாறாயின் அது புறநோக்கு ஆகும். முந்தியது அகநோக்கு ஆகும். இதனைத் திணைசார் இலக்கியம் என்றும் குறிப்பிடலாம். மண்ணின் மணம், உள்ளூர் மரபுகள், வாழ்வியல் தோரணைகள், சொந்த மொழி, சொந்தம் கொண்டாடும் மரபுகள், உலக நோக்கு, தனதுவெளி, வழக்காறுகள், விருப்பு வெறுப்புகள் இவையெல்லாவற்றையும் விரவித் தருவதே இவ்வகை இலக்கியத்தின் பண்பாகும். புறவயமான யதார்த்தைப் பிரதிபலிப்பது அதன் இன்றியமையாத இயல்பு எனலாம். தமிழில் இனவரைவு இலக்கியங்கள் நெடிய மரபுடன் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பள்ளு, குறவஞ்சி உள்ளிட்ட சிற்றிலக்கியங்கள் போன்றவை இனவரைவு இலக்கியங்களாகக் கொள்ளத் தக்கவை. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் ஆகிய தற்கால இலக்கிய வடிவங்களிலும் இத்தகைய பண்புகளைக் காணலாம். இமயத்தின் கோவேறு கழுதைகள், என்.டி.ராஜ்குமாரின் ஒடக்கு, நட.சிவகுமாரின் உவர்மண், குமாரசெல்வாவின் உக்குலு, பழமலாய் கவிதைகள் எனத் தற்கால இலக்கியத்தில் இவ்வகைக்கு நீண்ட பட்டியலைத் தரலாம். தமிழில் இனவரைவு இலக்கியங்களை அடையாளப்படுத்தும் முயற்சி நடந்துள்ளது என்பதும் நம் கவனத்திற்குரியது. ஆ.சிவசுப்பிரமணியம்(1995) எழுதிய நாவலும் இனவரைவியலும் என்னும் கட்டுரையும் ஆ.தனஞ்செயன் எழுதிய இனவரைவியல் கவிதை என்னும் கட்டுரையும் கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும் (2010) என்னும் கட்டுரையும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

இலக்கிய இனவரைவியல் (Literary ethnography) என்பது இலக்கியத்தை மானிடவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதற்கான ஒரு முறையியல் ஆகும். பண்பாடு என்பது எண்ணற்ற கூறுகளால் இணைக்கப் பெற்ற ஒழுங்கமைப்பு ஆகும். கற்றுணர்ந்து பகிர்ந்து கொள்ளப்படும் நடத்தை முறைகளின் தொகுப்பே பண்பாடு என மானிடவியலார் கூறுவர். அது வெறும் நடத்தை முறைகளின் தொகுப்பு மட்டும் அன்று. நடத்தை முறைகள் குறிப்பிட்ட குழு வாழும் நிலவியல், காலச்சூழல், இயற்கை அமைவுகள் சுற்றி அமைந்திருக்கும் வெவ்வேறு குழுக்கள் ஆகியவற்றோடும் தொடர்புடையவை. எனவே, நடத்தை முறைகளைத் தனியே பிரித்துப் பார்ப்பது என்பது கடினமானது. ஒவ்வொரு நடத்தை முறைக்கும் குறிப்பிட்ட பண்பாட்டு வெளி அமைந்து கிடப்பது இயல்பு. மறுபுறத்தில் நடத்தை முறைகள் பண்பாட்டு வெளியோடு மட்டும் முடங்கி விடுவது இல்லை. அவை இயற்கை வெளியோடும் தொடர்பு கொண்டிருப்பதைக் காணலாம். இதனைச் சடங்குகள், வழிபாடு, நம்பிக்கைகள் போன்றவற்றில் வெளிப்படுவதை பல அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இவ்வாறாக இனவரைவியல் என்பது நுட்பமான பரந்த தளத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தத் தளம் இலக்கியங்களில் பதிவாகும் இனவரைவியல் தரவுகளுக்கும் உண்டு என்பதை மனங்கொள்ள வேண்டும்.

படைப்பாளி கவிதையின் உள்ளடக்கத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் முதல், கரு, உரி ஆகிய கருத்தாக்கங்களின் வழி தெளிவுபடுத்தியுள்ளார். தொல்காப்பியர் வகுத்துள்ள இந்நெறி முறை இலக்கியம் படைப்பவன் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை அம்சம் ஒன்றைப் போதிக்கின்றது. படைப்பாளி ஒருவன் சுய சிந்தனை என்ற எல்லைக்குள் நின்று மட்டும் ஒரு இலக்கியத்தைப் படைத்து விட முடியாது என்பதே அது. அவனைச் சுற்றியுள்ள புற உலகின் அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் உற்று நோக்கி அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும், இயக்கங்களையும் நன்றாகப் புரிந்து கொண்டு அவற்றுடன் தன் கற்பனையையும் இணைத்து இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே தொல்காப்பியர் கருத்தாகும் என்கிறார்(ஆ.சிவசுப்பிரமணியன்,1995:5,6). படைப்பாளி அகம் அல்லது புறம் சார்ந்த செய்திகளை உள்ளடக்கமாகப் பேசும்போதே திணைக்கோட்பாட்டு அடிப்படையிலான நடத்தை முறைகளைப் பிற்புலமாகக் கொள்ளவேண்டும் என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்தாகும். திணைக்கோட்பாட்டு அடிப்படை யிலான நடத்தை முறைகளின் தொகுப்பு இனவரைவியலுக்குச் சமமானது. அதாவது, கவிதை இனவரைவியல் தரவுகளின் மீது கட்டப்படவேண்டும் என்பதே தொல்காப்பியர் வகுத்தளிக்கும் கவிதையியல் மரபு ஆகும் (ஞா.ஸ்டீபன் 2010: 13).

இனவரைவியலைப் படைப்பாளியும் பயன்படுத்தலாம். திறனாய்வாளனும் பயன் படுத்தலாம். படைப்பாளி புனைவுகளோடு பயன்படுத்துவான். அவன் இனவரைவியலை முழுமையாகத் தருவதில்லை. தன் தேவைக்கேற்ப வருணனைகளாகவும் உவமை உருவகங்களாகவும் செய்திகளாகவும் அதைத் தருகின்றான். இனவரைவியலைத் தொகுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது அவனது நோக்கம் இல்லை என்பதால் படைப்புகளில் இனவரைவியல் தகவல்களையே காண முடிகின்றது. படைப்பாளிகள் பதிவு செய்யும் இவ் இனவரைவியல் தகவல்களை ஆய்வுக்குப் பயன்படுத்த இயலுமா? என்பது விவாதத்திற் குரியதாக உள்ளது. இலக்கிய மானிடவியல் (Literary Anthropology) புலம் இலக்கியங்களும் ஒருவகையான இனவரைவியல்தான் என்று வாதிடுகின்றது. இலக்கியத்தின் வழி ஒரு பண்பாட்டைப் புரிந்து கொள்ள இயலும் என அது நம்புகின்றது. இலக்கியத்தை மானிடவி யலுக்கானத் தரவாகப் பயன்படுத்த முடியும் என்ற கருத்தை முதன்முதலில் பொயோட்டஸ் என்பவர் 1977 இல் முன்வைத்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின் மானிடவியலாளருக்கு இலக்கியத்தை மானிடவியல் சார்ந்த தரவாக அல்லது இலக்கியங்களை இனவரைவியல்களாக எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. மார்கிரட் மீட் என்ற அம்மையார் அத்தகைய ஆய்வு ஒன்றையும் நிகழ்த்திக் காட்டினார். தொன்மையான இலக்கிய மரபுகளைக் கொண்ட சமூகங்கள் அவற்றின் வரலாறு, பண்பாடு, சமூக வழக்கங்கள் தொடர்பான செய்திகளை இலக்கியங்களில் பதிவு செய்துள்ளன என்பது உலகளவில் ஒப்புக் கொள்ளப்படும் கருத்தாகும். பழந்தமிழ்ச் சமூகத்தையும் அதன் பண்பாடு, வரலாறு ஆகியவற்றைக் குறித்துப் பேச சங்க இலக்கியங்களைச் சான்றாக நாம் பயன் படுத்துகின்றோம். இதனை நாம் ஒப்புக் கொள்கின்றோம். ஆனால் சமூக அமைப்பு, பண்பாடு, வரலாறு ஆகியவற்றை இலக்கியங் களிலிருந்து தருவிக்க அறிவியல் அடிப்படையிலான அல்லது தருக்கத்தின் அடிப்படையிலான ஒரு முறையியல் தேவை என்பது இன்றியமையாதது. அத்தகைய ஒரு முறையியலுக்கான வாய்ப்பை இலக்கிய இனவரைவியல் தருகின்றது.

படைப்பாக்கத்திற்கு இனவரைவியல் இன்றியமையாதது என்பதை இலக்கியப் பனுவல்களைச் சமூகப் பிற்புலத்தில் வாசிக்கும் போது உணரலாம். இலக்கியம் பண்பாட்டின் உற்பத்திப் பொருள். மறுபக்கத்தில் அது பண்பாட்டைச் சமைப்பதாகவும் விளங்குகின்றது. இலக்கியப் பனுவல்களில் பரந்து காணப்படும் இனவரைவியல் தகவல்களினாலேயே இது சாத்தியமாகின்றது. படைப்பாளி தான் சொல்ல நினைப்பதை நேரடியாகப் பேசிவிட்டால் அது செய்தித் தொகுப்பாகிவிடும். அதற்கு இலக்கியத் தன்மை கொடுக்க இனவரைவியலும் புனைவும் தேவைப்படுகின்றன. படைப்பாளி உருவாக்கும் பனுவல் என்பது சமூக வாழ்விலிருந்து கட்டப்படுகின்றது. எனவே அவன் வாழ்க்கைச் சிக்கல்களைப் பற்றிப் பேச வாழ்வியலைப் பிற்புலமாக எடுத்துக் கொள்கின்றான். எனவே படைப்புக்கும் இனவரைவியலுக்கும் நெருக்கமான உறவு இருக்கின்றது. "இனவரை வியலாளன் தான் எடுத்துக் கொண்ட பண்பாட்டிற்கு வேறு ஒருவர் வந்தாலும் தன்னைப்போலவே அவராலும் விளக்க இயலும் என்ற சவாலோடு பணியாற்றுவார். அதாவது இருவரது முடிவுகளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பர். அவர் காலம், இடம், மக்கள் ஆகியவற்றைப் பொதுமைப்படுத்துவார். அவர் சமூகத்தின் குரலை இனங்காண முயல்வார். ஆனால் படைப்பாளி தனித் தன்மையான, புத்துணர்வுமிக்க அசலான வாழ்க்கை மற்றும் தனிநபர்களையும் கவனத்தில் கொள்வார். காலம், இடம், மக்கள் ஆகியவற்றைப் பொதுமைப் படுத்தாமல் வரையறுத்துக் காட்டுவார்" (Janet Tallman 2003:12). இனவரைவியலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளியும் இனவரைவியலாளனும் ஒரேமாதிரியாகப் பயன்படுத்துவதில்லை என்பதையே டால்மென் சுட்டிக் காட்டுகின்றார். ஒரு படைப்பில் இனவரைவியல் எவ்வளவிற்கு இடம்பெறுகின்றதோ அவ்வளவிற்கு அது எதார்த்தத் தன்மையைப் பெறும் என்று கருதலாம். சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போன்றவைத் தமிழ்ப்பண்பாட்டின் ஆவணங்களாகக் கருதப்படுவதன் அடிப்படை இதுவே எனலாம்.

இலக்கியத்தில் பதிவாகியுள்ள இனவரைவியலை எவ்வாறு இனங்கண்டு தருவிப்பது? இனவரைவியலாளன் ஒரு குறிப்பிட்ட குழுவின் இனவரைவியலைப் பனுவலாக்கம் செய்ய பயன்படுத்தும் வகையினங்களின் பட்டியல் முன்னர் தரப்பெற்றது. அப்பட்டியலின் அடிப்படையில் இலக்கியங்களில் பதிவாகியுள்ள பண்பாட்டுக் கூறுகளைப் பட்டியலிட்டு அவற்றின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்வது முதற்படியாக அமைய வேண்டும். இலக்கியத் தரவுகளின் உண்மைத் தன்மையை எவ்வாறு உறுதி செய்வது? இதற்குச் சில வழிமுறைகளைக் கையாளலாம். சமகால இலக்கியமாக இருப்பின் களஆய்வு முறையை ஒரு வழிமுறையாகக் கொள்ளலாம். இருப்பினும் எல்லா இலக்கியப் பனுவல்களுக்கும் இது சாத்தியமற்றது. சான்றாகப் பழமையான இலக்கியங்களைக் குறிப்பிடலாம். அவ்வாறாயின் வேறு சில வழிமுறைகளும் தேவைப்படுகின்றன. குறுக்கு நோக்கீடு செய்தல், பிற ஆவணங்களோடு தொடர்புப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் சிலவற்றைத் தெளிவுப்படுத்தலாம். இத்தகைய வாய்ப்புகள் இல்லாத போது ஒரு குறிப்பிட்ட தகவல் திரும்பத் திரும்ப வந்து இலக்கியத் தொடர்ச்சி பெற்றிருந்தால் அதை உண்மைத் தன்மை யடையுதாகக் கருதும் வாய்ப்புண்டு. உவமைகள் தனிக் கவனத்திற்குரியவை. பெரும் பான்மையான உவமைகள் பார்த்தவற்றையே பிரதிபலிக்கும் தன்மையுடையவை. எனவே உவமைகள் இனவரைவியல் பண்புகள் பெற்றிருப்பது இயல்பு. இதனைப் போன்று வருணனைகள் எதார்த்தத்தைக் காட்சிப்படுத்தும் இயல்பைப் பெற்றிருக்கும். ஆனால் எல்லா வருணனைகளும் அவ்வாறு இருப்பதில்லை. சிலப்பதிகாரம் காவிரிப்பூம்பட்டினத்தை வருணிப்பதிலும் கம்ப இராமாயணம் அயோத்தியை வருணிப்பதிலும் இந்த வேறுபாட்டை உணரலாம். பள்ளு இலக்கியங்கள் தரும் வருணனைகளையும் ஒப்பிட்டுக் காணலாம். வருணனைகளின் எதார்த்தப் பண்பைப் பகுத்தறிவுக்குட்படுத்துவதன் மூலம் தெளிவுப்படுத்த இயலும். இலக்கியப் பனுவல்களில் பதிவாகியுள்ள சடங்குகள், வழிபாடுகள், பழக்கவழக்கங்கள், விளை யாட்டுக்கள், சமுதாய மரபுகள், மதிப்புகள், தொன்மங்கள், பண்பாட்டு எச்சங்கள் போன்றவற்றையும் மேற்கண்டவாறே தெளிவுப்படுத்தலாம்.

காலத்தால் முந்திய இலக்கியங்களைச் சமகாலத் தளத்தில் நின்று இனவரைவியல் ஆய்வுக்குட்படுத்துவது என்பது கோட் பாட்டடிப்படையில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கும் முயற்சியாகும். கால இடைவெளி, பல்வேறு காலஅடுக்குகளில் நிகழ்ந்துள்ள சமூகப் பண்பாட்டு மாற்றங்கள், மொழியில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் போன்றவற்றைக் கடந்து ஆய்வுக்குட்படுத்தும் இலக்கியத்தின் காலப் பரப்புக்குள் பயணிக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு பயணித்தாலும் இலக்கியம் தோன்றிய காலம், அவ்விலக்கியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனுவல் உள்ளடக்கியிருக்கும் காலப்பரப்பு ஆகியவற்றிற்கிடையிலான இடைவெளியும் சவாலாகத்தான் அமையும். படிமலர்ச்சியோடு தொடர்புடைய அனைத்துச் சமூக அறிவியல் ஆய்வுகளிலும் இந்தச் சிக்கல் பொதுவானது. தரவுகளைத் தர்க்கத்தின் அடிப்படையில் தொடர்புப்படுத்தி அவற்றை நிரல்படுத்திக் காண்பதே இச்சிக்கலை எதிர் கொள்ள கையாளும் முறையியலாகும். இருப்பினும் இம்முறை யியலை இலக்கியங்களில் எடுத்தாள்வது கடினமானது. எனவே அவ்வாறு எடுத்தாள் வதற்குத் துணைசெய்யும் வழிமுறை தேவை.

இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்டப் பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு நின்றுவிடுவதில்லை. எவ்வாறு மொழி, பண்பாடு, சமுதாய நிறுவனங்கள், மரபுகள், திணைசார் அறிவு போன்றவை கால அடுக்குகளைக் கடந்து படிமலர்ச்சியடைந்து சமகாலத் தளத்தில் நிற்கின்றனவோ அதனைப் போன்றே இலக்கிய மரபும் தொடர்ந்து வந்திருக்கின்றது என்பதை மனங்கொள்ள வேண்டும். அவ்வாறாயின் இலக்கியத்திற்கும் படிமலர்ச்சி உண்டு என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இலக்கிய வரலாறு என்ற கருத்தாக்கம் இப்படிமலர்ச்சிக் கொள்கையின் பாற்பட்டது என்பதும் இங்கு நினைவில் கொள்ளத் தகும். ஏனைய சமூகப் பண்பாட்டுக் கூறுகளில் நிகழும் மாற்றம், வளர்ச்சி ஆகிய இரு அசைவியக்கங்களும் இலக்கியத்திற்கும் உண்டு. இவை படிமலர்ச்சிக் கொள்கையில் இன்றியமையாதவை. எனவே காலத்தால் முந்திய இலக்கியப் பனுவலுக்கும் சமகால இலக்கியப் பனுவலுக்கும் இடையில் எவ்விதத் தொடர்புகளும் இல்லை என்று மறுக்க இயலாது. பனுவலிடைப் பனுவல் என்ற பின்னை நவீனத்துவச் சிந்தனையும் இலக்கியங்கள் தொன்மங்களால் ஆக்கப்படுகின்றன என்ற தொன்மவியலாளர்களின் கருத்தும் சசூர் குறிப்பிடும் மொழிக்கிடங்கு, உளவியலாளர்கள் குறிப்பிடும் மூலப்பழவடிவம், ஆழ்மனம் போன்றவை கால அடுக்குகளைத் தாண்டிய பனுவல் உறவுகளை உறுதி செய்யும் வாய்ப்புகளைப் பெற்றவை. வேறுவிதமாகச் சொல்வதென்றால் இக்கருத்தாக்கங்கள் அத்தகைய உறவுகளின் இருப்பை ஒத்துக் கொள்கின்றன எனலாம். இக்கருத்தாக்கங்கள் சமகாலத் தளத்திலிருந்து கால அடுக்குகளைக் கடந்து செல்லும் வாய்ப்புகளைத் தருகின்றன.

இலக்கியப் பனுவல்களின் வழியாகக் கால அடுக்குகளுக்குள் நுழையத் தனத்த அல்லது இலக்கியத்திற்குப் பொருந்தும் வழிமுறைகள் தேவை. முன்னர் குறிப்பட்டபடி அடையாளங் காணப்படும் இலக்கிய இனவரைவியல் தரவுகளைப் பின்வருமாறு சோதனைக்குட் படுத்தலாம். இலக்கியத் தொடர்ச்சி, வழக்கிறப்பும் எச்சங்களாதலும், திரிபடைதல், வளர்ச்சி நிலை, சமகாலத் தளத்தில் அடையாளங் காணுதல் ஆகிய செயல்பாடுகளின் வழி கிடைக்கப் பெற்ற தரவுகளின் சமகால நிலையையும் வெவ்வேறு கால அடுக்குகளில் அவற்றின் நிலையையும் அடையாளப்படுத்தலாம். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் இலக்கியத்திற்குப் பின் தோன்றிய அனைத்து இலக்கியங்களிலும் இந்தத் தேடுதலை நிகழ்த்துவது இன்றியமையாதது. இவ்வாறு அடையாளங்காணப்படும் இன வரைவியல் தரவுகளை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்துதல், இடைவெளிகளைத் தருக்க அனுமானத்தால் நிரப்பல், ஒருங்கிணைத்தல் போன்ற செயல்பாடுகளின் மூலம் இலக்கிய இனவரைவியல் பனுவல் ஒன்றைத் தருவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தருவிக்கப்பெற்ற இனவரைவியல் பனுவலை விமர்சன இனவரைவியல் பனுவலாக மாற்றுவது அடுத்தகட்டச் செயல் பாடாகும். அதாவது தருவிக்கப்பெற்ற இலக்கிய இனவரைவியல் பனுவலைத் தருக்கத்தின் அடிப்படையில் கேள்விகளுக் குள்ளாக்கிப் பிற ஆவணங்கள், ஆய்வுகள் போன்றவற்றோடு தொடர்புப்படுத்துதல், ஒப்பீடு செய்தல் ஆகியவற்றின் மூலம் விமர்சனம் செய்து விளக்கவேண்டும். இவ்வாறு விளக்குவதன் மூலம் விமர்சன இனவரைவியல் பனுவல் ஒன்றைத் தருவிக்கலாம். இப்படிமுறையின் துணைகொண்டு இலக்கியப் பனுவல் மீது நிகழ்த்தப்படும் பண்பாட்டு வாசிப்பு அல்லது அர்த்தப்படுத்துதலே இலக்கிய இனவரைவியலின் முறையியல் ஆகும். விமர்சன இனவரைவியல் பனுவல் ஒரு முழுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்க இயலாது. அத்தகைய முழுமையைப் பெற ஒரு குறிப்பட்ட காலகட்டத்தில் தோன்றிய அனைத்து இலக்கியங்களையும் கணக்கில் கொள்ளவேண்டும். களப்பணியில் எவ்வாறு பல தகவலாளிகளைத் தேர்வு செய்கின்றோமோ அதனைப் போன்றே வகைமை வேறு பாடில்லாமல் பல இலக்கியங்களை அல்லது ஒரு தொகுப்பை எடுத்துக் கொள்ளவேண்டும். இலக்கியங்களின் நோக்கம் இனவரைவியலைப் பதிவு செய்வதன்று. அது ஒரு சமூகத்தின் உற்பத்திப் பொருளாக இருப்பதால் இனவரை வியலைத் தவிர்க்க இயலாது என்ற கருது கோளின் அடிப்படையில்தான் இனவரை வியலைத் தேடமுடியும்.

இலக்கியப் பனுவலின் உள்ளடுக்கில் பண்பாட்டுப் பனுவல் ஒன்று உறைந்து கிடக்கின்றது என்பது வெளிப்படையாக அறியப்படுவதில்லை. இந்தப் பண்பாட்டுப் பனுவலை இனங்கண்டு வெளியில் எடுத்து வரும் போது பண்பாட்டையும் அது சார்ந்த சமூகத்தையும் நம்மால் புரிந்து கொள்ள இயலும். அந்தப் பனுவலே விமர்சன இனவரைவியல் பனுவலை உருவாக்கத் துணைசெய்யும். மேற்பரப்பில் வெளிப்படையாகத் தெரியும் செய்தி என்பது ஒரு தளம். இந்த அடுக்கைத் தாண்டி இலக்கியப் பனுவலில் பதிவாகியிருக்கும் பல சொற்களுக்கும் சொற்றொகுதிகளுக்கும் அல்லது குறிகளுக்கும் அப்பனுவலுக்கு வெளியேயிருந்து அர்த்தங்களைத் தேடவேண்டிய நிலை இருப்பதை நாம் அறிவோம். அர்த்தங்களைத் தேடி பனுவலுக்கு வெளியே நாம் செல்லும் பயணம் என்பது சமூகப்பண்பாட்டுத் தளம் என்பதை மனங்கொள்ள வேண்டும். அதாவது ஒர் இலக்கியப் பனுவல் என்பது அது தோன்றிய சமூகத்தின் பண்பாட்டு மரபுகளோடு நனவிலி நிலையில் ஓர் உறவை வைத்துள்ளது. இந்த உறவு வெளிப்படையாக அல்லது மறைமுகமாக அமையலாம். பண்பாட்டுப் பனுவல் இந்த உறவுகளால் கட்டப்படுகின்றது. இலக்கியப் பனுவலின் உள்ளே உறைந்துகிடக்கும் பண்பாட்டுப்பனுவல் அவ்விலக்கியம் தோன்றிய சமூகப்பண்பாட்டு அமைப்பொழுங்குக்குள் பயணிப்பதற்கானத் திறவுகோல்களை அல்லது குறிகளைத் தனக்குள்ளே வைத்திருக்கும். பெரும்பாலும் இந்தக் குறிகள் அப்பண்பாட்டின் அக உணர்வுகள், உலகக்கண்ணோட்டம், தன்னைப் பற்றிய மதிப்பீடுகள், பிற குழுக்கள் பற்றிய எண்ணங்கள், வாழ்வியல் விமர்சனங்கள், சமூகப்பண்பாட்டு அழுத்தங்களின் வெளிப் பாடுகள், எதிர்வினைகள் குறித்தவையாக அமையலாம். இவை போன்ற குறிகளின் வழியாகச் சமூகப் பண்பாட்டுத் தளத்தை வெளிச்சமிட்டுக் காட்டலாம். இக்குறிகளை இலக்கியப் பனுவல்களில் இனங்கண்டு அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த சமூகப்பண்பாட்டு மரபுகளை விளக்குவதன் மூலம் விமர்சன இனவரைவியல் பனுவல் உருவாக்கப்படும். இவ்வாறு உருவாக்கப்படும் பனுவலைக்கொண்டு இலக்கியப்பனுவலைத் தர்க்கத்தின் அடிப்படையில் அர்த்தப்படுத்தும் போது பண்பாட்டு வாசிப்பு சாத்தியமாகின்றது.

இம்முறையியலை ஒரு சான்றின் மூலம் விளக்குவோம். குமரிமாவட்டத்தில் "வண்ணான் மாத்து சும்மா லாத்து" என்ற பழமொழி வழக்கில் உள்ளது. அடுத்தவன் பொருள், மனம்போல் பயன்படுத்தலாம் என்பதே இந்தப் பழமொழி தரும் செய்தி ஆகும். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பது இதற்கு நேர் எதிரிடையான பழமொழி. தன் பொருளாக இருப்பின் அதனைப் பொன்னைப் போல் பாதுகாப்போம் மற்றவர் பொருளெனில் அதனைத் தம்பொருள் போல் பார்ப்பதில்லை என்பதையே இவ்விரு பழமொழிகளும் உணர்த்துகின்றன. ஆனால் இந்தச் செய்திகளையும் தாண்டி வண்ணான் மாத்து சும்மா லாத்து என்ற பழமொழி ஒரு நெடிய சமூக மரபைத் தனக்குள் வைத்திருப்பதைக் காணலாம். வாழ்க்கை வட்டச் சடங்குளில் குறிப்பாக திருமணம், இறப்பு போன்ற சூழல்களில் வண்ணார்கள் மாற்று விரிக்கும் வழக்கம் உண்டு. சிகப்புக் கம்பளம் விரிப்பது போன்று மரியாதைக்காகச் செய்யப்படும் வழக்கு இது. இதனை வண்ண்ணார்கள் செய்யக் கடமைப்பட்டவர்கள். இந்த மாற்றுத் துணி சலவை செய்து வண்ணார்களால் கொண்டு வரப்பட வேண்டும். பயன்பாட்டிற்குப் பின் அவர்கள் அதனை எடுத்துச் சென்று சலவை செய்ய வேண்டும். வண்ணாரால் விரிக்கப்பட்ட மாற்று எனவே அது சேதமடைவதையோ அல்லது அழுக்காவதையோ குறித்துப் பயன்படுத்துபவர்கள் கவலைப்படுவதில்லை. இது ஒரு சாதியின் கடமை. அதை உரிமையுடன் நன்கு அனுபவித்துக் கொள் என்பதே இப்பழமொழியின் பண்பாட்டுப் பனுவலாகும். சாதிய ஏற்றத்தாழ்வு, சாதிகளுக்குத் தரப்பட்ட கடமைகள், வன்மம், மேலாதிக்கம் ஆகிய அனைத்தின் வெளிப்பாடாக இந்தப் பழமொழி அமைந்துள்ளது. ஒரு பனுவல் மேற்பரப்பில் தரும் செய்திக்கு அப்பால் ஆழ்நிலையில் அது சமூக மரபுகளோடு கொண்டுள்ள உறவை இந்தச் சான்றின் வழி அறியலாம்.

மேற்கண்ட முறையியலின் அடிப்படையில் நெய்தல் திணைப்பாடல்களையும் ஆய்வுக்குட் படுத்திக் காண்போம். நெய்தல்திணைப் பாடல்கள் பெரும்பான்மை அகம் குறித்தனவாகவே அமைகின்றன. இவை 114 புலவர்களால் பாடப்பெற்றவை. மொத்தம் 215 பாடல்கள் உள்ளன. அப்பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பான்மைப் பாடல்கள் களவுக் குறித்த செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இயற்கைப் புணர்ச்சி நீங்கிய தலைவன் அல்லது தலைவியின் பிரிவுத் துயரால் விளைந்த இரங்கல் நிலையை அவை குறிப்பிடுகின்றன. இப்பொருளைக் குறிப்பிடும் போது கடல் குறித்தும் கடல்சார் மக்கள் குறித்தும் கடல்சார் சூழல் குறித்தும் வருணித்துள்ளன. குடியிருப்புகள், குடியிருப்பு களுக்கு அருகில் காணப்படும் மரம் செடிகள் ,உயிரினங்கள், மீன்கள், மீன்பிடிக் கருவிகள், கடல் போக்குவரத்துக் கருவிகள், தொழில்சார் உறவுகள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. மேற்குறித்த செய்திகள் நெய்தல் நிலச் சூழலைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இச்சூழல் இரங்கல் குறித்த பாடல்களை அமைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களால் தரப்பெற்றவை ஆகும். பாடலின் பொருண்மைக்காக இச்சூழல்கள் வருணிக்கப் பெற்றன. ஆனால் இச்சூழலிலிருந்து பாடலின் பொருண்மை எழவில்லை எனக் கருதலாம். ஏனெனில் இரங்கலும் இரங்கல் சார்ந்த துயரும் நெய்தல் நில மக்களுக்கு மட்டுமே உரியதன்று. இயற்கைப் புணர்ச்சியின் கண் நீங்கிய தலைவனும் தலைவியும் ஏனைய நிலங்களிலும் இருத்தல் உண்டு.இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்னும் உரிப் பொருளுக்கும் நெய்தல் நிலத்துக்கும் இடையிலான பண்பாட்டு உறவு என்ன என்பது கேள்விக்குரியது.அப்படி ஒரு பண்பாட்டு உறவு இருக்க இயலாது.ஏனெனில் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்பது வாழ்வியல் தோரணியாகும்.இது எல்லா பண்பாடு சார்ந்த மக்களிடமும் காணப்படும் உணர்வு ஆகும். இவ்வுணர்வை நெய்தல் நிலத்தோடு ஏன் அடையாளப்படுத்த வேண்டும்?கடல்சார் தொழில் அஞ்சுவதற்குரியது,நிச்சயமற்றது.எனவே அது இரங்கல் உணர்வோடு தொடர்புபடுத்தப் படுகின்றது எனக் கொண்டாலும் நெய்தல் திணைப்பாடல்களில் அஞ்சத்தக்க இவ்வுணர்வு வெளிப்படவில்லை.அவ்வாறாயின் நெய்தல் நிலத்தின் அகவய உணர்வு யாது என்பதைக் கண்டறிய வேண்டும்.

குறிஞ்சி நிலத்தைப் பற்றி நுட்பமாக அறிந்த கபிலரைப் போல கடலின் கரையைத் தாண்டிக் கடல் பரப்பில் நீரின் போக்குகளை மீன் பிடிக்கும் நுட்பங்களை, தொழில் நுட்பங்களைப் பற்றிய குறிப்புகளைத் தந்தவர்கள் குறைந்த அளவினராகவே உள்ளனர். காட்டிலுள்ள மரங்கள், மலர்கள், செடிகள் போன்றவற்றின் பட்டியலைத் துல்லியமாகத் தரும் சங்கப் புலவர்களின் கூட்டத்தில் மீன்களின் பட்டியலைத் தருபவர் யாரும் இல்லை. நெய்தல் நில மக்களிடமிருந்து கபிலனைப் போன்ற புலவன் வரவில்லையோ என்ற சந்தேகத்தைத் தான் நெய்தல் பாடல் குறிப்புகள் புலப்படுத்துகின்றன (அ.க.பெருமாள்-2005:12). அ.க.பெருமாள் தரும் குறிப்பு நெய்தல் நிலம் பற்றிய புரிதல்கள் ஏனைய நிலங்களைப் போன்று புலவர்களிடம் இல்லை என்பதை உறுதி செய்கிறது. நெய்தல் நிலம் சார்ந்த புலவன் இல்லையோ என்ற ஐயம் அல்லது நெய்தல் நிலப் புலவர்களின் பாடல்கள் தொகுக்கப்படவில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. குறிஞ்சி, பாலை, முல்லை பாடிய புலவர்களே நெய்தல் திணைப் பாடல்களையும் பாடியுள்ளனர். பெரும்பாலும் அப்பாடல்கள் கடல்சார் நிலத்தின் சூழலைப் பதிவு செய்தனவாகவே உள்ளன. பெரும்பாலும் அப்பதிவுகள் இரண்டாம்நிலை அனுபவங்களாக காணப்படுகின்றன. சுற்றுச்சூழல் குறித்த பதிவுகள் நேரிடை அனுபவங்களைப் போன்று காட்சியளித்தாலும் கடல்சார்ந்த அனுபவங்கள் இரண்டாம்நிலை அனுபவங்கள் என்பதில் ஐயமில்லை. அவ்வாறாயின் நெய்தல் நிலத்திற்கு வெளியிலிருந்து நெய்தலைக் காணும் புறநோக்காக இப்பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

பெரும்பான்மையான நெய்தல்திணைப் பாடல்களில் கடற்கரையின் சூழமைவு வருணிக்கப்பெற்றுள்ளது. கடற்கரையில் அமையப் பெற்றிருக்கும் சிறு ஊர்(அக.200) அதன் அருகில் ஒரு சோலை. இச்சோலையில் புன்னை, ஞாழல், தாழை, பனை ஆகிய மரங்கள் நிறைந்திருப்பது காட்டப்படுகிறது. புன்னை, தாழை ஆகியவற்றின் மலர்கள் வெண்மணற் பரப்பில் உதிர்ந்து கிடக்கும் காட்சி திரும்பத் திரும்ப சுட்டப்படுகிறது. மேலைக் காற்றும் , கீழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றும் வீசுவதும் குறிப்பிடப்படுகிறது. ஊர் புலால் நாற்றத்தால் நிறைந்தது என்றும் கடற்கரைப் பரப்பில் மீன்கள் காயவைக்கப்படும் என்றும் அம்மீன்களைப் பறவைகள் உண்ணாதவாறு பெண்கள் காவல்காத்தனர் என்றும் சொல்லப் பட்டுள்ளது. நெய்தலில் அமைந்த கடற்கரைச் சோலை இயற்கைப்புணர்ச்சிக்குரிய இடமாக சொல்லப்படுகிறது. வேற்று திணை சார்ந்த தலைவனும் , தலைவியும் இயற்கைப் புணர்ச்சிக்காக கடற்கரை சோலைக்கு வந்து சென்றனர் என்றும்(நற்றிணை-96) உணர முடிகிறது. இதன் காரணமாக நெய்தல் திணையில் அமைந்த சோலை அலர் தூற்றும் இடம் என்றும் அறம் உடையதில்லை (நற்-63) என்றும் குறிப்பிடப்படுகிறது. திணை அடிப்படையில் கடற்கரை என்பது இயற்கைப் புணர்ச்சிக்குரிய இடமாகும் அதன்கண் நீங்கிய பிரிவுக்குரிய இடமாகவும் சொல்லப்படுகிறது. கடற்கரையில் பனை, புன்னை, தாழை, ஞாழல் ஆகிய மரங்கள் நிறைந்த சோலை களவொழுக்கத்திற்குரிய இடமாக அடையாளப் படுத்தப்படுகிறது. திணைக்கு உரிப்பொருள் இன்றியமையாதது என்பதால் உரிப்பொருளோடு தொடர்புடைய அல்லது உரிப்பொருளுக்கு ஏற்புடைய நிலவியல் பகுதியை அது முன் வைக்கிறது. எனவே கடற்கரைச் சோலை என்பது நெய்தல் திணையை அடையாளப் படுத்தும் முதற்பொருளாகக் கொள்ளப்பட்டது. ஆனால் பாடல்களில் பதிவாகியுள்ள இனவரை வியல் மீன் வேட்டை, மீனை உலர வைத்தல், விளையாடுதல், கடலுக்குள் சென்ற கலன்களுக்கு வழிக்காட்டும் மணல் திட்டுகள் அமைத்த இடம், புலால் நாற்றம் மிக்க இடம் , பாதீடு நிகழும் இடம், மீன் கொள்ளும் இடம், மீன் வலைகளை உலர வைக்கும் இடம் என இந்நிலத்திற்குரிய மக்களின் அன்றாட வாழ்வியலோடு தொடர்புடைய நிலவியல் பகுதியாக அடையாளப் படுத்துகின்றது.

நெய்தல் திணைப் பாடல்கள் கடல்குறித்த சில கருத்தோட்டங்களையும் பதிவுச் செய்துள்ளன. நீலநிறக் கடல்(நற்-45), கருநிற கடல்(குறு-49), குணக்கடல் (நற்-215,குறு-49), பனிக்கடல் (நற்-91) பெருங்கடல் (நற்-106,117,155,163) உரவுகடல் (நற்-63), நெடுங்கடல் (நற்-175) ஊர்கடல் (நற்-211), நெடுநீர் (நற்-235) ஆகிய அடைமொழிகள் பதிவாகியுள்ளன. கடலின் தன்மை,அதன் புறத் தோற்றம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்அடைமொழிகள் அமைந்துள்ளன. இதனைப் போன்று கடலில் எழும் அலைகளும் வெவ்வேறு அடைமொழிகளால் குறிக்கப்படுகின்றன. படுதிரை(நற்-49), முழங்கு திரை(நற்-203), எறிதிரை (நற்-106) உரவுதிரை (நற்-159,235) ஆகிய அடைமொழிகள் காணப்படுகின்றன. வலிமை மிக்க அலைகள் வீடுகளுக்கு அருகில் வந்து சென்றன என்றும் வெண்மணலில் பரவிக் கிடந்த புன்னை மரப்பூக்களை ஒரு சேர வைத்து சென்றன என்றும் கடற்கரையில் ஆங்காங்கே உயர்ந்த மணல் திட்டுகளைக் குவித்து வைத்தன என்றும் குவிந்த மணல் திட்டுகளைக் கரைத்தன என்றும் பதிவாகியுள்ளது. பொங்கி வரும் அலையைத் தெளித்து விளையாடுதல்(நற்-254) நடுயாமத்தில் அலைகளின் ஓசை நெடுந் தொலைவுக்குக் கேட்டலும் அதனையும் பொருட்படுத்தாது பரதவக்குடி மக்கள் துயில்தலும் அலைகள் பாறைகளில் மோதி நுரையாகி கரைவதும் சிலப்பாடல்களில் பதிவாகியுள்ளன. கடற்கரை உயர்ந்த கரையை உடையதாகவும் மணல் திட்டுக்களைக்கொண்டதாகவும் தாழை, புன்னை மரங்கள் நிறைந்ததாகவும் சொல்லப் பட்டுள்ளது.

கடலில் மீன்பிடி தொழில் செய்யும் பரதவர்களின் மீன் வேட்டைத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலப்பாடல்களில் பதிவாகியுள்ளன. மீன்வேட்டை வாய்க்க மழை பொய்க்காமல் பெய்யும் என்னும் செய்தியை நற்-38 ஆவது பாடல் குறிப்பிடுகிறது. மழை பெய்யும் போது மீன்கள் கடலின் மேற்பரப்பிற்கு வருவதும் கடலில் கலக்கும் நீரோடைகளில் எதிர் நீச்சலிட்டு வருவதும் இயல்பு. இச்சூழலை மீன்பிடித் தொழில் செய்பவர்கள் வாய்பாகப் பயன்படுத்துவது உண்டு. மீனின் இயல்பை அறிந்த வேட்டைத் தொழில் செய்யும் நுட்பத்தை இப்பாடல் தெளிவாகச் சுட்டுவதைக் காணலாம். கடலின் அலைகள் மீன்களை இடம்பெயர்த்துச் செல்லும் (குறு-166) என்பதும் அலைகளால் இறால்மீன் அடித்து வரப்படும் (குறு-109)என்பதும் பதிவாகியுள்ளன. மீன்களின் இடப்பெயர்வும் அவற்றின் அசைவுகளும் நுட்பமாக கவனிக்கப்பெற்றுள்ளன. மீன் வேட்டைக்குரிய சூழல்கள் கண்டறியப் பட்டுள்ளன என்பதையே மேற்குறித்த சான்றுகள் விளக்குகின்றன.

மீன்பிடித் தொழிலுக்காக பல வகையான வலைகளைப் பயன்படுத்தினர் என அறிய முடிகிறது. ஒரே வலையைக் கொண்டு எல்லா வகை மீன்களையும் வேட்டையாட இயலாது. மீன்களின் அளவு அவற்றின் வலிமை ஆகியவற்றைப் பொறுத்து வலைகள் வேறுபடும். நற்றிணை 111 ஆவது பாடல் இறாலுடன் பிற மீன்களையும் பிடிக்குமாறு வலை செய்யப் பெற்றிருந்ததாகக் குறிப்பிடுகிறது. பொதுவாக இறால் மீனை பிடிப்பதற்குத் தனியாக வலையைப் பயன்படுத்தும் வழக்கம் தற்காலத்திலும் உள்ளது. இறால் பிடிக்கும் வலையில் வேறு மீன்களைப் பிடிப்பதில்லை. ஆனால் நற்-111 ஆவது பாடல் தரும் குறிப்பு இறால் மீன் பிடிக்கும் வலையில் பிற மீன்களையும் பிடிப்பதற்கு வசதியாக அது பின்னப்பட்டிருந்த செய்தியைக் குறிப்பிடுகிறது. இறால் மீன் கிடைக்காத போது பிற மீன்களை வேட்டையாட அவ்வலை பயன்படுத்தப்பட்டது எனக் கருதலாம். மீன் பிடித்தலுக்கு நுண் வலைகளைப் பயன்படுத்திய செய்தியைக் குறுந்தொகை பதிவுச் செய்துள்ளது. நுண் வலைகள் பெரும்பாலும் சிறிய வகை மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் .எனவே நெய்தல் நிலப் பரதவர்கள் வெவ்வேறு வகையான வலைகளை வைத்திருந்தனர் என அறியலாம்.

மீன்வேட்டைக்குக் கட்டுமரம், படகு (அம்பி,திமில், அகம் -280,330) போன்ற கலன்களில் செல்லும் போது விளக்கைப் பயன்படுத்திய செய்திகள் பல இடங்களில் பதிவாகியுள்ளன. மீன் எண்ணெயைச் சங்கில் ஊற்றி சிறுவிளக்கு செய்து மீன் பிடிக்கச் சென்றனர்.(நற்-175,215,239) மீன் வேட்டைக்குரிய காலம் இரவு என்பதை இதன் வழி அறியலாம். பொதுவாகவே இரவு வேட்டையில் தான் மீன்கள் மிகுதியாகக் கிடைக்கும். சூரியனின் கதிர்கள் பகலில் கடலின் மேற்பரப்பைக் கடுமையாக தாக்குவதால் மீன்கள் மேற்பரப்பிற்கு வருவதில்லை. நிலவு வெளிச்சத்திற்கு மீன்கள் மேற்பரப்பிற்கு வரும் என்று சொல்லப்படுகிறது.

நெய்தல் நில மக்கள் இவ்வுண்மைகளை உணர்ந்ததன் காரணமாகவே மீன் வேட்டைக்கு இரவுப் பொழுதில் வெளிச்சத்திற்காக விளக்கு, மீன் எண்ணெய் போன்றவற்றை உருவாக்கும் தொழில் நுட்பத்தைத் தெரிந்திருந்தனர். இரவுப் பொழுதில் கடலுக்குள் செல்வதால் தாங்கள் புறப்பட்ட இடம் திசை ஆகியவற்றை அறிய கடற்கரையில் அமைந்த மணற்திட்டுகளில் விளக்கு ஏற்றி கலங்கரை விளக்கம் போன்ற அமைப்பை உருவாக்கி வைத்திருந்தனர்.(நற்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

219) இச்செய்தியும் மீன் வேட்டைக்குரிய பொழுது இரவு என்பதை உறுதி செய்கிறது.

நெய்தல் நில மக்களும் அவர்கள் வாழ்ந்த ஊர்களும் புலால் நாற்றம் உடையதாக சொல்லப்படுகிறது (நற்-63). இப்புலால் நாற்றத்தின் காரணமாக மீன்பிடித் தொழில் செய்பவர்கள் சமூகப் படிநிலை அமைப்பில் கீழ்நிலையில் கருதப்பட்டனர். இதன் வெளிப்பாட்டினை நற்-45 ஆவது பாடலிற் காணலாம். பரதவர் மகள் ஒருவளைச் செல்வமிக்க குடியைச் சார்ந்த தலைவன் விரும்பிய போது அவனை மறுத்ததாக இப்பாடல் அமைகிறது. அத்தலைவி கடற்கரைச் சோலையில் உள்ள அழகிய சிறுகுடியின் கண்ணே இருக்கும் நீலநிறத்தையுடைய பெரிய கடலும் கலங்குமாறு அதன் மேற்சென்று வலைவீசி மீனைப் பிடிக்கின்ற பரதவர் மகள் ஆவாள்.நீயோ நெடிய கொடிகள் காற்றால் அசைந்து நுடங்கும் கடைத்தெருக்களைக் கொண்ட பழைய ஊரின்கண் உள்ள கடுமையான செலவுமிக்க தேரை உடைய செல்வம் கொண்டவனின் அன்புக்குரிய மகன் எம் குலத்துக்கு நீ பொருந்துவாய் அல்லை. மேலும் நிணத்தை உடைய சுறாமீனை அறுத்துக் காய வைத்தல் வேண்டி அவை வெயிலிற் காயும்போது கூட்டமாய்த் திரளும் பறவைகளை நாங்கள் விரட்டும் தொழிலேம். எங்களுக்கு உயர்வு என்ன வேண்டியுள்ளது? ஒன்றும் வேண்டா எம் உடம்பெல்லாம் புலால் நாற்றம் வீசுகின்றது. எனவே எம் அருகில் நீவிர் வர வேண்டா கடல்நீரை விளை வயலாக கொள்கின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கையானது நும்மைப் போன்ற உயர்வு உடையதன்று, எங்கள் பரதவர்குடியில் உம்மைப் போன்ற செல்வர்களும் உள்ளார்கள் என மறுத்துக் கூறப்பட்டது.

பரதவர் குலத்தவர் தம்மீது நிணநாற்றம் வீசுவதாலும் சுறாமீனின் புலாலை உலரவைப்பதாலும் தம்மைத் தாழ்குலத்தார் எனத் தாமே கருதுகின்றனர் என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது. செல்வந்தனான கடுந் தேர் செல்வன் பரதவர்குலப் பெண்ணை மணங்கொள்ள வந்த போது இவ்வாறு அறிவுறுத்தப்பட்டான். படிநிலை வேறுபாட்டில் செல்வநிலை அளவுகோலாக அமையவில்லை. எம்மனோரில் செம்மலும் உடைத்தே (நற்-45:11) என்று தோழி தலைவனுக்கு அறிவுறுத்தியமை இதனைச் சுட்டும். இங்குப் படிநிலை வேறுபாடு அவரவர் செய்யும் தொழில் அடிப்படையிலானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மீன்தொழில் செய்பவர்கள் மீது வீசும் புலால் நாற்றம் அவர்களை ஏனைய மக்களிடமிருந்து வேறுபடுத்தும் பண்பாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவர்களது குடியிருப்புகளிலிருந்து வீசும் புலால் நாற்றத்தைப் பலப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. எனவே புலால் நாற்றம் என்பது நெய்தல் பகுதியின் பண்பாட்டு நிலைக்களன் சார்ந்த பண்பு எனக் கருதலாம். பெருநீர் விளையும் எம்சிறு நல்வாழ்க்கை என்று குறிப்பிடுவது நெய்தல் நிலமக்களின் வாழ்வியல் ஆதாரம் கடல் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

புன்னை மரம் நெய்தல் நிலப் பாடல்களில் பரவலாகப் பதிவாகியுள்ளது. கடற்பரப்பையும் கடற்கரைச் சோலைகளையும் குறிப்பிடும் போது புன்னையும், தாழையும் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன. இயற்கைப் புணர்ச்சியின் கண் தலைவனும் தலைவியும் புன்னை மரத்தடியில் தங்கிய செய்திகளும் பதிவாகியுள்ளன. புன்னை மரத்தைத் தலைவியின் தங்கை என ஒரு பாடல் குறிப்பிடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடு ஆயமொடு வெண் மணல்
அழுத்தி,
பிறந்தனம் துறந்தகாழ் துளை அகைய,
நெல்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது,
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்
என்று,
அன்னை கூறினள் புன்னையது நலனே,
அம்ம! நாணுதும், நும்மொடு நகையே,
விருந்தின் பாணர் விளர் இசை கடுப்ப,
வலம்பரி வான்கோடு நரலும் இலங்கு நீர்,
துறை கெழு கொண்க! -நீ நல்கின்,
இறைப்படுமு நீழல் பிறவுமார் உளவே.
(நற்-172)

பகற்குறி வந்த தலைமகனிடம் தோழி பகற்குறி மறுத்து கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனே நாங்கள் எங்களுடன் விளையாடுகின்ற தோழியர் கூட்டத்தோடு சென்று ஒருநாள் ஒரு புன்னை விதையை வெள்ளிய மணலுள் அழுத்தி விளையாடிய பின் அதனை மறந்து போனோம். அவ்விதை வேரூன்றி முளைத்து முளைத் தோன்ற நின்றது. அதனைக் கண்டு மகிழ்ந்த நாங்கள் நெய்யோடு கலந்த இனிய பாலை நீராக ஊற்றி இனிதாக வளர்த்தோம். வளர்த்த அச்செயலைக் கண்டு அன்னை எங்களை நோக்கி நீங்கள் வளர்க்கும் இப்புன்னை உங்களை விடச் சிறந்ததாகும். அது உங்களோடு பிறந்த தங்கையாகும் தகுதியுடையது காண்பீர் என்று அப்புன்னையின் நலனைக் கூறினாள். எனவே எமக்கு தங்கையாகும் இப்புன்னையின் அருகில் நின்று உங்களோடு நகைத்து விளையாட நாணுகிறோம் வேண்டுமெனில் வேறு நிழலும் உண்டு எனத் தோழி கூறுகின்றாள். இங்குப் புன்னை மரம் தலைவி தோழியருக்குத் தங்கை எனக் குறிப்பிடப்படுவது நம் கவனத்திற்குரியது.

அவர்கள் விளையாடும் போது வெண்மணலில் ஊன்றிய புன்னை விதை முளைக்க அதனைப் பாலூற்றி வளர்க்கின்றனர். அது வளர்ந்ததும் அதனை அவர்தம் அன்னை அப்புன்னைமரம் உங்களின் தங்கைக்குத் தகுதியுடையது என்கிறாள். இதன் காரணமாக தோழி தலைவனிடம் அப்புன்னை மரம் விட்டு நீங்க உரைக்கின்றாள்.

தோழியர்களால் வளர்க்கப் பெற்ற புன்னைமரம் அவர்களின் தங்கைக்குச் சமமானதாகக் கருதப்படுகின்றது. அப்புன்னை மரத்திினின்று அகன்று செல்ல தலைவனிடம் தோழி வேண்டும்போது அக்காரணம் சொல்லப்படுகின்றது. புன்னைமரத்தைத் தங்கை எனக் குறிப்பிட்டவள் தாய். புன்னைமரம் சிகப்புநிறக் கறைவடியும் மரம் ஆகும். எனவே அது பெண்மரமாகக் கருதப்படும். தாய் அப்புன்னையைப் பெண்ணாகப் பாவித்துத் தங்கை எனக் குறிப்பிட்டது தலைவியின் களவொழுக்கத்தைத் தவிர்த்தல் பொருட்டு எனக் கருதலாம். கடற்பரப்பின் புன்னை மரநிழலில் தலைவன் தலைவி சந்திப்பதை உணர்ந்ததால் அப்பகற்குறியை இயற்கைப் புணர்ச்சிக்கு ஒவ்வாததாக மாற்றுகின்றாள். நெய்தல் திணைக் களத்தில் பரவிக் காணப்படும் புன்னை மரங்கள் இப்போது தலைவிகளின் தங்கைகளாகின்றனர். இப்பரப்பே நெய்தலில் இயற்கைப் புணர்ச்சிக் குரியதாகப் பலப்பாடல்கள் காட்டுகின்றன. ஆனால் தங்கைக் கருகில் நின்று தலைவனோடு அளவளாவ அஞ்சுவதாக இப்பாடல் குறிப்பிடுகின்றது. பண்பாட்டு அடிப்படையில் உடன்பிறந்தார் முன் பாலியல் தொடர்புகள் விலக்கப்பட்டவை. இம்மரபைத் தாய் பயன்படுத்திக் கொள்கின்றாள். நெய்தல் நிலப்பரப்பில் வேற்றுத்திணை தலைவனும தலைவியும் வந்து செல்லும் செய்திகள் உள்ளன. எனவே நெய்தல் திணைக்களம் களவொழுக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களனாக அமைவதைத் தாய் விரும்பவில்லை எனலாம். இவ்வுணர்வு நெய்தல் என்னும் பண்பாட்டு நிலைக்களனின் அகவய வெளிப்பாடு ஆகும். நற்றிணை 63 ஆவது பாடல் குறிப்பிடும் கடற்கரைச் சோலை அறமற்ற இடம் என்ற செய்தி இக்கருத்தை மேலும் உறுதிசெய்கின்றது.

நெய்தல்திணைப் பாடல்கள் நெய்தல் நிலத்தின் புறவயமான கூறுகளை மிகுதியாகப் பதிவு செய்துள்ளன. திணை அமைப்பின் தேவைகளுக்கு அப்பாலும் சில செய்திகளை அவை பதிவுச் செய்துள்ளன. நெய்தல் திணையின் உரிப்பொருள் ஒழுக்கமான இரங்கல் என்பதை வெளிப்படுத்த எல்லா பாடல்களும் ஒரே மாதிரியான சூழமைவுகளையும், செய்திகளையும் பயன்படுத்தவில்லை. அவை திணை என்ற கருத்தமைவின் கூறுகளை விட மிகுதியான பண்பாட்டு வெளி கூறுகளைச் சுமந்து நிற்கின்றன. கடல் அவர்களது வாழ்வியல் ஆதாரமாகக் கருதப்படுவது, கடற்கரைச் சோலையை அறமற்ற இடமாகக் குறிப்பிடுவது, புன்னை மரத்தைத் தங்கையாகக் குறிப்பிட்டு களவு ஒழுக்கத்திற்கான இடமாகக் கடற்கரைச் சோலை அமைவதை விரும்பாமை, நிணநாற்றம் உடையவர்கள் எனத் தம்மைக் கருதுவது, போன்ற செய்திகள் நெய்தல்திணை மக்களின் அகவய உணர்வுகள் ஆகும். இவ்வுணர்வுகளையே நெய்தல திணையின் இனவரைவியல் பனுவல் முன்நிறுத்துகின்றது எனக் கருதலாம்.

## துணை நின்ற நூல்கள்


1. சண்முகம்பிள்ளை, மு., 2003: *தொல்காப்பியம் பொருளதிகாரம்*, இளம்பூரணர், சென்னை: முல்லை நிலையம்.
2. சிவத்தம்பி, கார்த்திகேசு, 2003: *பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி*, சென்னை: மக்கள் வெளியீடு.
3. சிவசுப்பிரமணியம் ஆ. 1995:'**இனவரைவியலும் நாவலும்**', ஆராய்ச்சி.46 (பக்.1-18).
4. செயபால்.இரா.(உ.ஆ).2004: **சங்க இலக்கியம், அகநானூறு**, சென்னை :நியூ செஞ்சுவரி புக் 'வுஸ்
5. செல்ல பெருமாள், ஆ.: 1998: **சமூக மானிடவியல**, திருநெல்வேலி: இலக்கியத் தேடல்.
6. பக்தவத்சல பாரதி, 1999: ***பண்பாட்டு மானிடவியல்***, சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.
7. பிலவேந்திரன், ச., 2003: ***ஆய்வுக் களமும் தரவுகளும***, நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள், ஆறு. இராமநாதன்(ப.ஆ). திருவனந்தபுரம்: தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம்.
8. பெருமாள் அ.க,2005:: **சங்க இலக்கியங்களில் நெய்தல:கானலம் பெருந்துறை**. அ.க. பெருமாள், நா.இராமசந்திரன் (தொ.ஆ), சென்னை:தமிழினி.
9. பாலசுப்பிரமணியன் கு.வெ(உ.ஆ), 2004: **சங்க இலக்கியம்: நற்றிணை**, சென்னை:நியூ செஞ்சுவரி புக் 'வுஸ்
10. நாகராசன், வி, 2004: **சங்க இலக்கியம்**: குறுந்தொகை. சென்னை :நியூ செஞ்சுவரி புக் 'வுஸ்.
11. ஸ்டீபன்.ஞா. 2010: **தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும்**, சென்னை: நியூ செஞ்சுவரி புக் 'வுஸ்
12. ஜான் மோனகன், பீட்டர் ஜஸ்ட், 2005: **சமூக–பண்பாட்டு மானிடவியல்: மிகச் சுருக்கமான அறிமுகம்**, தமிழில்: பக்தவத்சல பாரதி, புத்தாநத்தம்: அடையாளம்.
13. Angelis, De Rose(Ed.), 2003: Between Anthropology and Literature: Interdisciplinary discourse, London and New York: Routledge. Interdisciplinary discourse, London and New York: Routledge.
14. Denzin, Norman,K.1997: Interpretive Ethnography: ethnographic Practices for 21st Centuary, New Delhi: Sage Publications.
15. Fetterman, david,M. 1989: Ethnography Step by Step, New Delhi: Sage Publications.
16. Hammersley, Martyn and Paul Atkinson, 1991: Ethnography principles in practice, London : Routledge.
17. Herskovists, Melville,1974: Cultural Anthropology, New Delhi: Oxford Publishing Co.
18. Hoefel,Roseanne L., 2003: "Splendid discipline: American Indian women's ethnographic literature", Angelis, De Rose(Ed.), Between Anthropology and Literature:
19. Tallmann,Janet,2003:"The ethnographic novel: finding the insiders voice ", Angelis, De Rose(Ed.), Between Anthropology and Literature: Interdisciplinary discourse, London and New York: Routledge.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இலக்கியங்களில் பௌத்தம்

பேராசிரியர் செ. யோகராசா

**1. ப**ண்டைய, இடைக்கால மரபுவழிப்பட்ட தமிழ் இலக்கியங்களிலே பௌத்தமத தத்துவ விளக்கம், போதனைகள், அவை பற்றிய நிறைகுறைகள் முதலியனவே ஓரளவு பேசப்பட்டுள்ளன. 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ள நவீன தமிழ் இலக்கியங்களில் (சிறுகதை, நாவல், நவீன கவிதை, நவீன நாடகம்), ஆங்கிலேயக் காலனித்துவ ஆட்சி காரணமாக ஏற்பட்ட நவீனமயவாக்கச் சூழலில் உருவான சமூக, அரசியல், கலை, இலக்கியமாற்றங்களுக்கேற்பப் பௌத்த மதத்துவமும் அவற்றோடு தொடர்புபட்ட விடயங்களும் (உதாரணமாக, புத்தர் பற்றியும் அவரது சீடர்கள் பற்றியும்) புதிய பார்வைகளுக்குட் பட்டுள்ளன. அவை பற்றி அவதானிப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகின்றது.

2.1. பௌத்த தத்துவம் பற்றி முதலில் நோக்குகின்றபோது தமிழகக் கவிஞர் தமிழ் ஒளி தாம் எழுதிய 'மாதவி' காவியத்தில் குறள் வடிவில் சுருக்கமாக பௌத்த தத்துவம் பற்றி எடுத்துரைப்பது முதலில் நினைவிற்கு வருகின்றது. உ-ம்:

**புத்தர் குறள்**

மனங்காத்துக் கொள்வோன் மனிதன், அவனே
சினங்காத்தற் செய்யுந்திரு.

ஞானமே எஞ்ஞான்றும் நன்மருந்தாம், புல்லர்க்கே
ஊனம் உவகை தரும்.

நன்மை பயப்பவற்றை நாடல், நனிகடிது
புன்மை எளிதிற் புகும்.

நகையென்ன, வாழ்வொடு நட்பென்ன: வையம்
புகையெரி மூண்ட புதர்.

யாத்துள்ள மெய்யை அறிந்தோர், அறைந்தனர்
கோத்துள்ள பொய்க்குடுக் கை.

இலங்கைக் கவிஞரான சில்லையூர் செல்வராசன் தனது பாடலொன்றிலே பௌத்த தத்துவங்கள் சிலவற்றைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்ணிகள்

பாரமிதைகள் என்னும் பண்பாடுகள் பத்தும்
பகர்வாய் என் தோழா!
தானம், சீலன், பொறை, தளரா வீரமுடன்
தியானம், உணர்ச்சி, அருள், தீர்க்க உபாயம், வன்மை,
ஞானம், இவைகள் பத்தும் ஞாலக் கடல் கடந்து
வானம் எனும்பரி நிர்வாணம் அடையும் வழி
அறிவாய் என் தோழா!

வாய்மைகள் எனும் நான்கு வாழ்க்கை முறைகள் எவை
எழுத்துவாய் என் தோழா!

துக்கம் நிலைத்திருத்தல், துக்கம் உருவம் பெறல்,
துக்கம் நீக்கம், அந்தத் துயரின் நிவர்த்தி வழி!
சிக்கல் அறுத்துலகின் சிறுமைகளைப் பொசுக்கத்
தக்க சிறந்த வாய்மைச் சாதனங்கள் இவைகள்
அறிவாய் என் தோழா!

சீலங்கள் எட்டுடன் நிதானங்கள் பன்னிரண்டும்
செப்பியதார் தோழா!

அட்டாங்க சீலங்களும் ஆறிரு சார்புகளும்
எட்டும் அறிவுக்கப்பால் இசைவுறும் ஞானங்களும்
கட்டுகளைத் தகர்த்துக் காசினியைக் கடந்து
விட்டு விடுதலையாய் விளங்கிடும் மார்க்கங்களும்

புத்தன் கொடை தோழா — கௌதம
புத்தன் கொடை தோழா!

வாழ்க்கை நிலையாமை சார்ந்த பௌத்த தத்துவமொன்றினைப் பற்றி சுத்தானந்த பாரதியாரின் கவிதையொன்று, சுவையான பாங்கில் விசாரணைக்குட்படுத்துகின்றது அக்கவிதையின் ஒரு பகுதியை இங்கு தருவது அவசியமானது:

### யசோதரையும் சித்தார்த்தனும்

#### சித்தார்த்தன்

வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
        வாழ்வை நம்பவோ? — கண்ணே
கோடி யுயிரைச் சாவு நாளும்
        கொண்டு போகுதே.

#### யசோதரை

உதிர்ந்த பூக்கள் உரம தாகும்
        உதிக்கும் புதுமலர் - கண்ணா
முதிர்ந்த கனிகள் வீழ்ந்து விதைகள்
        முளைப்ப தியற்கையே

#### சித்தார்த்தன்

எழுந்த பரிதி ஏறி வானில்
        இரத்த வெள்ளமாய் - அங்கே
விழுந்து கங்குல் விரவக் கண்டும்
        விதியை நம்பவோ? — கண்ணே
விதியைநம்பவோ.

#### யசோதரை

இரவும் பகலும் சுழலும் பூவின்
        இயற்கை யாவதே — கண்ணா
வரவும் போக்கும் வரவும் உயிஉக்கு
        வளமை யாவதே —வாழ்வின்வழக்கமாவதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்தார்த்தன்**

வந்து செல்லும் மின்னல் போன்ற
வாழ்வை நம்பிடேன் - கண்ணே
இந்து போலத் தேயும் உலகின்
இன்பம் வேண்டிலேன் - அதன்
இன்பம் வேண்டிலேன்.

**யசோதரை**

இன்பமென்றால் இன்ப மாகும்
இனிய வாழ்க்கையே — சதா
துன்ப மென்றால் துன்ப மாகும்
தொல்லு லகமே
கொஞ்சுங் கிளிகள் குதிக்கும் மயில்கள்
கூவும் குயிலினம்
கஞ்ச மலரில் ஒதுங்கும் அன்னம்
களிப்பதைக் காணீர் - ஆற்றின்
கானத்தைக் கேளீர்.

**சித்தார்த்தன்**

பாட்ட டங்கிப் புட்க ளெல்லாம்
படுத்து றங்கிடும் - ஆற்றின்
ஓட்டம் வாழ்வின் ஓட்டந் தன்னை
ஓங்கிப் பாடுதே — உள்ளம்
உண்மை தேடுதே.

**யசோதரை**

தென்ற லும்நி லாவும் இந்தத்
தேன்பொ ழிலிலே — கண்ணா
மன்றல் புரிந்து மகிழு மியற்கை
வளமை காணுமே.

**சித்தார்த்தன்**

காற்றின் ஓட்டம் ஆற்றின் ஓட்டம்
கலந்தென் காதிலே — கண்ணே
நேற்றி ருந்த தில்லை யின்று
நிசமி தென்னுமே.

**யசோதரை**

அக்கக் காவென் றேகி ளிகள்
அழைப்பதைக் கேளீர்.

**சித்தார்த்தன்**

துக்கம் வந்தென் உள்ளந் தன்னைத்
துளைப்பதைக் காணாய் - உண்மை
அழைப்பதைக் கேளாய்.

பௌத்த தத்துவமான கொல்லாமை தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகக் கருதிய நிலையில் புதிய கண்ணோட்டத்தில் விளக்கமளிக்கிறார், பாரதிதாசன்:

**புத்தர் புகன்றார் இல்லை!**

நோன்பென்றால் கொல்லாமை என்று புத்தர்
நுவன்றுவந்தார்! கொன்றுண்ணும் மக்கள்யாவரும்
ஏற்றுக்கொண்டார்: நல்லொழுக்கம் பரவிற் றெங்கும்!
இருள் உளங்கள் ஒளியாகும் நிலையில் ஓர்நாள
தேன்பொழியும் மலர்த்தாரன்: திருவார் மன்னன்
சுதரிசனன், புத்தர்பிரான் திருத்தாள் நண்ணி
'ஊன் உண்ணும் வழக்கத்தை மறுக்கின்றீர்கள்
ஊர்இதனை ஒப்பவில்லை'! என்று சொன்னான்.

புத்தர்பிரான் சுதரிசற்குப் புகலு கின்றான்:
'பொன்னுயிர்கள் இன்னலுறப் புரிதல் வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரையில் உனக்கூறு நேரும் போதில்
எவ்வாறு துடித்திடுவாய்? அதுபோல் தானே
அத்தனையாம் உயிருக்கும் இருக்கும்! நீயே
அறிவிருந்தால் எண்ணிடுதல் வேண்டும்' என்றார்
'அத்தனே, நான்கொல்லேன், பிறர்கொன் றீந்தால்
அதையுண்பேன் அனுமதிப்பீர்' என்றான் மன்னன்.

'எவன்கொன்று நினக்கீ வான்? ஈவா னாயின்
ஏற்றுண்பாய்!' என்றுரைத்தார் அருளின் மிக்கார்!
அவனுக்குக் கொன்றுவந்து கொடுத்தார் இல்லை!
அம்மன்னன் மகழ்ந்ததுவு மில்லை! ஆனால்
தவப்பெருமான் இவ்வாறு சொன்ன சொல்லைச்
சமணர்களும் சைவர்களும் தலையில் தூக்கி
'இவர்கண்டீர் மீனுண்ணச் சொன்னார்! ஆட்டை
இழுத்தறுத்துக் கொலைபுரியச் சொன்னார்!' என்றார்.

'பன்றிவெட்டச் சொல்லினார் புத்தர்!' என்றார்:
'பசுவெட்டச் சொல்லினார் புத்தர்!' என்றார்:
இன்றுவரை புத்தர்மேற் பழிசு மத்த
இடைவிடா மற்புளுகி வருகின் றார்கள்!
தன்னேரி லாப்புத்தர் நெறியை வீழ்த்தித்
தற்சமயம் மேலோங்கச் செய்யும் சூழ்ச்சி
நன்றாமோ? உலகுக்குக் கொல்லா நோன்பை
நடுவாய்ந்து முதற்புகன்றோர் புத்தர் தாமே!

எஸ்.பொன்னுத்துரையின் வீடு சிறுகதையிலே பௌத்த தத்துவம் நீண்ட உரையாடலாக இடம்பெற்றிருப்பதும் கவனத்திற்குரியது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு அமைகின்றது:

"புனிதரே! என் உள்ளத்தில் ஊறுஞ் சில எண்ணங்களைச் சொல்லலாமா?"

"தாராளமாகக் கூறலாம்."

"நட்சத்திரத் தோடாக வனப்புக் காட்டும் மாதுளம் மலர்கள் இயற்கைசால் அன்பு வாழ்க்கையின் பெறுபேறாகப் பிரச்சினைகளைச் சுமந்து, முற்றிக் கனிகளாகின்றன.... நீங்கள் ஆயிரம் வார்த்தைகளில் அன்பைப் பற்றி விளக்கந் தருகின்றீர்கள். விளக்கி விட்டதாக நீங்கள் திருப்தி கொள்ளும் போதுகூட, என் போன்ற சாமான்யனுக்கு அதில் ஒரு பின்னந்தானும் விளங்காதிருக்கலாம். ஆணும்-பெண்ணும் மனங்கலந்து, இல்லற இன்பங்களிலே தோய்ந்து, ஒரு குழந்தையைச் சிருஷ்டித்தால், அக்குழந்தை உன்னத அன்பின் உயர்ந்த சின்னமாகத் திகழ்கின்றது. அத்தகைய அன்பினை விளக்க வார்த்தைகளே தேவையில்லை."

"அழகாகப் பேசுகிறாய். சாத்திய மன்னர் தர்க்க சாஸ்திரிகளை அமர்த்தி, இல்லறத்திலே துய்க்க வைப்பதற்கான நியாயப் பிரமாணங்களைக் கற்பித்திருக்கிறார். சித்தத்தின் மூலம் நாம் அறிவதுதான் பேருண்மை... இருப்பினும், உன் பேச்சு மிகவுஞ் சுவாரஸ்யமாக இருக்கின்றது."

"உணர்ச்சி அலைகளிலே சுரக்கும் இச்சை உடலிலே படருகின்றது. எனவே, இச்சையில் நிச்சயம் மனிதப் பலஹீனங்களும் படிந்திருக்கும். இருப்பினும், இவற்றின் இச்சா பூர்த்தியில் மலர்வது அன்பு பங்கத்திற் குதிர்வது விரோதம். நீங்கள் போதிக்கும் துறவற நிலையிற் சித்தத்தை ஒரு நிலைப்படுத்துதல் என்பது, மாம்ஸ இச்சைகளை மறுத்து, வறுத்துத் துவள்வு செய்யும் இராக்கத முயற்சி. அறிவின் செருக்கிற்கு முதலிடங் கொடுத்து, சித்தத்தின் செம்மை என்ற தீ ஜவாலைகளில் உணர்ச்சிகளைப் பொசுக்கிய பின்னர், மனிதனின் ஆசாபாசங்களுக்கும், பிரேமைகளுக்கும் புதிய விளக்கங் கொடுப்பது மிகமிகச் செயற்கையானது. இயற்கையிலே குறைபாடுகளிருக்கின்றன என்றால், அந்தக் குறைபாடுகளே நமது வாழ்க்கையின் பயனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுமாம். செயற்கை அறிவின் ஆணவ வழி நாம் இயற்கையின் செல்வங்கள். நாங்கள் சந்ததி பெருக்கி வாழப் பிறந்தவர்கள்."

"உடம்பு சத்தியம் இல்லாதது. பொய் என்றால், இறைவன் இந்த உடம்மை வேலை மெனக்கெட்டு எதற்குப் படைக்க வேண்டும் அம்மா. பிரம்ம சிருஷ்டி என்ன, சிறுபிள்ளை விளையாட்டா

"நந்த! சித்தத்தை உணர்வது ஆணவமென்றால் உண்மையைச் சொல்வது செருக்கு என்றால், நீ மெய்யென வரித்திருக்கும் பிரமேயங்களில் ஏதோ தவறு இருக்கவே செய்கிறது. சித்தத்தைச் செயற்படுத்தாதவன் லோப – துவேச – மோக (இச்சை – அழுக்காறு – அஞ்ஞானம்) ஆகிய பலஹீனங்களுக்குத் தன்னைத் தானே ஒப்புக் கொடுக்கின்றான். அலோப – அதுவேச – அமோக (அருள்-காருண்யம்-ஞானம்) ஆகிய நற் குணங்கள் சித்தத்தைச் சுத்தப்படுத்தியவனுக்கே ஏற்படு கின்றன. அஞ்ஞானத்தில் உலை பவனிடஞ் செருக்கும் ஆணவமுமே வந்தடைகின்றன."

எழுத்தாளர் சம்பந்தரும் புத்தரின் கண்கள் என்ற சிறுகதையொன்றினை எழுதியுள்ளார். அது கிடைப்பதற்கரிதாக உள்ளமையால் எதுவும் கூற முடியாதுள்ளது.

2.2. எண்பதுகள் தொடக்கம் இலங்கையிலே பேரினவாதம் வெடித்துச் சிதறிய சூழலிலே (தேரவாத) பௌத்தமதத்தைப் பின்பற்றி வந்துள்ள இலங்கை கடுங் கண்டத்திற்குள்ளாகியது. இவ்விதத்தில் கவிஞர் சோ.பத்மநாதனின் 'தேரவாதம் செழித்த மண்ணடா' என்ற நீண்ட கவிதையின் ஒரு பகுதியை இங்கு தருவது பொருத்தமானது.

நாலு லட்சம் அகதிகள் யாழ்க்குடா
நாட்டிலே தமிழ்நாடு போயுள்ளவர்
மேலு மொன்றரை லட்சம் தமிழராம்
மேற்கு நாடுகள் நாலைந்தைத் தாங்குமாம்
காலி, பூஸா, வெலிக்கடை என்றெலாம்
காய்பவர் தொகை ஆயிரம் ஆயிரம்
சீலம், தர்மம், மாபோதி, 'பிரித்' எனும்
தேர(ர) வாதம் செழித்ததிம் மண்ணடா

3.1. இனி, புத்தர் பற்றி அவதானிக்கின்ற போது, அவர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலே படைப்பாளிகள் பலராலும் உன்னதமான ஞானியாக மதிக்கப்பட்டுள்ளமை புலப்படுகின்றது.

"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெரும் நாடே

என்பது பாரதியாரின் பார்வையாகின்றது. 'கு.ப.ரா'வும் தனது கவிதையொன்றிலே புத்தரை, கவனத்தை ஈர்க்கும் சித்திரமாக்கியுள்ளார்.

ஈழத்துக் கவிஞர் யாழ்ப்பாணனும் புத்தரைப் போற்றுவதில் பின்நிற்கவில்லை. பின்வருவது அவரது கவிதையில் இடம்பெறும் பகுதியாகும்.

புத்தனோர் பெரிய ஞானி
பூமியி லொளிர்வான் கண்டாய்
கத்திபா யுயிர்கட் செல்லாம்
கருணைசேர் கடவு ளாவான்
சித்தமே யுருக நாளும்
செகத்தினிற் போதஞ் செய்தான்
உத்தம னவன்றாள் போற்றின்
உள்ளொளி விளங்கக் காண்போம்
அவனது போதங் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினைப் பெருக்கி வாழ்வோம்
தவமென உயிரைக் காத்தே
தண்ணளி சிறக்க வாழ்வோம்
குவலயந் தன்னி லென்றுங்
கொடுமைக ளொன்றுஞ் செய்யோம்
புவனமே யொளிரு மண்ணல்
புத்தொளி நாளுங் காண்போம்

3.2. எனினும் இருபதாம் நூற்றாண்டின் அரசியல், சமூக சமய மாற்றங்கள் புத்தரைப் புதிய பார்வைக்குட்படுத்தின.

இந்திய விடுதலைப் போராட்டச் சூழலிலே புத்தரே மகாத்மாகாந்தியின் அவதாரமாகப் பார்க்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. கம்பதாசனின் 'புத்தரின் புனர் ஜென்மம்' அதுபற்றியதேயாம்: அக்கவிதையின் முடிவு இவ்வாறமைகின்றது.

"மாயை மகன் ஞான மணிக்குரலில் லொச்வான்
மானிடனாய் அகிம்சை எனும் மாண்பு சொல்லிப்
பாயு மொழிப் பாரதத்தில் ஜனிப்பேன் கையில்
பாடல் செய்யும் ராட்டினமே பழகும் கண்டாய்"

எழுத்தாளர் ஜெயமோகன் கொற்றவை என்ற தனது நாவலிலே புத்தரை 'ஆலமர் செல்வ' னாக – அதாவது, சிவபெருமானாகக் காண்கின்றார்.

புத்தரின் மீதான பெருமதிப்புக் காரணமாக, புத்தரின் வாழ்க்கை வரலாறு பற்றிப் பாடவும் கவிஞர்கள் தயங்கினாரல்லர். இவ்வாறான நூல்களுள் கவிமணி தேசிகவிநாயகப் பிள்ளையின் ஆசியஜோதி என்ற காவியம் பலராலும் பராட்டப்பட்டதொன்று. புத்தரின் வாழ்க்கையின் முக்கியமான சம்பவங்களை சுவையாக விவரிப்பதோடு அவற்றினூடே தீண்டாமை, சொல்லாமை, நிலையாமை சார்ந்த புத்தரது போதனைகளையும் ஆசியஜோதி சிறப்பான முறையில் எடுத்துரைக்கின்றது. அடிப்படையில் இந்நூல் எட்வின் ஆணல்ட் என்பவரெழுதிய Light of Asia என்ற நூலின் மொழி பெயர்ப்பேயானாலும் கவிதை எடுத்துரைப்பு முறை காரணமாக பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது போன்று 'தமிழ்' நூலாகவே திகழ்வது குறிப்பிடத்தக்கது மொழிபெயர்ப்பு நூலாகவிருந்தாலும் இக்காரணத் தாலேயே இங்கு கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ளது.

புத்தரின் வாழ்க்கையைக் காவியமாக எழுதும் முயற்சியில் இறங்கிய தமிழ் ஒளியால் புத்தரின் ஜனனம் வரை மட்டுமே தரமுடிந்துள்ளது. சங்கரலிங்கனார் என்பவரும் புத்தரது வரலாற்றைக் காவியமாகத் தந்திருக்கின்றார்.

புத்தரின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களுள் ஒருசில, சிறுகதைகளுடாகவும் வெளிப்பட்டுள்ளன. முற்குறிப்பிட்ட சி.வைத்திய லிங்கத்தின் நந்தகுமாரன் என்.பொன்னுத் துரையின் வீடு ஆகியவை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன. புத்தர் நந்தகுமாரன் பற்றிய இப்படைப்புகளுள் முன்னையது புனைவாகவும் பின்னையது யதார்த்த முறையிலும் வெளிப்பட்டுள்ளன!

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலே புத்தரை முன் குறிப்பிட்டவாறு மகோன்னத புருடராகக் கண்டுகொண்ட இலங்கைப் படைப்பாளிகளின் பார்வை ஐம்பதுகளின் பின்னர் சமகாலச் சமூக, அரசியல் சூழல்களுக்கேற்பப் புத்தரை நோக்குகின்ற பார்வைசார்ந்ததாக மாற்றம் பெறத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதுகளில் இலங்கையிலே பேரின வாதக் கொடுமைகள் உச்சமாக நிகழ்ந்தேறிய சூழலில் 'புத்தர்' பற்றிய பார்வைகள் அரசியல் சார்புடையதாக பெருமாற்றங்கள் கண்டன. இது பற்றி 'ஆனந்தக் கண்ணீர்' நாவலாசிரியர் தனது நூலின் முன்னுரையில் கூறுவது கவனத்திற் குரியது.

"1971ம் ஆண்டு. இனப்பிரச்சினை தீவிரமடைவதற்கு முன்னர் எழுதிய கதையிது. அன்று நான் கண்ட கருத்தை இன்றும் சில வெளிநாட்டவர்கள் கூறக் கேட்கிறேன்.

அமைதியும் சாந்தமுமான கௌதம புத்தரின் சிலைகள் அவ்வாறான அதிர்வலை களையே பரப்பிக்கொண்டிருக்கும். புத்தருக்கு முன் சென்ற கதாநாயகனும் அந்த உணர்வையே அனுபவிக்கிறான். அதன் மூலம் அமைதியிழந்த அவனது உள்ளம் அமைதிகொள்கிறது. அவனது கவலைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைவதை உணர்கின்றான். இதனால் புத்தர் முன்னால் எப்போதும் அமர்ந்திருக்கவேண்டும் என்று கருதி புத்தர் சிலையையே வாங்கித் தன் அறையில் வைத்துக்கொள்கிறான்.

இப்போது இலங்கையில் இனப்பிரச்சினை கொழுந்துவிட்டு எரிகிறது. வெளிநாட்டில் இருந்து வரும் அந்நியர் நாடு முழுவதும் இருக்கும் நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளைக் காண்கிறார்கள். அதில் தவமும் அமைதியையும் சாந்தத்தையும் உணர்கிறார்கள். இவ்வாறான அமைதியையும் சாந்தத்தையும் அதிர்வலை களாகப் பரப்பும் நூற்றுக்கணக்கான சிலைகள் இருக்கும் இந்நாடு ஏன் அமைதியிழந்து காணப்படுகிறது? இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர் இந்தக் கேள்வியை எழுப்பத் தவறுவதில்லை.

அப்போது, 1971இல், எனது கதாநாயகன் உணர்ந்த இவ்வதிர்வலைகளை ஏன் இப்போதைய சிங்கள மக்கள் - புத்தரை உளமார வணங்குபவர்கள் - உணரத் தவறுகிறார்கள்? இதனை பௌத்தர்கள் மட்டுமல்ல, பௌத்த குருமாரும் அல்லவா உணரவும் உபதேசிக்கவும் தவறுகிறார்கள்? இதனாலன்றோ இன்று நாடு அமைதியிழந்து இன்னல்பட்டு அழிந்து கொண்டு இருக்கிறது!

கௌதம புத்தர் உயிருள்ள உடலில் இருக்கும் போது பரப்பிய அதிர்வலைகளையே அவரது உயிரற்ற சிலைகளும் பரப்பிக் கொண்டிருக்கின்றன."

இன்றிலையில் பேரினவாதக் கொடுமை பற்றி புத்தருக்கு எடுத்துரைக்கின்றார், கவீரா:

ஆசிய ஜோதியான
அகல்விளக்கே
அன்பையே அகிலமென்ற
விடி கிழக்கே
பேசிய புன்னகையும்
பௌத்தம் தான்
பெரியவரே இன்றேனோ வருத்தம் தான்"

புத்தரே! வணக்கம்
எப்படி நலமா?
நீங்கள் நல்லவர் கொல்லாமை என்கின்ற
குறிக்கோளை போதித்து வாழ்ந்தீர்கள்
ஆனால் அது இன்று கல் ஆமையாகி
நகரவே இல்லையே
பௌத்தம் என்னும் உயர்ந்த
கோட்பாடு இப்போ சவச்சாலைகளில்
கூட பேணப்படவில்லையே
பிறகெப்படி சந்நிதிகளில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரே! நீங்கள் நல்லவர்
ஒருநாள் இளவரசன்
மறுநாளே ஞானத்துறவி என
மனதை கட்டுக்குள்
வைத்திருந்த உங்கள் வாழ்வு
மூப்பு எப்படி வருகிறது
என்று கேட்டே முக்தி நிலை பெற்றவர் நீங்கள்
"இறப்பில்லா வீடொன்றில்
கடுகு எடுத்துவா" என்று
வாழ்வின் நிலையாமையை
உலகிற்கு சொன்னவர்.
ஆனால் உங்கள் வழித்தோன்றல்களோ
அதைத் தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டார்கள்
எதுவும் நிலையில்லை
என்றபடி அவர்களே
அவசரமாய் அழிக்கிறார்கள்
தாங்களும் அழிகிறார்கள்.
நீங்கள் ஞானம்பெற்ற
போதிமரம் இங்கே
விறகுக் கடையில் விற்பனையாகிறது
இனவாதத்தின் மேல்நின்று
மதவாதம் ஆலவட்டம் பிடிக்கிறது.

எங்களைச் சுடவரும்
ஒவ்வொரு ஆமியின்
சட்டைப் பையிலும்
புன்னகைத்த உங்கள் படம்
வேடிக்கை புத்தரே

புத்தம் சங்கம் தர்மம்
எல்லா கச்சாமிகளும்
இங்கே ஆமிகளாய் மட்டும்தான்
இதில் இடைத்தரகர்களாய்
சில பிக்குகள் அவர்களில் பலர்
காவியுடை அணிவதனால்
மனசிலும் கறை படிந்தவர்கள்
உயிர்களை அழிப்பதற்கான
அனுமதிப் பத்திரமாய்
ஆசீர்வாதம் வழங்குவது
அவர்கள் தான்
தலையை வழித்துக்கொள்கிறார்கள்
ஆனால்
இனவாதத்தை மட்டும்
வளர்த்துக் கொள்கிறார்கள்
இவையெல்லாம் ஏன்?
ஆனால் புத்தரே!
நீங்கள் நல்லவர்.................

அன்பே வடிவமான
புத்தரே
நீங்கள் மீண்டும்
இங்கே வரவேண்டும்
உங்கள் கோட்பாடுகளின்
சரியான விளக்கத்தை
அவர்களுக்கு தரவேண்டும்

மன்னிக்கவும் இதுவும் இலங்கையின் வேண்டுகையல்ல ஈழத்தமிழர்களின் விண்ணப்பம்.

ஜே.சி.ஜெயசீலன் அது பற்றி புத்தருடன் நேர்காணல் நிகழ்த்துகின்றார். அதன் ஒரு பகுதி இது:

நான் :

தார்மீகப் பெரு நெறியைத் தக்கபடி போதித்து
யார் மீதும் பகையில்லா யாகத்தைச் செய்தவனே!
உன தடியை வணங்கி வரும் உன்னரிய புத்திரர் தாம் மனதறியச் செய்துவரும் மா கொடுமை அறியாயோ! ஊருறங்கும் நள்ளிரவில் ஊளையிடும் 'ஷெல்' நரிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போருறங்காப் பூமியிதில் பொழுதெல்லாம்
குண்டு மழை
நீ வளர்த்த கருணையினை நெஞ்சத்திற்
பேணாமல் தீ வளர்த்த தென்னிலங்கை
திருந்த வழி சொல்வாயா?

புத்தர் :

அன்பார்ந்த தமிழ் மகனே! அகிலத்து
வாழ்விலே உள்ளே
மண்பாய்ந்து அழிகின்ற மடமை பல
கண்டேன்!
போதிமர ஞானமதைப்போதித்தும்என்பக்தர்
நீதி தரவில்லையெனும் நீசத்தாற்
துடிக்கின்றேன்!
கொல்லாமை பேரறமாம் குரலெடுத்துக்
கூறிய என்
சொல்லாலே ஏமாற்றிச் சுட்டெரிக்கும் அரசியலாா
பொல்லாத வினையெல்லாம் புரிகின்றாா்
பின் வந்து
கல்லான என் சிலையைக கண்மூடித்
தொழுகின்றாா்!
என் செய்வேன் தமிழ்மகனே! என்றன்
பெயர் சொல்லிப்
புண் செய்யும் "பௌத்தர்க்குப்" புத்திதரப்
பார்க்கின்றேன்!
வன் செய்கைக் காரர் அவர் வருகின்ற
நாளிலெனும்
இன் செய்கை பல புரிய இதயத்தால்
வேண்டுகிறேன்.

புத்தரின் எதிர்ப்புக்குரலை ஆக்ரோஷமான முறையில் வெளிப்படுத்தினார் சு.வில்வரத்தினம்: இதோ

எனது வெளிநடப்புக்கான பிரகடனம்
நெடுஞ் சாலைகள்தோறும் நிறுவிய எனது
சிலைகளின் முன்னே
மனிதரின் நிணமும் குருதியும் எலும்பும்
படையல் செய்தோரே!

இதோ ஏற்றுக் கொள்ளுங்கள்
எனது வெளிநடப்புக்கான பிரகடனம்

பௌத்தத்தின் பேரால் தோரணம் கட்டிய
வீதிகள் தோறும் நீங்கள் நிகழ்த்திய
இனசங்காரப் பெரஹராக்களின் பின்னரும்
இங்கே எனக்கு அலங்கார இருக்கையோ?

சூழவும் நெருப்பின் வெக்கை தாக்கவும்
போதிமரத்து நிழலும் எனை ஆற்றுமோ?
வெக்கை தாளவில்லை வெளிநடக்கிறேன்

புழுதி பறந்த வீதிகள் எங்கும்
குருதி தோய்ந்த புலைமையின் சுவடுகள்

விலகிச் செல்கையில்
கால்விரல்களில் ஏதோ தட்டுப்படுகிறது.
பேரினவாதப் பசிக்கு மனிதக் குருதியை ஏந்திப்
பருகி எறிந்த பிஷா பாத்திரம்

ஒரு கணம்
அமுத சுரபி என் நெஞ்சில்
மிதந்து பின் அமிழ்கிறது.

எங்கும் வீதிகளில் இனசங்காரத்தின்
மங்காத அடையாளங்கள்
ஓ! என்மனதை நெருடுகிறது.

எனது பெயரால்தான் ஆக்கிரமிப்பு, அடக்குமுறை,
எனது பெயரால்தான் இனப் படுகொலை
குருதி அபிஷேகம் இவை எல்லாமும்.
உங்கள் ஆக்கிரமிப்பின் சின்னமாக
நான் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும இழிநிலை
நான் போதித்த அன்பு, கருணை எல்லாம்
கல்லறைக்குள் போக்கிய
புதைகுழி மேட்டில் நின்று என் சிலைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசிக்கிறீர்
உங்கள் நெஞ்சில் உயிர்க்காத என்னை
கல்லில் உயிர்த்திருப்பதாய்க் காணும் உங்கள்
கற்பனையை என்னென்பேன்? நானோ

கண்டதுண்டமாய் அவர்களை நீங்கள்
வெட்டியெறிந்த போதெல்லாம்
உதிரமாய் நானே பெருகிவழிந்தேன்
நீங்கள் அதனைக் காணவேயில்லை.

கைவேறு கால்வேறாய்க் காட்டிலே கிடந்து
'தாகமாயிருக்கிறேன்' என்று கதறியதும் நானே
அக் கதறல் உம் செவிகளில் விழவேயில்லை
கல்லாய் இருந்தீர் அப்போதெல்லாம்.

எனது ராஜாங்கத்தையே உதவிநடந்த
என்னைக
கல்லாக்கிவிட்டு உங்கள்
சிங்கள பௌத்த ராஜாங்கத்துள்
சிம்மாசனம் தந்து சிறைவைக்கப் பார்க்கிறீர்
யாருக்கு வேண்டும் உங்கள்
ஆக்கிரமிப்புக் குடைவிரிப்பின்கீழ்
சிம்மாசனம்?

நான் விடுதலைக்குரியவன்.
நிர்வாணம் என் பிறப்புடன் கலந்தது
சிங்கள பௌத்தத்துள் சிறையுண்ட
உமக்கெல்லாம்
எனது நிர்வாண விடுதலை ராஜாங்கத்தின்
விஸ்தீரணம் புரியாது அன்பரே
பிரபஞ்சம் மேவி இருந்த என் ராஜ்யம்
பேரன்பின் கொலுவிருப்பு என்பதறியீர்:
வழிவிடுங்கள் வெளிநடக்க.

நான் போகிறேன்
காலொடிந்த ஆட்டுக்குட்டியும் நானுமாய்
கையொடிந்த மக்களின் தாழ்வாரம் நோக்கி,
அதுதான் இனி என் இருப்பிடம்.

வருந்தி அழைத்த பெரும் பிரபுக்களை விடுத்து
ஓர் ஏழைத்தாசியின் குடிலின்
தாழ்வாரத்தில் விருந்துண்டவன் நான்.

அத் தாழ்வாரத்தில் உள்ளவரிடந்தான்
எனக்கினி வேலையுண்டு

நீங்கள் அறிவீர்
வரலாற்றில் என் மௌனம் பிரசித்தி பெற்றது.
ஆனால், நான் மௌனித்திருந்த
சந்தர்ப்பங்களோ வேறு.

இப்போதோ
என் மௌனத்துட் புயலின் கனம்.
ஒருநாட் தெரியும்

அடக்கப்பட்டவர் கிளர்ந்தே எழுவர்
அப்போதென் மௌனம் உடைந்து சிதறும்
அவர்களின் எழுச்சியில்
வெடித்தெழும் என்பேச்சு!

புத்தரைத் தற்கொலை செய்யவைக்கின்றார் ஹம்சத்வனி:

போதி மரத்தின் கீழ்
அன்று ஒரு நாள்
மூடிய விழிகளைத்
திறந்தான் புத்தன்.
கால்களை நனைத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி ஆறு.
அவனது தத்துவம்
கிடந்து தவித்தது.

அதிர்ந்து
எழுந்து,
ஓடினான்.

காற்றாய், கடலாய்
திசைகள் தோறும்....
எங்கேயேனும் அவனது ஞானம்
ஒரு துளியாவது...?
தார்மீக உலகில்
கால்கள் பதிக்க
விரும்பாத மனதுடன்

உலகை வெறுத்துப்
போதி மரத்தில்
தூக்குப் போட்டுச்
செத்தான் புத்தன்.

பரிநிர்வாணமாய்.....

இன்னொரு கவிஞர் புத்தரை அகால மரணத்திற்குள்ளாக்குகின்றார்:

**புத்தரின் படுகொலை**
**எம்.ஏ. நுஃமான்**

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.
இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"

என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்தான்..."
என்றனர் அவர்கள்.

"சரிசரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள். மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகலோகவா சூத்திரத்தினைக்
கொளுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது.

4.1. பௌத்த மதத்தைப் பின்பற்றிய - பின்பற்றுகின்ற - சீடர்கள் பற்றி அவதானிப்பதும் அவசியமானது.

புத்தரின் முடிசூடப்படவிருந்த தனது சகோதரனான நந்தகுமாரனை நந்தகுமாரனே முதற் சீடன். தனது வழியிலே துறவுத்திசை நோக்கி பயணம் செய்ய வைப்பது பற்றிச் சில சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இவற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளொன்றான, சி.வைத்தியசிங்கம் எழுதிய நந்தகுமாரன் புனைவுப் போக்கில் வெளிவந்திருக்க, எஸ்.பொன்னுத்துரை எழுதிய 'வீடு' தத்துவ ரீதியயான துறவு பற்றிய உரையாடல்களோடு வெளிவந்துள்ளது் இது பற்றி முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.2. பௌத்தமதப் பெண்துறவிகளுள் மணிமேகலை, மாதவி முதலானோர் முக்கியமானவர்கள்.

பெண்நிலைவாதச் சிந்தனை பரவிய சூழலிலே மணிமேகலையின் அறிவாற்றலும் மன உணர்வுகளும் வெகு நுட்பமான முறையில் பிரபஞ்சனால் வெளிப்படுத்தப்படுகின்றன:

"உடம்பு, விளையாட்டு இல்லையடி குழந்தை. உடம்பைக் கொண்டு உடம்பைக் கடக்க வேண்டும் என்று அறவண அடிகள் சொல்லுவார்!"

ஏன் கடக்க வேண்டும்!

உடம்பை விடவும் மேலான ஒன்றை அடைய!
"அது எது?"

"உடம்பைப் பெறாத, பிறவியை ஒழிக்கிற, மீண்டும் பிறவாத நெறி! அதுவே புத் என்கிற பேரறிவு ஞானம்! அதை அடைகிறவர்களே புத்தர்கள்".

மணிமேகலைக்கு அம்மாவிடம் கேட்க வேறு ஒரு பிரதான வேள்வி இருந்தது.

உடம்பை அறியாமலேயே உடம்பின் சுகம் அறியாமலேயே அதை கடக்க முடியுமா அம்மா? தின்ற சோறுதானே செரித்து சாதமாக மாறும். தின்னாத சோறும், கேட்காத சங்கீதமும் அவ்வாறு அனுபவங்கள் ஆகும் அம்மா? அனுபவம்தானே அறிவு? அறிவுதானே வளர்ந்து, ஞானமாகப் பரிணாமம் பெறும்! என் உடம்பின் தேவைகள் இன்னும் பூர்த்தி ஆகவில்லையே அம்மா? என் உடம்பு என்னைக் கைதட்டி அழைக்கிறதே அம்மா! எனக்குப் பசியாய் இருக்கிறதே அம்மா" என்று சொல்லத்தான் நினைத்தாள் சொல்லவில்லை. அம்மாவிடம் ஒரு பெண், இதைச் சொல்லலாமோ?

அறக்கோட்டத்து அருகில் இருந்துகொண்டு, பசித்தோர்க்கெல்லாம் சோறு வழங்கிக் கொண்டிருந்தாள் மணிமேகலை. குருடர், கால் முடம் பட்டோர், பிணியாளர் என்று பலரும் வந்து அவளிடம் உணவு பெற்றுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

சுதமதி அவள் அருகில் வந்து, நின்று மெதுவாக இந்தச் சேதியை சொன்னாள்.

"உதயகுமாரனை யாரோ கொன்றுவிட்டார்களாம்".

பேசாமல் நின்றாள் மணிமேகலை. தகவலைச் சொன்னாள் சுதமதி.

"வானத்து வாழும் ஒரு விஞ்சையன் மனைவியைத் தேடி வந்திருக்கிறான். அவன் மனைவி. அவனைவிட்டுப் பிரிந்து வாழ்ந்திருந் தாளாம். அவன் தேடி வந்த சமயம். உதயகுமாரனும், உன்னைத் தேடி அங்கு வந்திருக்கிறான். உதயகுமாரன் அவன் மனைவியின் கள்ளக்காதலன் என்று தவறாக நினைத்து, உதயகுமாரனைக் கொன்று விட்டான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது என் பாவம். உதயகுமாரனை, நான்தான் முதலில் கொன்றேன் சுதமதி. என்னை என் அம்மா உதயகுமாரனுக்கு முன்னாலேயே கொன்று விட்டாளே....ம்..... மனிதர்கள் மனிதர்களைக் கொன்று கொண்டேயிருக்கிறார்கள்..."

மணிமேகலை, தன் மொட்டைத் தலையை மூடிக்கொண்டு உதயகுமாரன் உடலைப் பார்க்கப் புறப்பட்டாள்.

மணிமேகலையை சிறந்த அறிஞையாகக் கண்டு அதனை முதன்மைப்படுத்தி நவீன நாடகம் படைக்கின்றார், கவிஞர் இன்குலாப்.

மாதவியின் மன உணர்வுகளும் பிரபஞ்சனால் சிறப்பான முறையில் வெளிக் கொணரப்பட்டுள்ளன.

அவ்வாறே, கேசியின் மன உணர்வுகளும் பிரபஞ்சன் பார்வையில் துல்லியமான முறையிலே வெளிக்கொணரப்படுகின்றன.

4.3. நடைமுறை வாழ்க்கையிலே சிங்கள மக்கள் மத்தியிலே பௌத்த மதபோதனைகளும் புத்தவழிபாடும் பிக்குகளை வணங்குவதும் எவ்வாறு காணப்படுகின்றன என்பதனை சிங்கள நவீன இலக்கியப் படைப்புகள் பல சிறப்பாக வெளிப்படுத்தி வந்துள்ளன. எனினும் விரிவஞ்சியும் ஆய்வுத்தலைப்பிற்கு பொருத்த மின்மை கருதியும் இவை பற்றி இங்கு பேசப்படவில்லை. ஆயினும், இலங்கைப் படைப்பாளிகள் எழுதியுள்ள சில படைப்புகள் கவனத்தைக் கோரிநிற்கின்றன் சி.வைத்திய லிங்கத்தின் கங்காகீதம், நெடுவழி, எஸ்.பொன்னுத்துரையின் சுவடு ஆகியவற்றை இவ்வேளை எடுத்துக்காட்டலாம்.

'கங்காகீதம்', இளந்துறவியொருவருக்கு மனச்சபலத்தை ஏற்படுத்தி உடலுறவுகொள்ளச் செய்யும் டிங்கிரி மெனிக்கே பற்றியது. தனக்கு இன்னொருவரூடாகப் பிறந்த குழந்தையை அவள் அத்துறவிக்குப் பிறந்ததாகக் கூறுவதாகவும், பின்னர் அக்குழந்தையை அனர்த்தமொன்றிலிருந்து அத்துறவி காப்பாற்றி விட்டு இறந்துவிட்ட சூழ்நிலையில், உண்மை நிகழ்வினை அவள் கூறுவதாகவும் புனையப் பட்டுள்ளது.

'நெடுவழி', தகாத உறவூடாகப் பெற்றெடுத்த குழந்தையை பெண்ணொருத்தி பௌத்த விகாரையிலே புத்தர் முன் கிடத்திவிட்டு நெடுவழிப் பயணம் தொடர்வது பற்றியது.

பௌத்த பிக்குகளின் தவறான நடத்தைகள் பற்றி ஒன்றிற்கு மேற்பட்ட படைப்புகள் எஸ்.பொன்னுத்துரையால் சிருஷ்டிக்கப் பட்டுள்ளன 'சுவடு' இவற்றுள் குறிப்பிடத்தக்க தொன்று வரலாற்று நாவல்கள் சிலவற்றிலும் இடைக்காலத் திரைப்படங்கள் சிலவற்றிலும் பௌத்தத் துறவிகள் அரசாட்சியில் முக்கிய பங்கு வகிப்பது பற்றி – பெரும்பாலும் பதவிமாற்றச் சூழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குபவர்களாக சித்திரிக்கப்பட்டுவந்துள்ளமை பற்றி இலக்கிய ஆர்வலர் பலருமறிந்திருப்பர்.

5.1. தமிழ் வரலாற்று நாவல்கள் தொடர்பாகவும் இவ்வேளை கவனிக்க வேண்டிய தேவையுண்டு. பௌத்தமத வரலாறு தமிழ் வரலாற்று நாவல்கள் சிலவற்றிலே முக்கிய விடயமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. 'கல்கி' யின் 'சிவகாமியின் சபதம்' நாவலில் பல்லவர்காலத்தில் தமிழ் நாட்டிலே மகாயான பௌத்தம் பரவியமை பற்றி விவரிக்கப்படுகின்றது. சோழர்காலத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தமத நிலைமை பற்றி கல்கியின் 'பொன்னியின் செல்வன்' சுருக்கமாக எடுத்துரைக்கின்றது. அகிலன் எழுதிய 'வேங்கையின் மைந்தன்' நாவலிலே பௌத்தம் அநுராதபுரத்தில் பரவியிருந்தமை பற்றியும் சோழ மன்னர்களால் அதற்கு இடையூறுகள் ஏற்பட்டமை பற்றியும், இலங்கையில் பெரகரா வழிபாடு பரவியமை பற்றியும் விவரிக்கப்படுகின்றன. வ.அ.இராசரத்தினம் எழுதிய கிரௌஞ்சப் பறவைகள் நாவலில், தேவநம்பியதீசன் காலத்தில் இலங்கையிலே பௌத்தம் பரவிய வரலாறு சுருக்கமாக தரப்பட்டுள்ளது. நா.பார்த்தசாரதியின் மணிபல்லவம் நாவலில் பௌத்தப்புனித இடமான மணிபல்லவத்தீவிலே பௌத்தம் செழித்தோங்கியிருப்பது பற்றி விவரிக்கப்படுகின்றது.

5.2. மேற்கூறியவற்றிற்கு மாறாக, எஸ்.பொன்னுத்துரையின் மாயினி நாவல் பௌத்தம் பரவிய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை விமர்சனத்திற்குட்படுத்துவது கவனத்திற்குரியது உதாரணமாக பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்:

"இந்நாட்டின் பூர்வீக கதையாக எதனைச் சிங்கள மக்கள் விஹாரங்கள் தோறும் ஓதிக்கொண்டிருக்கிறார்கள்? புத்த பகவான் ஜீவந்தராக இருந்த காலத்திலே, மகதநாட்டின் எல்லைகளுக்கப்பால் எங்குமே, என்றுமே சென்றதில்லை. ஆனால், நீங்கள் அவர் மூன்று முறை இந்தத் தீவுக்கு எழுந்தருளினார் எனத் தலைமுறை தலை முறையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தக் கட்டுக்கதைகளை நம்பாத சிங்களவன் யாராவது இருக்கிறானா? மஹியங்கனைக்கு வந்து, சுதேசிகளான இயக்கர்களை விரட்டி, இந்த நாட்டினை சிங்கள இனத்தார் வாழ்வதற்கான புனித பூமியாக ஆசீர்வதித்தார் என்பது எத்தகைய அபாண்டமான கற்பனை! பரதேசிகளான சிங்களவர்களுக்கு இலங்கை உரித்தாக இருக்க வேண்டும் என்பதற்காக மந்திரஜாலங்கள் புரிந்து இலங்கையின் சுதேசிகளான இயக்கர்களைப் புத்தபிரான் விரட்டியடித்தாரா? 'அரசபோகந் துறந்து, அகிம்சையைப் பரப்ப விழைந்த புத்தர், மனிதநேயந் துறந்த ஒரு காரியத்தினைச் செய்திருப்பாரா?' என்று இதுவரையில் எந்தச் சிங்களப் புத்திஜீவியாவது கேள்வி எழுப்பியுள்ளானா? நாகர்கள் வாழும் நாகதீவுக்கு வந்து, மகோதரனுக்கும் அவன் தங்கை மகனான சூளோதரனுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கினைத் தீர்த்துவைத்ததாக இன்னொரு கட்டுக்கதை! மூன்றாம் முறையாகக் களனிக்கு வந்த புத்தர் மலை ஒன்றிலே தமது பாத அடையாளத்தினைப் பதித்து, பின்னர் தீகவாபி, அநுராதபுரியில் மகாமேகவன பூங்கா அமையும் இடமெல்லாவற்றை, நில அளவையாளனைப் போல புத்தர் காட்டிச் சென்றார் என்று காதிலே பூ சுற்றும் கதைகளைக்கூட வரலாறு என்று ஏன் சிங்களர் நம்புகிறார்கள்? முற்குறிப்பிட்டவாறு ஜெயமொகனின் கொற்றவை நாவலில் புத்தரது வரலாறு வித்தியாசமாக அமைகின்றது ஆலமரச்செல்வனாக அவர் சிருஷ்டிக்கப் பட்டுள்ளார் விஷ்ணுபுரம் நாவலில் அஜிதன் தலைமையிலே பௌத்த அரசு உருவாவது காட்டப்படுகிறது.

அண்மைக்காலத்தில் உரம்பெற்று வரும் பௌத்த மேலாதிக்கம் பற்றியும் சில படைப்புகள் எழுந்துள்ளன. இவ்விதத்தில் ஓட்டமாவடி அரபாத்தின் பின்வரும் கவிதை கவனத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அரச மரம்'**

என் கிராமத்து எல்லையில்
ஓர் அரசமரம்
தான் தோன்றியாய் வளர்ந்திற்று
சனங்களின் உணர்வினில்
அது உறுத்தலின்றியே பருத்திற்று
இடையர்களும்
மிருகங்களும்
இளைப்பாறுமிடமாய்
கிளை பரப்பிற்று

பின்பொரு நாளில்
எனதூரின் எல்லை சுறுசுறுப்பானது
அரச மரத்து அடிவேரில்
புத்தனிருந்தான்
அவனைச் சூழவும் காவி நிறத்தில்
பந்தலிட்டனர்
மகாநாயக்கர்கள் பிரித் ஓதினர்

..............
எல்லைப் புறத்துக்குடிசைகள்
நகர்ந்து போயிற்று
............
அதற்குப் பின் வந்த இரவொன்றில்
தூக்கம் கலைந்து
காது தீட்டினேன்
'புத்தம் சரணம் கச்சாமி'
ஆம் எல்லையோர
அரசடி விகாரையில்
ஒலி பரப்பி அலறியது.

6. மேற்கூறியவற்றைத் தொகுத்து நினைவுகூர்வோமாயின் இருபதாம் நூற்றாண்டு நவீன தமிழ் இலக்கியங்களிலே பௌத்த தத்துவமும் பத்தரும் அவர்தம் சீடர்களும் போற்றப்படுவதைவிட மறுவாசிப்பிற்கும் விமர்சனத்திற்குமுட்பட்டிருக்கின்றமையே நன்கு புலப்படுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக உரிமைக் கொள்கையின் விரிவாக்கமே தென்கிழக்காசிய தேவராஜ வழிபாடு

செ. பிரவீணா

## அறிமுகம்

அரசின் தோற்றம் பற்றிய தெய்வீக பாரம்பரியத்தை உணரத்தும் கொள்கையே தெய்வீக உரிமைக் கொள்கை. இக் கொள்கை "Theocracy" என ஆங்கிலத்தில் அழைக்கப் படுகின்றது. 'Theo', 'Cracy' எனும் இரு பதங்களின் இணைப்பே Theocracy. Theo என்பது God எனவும், Cracy என்பது Government எனவும் பொருள் கொள்ளப் படுகின்றது. "Theocracy is a government operated under divine rule", அதாவது "தெய்வீக சட்டத்தின் கீழ் இயங்குகின்ற அரசியல் முறைமையே தெய்வீக உரிமைக் கொள்கை யாகும்". பொதுவாக அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது, அரசனை தெய்வமாக போற்ற வேண்டும், அரசனுக்கு கீழ்ப்படியாமை, இறைவனுக்கு கீழ்ப்படியாமை எனும் அடிப்படையம்சங்களைக் விளக்கி நிற்கும் கொள்கையே தெய்வீக உரிமைக் கொள்கையாகும். இத்தகைய தெய்வீக உரிமைக் கொள்கையின் அம்சங்களைக் கொண்டமைந்த வழிபாட்டு மரபொன்று கி.பி 1500 நூற்றாண்டிற்கு முற்பட்ட காலங்களில் தென்கிழக்காசிய நாடுகளில் பரவியிருந்தமையினை வரலாற்றுக் குறிப்புக்கள் சான்று பகர்கின்றன. இன்றைய நிலையில் இஸ்லாமிய பண்பாட்டை தழுவியனவாக உள்ள இந்நாடுகளினுள் வழிபடப்பட்டு வந்த தேவராஜ வழிபாடென்பது அரசனை தெய்வமாக கூறும் தெதய்வீக உரிமைக் கொள்கையின் பிரதி பலிப்பாகவே அமைந்துள்ளது என்ப தனையும், தேவராஜ வழிபாட்டு மரபு அந் நாடுகளில் எத்தகைய செல்வாக்கினைப் பெற்றிருந்தது என்பதனைப் பற்றியும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தெய்வீக உரிமைக் கொள்கையின் அடிப்படைக் கூறுகள்

1. அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தெய்வீக நிறுவனமாகும்.
2. இறைவன் அரசை தாமே நேரடியாகவோ, தமது பிரதி நிதியாகிய அரசரின் மூலமாகவோ ஆளுகிறார்.
3. அரசருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மக்களுடைய கடமை, அரசருக்கு கீழ்படியாமை, இறைவனுக்குக் கீழ்ப் படியாமையே.
4. அரசருடைய செயல்களை எவரும் மறுத்துரைத்தல் கூடாது.
5. அரசரைத் தட்டிக் கேட்பதற்கு இறைவனைத் தவிர வேறெந்த அதிகாரியும் இல்லை.

ஆகிய அடிப்படைக் கூறுகளை தெய்வீக உரிமைக் கொள்கை தன்னகத்தே கொண்டுள்ளது. இக் கொள்கையின் இத்தகைய அடிப்படைக் கூறுகள் தென்கிழக்காசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளினுள் ஊடுருவியிருந்த தேவராஜ வழிபாட்டினுள்ளும் இடம் பெற்றுள்ளமையினை கல்வெட்டுகள், இலக்கியக் குறிப்புக்களின் மூலமாக அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

தெய்வீக உரிமைக் கொள்கையின் பரவலாக்கத்திற்கான பின்புலம்நாடாளும் வேந்தனை கடவுளாகப் போற்றும் வழிபாட்டு மரபிற்கு வித்திட்டது இந்திய பாரம்பரிய மரபென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். நாடாளும் வேந்தனைக் காத்தற் கடவுளாகிய திருமாலோடு ஒப்பிட்டுப் போற்றிப்பாடுவது அங்கு தொன்று தொட்டு நிலவி வரும் வழக்கமாகும். இதனை மேல்வரும் தொல்காப்பியப் பொருளதிகாரம் விளக்கி நிற்கின்றது.

*"மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்*
*தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"*
-தொல்காப்பியப் பொருளதிகாரம்

மக்கள் அரசனை விஷ்ணுவாக போற்றி வழிபட்டார்கள் என்பதனையே தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகின்றார். மேலும் வள்ளுவர் அரசனுடைய பண்பு நலன்களை 'இறைமாட்சி' எனும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அரசன் தான் முறை செய்து பிறரை காப்பாற்றும் கடவுளாகவே விளங்குவான் என்பதனை,

*"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப்படும்"* - திருக்குறள்

என்பதனூடாக குறிப்பிடுகின்றார். இதனை பரிமேலழகர் சுக்கிரநீதி என்ற பொருள் நூலில் விளக்கிக் கூறுகின்றார். "எல்லா உலகங்களும் அரசனின்றி அச்சத்தால் எப்பக்கங்களிலும் சிதறுண்டிருக்குங்கால், அவ் எல்லாவற்றையும் காத்தற் பொருட்டு பிரம்மதேவன் இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களுடைய அழிவில்லாத கூறுகளைக் கொண்டு அரசனைப் படைத்தான்" என்று குறிப்பிட்டுள்ளார். இவை தவிர சீவகசிந்தாமணியில் சாத்தனார் சீவகனை 'மகாதேவனாக' கூறுகின்றார். அதேபோல் கலிங்கத்துப்பரணியில் ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழனை திருமாலின் அவதாரமாக வர்ணித்துக் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவற்றினூடாக தமிழகத்தில் மன்னனை இறைவனாக, சிறப்பாகத் திருமாலாக போற்றி வழிபடும் மரபு நெடுங்காலமாக பேணப் பட்டுள்ளமை தெளிவாகின்றது. இத்தகைய வழிபாட்டு மரபே பிற்பட்ட காலங்களில் தெய்வீக உரிமைக் கொள்கையாக வகுக்கப்பட்டது என்பதனை ஊகித்தறியலாம். அரசனை தெய்வமாகப் போற்றி வழிபடும் இத்தகைய வழிபாடு தென்கிழக்காசிய நாடுகளினுள் தேவராஜ வழிபாடாக பரவலாக்கமடைந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தெய்வீக உரிமைக் கொள்கை - தேவராஜ வழிபாடாக விரிவாக்கமடைந்தமைக்கான காரணங்கள் தெய்வீக உரிமைக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழ்வது அரச, பிராமண பாரம்பரியங்கள். இத்தகைய இரு மரபுகளினதும் பரவாலாக்கம் தென்கிழக்காசிய நாடுகளில் ஊடுருவியுள்ளமையே தேவராஜ வழிபாடு பரவியமைக்கான பின்புலமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந் நாடுகளில் அரச, பிராமணர்களின் செல்வாக்கு ஊடுருவியுள்ளமையினை வரலாற்றுக் குறிப்புக்கள் சான்று பகர்க்கின்றன.

இந்நாடுகளில் இந்து அரச மரபு செல்வாக்கிற்கு கௌடில்யன் எனும் பிராமணன் பற்றிய சீனக் கால்வழிச் செய்தி சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

*"பழைய கம்போடிய இந்து அரசான பூனாக் கௌடில்யன் எனும் பிராமணனால் கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது"*
- சீனக் கால்வழிச் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பண்டைய யாவா தேசத்தின் புராணக் கதையில் வரும் அசிசாகன் பற்றிய குறிப்புக்களும் தென்கிழக்காசிய நாடுகளில் இந்து அரச மரபின் செல்வாக்கினை எடுத்தியம்புகின்றன. 'ஸ்தினாபுரத்திலிருந்து 'அசிசாகன்' என்ற இளவரசன் தனது பரிவாரங்களுடன் வந்து ஆட்சி புரிந்தமை பற்றியும் அப் புராணக் கதை விதந்துரைக்கின்றது.

இவை தவிர "பத்திரவர்மன், கங்கராஜா, விஜயவர்மன், ருத்ரவர்மன், சாம்புவர்மன், சத்தியவர்மன், பரமேஸ்வரவர்மன்" முதலிய பல இந்து அரசர்கள் தென்கிழக்காசிய நாடுகளில் ஆட்சி புரிந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைப் போன்றே பிராமணியச் செல்வாக்கும் தென்கிழக்காசிய நாடுகளில் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தமையினை வரலாற்றுக் குறிப்புக்கள் எடுத்தியம்புகின்றன. தென்னிந்திய அரசவை வழக்கங்களை அறிமுகப்படுத்தித் தமது யாகக் கிரியைகள், சடங்குகள் மூலமாக அரசர் தம் பெருமைகளையும், சக்தியினையும் மக்கள் பார்வையில் உயர்த்த அவ்வரசரை ஆட்சி புரிவதற்கான தெய்வீக உரிமை பூண்டவராகக் காட்டியவர்கள் பிராமணர்களேயாவர். அத்துடன் இவர்களே மனுதர்மக் கோட்பாடு போன்றவற்றை முன்வைத்து அரச நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தவும் உதவினர்.

"இந்தியக் கலாசாரம் பிராமணர்களின் மூலம் அரச சபைகளுக்கு பரவியது" எனும் வான்லேயாவின் கருத்தும் தென்கிழக்காசியாவில் பிராமணர்களின் செல்வாக்கினையே புலப்படுத்துகின்றது.

இவ்வாறாக தென்கிழக்காசிய நாடுகளில் செல்வாக்குப் பெற்று விளங்கிய இந்து அரச மரபு, பிராமணியச் செல்வாக்கு ஆகியனவே தேவராஜ வழிபாடு தென்கிழக்காசிய நாடுகளில் பரவலடைந்தமைக்கான பின்புலமாக அமைந்துவிளங்கின.

## தேவராஜ வழிபாட்டினுள் இனங்காணப்பட்ட தெய்வீக உரிமைக் கொள்கை

தேவராஜ வழிபாடென்பது "அரசனுடைய இறைமைப் பண்புகளைத் தெய்வீகத் தன்மை உடையனவாகக் கொண்டு, அதனை அறிவிக்கும் வகையில் அரசனை இறைவனாகக் கொண்டு (உருவகப்படுத்தி) வழிபடும் நெறியே தேவராஜ வழிபாடாகும்". அதாவது, அரசரைத் தெய்வமாகப் போற்றிய வழிபாட்டு முறையே தேவராஜ வழிபாடாகும். இலிங்க வடிவாகிய சிவன், ஆளும் அரசன், அரசவைப் புரோகிதன் ஆகிய மூவர்க்குமுள்ள தொடர்பினை வெளிப்படுத்தும் வழிபாடாகவும் தேவராஜ வழிபாடு விளங்குகின்றது. நாட்டை அரசாளும் அரசரின் ஆற்றல் சிவனிடமிருந்து சிவலிங்கத்தின் மூலமாகப் பெறப்படுவது என்றும், அச்சக்தி இலிங்கத்தில் வதிவது எனவும், அந்த இலிங்கம் மலையுச்சியில் வைத்துக் காக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையம்சங்களைக் கொண்ட வழிபாட்டு மரபம்சமும் தேவராஜ வழிபாட்டு நெறியேயாகும். இத்தகைய அடிப்படை விடயங்களையே "முதலாம் ஜேம்ஸ் அரசன், பதினான்காம் லூயி, மார்ட்டின் லூதர் கிங், கெல்வின்" போன்றவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தெய்வீக உரிமைக் கொள்கையும் விதந்து குறிப்பிடுகின்றது.

H.H.T. Ius என்பவர் குறிப்பிடும் பொழுது "அரசன் கடவுளின் அவதாரம் என நம்புதல், இந் நம்பிக்கையை புரோகிதர் மூலம் சடங்கு வழிப்படுத்தல், பேரண்டமாகிய பிரபஞ்சத்துடன் சிற்றண்டமாகிய அரசனுடைய ஆள்புலம் தெய்வீக ஆற்றலால் ஒத்திசைந்து நிகழ்கின்றது என நம்புதல், அரசனின் ஆளும் ஆற்றல் தேவராஜ வழிபாட்டின் சின்னமாகிய சிவலிங்கத்தில் உறைகின்றது என்ற நம்பிக்கை என்ற பல ஐதீகங்களைக் கொண்டதே தேவராஜ வழிபாடு" என்கின்றார். இக் கருத்துக் களைக் விளக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதே தெய்வீக உரிமைக் கொள்கை என்பது குறிப்பிடத்தக்கது.

### ❖ கம்போடியா

தேவராஜ வழிபாடானது முதன் முதலாக கம்போடியாவிலேயே தோற்றுவிக்கப்பட்டது. இங்கு தேசிய வழிபாடாகவே தேவராஜ வழிபாடு காணப்படுகின்றது. கம்போடியாவை ஆட்சி செய்த இரண்டாம் ஜெயவர்மனுடைய ஆட்சி இந்தோ சீனாவின் பெரும் பகுதிகளிலும், சாயா, கீழைப் பர்மா வரையிலும் பரவியிருந்தது. இக்காலத்தில் இந்துசமயம் நாடாளும் அரசின் சமயமாக போற்றப்பட்டது. இவனுடைய காலத்தில் (கி.பி. 802) முதன் முறையாக கம்போடியாவில் இவ் தேவராஜ வழிபாடு தோற்றுவிக்கப்பட்டதாக 'சீதை' என்பவர் கூறுகின்றார். இங்கு தேசிய வழிபாடாகவே தேவராஜ வழிபாடு காணப்படுகின்றது.

அந்தவகையில் இரண்டாம் ஜெய வர்மனின் மேல்வரும் கல்வெட்டுக் குறிப்பின் மூலம் தெய்வீக உரிமைக் கொள்கையின் சில அம்சங்கள் வெளிப்படையாகவே தேவராஜ வழிபாட்டினுள் புலனாகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"ஜெயவர்மன் தான் ஒரு பேரரசனாக விளங்க விரும்பி ஜனபாதத்தில் இருந்து முத்துக்களில் வல்ல இரணிய தர்மன் என்ற பிராமணனை வரவழைத்தான் எனவும், அந்த பிராமணன் அரச தெய்வத்தை (தேவராசர்) வழிபடுவதற்குரிய விதிமுறைகளை வகுத்தும், அக்குரு அரசனுடைய குலகுருவாகிய சிவிகை வல்லியருக்கு இவ் விதிமுறைகளையும், சாத்திரங் களையும் கற்பித்தார் எனவும், அரசன் சிவிகைவல்லியரின் தாய்வழிக் குடும்பத்தையே அரச குருமார்களாக நியமித்தான்"எனவும் ஜெயவர்மன் கல்வெட்டு குறிப்பிட்டு விளக்கி நிற்கின்றது.

### ❖ தாய்லாந்து

இலிங்க வடிவமாகிய சிவன், நாட்டை ஆளும் அரசன், அரசவைப் புரோகிதர்கள் மூவரையும் இணைத்த தேவராஜ வழிபாடு தாய்லாந்திலும் சிறப்புப் பெற்று விளங்கியமை யினை அங்கே இடம்பெறும் திரு விழாக்களே சான்றாதாரங்களாக அமைகின்றன. திருப்பாவை, திருவெம்பாவை, உழவுத் திருவிழா ஆகியன தேவராஜ வழிபாட்டினை எடுத்தியம்புகின்றன. தேவராஜ வழிபாட்டினை பிரதிபலித்துக் காட்டும் திருவிழாவில் "லோஜின்யா" அதாவது ஊஞ்சல் வலித்தல்விழா சிறப்பிடம் பெறுகின்றது. இத் திருவிழாவில் இடம்பெறும் மேல்வரும் வழிபாட்டம்சங்கள் தெய்வீக கொள்கையினையே புலப்படுத்துகின்றன.

"லோஜின்யா" தாய்லாந்தின் பல்வேறு பகுதிகளிலும் தலைநகரிலும் ஆண்டுதோறும் தை மாதத்தில் கொண்டாடாப்பட்டது. இவ் விழாவின் நோக்கமானது சிவன் இவ்விழாவிற்கு வருகை தருவதை தாய்லாந்து அரசரே இவ் விழாவிற்கு வருகைதந்து சிவனாக விழாக் காலத்தில் காட்சி தருவதன் மூலம் உணர்த்தினார்கள். இவ்விழாக்கள் சிவனாக கருதப்பட்ட அரசன் முன்னிலையில் நடைபெறும். அவனையன்றி வேறுயாரையும் மன்னர்கள் மன்னர்களாக கொள்வதில்லை என சூளுரைத்து "அவனையன்றி வேறுயாருக்கும் வாழ்க்கைப்பட மாட்டோம்" என்ற ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களைப் பாடுவார்கள். இதன் போது அரசன் முன்னால் மக்கள் மண்டியிட்டு வணங்கி, வரம் பெற்று, அவனிடமிருந்து பரிசில்களைப் பெறுவார்கள். இதுதவிர இங்கு நடைபெறும் மழைவிழாவின் போது மன்னனே சிவனாகவும், விஷ்ணுவாகவும் எழுந்தருளி மக்களுக்கு வரம் கொடுப்பார். இத்தகைய வழிபாட்டு மரபும் தெய்வீக உரிமையையே எடுத்தியம்புகின்றன. அதாவது இறைவனே அரசின் தோற்றத்திற்கு காரணகர்த்தா எனும் கோட்பாட்டினை இவ்விழா சுட்டிநிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **சம்பா**

அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தெய்வீக நிறுவனமாகும். இறைவன் அரசை தாமே நேரடியாகவோ, தமது பிரதி நிதியாகிய அரசரின் மூலமாகவோ ஆளுகிறார் எனும் தெய்வீக உரிமைக் கூற்றினை சம்பா அரச மரபு பற்றிய வரலாற்றுக் குறிப்பு தெளிவுபடுத்துகின்றது. இங்கு அரசனின் தோற்றமானது சிவனோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. கி.பி 875 இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் இதனை அறியக்கூடியதாகவுள்ளது. "பத்திரவர்மனின் முன்னோர்க்குச் சிவனால் லிங்கம் தரப்பட்டது என்றும் சம்பா நாட்டின் முதல் அரசனான உரோஜ என்பவன் பூமிக்குச் சிவனால் அனுப்பப்பட்டவன் என்றும், பின்வந்த அரசர்கள் தம்மை உரோஜவின் அவதாரங்கள் என்று கூறியதாக அக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது". சம்பா அரசன் "ஜெயக்கிருதவர்மன் தன்னை திருமாலின் அவதாரமாக கூறியமை" குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

❖ **ஜாவா**

அரசன் இறந்த பின்பு தெய்வமாக போற்றப்பட்ட மரபொன்று ஜாவா தேசத்தில் காணப்பட்டது. ஜாவா தேசத்தில் உள்ள சண்டி ஆலயங்கள் அரசன் இறந்த பின் அவனுடைய நினைவாக கட்டப்பட்டவையே. மேலும் 'பூரணவர்மனின் பாதச் சுவடிகளைக் கொண்டு விளங்கும் கோயிலானது விஷ்ணுவின் பாதச்சுவடாக கருதி வழிபடப்பட்டது. ஜாவா தேசத்துக் குறிப்புக்களிலே 'ஏர்கலன் எனும் மன்னன் தன்னை திருமாலின் அவதாரம்' எனக் கூறிக்கொண்ட செய்திகளும் நிலவுகின்றன. இவ் வரலாற்றுக் குறிப்பும் தெய்வீக உரிமைக் கொள்கையினையே புலப்படுத்தி நிற்கின்றது.

## தேவராஜ வழிபாட்டில் வெளிப்படும் இராஜ்ய பரிபாலன முறைமை

அரசியற் கலையின் பல்வேறு பரிமாணங்களில் இராஜ்ய பரிபாலனமுறைமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஓர் அரசன் தன் ஆட்சியினை பலப்படுத்திக் கொள்வதற்காக பல்வேறுவிதமான தந்திரோபாயங்களை மேற்கொள்ளுகின்றான்.

இந்து அரச மரபிற்கே உரித்தான இராஜ்ய பரிபாலன முறைகளுள் ஒன்றாகவே அரசனை தெய்வமாக போற்றும் மரபு திகழ்கின்றது. தெய்வீக உரிமைக் கொள்கையின் நோக்கமும் இராஜ்ய பரிபாலன உத்தியே என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தேவராஜ வழிபாட்டினுள் இனங்காணப்பட்ட இராஜ்ய பரிபாலன முறைமைகளுக்கான சில எடுத்துக்காட்டுகள்:

1. மக்கள் மத்தியில் அரசரை ஏற்றுக் கொள்ளத்தக்கவராகவும், மதிப்புடைய வராக எடுத்துக்காட்டியதுடன், அவர்களின் புகழையும் நிலை நிறுத்தல். இதற்காகவே அரசர்கள் தங்களைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்தியதோடு, ஆலயங் களையும், உருவச் சிலைகளையும் தங்கள் பெயரோடும் சாயலோடும் அமைத்தனர்.

   எ.கா: சம்பாவில் அமைந்துள்ள பத்திரேஸ்வரம் - பத்திரவர்மனை நினைவு படுத்துகின்றது.

2. நாட்டில் இறையாண்மை மேலோங்கி பல்வேறு மதங்களிடையே ஒருமைப் பாட்டினை ஏற்படுத்துதல். அரசன் சிவனால் அனுப்பப்பட்டவன், இறைவனினால் அனுப்பப்பட்ட தூதன் என்பதனால் மக்கள் அவனுக்கெதிராகவும், அவனின் ஆட்சியதி காரத்திற்கெதிராகவும் எந்தவிதமான கிளர்ச்சிகளையும், இடையூறுகளையும் மேற்கொள்ள மாட்டார்கள். அதேநேரம் இறைவனால் அனுப்பப்பட்ட தூதன் என்பதனால் மக்களிற்கெதிரான செயற் பாடுகளினில் அவன் ஈடுபட மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அங்கு நீதியானதும், நேர்மையானதுமான அரசபரிபாலனம் நிலவும் குறிப்பிடத்தக்கது.

எ.கா: சம்பா அரசின் முதல் அரசனான உ ரோஜன் சிவனால் அனுப்பப்பட்டவன் எனும் குறிப்பு:

3. அரசனை தெய்வமாக போற்றி வழிபாடு மேற்கொள்வதனால் மக்களின் வேண்டுகோள்களுக்கான தீர்வுகள் இலகுவில் கிடைக்கப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. பொதுவாக மக்கள் தங்கள் குறைகளை தெய்வத்திடம் முறையிடுவதன் மூலமே தங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்கின்றனர். மக்களின் குறைகளை தெய்வமாக கருதப்படும் அரசனிடமே நேரடியாக தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

எ.கா:தாய்லாந்தில் இடம் பெறும் 'லோஜின்யா' திருவிழா.

சம்பா அரசன் ஜெயக்கிருதவர்மன் தன்னை திருமாலின் அவதாரமாக கூறியமை.

4. கடவுளாக்கப்பட்ட மன்னன் ஒற்றுமையின் சின்னமான தேவராஜ லிங்கத்திற்கு ஊறு நேராது பாதுகாக்கும் நிலை ஏற்படும். இதனால் இந்து அரச மரபு நிலை பெறுகின்றது.

நாட்டை அரசாளும் அரசரின் ஆற்றல் சிவனிடமிருந்து சிவலிங்கத்தின் மூலமாகப் பெறப்படுவது என்றும், அச்சக்தி இலிங்கத்தில் வதிவது எனவும், அந்த இலிங்கம் மலையுச்சியில் வைத்துக் காக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையம்சங்களைக் கொண்டு தேவராஜ வழிபாடு விளங்கியமையினால் லிங்க வழிபாட்டினை தன்னகத்தே கொண்ட சைவம் அரச ஆதரவுடன் பெரும் செல்வாக்குடன் வளர்ச்சி பெற்றது.

எ.கா: தாய்லாந்து மன்னர்கள் நாட்டை பரிபாலனம் செய்யும் அரசனின் ஆற்றலானது சிவனிடம் இருந்து சிவலிங்கம் மூலமாக பெறப்படுகின்றது எனும் நம்பிக்கையை கொண்டமை.

**நிறைவாக**

அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது, அரசன் தெய்வத்தின் பிரதிநிதி என்னும் அம்சங்களினைக் கொண்ட தெய்வீக உரிமைக கொள்கையின் கூறுகளைக் கொண்டதே தேவராஜ வழிபாட்டுப் பாரம்பரியம் என்பதனை மேற்கூறப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் சான்று பகர்க்கின்றன. முற்றுமுழுதாக தேவராஜ வழிபாடென்பது தெய்வீக உரிமைக் கொள்கையின் பிரதிபலிப்பே என்பது தெளிவாகின்றது, இத்தகைய தெய்வீக உரிமைக் கொள்கையானது இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய, கிறிஸ்தவ நாடுகளில் பிரதிபலித்துள்ளமையினையும் காணக்கூடியதாகவுள்ளது. இஸ்லாமிய தெய்வீக சட்டத்தினை பின்புலமாகக் கொண்ட அரசாக ஈராக், ஈரான், இஸ்ரேல், சூடான், ஜேர்மன், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளும், வத்திக்கானது கிறிஸ்தவ மதத்தின் தெய்வீக உரிமையினை நிலைநாட்டும் நாடாகவும் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


**உசாத்துணை நூல்கள்**

1. கிருஷ்ணராஜா.சொ., கணேசலிங்கம்.ப., 2011, ***"தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு"***, குமரன் புத்தக இல்லம்.
2. திருநாவுக்கரசு. க., 1987, ***"தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு"***. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. ஜோதீஸ்வரன்.ப., 2005, ***" தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு"***, தமிழ் பூங்கா, நெல்லியடி.
4. நாகராஜா, எஸ், 1993, ***"தாய்லாந்தில் தமிழ்பண்பாட்டுக் கூறுகள்"***, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. நாகராஜா, எஸ், 1989, ***"அயல்நாடுகளில் தமிழர்கள்"***, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு : கௌரி அச்சகம், கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org